544

# இந்தியக் கைத்தொழில் சிறப்பு

இந்தியக் கைத்தொழில் விசாரணைச் சங்கத்தின்
அறிக்கையிலுள்ள

பண்டித மதன்மோஹன் மாளவியா அவர்கள்
தனிக்குறிப்பு

## முன்னுரை

கனம் ராவ் பகதூர் டி. அரங்காச்சாரியார்
எழுதியது.

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

சகோதரி வி. பாலம்மாள்
"விவேகாச்ரமம்"
இராயப்பேட்டை, சென்னை.

1919

விலை ரூபாய் ஒன்று.

Madras:
Printed by Srinivasa Varadachari & Co.,
4, MOUNT ROAD.

[காபிரைட் சகோதரி வி. பாலம்மாளைச் சேர்ந்தது.]

# பொருளடக்கம்.


முகவுரை

முன்னுரை. (கனம் ராவ்பகதூர் T. அரங்காசாரியார் அவர்கள் எழுதியது.)

இந்திய கைத்தொழில் விசாரணை சங்கத்தார் அறிக்கையின் சுருக்கம்.

## நூல்.

பக்கம்

முன்னுரை ... ... ... ... ... 1

இந்தியாவின் முற்கால தற்கால நிலைமை ... 4

இந்தியா கைத்தொழிலும் விவசாயமும் நடந்தேறி வந்த தேசம் ... ... ... .. 8

ஈஸ்டு இந்தியா வர்த்தகக் கூட்டம் ... ... 13

இந்தியதேசம் எப்படி விவசாய நாடு ஆயிற்று ... 16

ஆங்கிலேயர் கைத்தொழில் கிளர்ச்சி .. ... 25

வேலைப்பாடமையாத கைத்தொழில் பொருள்களை ஏற்றுமதி செய்ததினால் விளைந்த பயன் ... 33

இருப்புப்பாதைகளும் வியாபாரமும் ... ... 35

இதன் பயன்—அடுத்தடுத்து உண்டான பஞ்சங்கள் ... ... ... ... ... 41

சாஸ்திரமுறையை அனுசரித்த கைத்தொழில், தேசக் கைத்தொழில் இவைகளினுடைய அபிவிருத்திக்காக இந்தியர்கள் செய்துகொண்ட வேண்டுகோள் ... ... ... ... 50

அந்நிய நாட்டாரின் கைத்தொழில் வளர்ச்சியும் அதனால் இந்தியாவுக்கு உண்டான பயனும்... 55

பக்கம்

அரசாங்கத்தார் சிறிதுகாலமாய் அனுசரித்து வரும் கைத்தொழில் முறை ... ... 64
விரும்பப்பட்ட மாறுதல் ... ... ... 70
கைத்தொழில்களும் பயிர்த்தொழிலும் ... 80
விவசாயக் கல்வி ... ... ... .. 87
கைத்தொழில் சாஸ்திரக் கல்வி ... ... 96
இயந்திரவேலை செய்யக்கூடிய எஞ்சினீயர்களைப் பழக்குவித்தல் ... ... ... ... 112
உயர்தரத் தொழில்சாஸ்திரத்தில் பழக்கும் முறை ... ... ... ... ... 115
ராஜாங்க எஞ்சினீயரிங் கலாசாலைகள் அல்லது இராஜாங்க சர்வ கைத்தொழில் போதனுசாலை. 117
வியாபாரக் கல்வி ... ... ... ... 123
கைத்தொழில்களின் சம்பந்தமாய் நிலம் சம்பாதித்தல் ... ... ... ... ... 127
கைத்தொழிலுக்குப் பண உதவி ... ... 132
இந்தியருக்கு அரசாங்க ஆதரவும் பாங்கு விஷயமான பயிற்சியும் வேண்டும் ... ... 145
மாகாணக் கைத்தொழில் இலாகாக்கள் ... 155
இம்பீரியல் கைத்தொழில் இலாகா ... ... 157
இரசாயன ஆராய்ச்சி நிர்வாகம் ... ... 164
சாஸ்திர சம்பந்தமாயும் கைத்தொழில் சம்பந்தமாயுமுள்ள உத்தியோகங்களை ஒழுங்குபடுத்தல் ... ... ... ... ... 170
சாஸ்திர ஆராய்ச்சிக்கு வசதி... ... ... 177
சாஸ்திர இலாகா உத்தியோக நியமனங்கள் ... 183
செலவின் மதிப்பு ... ... ... ... 194
முடிவுரை ... ... ... ... ... 197

# முகவுரை.

சகோதர சகோதரிகளே,

"இந்தியக் கைத்தொழில் சிறப்பு" என்ற இந்நூல் இந்தியக் கைத்தொழில் விசாரணைச் சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீமான் பண்டித மதன் மோஹன் மாளவியா அவர்கள் எழுதியுள்ள தனிக் குறிப்பின் மொழிபெயர்ப்பாகும். இவ்விஷயம் ஆங்கில பாஷையில் இருந்தபோதிலும், தற்காலம் நமது தமிழ் நாடுகளில் நடைபெறும் மகா நாடுகளின் நடவடிக்கைகளும் விசேஷ உபந்நியாசங்களும் நமது தாய்ப் பாஷையாகிய தமிழ்ப் பாஷையிலேயே நடைபெற்று வருவதையனுசரித்து இதைத் தமிழில் பிரசுரிக்க முன்வந்தேன். இந்தியர்களின் அருட் செல்வம் பொருட் செல்வம் இரண்டிற்கும் மூலாதாரமாக இருப்பது நம் நாட்டு வளப்பமும் அதை முன்னிட்டு நடந்துவந்த கைத்தொழில்களின் உயர்வுமாகும்.

பல காரணங்களால் சிதைவுற்று உருவற்று ஆதாரமற்று ஆதரிப்பாரற்றுக் கிடந்த இந்தியக் கைத்தொழில் நிலைமையை விசாரிக்க நமது காருண்ய கவர்ன்மெண்டார் ஒரு சங்கம் ஏற்படுத்தியதும் அவர்கள் அங்ஙனமே விசாரித்து ஓர் அறிக்கையை வெளியிட்டதும் பாரத மாதாவின் நற்காலமே.

இவ்வரிய சந்தர்ப்பத்தில், தேசாபிமானியாகிய ஸ்ரீமான் பண்டித மாளவியா அவர்கள் இக்கைத்தொழில் விஷயமாய்க் கூறியிருக்கும் இத்தனிக் குறிப்பு, தேச

பக்தர்களுக்குப் பெரும்பயன் விளைவிக்குமென்பதில் ஐயமில்லை. தவிர, தமதன்னையின் விஷயத்தில் கவனஞ்செலுத்தித் தேசகைங்கரியம் செய்து வரும் தமது சகோதரர்களை உற்சாகப்படுத்தியும் தக்க சந்தர்ப்பங்களில் தமக்குரிய சௌகரியங்களுக்கேற்றவாறு தேசிய விஷயங்களைக் கவனிக்கவும் முற்படும் எனது அன்பார்ந்த சகோதரிகளும் இம்மொழிபெயர்பினால் பயன் பெறவேண்டுமென்ற முக்கியமான அவா இதனை வெளியிடுமாறு என்னைத் தூண்டிற்று. இத்தனிக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள சிபார்சுகள் நடவடிக்கைக்கு வரும்வரையில் நெடுநாட்களாகவும் தற்காலம் அதிகமாகவும் நேரிட்டிருக்கும் பஞ்சங்கள் இந்தியாவில் ஒருவாறு இருந்து கொண்டிருக்குமென்பது தேசாபிமானிகளாகிய மேதாவிகளின் அபிப்பிராயமாதலின் காகிதப் பஞ்சம் முதலியவைகளைப் பற்றி நான் நமது புத்தகாபிமானிகளுக்கு எடுத்துரைத்தல் அநாவசியமென்று எண்ணுகிறேன்.

இராஜீய தேசிய விஷயங்களிலுள்ள அளவற்ற அவாவினாலோ அல்லது இடமின்மையாலோ அல்லது விளம்பரங்களைக்கொண்டு சமாசாரப் பத்திரிகைகளை நிரப்புதல் உசிதமல்லவென்ற எண்ணத்தினாலோ வேறெக் காரணத்தினாலோ பத்திரிகைகளில் பிரசுரங்களைப்பற்றி விளம்பரம் செய்தலும் இச்சமயம் அசாத்தியமாகவே இருக்கிறது. என்னால் பிரசுரிக்கப்படும் நூற்களில் சொற்பிழை இலக்கணப்பிழை முதலியன எவ்வளவிருந்தபோதிலும்,ஸ்திரீவித்தியாபிமானம் என்ற ஒரே எண்ணங்கொண்டு எனது புத்தகங்களை வாங்கிப்படிக்கும் சகோதர சகோதரிகளின் உண்மை

யான ஆதரவு எனக்கிருக்கும் வரையில் மற்ற இடையூறுகளையும் அசௌகரியங்களையும் நான் சிறிதும் பாராட்டப்போவதில்லை.

அதிலும் தேசமாதாவின் முன்னேற்றத்திற்குரிய சாதனங்களை விளக்கிக் காட்டும் இம்மொழிபெயர்ப்பைப் பெண்பாலாகிய நான் வெளியிடத் துணிந்ததில் நான் வெற்றிபெறுவேனென்ற தைரியம் என் மனதில் பதிந்திருக்கிறது.

கூடியவிரைவில் முதற் பதிப்பின் பிரதிகள் முழுவதும் செலவழிந்து அடுத்தடுத்துப் பல பதிப்புக்களை வெளியிடும்படியான அனுக்கிரகத்தைப் பாரத மாதாவினிடமிருந்தும், உற்சாகத்தை எனது பாரத சகோதர சகோதரிகளிடமிருந்தும் உறுதியாக எதிர்பார்க்கிறேன்.

இந்நூலை வெளியிடும்படி உற்சாகப்படுத்திய சகோதர சகோதரிகளுக்கும், பிழையின்றி அச்சிட்டுக் கொடுத்த அச்சுக்கூடத்தாருக்கும் வாங்கிப்படிக்கும் எனது புத்தகாபிமானிகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"விவேகாச்ரமம்"
பீடர்ஸ் ரோட்,
ராயப்பேட்டை, சென்னை,
25—1—19.

இங்ஙனம்,
உண்மையுள்ள சகோதரி,
வி. பாலம்மாள்.

# FOREWORD.

SISTER V. BALAMMAL has asked me to write a Foreword to the Tamil Translation of the Note by Pandit Madhan Mohan Malaviya attached to the Report of the Indian Industrial Commission which she is publishing. The idea of bringing home to the masses in South India in their own vernacular tongue the gravity of the momentous issues raised by the report of the Indian Industrial Commission as well as of the excellent note of the Pandit attached to it, is an admirable one. Sister Balammal needs no introduction to the Tamil country as her publications, both original and by way of translation, have gained a wide reputation worthy of the culture and scholarship of the eniment authoress. The chaste and elegant Tamil into which she had Mr. Justice Abdur Rahim's Minute of Dissent to the Report of the Public Services Commission translated, is itself a strong recommendation for her undertaking this task which she has now set before herself.

It is a difficult feat to translate official reports dealing with political questions as will be evident from a perusal of the official translations now and then appearing in the Government Gazettes. Sister Balammal's publications are free from the many defects which disfigure the official translations. Writers in the vernacular newspapers where they have to convey what they read in English to the readers in the verna-

cular have complained to me of the difficulties they feel in expressing those ideas correctly. This translation is not in that hybrid tongue which one is accustomed to see in official publications and not infrequently also in the columns of the Daily Vernacular Press.

The subject of economic reconstruction and particularly industrial development in India is equal in importance to that of political reform and this has been fully recognised by all the Indian politicians of light and leading for the last two decades. It may be stated with truth that more has been said and written on the subject than has been accomplished. It is indeed difficult for any one to suggest new ideas on this topic.

The conclusions of the Indian Industrial Commission may be briefly summed up as follows: "That India is a country rich in raw materials and in idustrial possibilities, but poor in manufacturing accomplishment. The deficiencies in her industrial system are such as to render her liable to foreign penetration in times of peace and to serious dangers in times of war. Her labour is inefficient, but for this reason capable of vast improvement. She relies almost entirely on foreign sources for foremen and supervisors and her intelligentia have yet to develop a right tradition of industrialism." They emphasise the necessity of securing the economic safety of the country and the inability of her people to secure it without active Government co-operation and stimulation. They urge on the Government the policy of energetic interven-

tion in the industrial affairs of the country. The adoption of the constructive proposals in that Report demands that in future Government must play a very active part in the industrial development of the country with the aim of making India more self-contained in respect of men and material. And in order to enable the Government to undertake that part they have made recommendations of measures, which, if adopted, will make it possible for the Government to provide itself with adequate administrative equipment and forearm itself with reliable scientific and technical advice.

Unlike Mr. Justice Abdur Rahim's Minute the Pandit's Note is not one of dissent from the Report, it is more in the nature of addendum to it bringing out prominently certain features which, for obvious reasons, are left unsaid in the Report itself. In substance there is no disagreement between the Pandit and the rest of the Members of the Commission.

While the Commission recognised that a detailed account of the economic position is necessary for a clear understanding of the complex factors which must be taken into account before framing a remedial policy, the Pandit points out in his note that his colleagues have not correctly gauged the causes which brought about the growth of industries in England and the want of such growth in India and with a view to remedying that defect, he has by reference to historical accounts traced India's glorious past and melancholy present as a manufacturing as well as an agricultural country and has shewn how India came to be an agricultural country and the extent to which Eng-

land is indebted to India for her great Industrial Revolution. His object in drawing attention to the sins of commission and omission on the part of the British Government and the British people is with the hope that it may lead some of those English fellow-subjects who are unwilling to let the Government of India protect and promote Indian industries, to recall to mind how much India has contributed to the profits of England for over a century and a half and how large issues suffer from the illiberal policy which has hitherto been pursued towards her.

The great war which has just now so happily terminated has in more senses than one, been a blessing to this country. It gave us this Industrial Commission at a time when many of us had begun to take a despondent view and the cry of despair that Indian industries have no future against European competition and that India is sinking lower and lower as a purely agricultural country, was on the lips of many an ardent patriot. It is true that there were some who took the roseate view that the trade of India was growing up by leaps and bounds under the British rule and that the increasing figures of imports and exports was an index to the growth of Indian manufactures and to the prosperity of the people. These latter were mostly among the ranks of Englishmen, influential mercantile classes representing the large agency firms who are always inclined to develop *commerce* at the expense of *industries*. Now a new era of hope and expectation is before us. May God grant its early fulfilment! Great Indian politicians had re-

cognised long ago the perilous plight to which the industries of India had been reduced and the necessity of emancipating India from the economic slavery to the nations in the West and in the Far East. It had become the one topic of absorbing interest for over two decades among politicians and to find out a cure for the malady had been the anxious thought of every patriot. A few English statesmen here and there recognised that plight, but the Government as a whole were not alive to the seriousness of the situation. It required the great war to open the eyes of the Government both here and at home. The obvious truth that a country cannot prosper by agriculture alone any more than a country can permanently prosper by manufacture alone and that the two must thrive side by side to give employment to the population of the country had been ignored. England awoke to her helpless and dependent position for her food supplies during the war. The Indian Government have now been forced to recognise how India had become more and more a dumping ground for the manufactures of foreign nations and its attention has been forcibly drawn to the extent of India's dependence upon conditions outside British Empire for the supply of many of the necessaries of life for her people. But the people had recognised it long ago. Only they were helpless against overwhelming odds. We were painfully aware of the fact that we were being fed and clothed, diverted and entertained, lighted and washed, warmed and comforted, carried and housed by the foreign artizan. We were further

painfully aware of the great disproportion between exports of manufactured goods and the export of raw material from the country as also of imports of raw material to the import of finished goods. In fact the Railway policy and various other measures taken by Government actively encouraged such a situation. Industrial Conferences from 1905 onwards drew pointed attention to these defects and urged on the people and the Government to take early radical remedial measures. Without meaning any disparagement of the illustrious members constituting the Commission, nor in any way minimising the great importance of the Report, it may be stated that most of the recommendations of the Industrial Commission can be traced in the Resolutions of the Conferences.

We hail this Report as the dawn of day after a long long dreary night. Prompt decision and quick action on the part of the Government and willing response from the people are necessary to accomplish the industrial development of the country and thereby to give India economic stability—an object dear to the heart of every true lover of India. As I remarked the other day to a member of this Commission, if these recommendations are given effect to, enough would have been done for at least a generation. He truly rejoined that they have given enough good material for public men to take up. Public men of all ranks can join hands. There is no question of Moderates and Extremists or Brahmins and Non-Brahmins on this platform.

It must not be forgotten that the difficulties in the path both of Government and of the people are great.

They are of a two-fold nature. India has to recover her position under exceptional economic conditions which few nations on earth have to face. Other competitors have got the start—have got a big and a long start—and India is unfairly handicapped in the race in that its Government has not got an uncontrolled fiscal policy of its own.

There is one note of warning which must be clearly sounded, that in building up the industries the capital, control and management should be in the hands of Indians. The taking of any steps which merely mean that the manufacturer who now competes with us from a distance would transfer his activities to India and compete with us within our boundaries should be strongly shunned and avoided. The Pandit in his Note draws pointed attention to this aspect of the question by quoting these wise and generous words of Sir Frederick Nicholson in his concluding paragraph:

> "I beg to record my opinion that in the matter of Indian industries we are bound to consider Indian interests firstly, secondly and thirdly. I mean by 'firstly' that the local raw products should be utilised, by 'secondly' that industries should be introduced, and by 'thirdly' that the profits of such industry should remain in the country."

We must make our attitude plain that we strongly object to all foreigners exploiting the country, whether they be subjects of the British Empire or not, so long as the profits of the industry do not remain in the country. The caution has become all the more

necessary since the *Madras Times* the other day objected to the use of the word 'foreigner' in respect of British subjects in India. In industrial matters we cannot help counting all people foreigners who merely earn profits to be carried out of the country.

It now behoves the public to lend that strong support which is claimed from it to any well-considered scheme for industrial progress which Government may feel fit to adopt, on a consideration of the recommendations of the Industrial Commission; and from the speech of His Excellency the Viceroy made the other day at Calcutta it really looks that the time for action has already come. Let the Government supply the stimulus by an organised system of technical, financial and administrative assistance and we will with one voice respond to that stimulus and help towards attaining the ideal of an INDIA "strong in her own strength and a worthy partner of the EMPIRE."

"RITHERDON HOUSE,"
VEPERY, MADRAS,
27th *January*, 1919.

T. RANGACHARI.

# இந்தியக் கைத்தொழில் கமிஷன் விசாரணை முடிவு.

## அதன் சுருக்கம்.

இந்தியாவின் கைத்தொழிலை விருத்திசெய்யவேண்டிய விஷயமாய் விசாரணை செய்து ஒரு அபிப்பிராயங் கொடுக்க ஏற்பட்ட இந்தியக் கைத்தொழில் விசாரணைக் கூட்டம் ஸர் தாமஸ் ஹாலண்டின் தலைமையின் கீழ்க்கூடி, இரண்டு வருடகாலமாய் இந்தியாவின் பற்பல மாகாணங்களிலுள்ள கைத்தொழில் செய்வோரையும் வியாபாரிகளையுங்கண்டு விசாரித்து, அறிந்த விஷயங்களையும் தன் முடிவான அபிப்பிராயங்களையும் திரட்டி ஓர் அறிக்கையாக வெளியிட்டிருக்கிறது. அதன் சுருக்கத்தை ஈண்டுக் குறிப்பிடுகிறோம்.

இவ்வறிக்கையில் கண்ட ஏற்பாடுகள் இரண்டு முக்கிய விஷயங்களை ஒட்டிச்செய்யப்பட்டிருக்கின்றன. (1) மனிதர்களிலும் சாமான்களிலும் இந்தியர் தாமே மேன்மையடையவேண்டுமென்னும் எண்ணத்தோடு தேசத்தின் கைத்தொழிலை மேன்மேலும் விருத்தி செய்ய இனி அரசாங்கத்தார் தகுந்த முயற்சி செய்ய வேண்டும்; (2) இம்முயற்சிகள் செய்வதற்கு அவசியமான கைத்தொழிலிலும் இரசாயனத்திலும் தேர்ந்த நம்பிக்கையுள்ள நிபுணர்களின் உதவியும் இவர்களுக்கு மேல்பார்க்கத் தகுந்த ஆட்சி முறையும் அரசாங்கத்தாருக்கு இருக்கவேண்டும். இவ்விரண்டையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அறிக்கையில் கண்ட விஷயங்களை ஆராய்வோம்.

## இரண்டு பிரிவுகள்.

முதலில் ஆட்சிமுறையைப் பற்றிக் கவனிக்க அறிக்கையில் சொல்லுகிறதாவது: இம்பீரியல் அல்லது எல்லா இந்தியக் கைத்தொழிற் பிரிவு (டிபார்ட்மெண்டு) மாகாணக் கைத்தொழிற் பிரிவு, எல்லா இந்தியக் கைத்தொழில் சர்வீஸ் (Imperial Industrial Service) இவைகள் ஏற்படவேண்டும். எல்லா இந்தியக் கைத்தொழிற் பிரிவு வைசிராயின் நிர்வாக சபை அங்கத்தினர் ஒருவர் தலைமையாகவும் மூன்று மெம்பர்கள் உதவியாகவும் உள்ள இந்தியக் கைத்தொழில் கூட்ட (Board) த்தின் கீழ் இருக்கும். இது தேசத்தின் கைத்தொழிலை விருத்தி செய்வதற்காகவே பாடுபடும். மற்ற முழுவேலையையும் மாகாண அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக அவர்கள் கைத்தொழில் அல்லது மெகானிகல் என்ஜினீயரிங்கில் தேர்ச்சியும் அனுபோகமுமுள்ள உத்தியோகஸ்தர்கள் பலரை நியமிக்கவேண்டும்.

அத்தகைய மனிதர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகவும் அனுபோகஸ்தரல்லாதாரை எடுப்பதால் நேரும் கஷ்டங்களையும் அபாயங்களையும் உத்தேசிக்கவும் "'எல்லா இந்தியக் கைத்தொழில் வேலை" (இம்பீரியல் இண்டஸ்டிரியல் சர்விஸ்) ஒன்று ஏற்படுவது அவசியமாகிறது. இதில் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்ற என்ஜினீயர்கள் இருப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் மாகாண அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுவார்கள். இந்தக் கைத்தொழில் பிரிவின் தலைமை ஸ்தானமும் கைத்தொழில் போர்டும் இந்திய அரசாங்கத்தாரிடமே யிருக்கும்.

## மாகாணப் பிரிவு.

மாகாணப் பிரிவுகளில், கைத்தொழில் டைரக்டர்கள் நிபுணர்களின் உதவியைக்கொண்டு கைத்தொழிலை

விருத்தி செய்வார்கள். டைரக்டர் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களடங்கிய மாகாணக் கைத்தொழில் போர்டின் உதவியையும் பெறுவார். அவர் செய்யும் ஏற்பாடுகளும் வேலைகளும் சீக்கிரமே நடைபெறுவதற்காக வேண்டி அவர் அரசாங்கக் காரியதரிசி ஸ்தானத்தையும் வகிப்பார்.

## இந்தியாவின் நிலைமை.

அறிக்கையின் முதல் அத்தியாயங்கள் இந்தியாவின் கைத்தொழிலின் நிலைமையைக் குறிக்கின்றன. அதில் இந்தியா கைத்தொழிலில் முன்னேற்றமடையாதிருப்பதும் பழைய காலத்துச் சாதனங்களால் பயிர்த்தொழில் செய்து ஜீவனத்திற்குப் போதுமான ஆகாரங்கூட நிலங்களிலிருந்து அடையாமல் கஷ்டப்பட்டுவருவதும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சில பாகங்களில் மேல் நாட்டுக் கைத்தொழில் சாதனங்களின் மேன்மை தெரிகிறது. அவைகளிற் சில இந்தியக் கூலிகளின் தேர்ச்சியின்மையையும் குறைவையும் அவர்கள் வேலைகளைப் பார்வையிட்டு வேலை வாங்கத் திறமையில்லாத குறைவையும் காட்டுகின்றன. காடுகளையும் மச்சங்களையும் ஆராய்ந்து பார்த்து வேலை செய்யவேண்டும். சாதாரணமாகக் கைத்தொழிலைவிட வியாபாரத்தில் தான் மிகுதியான பணம் போடப்படுகிறது. பத்திரமாகவும் சுளுவாகவும் இலாபம் வரக்கூடிய கைத்தொழிலாயிருந்தால்தான் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. தற்கால மனிதர்களுக்கு வேண்டியவைகளுக்கெல்லாம்வேண்டிய கருவிகள் இந்தியாவிலேயே அகப்படுகின்றன. ஆனால் யுத்தத்திற்கு முன்னும் பின்னுங்கூட இந்தியர்கள் தங்களுக்கு வேண்டியவைகளைத் தாங்களே செய்துகொள்ளவில்லை. உதாரணமாக நூல் கைத்தொழிலுக்கு வேண்டிய கருவிகளனைத்தும் இங்கிலாந்திலிருந்துதான் வரவேண்டும். எக்காரணத்தாலாவது கருவிகள்

வராவிட்டால் இக்கைத்தொழிலே போனதுதான். அதை அரசாங்கத்தார் கவனிக்கவேண்டும். விவசாயத்திற்குத் தற்கால முறைகளையும் அதிகக் கூலி செலவில்லாத கருவிகளையும் பிரயோகப்படுத்தச் செய்யவேண்டும். இப்படிச்செய்தால் நல்லவிளைவும் வியாபாரத்திற்குவேண்டிய நல்ல சாமான்களும் உண்டாவதோடு இதில் உழைக்காத கூலிகளும் வேறு கைத்தொழிலில் உபயோகப்படுத்தப்படலாம். அறிக்கையில் இந்தியாவில் நிலக்கரி அதிகமில்லை யென்றும் அதனால் கைத்தொழில் தடைப்படுகிறதென்றும் குறிக்கப்பட்டு இந்தியாவில் இன்னும் நிலக்கரி எங்கு அகப்படுமென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. பர்மாவில் கிரோசின் எண்ணெய்ச்சுரங்கம்வற்ற ஆரம்பமாய்விட்டது. வேறு எங்கு அகப்படுமென்பதும் தெரியவில்லை. கைத்தொழிலைக்காற்றைக்கொண்டு செலுத்தமுடியாது. தண்ணீரைக் கட்டுப்படுத்தி அதன் உதவியால் பலகாரியங்கள், முக்கியமாக எலெக்டிரிக் (மின்சார) சாதனங்கள், ஏற்படுத்தலாம். அவைகளை உடனே செய்யவேண்டும்.

## கைத்தொழிலில் இந்தியர்கள்.

இதைப்பற்றி அடுத்த அத்தியாயங்கள் கூறுகின்றன. அதில் இந்தியத் தொழிலாளிகளை நிபுணர்களாக்கவும் கல்வியறிவுள்ள இந்தியர்களைக் கைத்தொழிலில் பிரவேசிக்கச் செய்யவும் பல மார்க்கங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தியத் தொழிலாளர் குறைந்த ஊதியம்பெறுவது அவர்களின் திறமையின்மையினாலேயேயாகும். திறமைசாலிகளாயில்லாதிருப்பதற்குக் காரணங்கள் மூன்று, 1. கல்வியின்மை. 2. சுகமின்மை. 3. இலேசில் நீங்கக்கூடிய வியாதிகளை அகற்றாதிருத்தல் என்பவை. அனைவருக்கும் மூலாதாரப் படிப்பு அவசியம். கைத்தொழிற் படிப்பும் அவசியம். வீட்

டுக் கைத்தொழிற் படிப்பும் அவசியம். வீட்டுக் கைத்தொழில்கள் விருத்திசெய்யப் போதிய கல்வியும் தலைமை உபாத்தியாயர்களைக்கொண்டு அங்கங்கே போதிக்கப்படவேண்டும். கைத்தொழில் சாமான்களும் நன்ருய் விற்கும்படி ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

இந்தியக் கைத்தொழிலாளிகள் சௌக்கியமாயிருப்பதற்கு அவசியமாகக் குடியிருக்க நல்ல வீடுகள் வேண்டியதவசியம். பொதுஜன சுகாதாரம் நன்கு கவனிக்கப்படல் வேண்டும். மலேரியா முதலான தொத்து வியாதிகளை அகற்றிவிடவேண்டும்.

இந்தியக் கைத்தொழிலில் கல்விகற்ற இந்தியர்கள் தலையிடாதிருப்பதற்குக் காரணம் தலைமுறை தலைமுறையாக உள்ள அசட்டையும் அனுபோகத்தில் கொண்டுவரமுடியாத கல்வியுமாகும். ஒரு தொழிற்சாலையில் போர்மனுகவோ என்ஜினீயராகவோ இருக்க விரும்புகிறவர்கள் ஒவ்வொருவரும் சிலகாலம் வேலையில் பழகித் தாங்களே அத்தொழிலைச்செய்து அனுபோகப்படவேண்டும். கல்வியறிவும் அனுபோக அறிவும் அவசியமாகும். ஆகவே கைத்தொழில் சம்பந்தமாய்ப் போதிக்க இரண்டு கல்லூரிகள் ஏற்படவேண்டும். ஒன்று என்ஜினீயரிங்கிலும் மற்ருென்று மெட்டலர்ஜியிலும் (உலோகங்களின் குணம் முதலியவைகள்) தேர்ச்சி பெறச் செய்யவேண்டியது.

## கைத்தொழிலும் அரசாங்கமும்.

இதுவரையில் அரசாங்கத்தார் கைத்தொழிலில் சம்பந்தபடக்கூடாதென்னும் கொள்கையையுடையவராயிருந்தனர். அக்கொள்கைமாறி, இப்போது அதைக் கையாளவேண்டுமென்று நினைக்கும்போது, கைத்தொழிலில் தேர்ச்சியுள்ளவர்கள் அரிதாக இருக்கிருர்களென்றும் அதனுல் அவர்கள் ஆரம்பித்துப் பார்த்

தும், இன்ன கைத்தொழில் ஆரம்பம் செய்யலாமென்று சொன்னாலும், முன்வந்து செய்யக்கூடியவர்கள் இல்லை யென்றும் சொல்லி அதற்குப் பரிகாரமும் காட்டியிருக் கிறார்கள். அனேக விஷயங்களை ஆராய்ச்சி செய்யவும் அவ்வாராய்ச்சிகளை எப்படி உபயோகிக்கலாமென்று விசாரிக்கவும் ஸ்பெஷல் கமிட்டியொன்றை ஏற்படுத்த வேண்டும்.

## சில ஏற்பாடுகள்.

வியாபார சம்பந்தமாகவும் கைத்தொழில் சம்பந்த மாகவும் உபயோகப்படும்படியான முக்கிய விஷயங் கள் அரசாங்கத்தாருக்கும் தனி வியாபாரிகளுக்கும், கைத்தொழிலாளிகளுக்கும் அவசியமாயிருப்பதால் அவ்வித சமாசாரங்களைத் திரட்டிக் கைத்தொழில் டிபார்ட்மெண்டு மூலமாய்ப் பொதுஜனங்கள் அடை யச் செய்யவேண்டும்.

## அரசாங்க ஸ்டோர்.

இவைகளுக்குவேண்டிய சாமான்கள் இதுவரையில் இந்தியக் கைத்தொழிலாளர்களுக்குப் பிறருடன் போட்டிபோட முடியாமலும் இந்தியக் கைத்தொழில் விருத்தியடையாதிருக்கவுமாகவே வாங்கப்பட்டுவந் தன. ஆனால் அறிக்கையில்கண்ட ஏற்பாடுகளின்படி அரசாங்க ஸ்டோர்கள் வாங்கும் வேலை கைத்தொ ழில் டிபார்ட்மெண்டில் இருக்கவேண்டும். அவர்கள் முதலில் இந்தியாவில் செய்யப்படும் சாமான்களை வாங் கிய பிறகே வேறு இடங்களில் வாங்கவேண்டும். ஒரு அத்தியாயத்தில் கைத்தொழில் விருத்திக்கு அவசிய மான நிலம் முதலியவைகளைக் கட்டாயப்படுத்தி வாங்கச் சட்டம் இடந்தருமென்று காட்டப்பட்டிருக் கிறது. மற்றொரு அத்தியாயத்தில் அரசாங்கத்தார் கைத்தொழிலுக்கு எவ்வகையில் உதவி செய்யலாம் என்பது காட்டப்பட்டிருக்கிறது.

பாயிலர் ஆக்டு, சுரங்கரூல்ஸ், எலெக்டிரிசிட்டி ஆக்டு, ஜெயில் கைதிகளின் கைத்தொழில் சாமான்களைக் கலவாதிருக்கச் செய்தல், பேடண்டுகள், வியாபாரப் பெயர்களின் ரிஜிஸ்டிரேஷன், ட்ரேட் மார்க்குகள், வியாபாரத்தில் பாகஸ்தர்கள், இவை முதலான பல விஷயங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

## சிறிய கைத்தொழில்கள்.

இவைகளுக்குக் கூட்டுறவு அவசியம் என்பதும் ரெயில்வே கட்டணத்தின் பலாபலனும் கூறப்பட்டிருக்கின்றன. ரேயில்வே போர்ட்டில் வியாபார மெம்பர் ஒருவர் இருக்கவேண்டியதன் அவசியமும் அவர் செய்யக்கூடிய வேலையும் கூறப்பட்டுள்ளன.

## இந்தியாவின் பணம்

கைத்தொழிலில் போடப்படுகிறதில்லை. பணமில்லாததனாலன்றி, இருந்தாலும் தனக்கு வருவதில் அதிக இலாபத்தைக் கொடுத்தாலல்லது தொழிலாளிகளுக்குப் பணம் அகப்படுவதில்லை. ஆகவே கைத்தொழில் பாங்கு அல்லது பாங்குகள் ஏற்படுத்தப்படவேண்டும். இது விஷயமாய் அரசாங்கத்தார் உடனே நன்றாக ஆராய்ச்சி செய்யவேண்டும். அதற்கிடையில் இண்டஸ்டிரியல் டிபார்ட்டுமெண்டார் கொடுக்கலாமென்று சொல்லுகிறவர்களுக்கு அரசாங்கத்தாரின் ஜாமீன்மேல் கைத்தொழிலாளர்களுக்குப் பணம் கடன்கொடுத்து உதவிசெய்யவேண்டும். இன்னும் பண உதவிசெய்யும் மார்க்கமும் வீட்டுக் கைத்தொழிலை விருத்திசெய்ய மெஷின்கள் சாமான்கள் முதலியவைகளைக் கொடுத்து அவைகளின் கிரயத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பெற்றுக்கொள்ளவும் அரசாங்கத்தார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

## முடிவாக

இந்தியாவில் சாமான்களாகச் செய்யப்படாதவைகளும் அவைகளுக்கு உபயோகமாகவுமுள்ள சாதனங்களும் பொருள்களும் ஏராளமாக இருக்கின்றனவாயினும் அவைகளைச் சாமான்களாகச் செய்யத்தக்க சாதனங்கள் மிகக் குறைவு. இப்படியிருப்பதால் அயல் நாட்டார் இந்தியக் கைத்தொழிலைக் கைப்பற்றி விடக்கூடும். இந்தியாவில் கைத்தொழிலில் தேர்ச்சிபெற்ற கூலிகளும் நிபுணர்களும் இல்லை. இந்தியா தனக்கு வேண்டிய போர்மன், சூப்பர்வைசர்கள் முதலியவர்களுக்கு வெளி தேசங்களை எதிர்பார்க்கிறது. இந்தியாவின் பணமுழுவதும் வீணாகத் தூங்குகிறது. அதைத் தக்க வழியில் உபயோகப்படுத்தி இந்தியாவின் கைத்தொழிலை விருத்தி செய்யவேண்டும்.

## செலவு.

இவ்வித ஏற்பாடுகளெல்லாம் செய்வதற்கு வருடா வருடம் 86 லக்ஷம் ரூபாயும் முதன் முதலில் கல்வி விஷயமான விஷயங்களில் செலவு செய்ய உடனே 150 லக்ஷம் ரூபாயும் மறுபடியும் அவைகளை விருத்தி செய்ய 66 லக்ஷம் ரூபாயும் வேண்டியிருக்கிறது.



ஸ்ரீமான் பண்டித மதன்மோஹன் மாளவியா.

# இந்தியக் கைத்தொழில் சிறப்பு

அல்லது

ஸ்ரீமான் பண்டித

# மதன்மோஹன் மாளவியா

அவர்களின் தனிக் குறிப்பு

## முன்னுரை.

1916-ம் வருஷம் மார்ச்சு மீ 21௳ தினம் ஸர் இப்ராஹீம் ரஹீமதுல்லா என்பவர் இந்தியாவில் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு அனுகூலமாக என்ன செய்யலாமென்று ஆலோசிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்று இராஜப்பிரதிநிதி சட்ட சபையில் பிரரேபித்தார். அதின் சம்பந்தமாக அவர் சொன்னதாவது :—

" விசேஷமாய் இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதியைப்பற்றியும், அவைகளின் விஷயமாய்ப் போடப்படும் தீர்வைகளைப்பற்றியும் இந்திய துரைத்தனத்தாருக்குப் பூரணமான அதிகாரங்கொடுக்கும்படி இந்தியா மந்திரியின் மூலமாக அதிகாரிகளுக்கு மனு செய்துகொள்ளவேண்டுவது அவசியமா" என்பதே.

மேற்கண்ட தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய போது அவர் சொன்னதாவது :—

" தற்கால இந்திய நிலைமையை அபிவிருத்திசெய்ய இந்திய கவர்ன்மெண்டார் பலவிதமான பிரயத்தனங்க

ளைச் செய்துவருகிறார்களென்பது எனக்குத் தெரியும். ஆனால் பணப்பொறுப்பில் இம்பீரியல் கவர்ன்மெண்டாருக்குச் சர்வாதிகாரம் இருந்தாலொழிய, அவர்கள் செய்துவரும் பிரயத்தனங்களுக்குத் தகுந்த பலன் கிடைப்பது அரிது என்று எனக்குத் தோன்றுகிறது. இந்திய நாட்டின் கைத்தொழில்கள் உயிர்ப்பிக்கபட வேண்டுமானால், இப்படிப்பட்ட சர்வாதிகாரம் இந்தியா கவர்ன்மெண்டாருக்குக் கிடைக்கவேண்டுவது இன்றியமையாதது.''

அக்காலத்தில், வியாபாரத்துக்கும் கைத்தொழிலுக்கும் கவர்ன்மெண்டு தரப்பில் மெம்பராக இருந்த கனம் ஸர் உல்லியம் கிளார்க்கு துரையவர்கள் கவர்ன்மெண்டாருக்காக மேற்சொன்ன தீர்மானத்தை அங்கீகாரம்செய்துகொண்டார். அவர், மேலும் இப்படிப்பட்ட தீர்மானம் சிபார்சு செய்யப்படும் என்று ஏற்கனவே கவர்ன்மெண்டார் எதிர்பார்த்து இவ்விஷயத்தை ஆலோசிக்க ஒரு கமிட்டி மாத்திரம் போதாதென்று அறிந்து, ஒரு விசாரணை சங்கம் நியமிக்கத் தக்க ஏற்பாடு செய்திருக்கிறதாகச் சொன்னார்; ஆனால், அந்த விசாரணை சங்கம், தான் செய்யும் விசாரணையில் இந்திய பணப் பொறுப்பு ஒழுங்கைப்பற்றித் தற்காலம் நடந்துவரும் யுத்தம் முடிவுக்கு வரும்வரையில் யாதொரு விவகாரமும் செய்யமுடியாதென்றும் சொன்னார். அதே காரணத்தின் நிமித்தம் இந்திய கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்படும் தீர்வைகளைப்பற்றியும் தற்காலம் ஆலோசிக்கப் படமாட்டாதென்று சொன்னார்.

அடியிற்கண்ட விஷயங்களின் சம்பந்தமாய் மேற்சொன்ன விசாரணைக்கூட்டத்தார் பரிசோதித்துத்

தம்முடைய ரிபோர்ட்டை அனுப்பவேண்டுமென்று ஆக்ஞாபிக்கப்பட்டிருகின்றனர் :—

" (a) இந்தியர்கள் தங்கள் கைம்முதலை வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் லாபகரமாய் உபயோகப்படுத்த நூதன வழிகள் காட்டமுடியுமா வென்றும்,

" (b) அப்படியிருக்கும்பக்ஷத்தில்,

"(1) சாஸ்திர சம்பந்தமான ஆலோசனை சுலபமாய்க் கிடைக்கச் செய்வதினாலா,

" (2) விசேஷித்த கைத்தொழில்கள் செய்வதற்கு அனுகூலமாயிருக்கவும் வியாபாரத் துறையில் லாபகரமென்று காட்டவுங்கூடிய உபகாரங்களைச் செய்வதினாலா,

"(3) கைத்தொழில் ஆரம்பிக்கிறதற்குத் தாங்களேயாவது அல்லது வேறெந்த விதத்திலாவது பண உதவி செய்வதினாலா, அல்லது,

" (4) இந்திய கவர்ன்மெண்டாருடைய தற்காலப் பணப் பொறுப்பின் ஒழுங்குக்கு இடையூறில்லாத வேறெந்த விதத்தினாலா கைத்தொழில்களின் அபிவிருத்திக்காகக் கவர்ன்மெண்டார் தாங்களே உதவி செய்யக்கூடும்" என்றும் ஆலோசித்து அவர்கள் தங்கள் ரிபோர்ட்டைத் தயார்செய்து அனுப்பக்கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மேலும், கைத்தொழில்களின் விருத்திக்காகச் சேமிக்கப்படும் முதலும், அவைகளை நடத்தும்படியான ஏற்பாடுகளும் இந்தியர்களாலேயே நிர்வாகம்செய்யப்பட்டு வருவது அவசியம் என்று ஸர் உல்லியம் கிளார்க்கு சொல்லியிருக்கிறார். இந்தியாதேசம் கைத்தொழிலில் முன்னேற்ற மடைவது இந்தியாவுக்கும், பொதுவாய்ப் பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கும் மிகவும் அனுகூலமா

யிருக்கும் என்பதை அவர் வற்புறுத்தியிருக்கிறார். தவிர, இப்போதுபோல் மேல்நாட்டு வியாபாரிகள் தூரத்திலிருந்துகொண்டு நம் தொழிலாளிகளோடு போட்டியாய் வியாபாரம் செய்வதை மாற்றி, அவர்கள் கைம்முதலை இந்தியாவிலேயே கொண்டுவந்து புகுத்தி நம்முடன் போட்டி வியாபாரம் செய்ய உதவியாயிருக்கும் எவ்விதமான ஏற்பாடுகளையும் அவர் இகழ்ந்து பேசியிருக்கிறார். இந்தியர்கள் எவ்விதத்தால் தங்கள் கைத்தொழில்களையும் வியாபாரத்தையும் முன்னுக்குக் கொண்டுவரலாம் என்பதைக் கண்டுபிடிப்பதற்காகவே இந்தியா கவர்ன்மெண்டார், கல்கத்தா கலாசாலையில் பண்டிதராயிருக்கும் வி. ஜே. ஹாமில்டன் துரை யவர்களை ஜப்பான் தேசத்துக்குப்போய் மேல் நாட்டுக் கைத்தொழில் விஷயங்களைப்பற்றி ஒன்றுமே அறியாத அத்தேசத்தார் எப்படித் தங்கள் கைத்தொழில்களை ஏராளமாய் விருத்திசெய்திருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் கையாடிவரும் முறைகள் என்ன என்பதையும் விசாரித்துக்கொண்டு வரும்படி அனுப்பிவைத்தார்கள்.

நாம் பரிசோதித்து நம்முடைய அபிப்பிராயங்களைச் சொல்லவேண்டிய விஷயங்களில் மேற்சொன்ன கருத்தை நாம் எப்பொழுதும் தெளிவாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

## நூல்.

### இந்தியாவின் முற்கால தற்கால நிலைமை.

பண்டிதர் ஹாமில்டன், பெரும்பாலும் பயிரிடும் குடிகளாயிருந்த ஜப்பான் தேசத்தார்கள் எப்படி

இவ்வளவு சீக்கிரத்தில் அத்தொழிலை மாற்றிக் கைத் தொழில்களில் மிகவும் தேர்ச்சியடைந்தார்கள் என்பதையும், எப்படித் தற்காலத்தில் கைத்தொழில்களில் பேர்பெற்ற நாடுகளில் ஜப்பானும் ஒன்றாயிற்று என்பதையும் காண்பித்து அவர் இவ்விஷயத்தைப் பற்றி விசாரணை சங்கத்திற்குப் பரிசீலனைசெய்து அனுப்பிய தம்முடைய குறிப்பில்,

" ***** இரண்டாவது சமாசாரம் என்னவென்றால் இப்பேர்ப்பட்ட மாறுதல் ஆசியா கண்டத்தாரால் அடையப்பெற்றிருக்கிறது என்பது. இவ்விஷயம் இந்தியாவிற்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது.ஏனென்றால், ஆசியாக்கண்டத்தார் தங்கள் வழக்க ஒழுக்கங்களையே யனுஸரிப்பவர்கள் என்றும், விருத்தியற்றவர்கள் என்றும், தங்களுடைய தேசத்தைச் சட்டதிட்டத்துடன் ஆள மேல்நாட்டாருடைய உதவி அவர்களுக்கு அவசியம் வேண்டும் என்றும், மேல்நாட்டாருடைய உதவியிருந்தாலும் ஐசுவரியவிருத்திக்காக மேல்நாட்டாருடைய தற்கால ஏற்பாடுகளையும் நோக்கங்களையும் அவர்களை அனுஸரிக்கச்செய்வது கஷ்டமென்றும் வெகுகாலமாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார்.

இந்த அபிப்பிராயம் மிஸ்டர் ஹாமில்டனுக்கு மாத்திரம் உரியதல்ல. " இந்தியா பெரிதும் பயிர்த்தொழில் செய்யும் தேசம். அவ்விதமாகவே இருக்க வேண்டும். இயற்கையாயும், பாரம்பரியமாயும் இந்தியர்களுக்குக் கைத்தொழில்கள் செய்யும் சக்தியும் வியாபார முயற்சியும் குறைவு. மேல் நாட்டாருக்குச் சுபாவத்திலேயே மேற்சொன்ன குணங்கள் அமைந்து கிடக்கின்றன" என்னும் தப்பான அபிப்பிராயம்

அநேக ஐரோப்பியருக்கு இருக்கிறது. இந்த விசாரணை சங்கத்தின் சம்பந்தமாய் உள்ள என் அலுவலில் இது அநேகம் தடவை எனக்கு ஞாபகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அபிப்பிராயம் தப்பானது என்று காட்டப்படவேண்டும். ஏனென்றால் அது இந்தியர்களுக்குள்ள திறமையை இழிவுபடுத்துகிறது. இந்தியாவின் தற்கால கைத்தொழில்களின் நிலைமையை அறியவும், அவைகளின் எதிர்கால வளர்ச்சிக்குவேண்டிய துறைகளைக் கவனிக்கவும், கடந்த காலத்தில் அவைகளின் ஸ்திதியைப்பற்றிச் சரியான விதமாய் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானது.

கைத்தொழில்களுக்கு உற்பத்தி ஸ்தானமான ஐரோப்பாவின் மேல்திசையிலுள்ளவர்கள் நாகரிகமற்ற ஜாதியாயிருந்த காலத்தில், இந்தியா தன்னுடைய ஐசுவரியத்துக்கும் கைத்தொழில்களுக்கும் பேர்பெற்றிருந்தது. பிற்காலத்திலும் ஐரோப்பிய வர்த்தகர்கள் இந்தியாவுக்கு முதல் முதல் வந்தபொழுது, நாகரிகத்தில் முன்னேற்றமடைந்திருந்த அக்காலத்திய ஐரோப்பிய ஜாதியாரை விட இந்தியர்கள் கைத்தொழில் முறையில் குறைந்திருக்கவில்லை என்று என்னோடு கூடவிருக்கும் மெம்பர்கள் சொல்லை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் காலக்கிரமத்தில் கைத்தொழில்கள் இங்கிலாந்தில் விருத்தியடைந்ததற்கும், இந்தியாவில் க்ஷீணித்துப் போனதற்கும் அவர்கள் சொல்லுகிற நியாயங்களை நான் ஒத்துக்கொள்ளக்கூடவில்லை.

"மேல் நாட்டு ஜனாசாரங்களும், இராஜாங்க நிலைமையும் அந்நாட்டுச் சாதாரண ஜனங்கள் வர்த்தக விஷயங்களில் முன்னேற்றமடைவதற்கு அதிக அநுகூலமா

யிருந்தன. அவைகளே அவர்களுடைய இராஜீய விஷயத்திலும், வியாபாரத்திலும், மதவிஷயத்திலும் சுவாதீனம் பெற ஹேதுவாயிருந்தன. அவர்களுடைய கைத்தொழில்களின் தேர்ச்சிக்கும் ஆதாரமாகவிருந்தவை அவைகளே. இவைகளையெல்லாம் ஆரம்பித்து விருத்திக்குக் கொண்டுவந்தவர்கள் அந்நாட்டுச் சாதாரண ஜனங்களே. இதே ஜனங்கள் தான் பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த 'கைத்தொழில் எழுச்சிக்குக்' காரணராயிருந்தார்கள்." (ரிபோர்ட், பாரா 1).

அதே மாதிரி, ரிபோர்ட்டின் 134 பாராவில் :—

"மேல் நாட்டில் கைத்தொழில் அபிவிருத்தியின் சம்பந்தமான சரித்திரத்திலிருந்து கல்விமான்களும் ஐசுவரியவான்களுங்கூட இந்த விஷயத்தில் கவலை யெடுத்துக்கொண்டார்கள் என்றுவிளங்குகிறது. ராயல் ஸொஸைடியாரும், பிறகு ஆர்ட்ஸ் ஸொஸைடியாரும் சாஸ்திர சம்பந்தமாய் ஆராய்ச்சிசெய்து கைத்தொழில் விருத்திக்காக உதவி செய்தார்கள். இதை அநுசரித்து தனவந்தர்கள் அநேகம் புதிய கைத்தொழில்களை ஸ்தாபித்தார்கள். அதன் பலனாக, இங்கிலாந்தில் யந்திரங்களால் செய்யப்பட்ட வஸ்துக்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டபொழுது, இந்தியர்கள் அதேமாதிரி செய்யத் திறமையற்றவர்களாயிருந்தார்கள்," என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன சங்கதிகள் விஷயங்களைச் சரியான விதமாய் வெளிப்படுத்தவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால், கைத்தொழில்களின் சம்பந்தமான முயற்சியில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியருக்கும் சுபாவத்திலேயே தாரதம்மியம் உண்டென்கிற பிசகான எண்ணங்களுக்கு இது இடம் கொடுக்கக்கூடும். இவ்விதமாய்ச்சொல்லப்படுவது இந்தி

யர்களுக்குத் துரைத்தனத்தாருடைய ஆதரவு இருந்தால் இந்திய கைத்தொழில்களை முன்னேறச்செய்யக் கூடுமா என்கிற விஷயத்தில் சரியான தீர்மானத்துக்கு இடையூறு உண்டாக்கும். இந்தியாவின் பொருளாதார நிர்வாக சரித்திரத்தையும் இங்கிலாந்தில் நடந்த "கைத்தொழில் எழுச்சி"யைப்பற்றியும் கொஞ்சம் விஸ்தாரமாக ஆராய்ந்து பார்க்க விரும்புகிறேன்.

## இந்தியா கைத்தொழிலும் விவசாயமும் நடந்தேறி வந்த தேசம்.

"சிறந்த நெசவுத் தொழிலிலும், பலவித வர்ணங்களைக் கலப்பதிலும், உலோகங்களில் வேலை செய்வதிலும், வாசனைத் திரவியங்கள் செய்வதிலும், பலவிதமான சித்திரவேலைகளிலும் இந்தியர்கள் பூர்வகாலம் முதல் பிரசித்தி பெற்றிருந்தார்கள்," என்று பண்டித வீபர் என்பவர் சொல்லுகிறார். கிறிஸ்து பிறப்பதற்கு 3000 வருஷங்களுக்கு முன் பாபிலோன் இந்தியாவோடு வர்த்தகம் செய்ததற்கு அத்தாக்ஷி இருக்கிறது. கி. பி. 2000 வருஷங்களாக ஈஜிப்த் தேசத்தில் இருக்கும் கல்லறைகளில் வைக்கப்பட்டிருக்கும் பிரேதங்களை மிக உயர்ந்த இந்திய ரவை சல்லாத் துணிகளில் சுற்றிவைத்திருப்பதாகத் தெரியவருகிறது. மேலும் "ரோமா புரியில் இந்திய கைத்தொழிலாளிகள் செய்த சாமான்களின் வர்த்தகம் ஏராளமாகப் பரவியிருந்தது. அதனால் ரோமா புரியின் ஐசுவரியத்தில் பெரிய பாகம் இந்தியாவுக்குப்போய் விடுகிறது" என்று பிளினி என்னும் சரித்திரக்காரர் சொல்லுகிறார். வட இந்தியாவிலிருக்கும் டாக்காப் பட்டணத்தில் நெய்யப்

பட்டாவை சல்லாத் துணிகள் உலகப் பிரசித்தம் பெற்றவை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவைகளைப் பார்க்கும்போது, இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே இந்தியா நூல் நூற்பதிலும், நெசவுத் தொழிலிலும் அதிக தேர்ச்சியடைந்திருந்த தென்கிற விஷயம் தெளிவாகிறது. பதினேழாம் நூற்றூண்டில்தான் இங்கிலாந்தில் பருத்தி நெசவுத்தொழில் ஆரம்பிக்கப்பட்டது." (இம்பீரியல் கெஜட்டியர் ஆப் இந்தியா,வாலும் III, 195-ம் பக்கம்).

இரும்புக் கைத்தொழில்களின் சம்பந்தமாகப் பண்டித வில்ஸன் சொல்லுகிறதாவது :— "கைத்தொழில் தேசமாகிய இங்கிலாந்தில் சில வருஷங்களுக்கு முன்னேதான் இரும்பு வார்ப்படவேலை துவக்கப்பட்டது. ஆனால், இரும்பு உருக்குதல், பற்றவைத்தல், எஃகு செய்தல், இந்த விதமான தொழில்முறைகள் அநாதி காலமாக ஹிந்துக்களுக்குத் தெரிந்திருந்தன."

"இரும்புக் கைத்தொழிலாளிகள் உள்நாட்டுக்கு வேண்டியதைக் கவனித்துவந்தது மாத்திரமல்ல, அன்னிய நாடுகளுக்கு வேண்டிய சாமான்களையும் செய்து ஏற்றுமதி செய்துவந்தார்கள். செய்து அனுப்பப்பட்ட சாமான்களும் உலகப்பிரஸித்தியடைந்திருந்தன. டில்லிக்கு அருகாமையில் இருக்கும் பிரசித்தி பெற்ற இரும்புத்தூண் சுமார் 1500 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்டது. நாளைக்கும் அதைப் பார்ப்பவர்கள் வியப்படைகிறார்கள். அதில் செய்திருக்கும் வார்ப்படவேலையும், வேலைத்திறமையும் பார்க்கிறவர்கள் கண்களைக் கவர்ந்துவிடும். உலகத்திலிருக்கும் எந்த இரும்புத் தொழிற்சாலையிலும் அப்பேர்ப்பட்ட தூண் வார்ப்படம் செய்வது அசாத்தியமென்று இந்திய

ஜியலாஜிகல் ஸர்வேயில் வேலையாயிருந்த மிஸ்டர் பால் (Ball) என்பவர் சொல்லுகிறார், ஆஸாமில் பிரமாண்டமான பீரங்கிகள் செய்யப்பட்டு வந்தன. டமாஸ்கஸ் என்னும் பட்டணத்தில் செய்யப்பட்ட பட்டாக் கத்திகள் இந்திய எஃகினால் செய்யப்பட்டவை. அக்கத்திகள் உலகப் பிரசித்தி பெற்றவை. பாரஸீகவர்த்தகர்கள் பாரஸீகத்திலிருந்து இந்தியாவுக்குவந்து இரும்புச் சரக்குகளை வாங்கி ஆசியாவின் இதர பாகங்களுக்கு ஏற்றுமதி செய்து லாபம் சம்பாதித்து வந்தார்கள். இங்கிலாந்தில் கூட கத்தி முதலிய சாமான்கள் செய்ய இந்திய எஃகு ஏராளமாய் வாங்கப்பட்டு வந்தது. இரும்பு வார்ப்படவேலையும் எஃகும் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னமே இந்தியாவில் பூரண நிலைமை அடைந்திருந்ததாகத் தெரியவருகிறது" என்று 1892-ல் ரானடே எழுதியிருக்கிறார்.

அலெக்ஸாந்தருடைய படையெழுச்சி காலத்திலும், அதற்குமுன் அநேக நூற்றாண்டுகளாகவும், இந்திய ஜனங்கள் அதிக க்ஷேமமான நிலைமையிலிருந்தார்கள். இந்தச் செழுமை பதினெட்டாம் நூற்றாண்டில் மொகலாய ராஜ்ஜியம் க்ஷீணித்துப் போகும்வரையில் நிலைத்திருந்தது. இதற்கு ஏராளமான ஆதாரம் உண்டு.

"கிரேக்கர்கள் இந்தியாவில் கண்ட பாகங்களைப் பற்றி எழுதும்போது, இந்தியாவில் ஜனங்கள் நிறைந்திருந்ததாகவும், அவர்கள் க்ஷேமமாக வாழ்ந்து கொண்டு இருந்ததாகவும் சொல்லுகிறார்கள். அநேக வியாபாரத்திற்குரிய பட்டணங்களும், துறைமுகங்களும் அன்னிய நாடுகளுடன் வர்த்தகம் செய்து கொண்டிருந்தனவென்று சொல்லும்போது, இந்திய நாட்டார் கைத்தொழில்களிலும், வியாபாரத்திலும் எவ்வளவு சீர்பெற்ற நிலைமையில் இருந்தார்க

ளென்பது தெளிவாகிறது. ஒவ்வோர் இந்தியனும் சுயேச்சையுடையவனாயிருந்தானென்று ஆறியன் என்னும் சரித்திரக்காரர் வியப்போடு சொல்லுகிறார். யுத்த காலத்திலும் சமாதானகாலத்திலும் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த சேனை இருந்தது. போலீஸ் ஏற்பாடு களும் நல்ல ஸ்திதியிலிருந்ததாகச் சொல்லப்படுகிறது. சந்திரகுப்தனுடைய கூடாரத்தில் நாலு லக்ஷம் ஜனங்கள் இருந்தார்களென்றும், அதில் நாள்தோறும் திருடுபோனவை சுமார் மூன்று பவுன் அல்லது நாற்பத்தைந்து ரூபாய்க்கு அதிகமில்லையென்றும் மெகஸ்தனிஸ் என்னும் சரித்திரக்காரர் சொல்லுகிறார். வயல்களெல்லாம் அளவிடப்பட்டிருந்தன. நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய ஏற்பாடுகளும் மிகவும் ஜாக்கிரதையாய்ச்செய்யப்பட்டிருந்தன. வர்த்தகத்திற்காக வரி வாங்கப்பட்டது. வியாபாரிகளும் வர்த்தகர்களும் வருமான வரி செலுத்திவந்தார்கள். ராஜபாட்டைகள் போடப்பட்டிருந்ததாகவும், அவைகளில் மைல் கல்லுகள் நடப்பட்டிருந்ததாகவும் ஸ்ட்ராபோ (Strabo) என்பவர் சொல்லுகிறார். பொன்னும், ரத்தினக்கற்களும், பட்டும், ஆபரணங்களும் எல்லாக் குடும்பங்களிலும் இருந்தன. மேற்சொல்லப்பட்டிருக்கும் தொழில்கள் நாகரிகமுள்ள ஜீவியத்திற்கு உரியனவாயிருந்தன. தானிய வகைகளையும், வாசனைத்திரவியங்களையும் பார்த்தால், தேசமானது விவசாயத்தொழிலிலும் அதிக தேர்ச்சி அடைந்திருந்ததாகத் தெரிய வருகிறது. உள்நாட்டு ஏற்பாடுகளும் சீரான நிலைமையிலிருந்தன. தங்களுடைய விரோதிகள் விஷயத்தில் கருணையாயிருந்தார்கள். பொதுவான கல்விப் பயிற்சியும் விருத்தியடைந்திருந்தது. ஆதென்ஸ் (Athens) பட்டணத்திலிருந்த மஹா பண்டிதர்களுக்குக் கிடைத்திருந்த தெய்வ அறிவைவிட இந்தியர்களுக்குக் கடவுளைப்பற்றிய ஞானம் சிறந்திருந்தது," என்று மிஸ்டர் எல்பின்ஸ்டன் (Elphinstone) என்று

சரித்திரக்காரர் சொல்லுகிறார். (எல்பின்ஸ்டன் இந்திய சரித்திரம், 52-பக்கம்).

கி. பி. முதல் நூற்றாண்டில் மேல்நாடுகளிலும், விசேஷமாய் ரோமா புரியிலும் இந்திய சரக்குகள் ஏராளமாய் விற்கப்பட்டு வந்தன. மேல்நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்திருந்த அநேக பிரயாணிகள் இந்திய வியாபாரத்தைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். கி.பி. நாலாவது ஆறாவது நூற்றாண்டுகளில் இரண்டு சீன தேசத்துப் பிரயாணிகள் இந்தியாவுக்கு வந்தார்கள். அப்பொழுது அவர்கள் கைத்தொழில்களும் சிற்பவேலைகளும் நல்ல ஸ்திதியில் இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு வெனிஸூம், ஜினோவாவும் இந்தியாவோடு ஏராளமாய் வர்த்தகம் செய்துவந்தன. கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் மார்கோ போலோ என்பவர் இந்தியாவுக்கு வந்திருந்தபோது, அவர் கண்ட காட்சிகளையும் விவரித்திருக்கிறார்.

கி. பி. பதினோராம் நூற்றாண்டுமுதல் இந்தியாவில் இதர ஜாதியாருக்குக் கிடைத்த ஜெயங்கள் இந்திய கைத்தொழில்களுக்கும், தொழிலாளிகளுக்கும் அதிக இடையூறுகளை உண்டாக்கின. மொகலாய ராஜ்ஜியம் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, அக்பர் ஆளுகையில், கைத்தொழில்கள் மறுபடியும் உயிரடைந்தன. ஷாஜஹான் அரசாட்சிகாலத்தில் இந்தியாவுக்கு வந்திருந்த பெர்னியர் (Bernier) என்பவர், அந்தச் சக்கரவர்த்தியின் தலை நகரைப்பற்றி மிகவும் சிறப்பித்துப் பேசுகிறார். பொன்னும், வெள்ளியும், ஆபரணங்களும், ரத்தினங்களும் அபரிமிதமாயிருந்ததாகவும்,

சித்திரத் தையல்வேலைகளும், நானுவித பட்டுகளும், சரிகை துப்பட்டாக்களுமாகிய இவ்வித கைத்தொழில்கள் விசேஷமாய்ச் செய்யப்பட்டு வந்ததாகவும் சொல்லுகிறார். மைலாஸன சிம்மாசனத்தில் செய்திருந்த அதியற்புதமான செதுக்கு வேலைகளும், அதில் இழைக்கப்பட்டிருந்த நவரத்தினங்களும், பார்க்கும் போது சொல்ல முடியாத ஆச்சரியத்தை உண்டாக்கினதாக டாவர்னியர் (Tavernier) என்பவர் வருணித்திருக்கிறார்.

## ஈஸ்டு இந்தியா கம்பெனி (வர்த்தகக்கூட்டம்).

மேற்கண்ட வியாபாரமும், செழிப்புந்தான் ஐரோப்பிய வர்த்தகர்களை இந்தியவோடு வர்த்தகஞ்செய்யத் தூண்டின. "மனிதனுல் செய்யப்பட்ட கைவேலைகளில் மிகவும் லக்ஷணமான கைத்தொழில்கள் இந்தியாவில் செய்யப்பட்டமையால், அன்னிய நாட்டு வியாபாரிகள் தங்கள் பாடுகளையும் அபாயங்களையும் ஒரு பொருட்டாக எண்ணுமல், அவைகளை நாடி வந்தார்கள்" என்று மர்ரே என்னும் சரித்திரக்காரர் சொல்லுகிறார். வெனிஸூம் ஜினேவாவும் க்ஷீணநிலையடைந்தபிறகு, போர்த்துக்கேஸியரும், டச்சுக்காரரும் இந்திய வர்த்தகத்தைச் சுவாதீனப்படுத்திக்கொண்டார்கள். இதைக் கண்ட ஆங்கிலேய வியாபாரிகள் பொறுமை கொண்டு, கிழக்கு இந்திய தேசங்களோடு (East Indies) வர்த்தகம் செய்ய எலிசபெத்து (Elizabeth) மஹாராணியாரிடத்தில் 1600௵ டிஸம்பர்மீ 31௳ ஓர் அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொண்டார்கள். அந்த வர்த்தகக் கூட்டத்தாருக்குத்தான் ஈஸ்டு இந்தியா கம்பெனி

என்று பெயர். அவர்கள் கூடியமட்டும் இந்திய கைத்தொழில் சாமான்களுக்குப் பதிலாகத் தங்கள் சொந்த தேசத்துச் சாமான்களை அனுப்பக்கூடாதென்று திட்டம் செய்துகொண்டார்கள். ஏனென்றால், அக்காலத்தில் ஆங்கிலேய கைத்தொழில் சாமான்கள் வெகு சொற்பமாயிருந்தன.

"பதினேழாம் நூற்றாண்டின் கடைசியில் நேர்த்தியான பருத்தி நூற்புடவைகளும், சல்லாக்களும், சீட்டிகளும் இங்கிலாந்துக்கு இந்தியாவிலிருந்து ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஜனங்களுக்கு இந்தச் சரக்குகள்மேல் அதிக விருப்பம் உண்டாயிற்று. அந்நாட்டுக் கம்பளி, பட்டுச் சரக்குகள் விலை பெறாமல் போயின. அத்தொழிலாளிகள் அதிக திகிலடைந்தார்கள். ஆகையால் நூல் கலந்ததும் சாயம் போட்டதுமான எந்த விதமான துணியையும் உடுப்புக்காவது, சாமானுக்காவது, சிலவற்றைத்தவிர, உபயோகப்படுத்தக்கூடாது என்று 1700௵லும், 1721௵லும், பார்லிமெண்டில் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன." என்று லெக்கி என்னும் சரித்திரக்காரர் தம்முடைய பதினெட்டாம் நூற்றாண்டு இங்கிலாந்து தேச சரித்திரத்தில் எழுதியிருக்கிறார்.

1757௵த்தில் வங்காளத்தின் பூர்வீக ராஜதானியான மூர்ஷிதாபாத்துக்குக் கிளைவ் பிரபு போனபோது அதைப்பற்றி அவர் சொல்லுகிறதாவது:—

"இந் நகரம் லண்டன் நகரத்தைப்போல விசாலமுள்ளதும், ஜனத்தொகை யுள்ளதும், ஐசுவரிய முள்ளதுமாயிருக்கிறது. ஒரே வித்தியாசமென்ன வென்றால். லண்டன் நகரவாசிகளை விட இந்நகரவாசிகள் தனவந்தர்கள்" என்பதே.

"நூறு வருஷத்திற்குள்ளாகவே டாக்கா பட்டணத்தின் வியாபாரம் கோடி ரூபாயாக மதிக்கப்பட்டது. அதனுடைய ஜனத்தொகை மதிப்பு இரண்டு லக்ஷமாயிருந்தது. 1787-ல், முப்பது லக்ஷம் ரூபாய் பெறுமான ரவை சல்லாத்துணி டாக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1817-ல் அது அடியோடு நிறுத்திவிடப்பட்டது. ஏராளமான கைத்தொழிலாளிகளுக்கு நூல் நூற்பதும் நெசவும் ஜீவனாதாரமாயிருந்தன. இப்பொழுதோ அவை நசித்துப் போய் விட்டன. முன்னே ஐசுவரியத்தில் புரண்டு கொண்டு இருந்த குடும்பங்கள் தரித்திர நிலையையடைந்து, பட்டணத்தை விட்டுத் தங்கள் ஜீவனத்திற்காகக் கிராமங்களுக்குச் சென்றுவிட்டார்கள். தற்காலத்தில் டாக்காவின் ஜனத்தொகை 79,000 தான். இக்கைத்தொழிலின் அழிவு டாக்காவில் மாத்திரமல்ல, அதைச்சுற்றிலுமிருக்கும் ஜில்லாக்களிலும் உண்டாயிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் கமிஷனர்களும் ஜில்லா அதிகாரிகளும் நாட்டிலுள்ள கைத்தொழிலாளி வகுப்பார் க்ஷீணித்துக்கொண்டுபோகிறதாகக் கவர்ன்மெண்டாருக்கு வருஷா வருஷம் தெரிவித்துக்கொண்டு வருகிறார்கள்," என்று ஸர் ஹென்றி காட்டன் துரை (Sir Henry Cotton) 1890-க்கு முன் எழுதியிருக்கிறார்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் நான்கு வருஷங்களில், ஏற்றுமதிச் சரக்குகளின்மீது தீர்வைகள் அதிகமாகச் சுமத்தப்பட்டிருந்தபோதிலும், ஒவ்வொரு வருஷமும் ஆறாயிரம் முதல் பதினாயிரம் வரையில் பருத்தி நூற் சரக்கு மூட்டைகள் கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1813-ல் மூட்டைகளின் தொகை குறைந்துவிட்டது. சில்லறை வியாபாரிகளுக்கு வர்த்தகசுவாதீனம் கிடைத்த 1815-ல் வர்த்தகம் விருத்தியடைந்

தது. அந்த விருத்தி தற்காலசாங்கியாயிருந்தது. 1820-ஷூத்தின் பிறகு பருத்தி நூல் சாக்குகளின் கைத்தொழிலும் ஏற்றுமதியும் காலக் கிரமத்தில் க்ஷீணித்துப் போய் விட்டன. மறுபடியும் எக்காலத்திலும் தலையெடுக்கவேயில்லை." (மிஸ்டர் R. C. தத்தரின் பிரிட்டிஷ் இந்திய சரித்திரம், 296-ம் பக்கம்).

## இந்தியதேசம் எப்படி விவசாய நாடு ஆயிற்று என்பது.

ஈஸ்டு இந்தியா கம்பெனியாருடைய ஆளுகையின் ஆரம்பத்தில், இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச் சாக்குகளைப் பிரிட்டிஷ் நெசவுக்காரர் கண்ட பொழுது, அவர்களுக்கு வங்காள நெசவாளிகளின்மீது பொறாமை உண்டாயிற்று. ஆகையால் அவர்கள் இந்திய கைத்தொழிற் சாமான்கள் இங்கிலாந்துக்கு வரக்கூடாதென்று கட்டுப்பாடு செய்தார்கள். அது மாத்திரமல்ல.

"இந்தியாவில் கைத்தொழில்களைத் தலை எடுக்க வொட்டாமல் ஈஸ்டு இந்தியா கம்பெனியார் தங்கள் ராஜாங்க அதிகார தோரணையில் பிரயத்தனங்கள் செய்து வந்தார்கள். 1769ஷூ மார்ச்சுமீ 17உ வங்காளத்துக்குக் கம்பெனியார் எழுதின கடிதம் ஒன்று இருக்கிறது. அதில், வெறும்பட்டு உண்டு பண்ணும் கைத்தொழிலை வங்காளத்தில் விருத்திசெய்யவும், பட்டுச் சாக்குகள் செய்யும் கைத்தொழிலை அடக்கவும் வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பட்டு நூல் நூற்கிறவர்கள் கம்பெனியாருடைய தொழிற்சாலைகளில் மாத்திரம் நூற்கவேண்டுமேயல்லாது, தங்கள் சொந்த வீடுகளில் அவ்வேலை செய்வதைத் தடுக்கவேண்டும் என்று கம்பெனியார் எழுதியிருந்தனர்," என்று தத்தர் (Dutta) சொல்லுகிறார்.

மிஸ்டர் ரோமேஷ் தத்தர் தம்முடைய புஸ்தகத்தின் 45-ம் பக்கத்தில், 1783 கோர்ட் ஆப் டைரக்டர்கள் இந்தியாவில் நியாயதோரணை செய்யும் ரிபோர்ட்டில் எழுதியிருக்கிறதாவது :—

“மேற்சொன்ன சட்டம், நூல் நூற்கிறவர்களைக் கம்பெனியாருடைய தொழிற்சாலைக்குக் கொண்டுவர ஒரு பெரும் ஹேதுவாயிருந்தது. இத்தொழிலாளிகள் தங்கள் சொந்தத்திலேயே நூல் நூற்பார்களானால், அவர்களைக் கவர்ன்மெண்டார் தண்டனைக்குட்படுத்தவேண்டும்.”

“மேற்கண்ட டைரக்டர்களால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டியார் சொல்லுகிறதாவது:—“கவர்ன்மெண்டார் செய்யும் ஏற்பாடானது நூல் நூற்கிறவர்களை மேற்கண்டபடி கட்டாயப்படுத்துவதும், தடுப்பதும், வங்காளத்தில் நடந்தேறி வந்த கைத்தொழிலுக்கு அழிவை உண்டாக்குவதற்கு நல்ல கருவியாயிருக்கும். இப்படிச் செய்வதினால் கைத்தொழில்வேலைகள் அடியோடே அற்றுப்போகவும், இங்கிலாந்தில் செய்யப்படும் கைத்தொழிலுக்கு ஏராளமான சாமான்களை அனுப்பவும் அனுகூலமாயிருக்கும்.”

மேலும், இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்ட பருத்தி நூல் சரக்குகளுக்குச் சுமத்திய வரிகளின் விகிதமாவது :—

| | £ | s. | d. |
|---|---|---|---|
| £ 100 விலையுள்ள நூற் புடவைகள் ... | 81 | 2 | 11 |
| £ 100 எடையுள்ள பருத்தி ரூ. ... | 0 | 16 | 11 |
| பருத்தி நூற் சரக்குகள் ... ... | 81 | 2 | 11 |
| ஆட்டு மயிர், கம்பளங்கள், நூற்றுக்கு ரூ. | 84 | 6 | 3 |
| பூப்போட்ட வெள்ளை சல்லா, £100 விலையுள்ளதற்கு... ... ... ... | 32 | 9 | 2 |
| மற்றவித நூல் சரக்குகள். ... ... | 32 | 9 | 2 |

ஒரு பவுன் 15 ரூபாய்க்குச் சரியானது.

"ஏற்றுமதி வியாபாரம் ஸ்திரமாய் நிறுத்திவிடப் பட்டபிறகுதான் இந்தப் பாரமான தீர்வைகள் நீக்கப்பட்டன." ஆங்கிலேய அதிகாரம் இந்தியாவில் ஸ்தாபிதமானது முதல், ஆங்கிலேய சரக்குகள் இறக்குமதித் தீர்வை இல்லாமலும், அல்லது பேருக்குச் சொல்ப தீர்வை போடப்பட்டும் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டன. இந்திய பருத்திச் சரக்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டபொழுது 100 க்கு £ 81 வீதமும், ஆங்கிலேய பருத்திச் சரக்குகளுக்கு நூற்றுக்கு £ 2½ வீதமுமாகத் தீர்வை போடப்பட்டது. இதற்கிடையில், நீராவி யந்திரங்களும், யந்திரசக்தியினால் ஓடும் தறிகளும் இங்கிலாந்தில் பண் பட்ட நிலையையடைந்தன. அவைகளால் செய்யப்பட்ட பருத்திச் சரக்குகள் ஆங்கில நாட்டிலிருந்து ஏராளமாக இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டன. இவ்விஷயங்களைப்பற்றி இந்தியாவில் உத்தியோகத்திலிருந்து பென்ஷன் வாங்கிக்கொண்டபிறகு ஈஸ்ட் இந்தியா கம்பெனியில் டைரக்டரான மிஸ்டர் ஹென்றி டக்கர் என்பவர் :—

"இந்தியாவில் செய்யப்படும் பட்டுச்சரக்குகளும், தறிகளும் பெருகினமையால் பட்டும் பருத்தியும் கலந்த சரக்குகளும் வெகு காலமாய் ஆங்கிலேயர் கடைகளில் விற்பதை நிறுத்தி விடப்பட்டது. நூற்றுக்கு 67 வீதம் தீர்வை போடப்பட்ட காரணத்தாலும், ஆங்கிலேய நாட்டில் யந்திர சக்தியினால் செய்யப்பட்ட சரக்குகள் இந்திய சரக்குகளை விட மேலானதாயிருந்த மற்றொரு முக்கிய காரணத்தாலும் இங்கிலாந்தில் இந்திய சரக்குகளை மீறி ஆங்கிலேய சரக்குகள் அதிகமாய் விற்கப்பட்டதோடு ஆசியா

கண்டத்திலுள்ள ஆங்கிலேயருடைய அரசாட்சிக்குட்பட்ட நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. இவ்விதமாய்க் கைத்தொழில் செய்யும் நாடாயிருந்த இந்தியதேசம் விவசாயத்தொழில் செய்யும் நாடாக மாறிவிட்டது," என்று 1823-வருஷத்தில் சொல்லியிருக்கிறார்.

"1813-வருஷம் வரையில் இந்திய பருத்திச் சரக்குகளும், பட்டுச் சரக்குகளும் இங்கிலீஷ் சரக்குகளை விட நூற்றுக்கு 50 அல்லது 60 வீதம் குறைவாக இங்கிலாந்தில் விற்கப்பட்டபோதிலும் அச்சரக்குகளால் லாபமே பெருகி வந்தது. ஆகையால் இந்திய சரக்குகளின் விலையின்மீது நூற்றுக்கு 70 அல்லது 80 வீதம் வரி போட்டாவது அல்லது இந்திய சரக்குகளை இங்கிலாந்துக்கு வரவொட்டாமல் தடுத்தாவது ஆங்கிலேய கைத்தொழிலைப் பாதுகாக்கவேண்டியது அவசியமாய்விட்டது. அது மத்திரமல்ல. அவைகளைத்தடுக்க சட்டதிட்டங்களும் இங்கிலாந்தில் செய்யப்பட்டன. அப்படிச் செய்யப்பட்டிராத பக்ஷத்தில் பெய்ஸ்லியிலும் மான்செஸ்டரிலும் உள்ள யந்திரசாலைகள் ஆரம்பத்திலேயே நிறுத்தப்படுவதோடு, நீராவியின் உதவியினால் கூட அவைகளை உயிர்ப்பிக்க அசாத்தியமாயிருந்திருக்கும். இந்திய கைத்தொழிலைப் பலி கொடுத்து இவ்யந்திரசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்தியா ஸ்வதந்திரமுள்ள நாடாய் இருந்திருக்கும்பக்ஷத்தில்,வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் சாமான்கள் மீது கடுந்தீர்வை போட்டுத் தன்னுடைய கைத்தொழிலைக் காப்பாற்றிக்கொண்டிருக்கும். ஆனால் இம்மாதிரி செய்து கொள்ள இந்தியா இடம் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் இந்தியா அயலார் கையைப் பார்த்ததாக இருந்தது. யாதொரு விதமான தீர்வையும் கொடுக்காமல் இறக்குமதியான ஆங்கிலேய சரக்குகள் இந்தியர்கள் தலையில் கட்டிவிடப்பட்டன. போதாக் குறைக்குத் தங்களுக்குள்ள ராஜீய அதிகாரத்தைக்

கொண்டு தங்களால் கிரமமாய்ப் போட்டி போடக் கூடாத இந்திய கைத்தொழிலை நாசமாக்கி விட்டார்கள்" என்று இந்துதேசச்சரித்திரக்காரர் H. H. உல்சன் எழுதியிருப்பதை ரோமேஷ் தத்தர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஆங்கிலேய கைத்தொழிலாளிகளுடைய பொறாமைக்கு இரையான மற்றோர் இந்திய கைத்தொழில் கப்பல்கட்டுந் தொழிலாகும். இந்தக் கைத்தொழில் இந்தியாவில் பூர்வகால முதல் நடந்துவந்த முக்கியமான கைத்தொழில்களில் ஒன்று என்றும், இந்தியர்கள் கீழ் நாடுகளோடும் மேல்நாடுகளோடும் கப்பல் வர்த்தகம் செய்துவந்தது நிச்சயமென்றும் பண்டித மூகர்ஜி என்பவர் தாம் "இந்திய கப்பல் வியாபாரத்தைப்" பற்றி எழுதியிருக்கும் சரித்திரத்தில் தெளிவாக நிரூபித்திருக்கிறார். டேரியஸூம், அலெக்ஸாந்தரும் தங்கள் நாடுகளுக்காக இந்தியாவில் நூற்றுக்கணக்கான கப்பல்களைச் செய்வித்தார்கள். இந்திய கப்பல்கள் ஆப்பிரிக்காவுக்கும் மெக்ஸிகோவுக்குங்கூடச் சென்றன. கிழக்கே ஜாவா, ஸூமித்திரா, போர்னியோ, சீனாவிலுள்ள காண்டன் பட்டணம் இந்த இடங்களுக்கு இந்திய கப்பல்கள் அனுப்பப்பட்டன.

"நூறு வருஷங்களுக்கு முன் இந்தியாவில் செய்யப்பட்ட கப்பல்கள் மிகவும் உறுதியுள்ளவைகளாயிருந்ததினால், அவைகள் இங்கிலாந்துக்குப்போன ஆங்கிலேயர் கப்பல்களோடு இங்கிலாந்திலுள்ள தெம்ஸ் நதிக்குச் சென்றன" என்று மிஸ்டர் டிக்பி (Digby) என்பவர் சொல்லுகிறார்.

"பதினாயிரம் டன் பாரமுள்ள கப்பல்கள் இந்தியாவில்செய்யப்பட்டுக் கல்கத்தா துறைமுகத்தில் இருக்

கின்றன. அவைகள் இங்கிலாந்துக்குச் சரக்கு களை ஏற்றிக்கொண்டு போகக்கூடும். கல்கத்தா துறை முகத்தில் சொந்த வியாபாரத்திற்காகக் கிடைக்கக் கூடிய கப்பல்களினிமித்தமும், கப்பல் கட்டுந் தொழில் வங்காளத்தில் மிகவும் வளமுற்றிருப்பதினு லும், கப்பல்கள் செய்ய ஏராளமான மரச்சாமான்கள் அகப்படக்கூடியனவாயிருப்பதினுலும், வங்காள வர்த் தகர்கள் வங்காளத்திலுள்ள பிரிட்டிஷ் வியாபாரி களுடைய சரக்குகளை லண்டன் பட்டணத்திற்குத் தாராளமாய் அனுப்பக்கூடிய ஸ்திதியிலிருக்கிறுர் கள்," என்று லண்டன்மாநகரத்திலிருந்த தம்முடைய எஜமானர்களுக்கு லார்ட் வெல்லஸ்லி கவர்னர் ஜென ரல் 1800வருஷத்தில் சொல்லியிருக்கிறதை மிஸ்டர் டிக்பி எடுத்துக்காட்டியிருக்கிறுர்.

ஆனுல் மிஸ்டர் டெயிலர் (Taylor) சொல்லுகிற தாவது:—

"இந்திய சரக்குகள் இந்தியாவில் செய்யப்பட்ட கப் பல்களில் லண்டன் துறைமுகத்தில்வந்து இறங்கின பொழுது, வியாபாரசுதந்தரவாதிகளுக்கு உண்டான திகில் சொல்ல முடியாததாயிருந்தது. தெம்ஸ் நதி யில் அவர்கள் விரோதிகளுடைய போர்க் கப்பற்கூட் டம் வந்திருந்தபோதிலும் அவ்வளவு பயம் அவர் களுக்கு உண்டாயிராது. லண்டன் துறைமுகத்தில் கப்பல்கள் கட்டுந்தொழிலாளிகள் இந்த அபாயத்தை நீக்கவேண்டுமென்று கூக்குரலிட்டார்கள். அப்படிச் செய்யாமற்போனுல் தாங்களும் தங்கள் குடும்பங்களும் அறவே பசியால் வருந்தித்துன்பமடைய நேரிடும் என்று ஓலமிட்டார்கள்."

இந்தக் கூக்குரலால் பயன் விளைந்தது. இங்கிலாந் துக்கும் இந்தியாவுக்கும் நடக்கும் வியாபாரத்திற்காக

இந்தியாவில் கட்டப்பட்ட கப்பல்களை உபயோகப் படுத்தக்கூடாதென்று கோர்ட் ஆப் டைரெக்டர்கள் கட்டளையிட்டார்கள். இம்மாதிரி உத்தரவுசெய்தபோது அது விஷயமாய் டைரக்டர்கள் சொன்ன ஒரு காரணம், கீழ் நாடுகளுக்குச்செல்லும் எல்லாப் பெரிய கப்பல்களிலும் நூற்றுக்கணக்கான இந்திய லஸ்கர்கள் வேலையில் அமர்ந்திருக்கிற இந்நாளில், நமக்கு வியப்பாய்த் தோன்றும் என்று மிஸ்டர் டிக்பி சொல்லுகிறூர். இந்தியாவில் கப்பல் செய்வதைப்பற்றியும் கப்பல்களில் இந்திய வேலைக்காரர்களை நியமிப்பதைப்பற்றியும் தங்களுக்குள்ள இதர ஆக்ஷேபனைகளைச்சொல்லி விட்டு டைரக்டர்கள் தங்களுடைய 1801 ௵ ஜனவரீ 27௳ யுள்ள கடிதத்தில் பின்வருமாறு சொல்லுகிறூர்கள் :—

" இந்தியாவிலிருந்து புறப்படும் இந்திய கப்பல்களில் சாதாரணமாய் இந்திய கப்பலோட்டிகள் தான் இருப்பார்கள். அந்நாட்டார் உஷ்ணதேசங்களில் பிறந்தவர்களாகையால் குளிரான நாடுகளுக்குக் கப்பலோட்டிக்கொண்டு வரத் தேக சக்தி அற்றவர்களாயிருக்கிறூர்கள். மேலும் இப்பாகங்களிலிருக்கும் கடல் அதிக கொந்தளிப்புள்ளது. பருவக்காற்றுகள் அடிக்கும் உஷ்ணமண்டலக் கடல்களில் சுலபமாயும், சமீபமாயும் உள்ள நாடுகளுக்கே தங்கள் கப்பல்களை ஓட்டுவது அவர்களுக்கு வழக்கம். இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்குப்போகும் வழியிலுள்ள சீதமண்டலத்தில் இருக்கும் கடல்களில் அடிக்கடி, விசேஷமாய்க் குளிர்காலத்தில், புயல்கள் அடிக்கிறபடியால் இந்தமாதிரியான இடங்களில் இந்திய கப்பலோட்டிகள் தங்கள் கப்பல்களைத் திடகாத்திரசித்தராய் நடத்துவது அவர்களுக்கு முடியாத காரியம். சத்து

ருக்கள் வந்து அவர்களை எதிர்க்கும் பக்ஷத்தில், தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தியும் அவர்களுக்குப் போதாது. அது மாத்திரமல்ல. இந்திய கப்பலோட்டிகள் இங்கிலாந்துக்கு வரும்போது, இவ்விடத்தில் நடக்கும் காரியங்களை அவர்கள் பார்க்கிறார்கள். அதனால் ஆங்கிலேயரிடத்தில் அவர்களுக்கு இருக்கவேண்டிய அச்சமும் மரியாதையும் அற்றுப்போகின்றன. அவர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பிப்போய் ஆங்கிலேயரைப் பற்றி இழிவாய்ப் பேசுகிறார்கள். இதைக்கேட்கும் ஆசியா நாட்டார் நம்மைப்பற்றிக் கேவலமாய் நினைக்க இடமுண்டாகும். நம்முடைய அதிகார தோரணைக்கும் தடை உண்டாகும். தேகஸ்திதி நிமித்தமும், நல்லொழுக்கத்தினிமித்தமும், வியாபார விஷயமாயும், ராஜீயநோக்கமாயும் இந்திய கப்பலோட்டிகளை ஆங்கிலேய கப்பல்களில் வேலைக்கு வைத்துக்கொள்வது உசிதமல்ல.''

கத்தியவார் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு ஏடன், மோகா, ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோரம், மலேய தீபகல்பம் இவ்விடங்களுக்கு இந்திய கப்பலோட்டிகள் கப்பல்களை ஓட்டிவந்தார்கள். அவர்கள் சந்ததியார்கள் தான் தற்காலத்தில் இந்திய கப்பலோட்டிகள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்துக்குப்போன இந்திய கப்பலோட்டிகள், இக்காலத்தில் ஆங்கிலேய கப்பலோட்டிகள் அந்நிய நாடுகளுக்குப் போய் இறங்கினதும் எவ்விதமாய்ச் சந்தோஷங்கொண்டாடுகிறார்களோ, அவ்விதமாய் லண்டனுக்குப் போனதும் சந்தோஷங்கொண்டாடியிருக்கலாம். இந்த அற்ப சம்பவத்தைக்கொண்டு இந்திய கப்பலோட்டிகள் இங்கிலாந்துக்குக் கப்பல் ஓட்டிக்கொண்டு வரக்கூடாதபடி தடுத்தது பரிதபிக்கக்கூடியதே. இக்

காரியத்தினால் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இராஜாங்க விஷயமாயும் ஐசுவரிய நிர்வாக விஷயமாயும் உண்டாயிருக்கும் நஷ்டத்தைச் சொல்லமுடியாது. கப்பல் வியாபாரமும், கப்பல் கைத்தொழிலும் இதர தேசங்களில் கடந்த நாற்பது வருஷங்களாய் விருத்தியடைந்திருக்கிற மாதிரி இந்தியாவில் விருத்தியடைய விட்டிருந்தால் இந்தியாவும் அதிகமாய்ச் சீர்ப்பட்டிருக்கும். இங்கிலாந்தும் அதற்குத் தக்கப்படியே பலப்பட்டிருக்கு மென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அதனால் இச்சமயம் பிரிடிஷ் ராஜாங்கத்தின் ஏகாதிபத்தியத்துக்கும் மேன்மை விளைந்திருக்கும்.

இவ்விதமாக இந்தக் கைத்தொழில் க்ஷீணித்துப் போகச்செய்வதையே இந்தியாவிற்கு நிர்ணயிக்கப்பட்ட அரசுமுறையாகக் கடந்த ஐம்பது வருஷகாலமாகவும் அதற்கு அதிகமாகவும் இங்கிலாந்து அனுசரித்து வந்தது என்று ரோமேஷ் தத்தர் தாம் எழுதிய பொருளாதார பிரிட்டிஷ் இந்திய சரித்திரத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார். காமன்ஸ் மஹாசபையாருக்கு முன் அது வெளியிடப்பட்டது. 1833வரை அந்த ஒழுங்கே அனுசரிக்கப்பட்டு வந்தது. ஆங்கிலேய கைத்தொழிலாளிகளின் பிரயோஜனத்திற்காக இந்தியகைத்தொழில்களில் அநேகம் அழிக்கப்பட்டன.

இதற்கு இசைவாகவே, "அதிகாரிகளின் ஆதரவில்லாமற்போயிருந்தால் ஆங்கிலேய கைத்தொழில்கள் இப்பொழுது விருத்தியடைந்திருக்கிறபடி விருத்தியடைந்திருக்கமாட்டா. இக்கைத்தொழில்கள் ஸ்திரம் பெறப்பெற அவைகளுக்குப்போட்டியாயிருந்த கைத்

தொழிலாளிகளோடு போராட்டம் உண்டாயிற்று. இந்தப்போராட்டத்தில் இந்தியாவும், குடியேற்ற நாடுகளும் ஆங்கிலேய கைத்தொழிலாளிகளுக்காகச் சங்கரிக்கப்பட்டன." என்று மிஸ்டர் ஆர்னல்ட் டாயின்பி என்னும் சரித்திரக்காரரும் சொல்லியிருக்கிறார்.

## ஆங்கிலேயர் கைத்தொழில் கிளர்ச்சி.

இந்தியாவில் இத்தகைய காரியங்கள் நடந்துகொண்டிருக்கும்பொழுது, இங்கிலாந்தில் அதே காலத்தில் நடந்த காரியங்களைக் கவனிப்போம். இந்தியக் கைத்தொழில்களின் நிலைமையை மாற்றிய ஆங்கிலேயக் கைத்தொழில் கிளர்ச்சி, 1770-ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஆரம்பித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"நிலக்கரியையும் இரும்பையும் வைத்துக்கொண்டு வேலைசெய்யும் கைத்தொழிற்சாலைகளினின்றும் எழும் புகை 1770-ம் ஆண்டில் இங்கிலாந்தைக் கறுப்பாக்கவில்லை. அக்காலத்தில் கால்வாய்கள், இருப்புப்பாதைகள், ஏராளமான ஜனத்தொகையுள்ள கைத்தொழில் பட்டணங்கள் முதலியவைகள் கிடையா. தற்காலத்திற் காணப்படும் விநோதப்பொருள்களும் அவைகளுக்கேற்ற ஏற்பாடுகளும் கடந்த ஒரு நூற்றுண்டாகத்தான் விர்த்தியடையத் தொடங்கின" என்று மிஸ்டர் கன்னிங்காம் தம்முடைய "ஆங்கிலேயக் கைத்தொழிலும் வியாபாரமும்" என்னும் நூலில் சொல்லுகிறார்.

பதினெட்டாம் நூற்றுண்டின் மத்தியகாலம் வரையில் ஆங்கிலேயக் கைத்தொழில் மிகவும் கேவல நிலைமையிலிருந்தது. அதன் நிலைமையைப்பற்றி ஜான் ரிச்சர்ட் கிரீன் என்னும் சரித்திரக்காரர் பின்வருமாறு சொல்லுகிறார் :—

"மூன்றும் ஜார்ஜ் அரசன் பட்டத்திற்கு வந்தபோது, முக்கியமான வர்த்தக நாடுகளுக்குள் இங்கிலாந்து ஒன்ருக விளங்கியபோதிலும், இங்கிலாந்து விவசாயத்தையே முக்கியமான கைத்தொழிலாகக்கொண்டிருந்தது. கம்பளமயிர் வியாபாரம் படிப்படியாக நார்ப்பக்கிலும், யார்க்ஷயரின் மேற்புறத்திலும், தென்மேற்குப் பாகங்களிலிருந்த பிரதேசங்களிலும் வேரூன்றியது. பருத்திக் கைத்தொழில் மான்செஸ்டர், போல்டன் என்னும் பட்டணங்களில் மாத்திரம் செய்யப்பட்டுவந்தது. அக்கைத்தொழில் அக்காலத்தில் முக்கியமானதாகக் கருதப்படாமையால் பதினெட்டாம் நூற்ருண்டின் மத்தியில் ஏற்றுமதி செய்யப்பட்ட பருத்திச் சரக்குகளின் மதிப்பு வருஷத்தில் ஐம்பதிஞயிரம் பவுனுக்குமேற்படவில்லை. பெல்பாஸ்ட், டண்டி என்னும் நகரங்களில் நடந்த சணல் நூல் வியாபாரமும், ஸ்பிடல் பீல்ட்ஸ் என்னுமிடத்தில் செய்யப்பட்ட பட்டுவஸ்திரங்களின் வியாபாரமும் சிறிதுசிறிதாகவே முன்னேறிவந்தன. அவைகளைச் செய்யும்விதம் வேலைப்பாடில்லாமலிருந்ததிஞல், அவை ஏராளமாகச் செய்யப்படவில்லை. கைத்தொழிற்பொருள்கள் வேலைப்பாடமைந்திருந்தபோதிலும் அவைகளை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு அனுப்பும் வசதிகள் கஷ்டமானவைகளாகவும் மிக்க பணச்செலவுள்ளவைகளாகவும் இருந்தபடியால் வேலைத்திறம் பயன்படாமற் போய்விட்டது. பழைய பெரிய ரஸ்தாக்கள் பாழ்பட்டிருந்தன. புதிதாக அமைக்கப்பட்ட பாதைகள் ஒற்றையடிப் பாதைகளைப்போலிருந்தன. பிரிண்ட்லி என்னும் என்ஜினியர் தம்முடைய சாதுரியத்திஞல் 1767-ம் ஆண்டில் மான்செஸ்டர் நகரத்தை லிவர்பூல் துறைமுகத்தோடு ஒரு பெரிய கால்வாயின் மூலமாக இணைத்தார். இத்தகைய முயற்சியில் வெற்றி உண்டானதிஞல், கிரேட்பிரிட்டன் முழுவதிலும் எத்திக்கிலும் வியாபார

மரக்கலங்கள் போகக்கூடிய 3000 மைல் நீளமுள்ள பெரிய கால்வாய்கள் வெட்டப்பட்டன. இங்கிலாந்தில் அதே சமயத்தில் நிலக்கரி பூமிக்குள்ளிருந்து வெட்டியெடுக்கப்பட்டது. அந்நாட்டின் வடபாகங்களில் இரும்பும் அகப்பட்டது. விறகு அரிதாயிருந்தபடியால் இரும்பை உருக்குவது முடியாதகாரியமென்று அது வெட்டியெடுக்காமல் விடப்பட்டிருந்தது. பதினெட்டாம் நூற்றுண்டின் மத்தியில் இரும்பை நிலக்கரியைக்கொண்டு உருக்கலாமென்று தெரியவந்தது. இதனுல் இரும்புக் கைத்தொழிலிலேயே ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. தற்காலத்தில் இரும்பொன்றே எல்லாக் கைத்தொழில்களிலும் மிகுதியாக உபயோகிக்கப்படும் பொருளாய்விட்டது. இரும்பை உற்பத்தி செய்வதினுலேயே இங்கிலாந்து கைத்தொழிலில் உலகத்தில் தலைமைபெற்று விளங்குகின்றது. 1766-ம் வருஷத்தில்,வாட் என்பவர் விளையாட்டுக் கருவியாகச்செய்த நீராவி யந்திரம் கைத்தொழில் உலகமெல்லாம் கண்டு அதிசயிக்குமாறு மிகவும் உபயோகமுள்ள யந்திரமாக மாறிவிட்டது. அதனுல், நிலக்கரி யந்திரசக்தியை உண்டுபண்ண உபயோகிக்கப்படலாமென்பதும் தெரிந்துகொள்ளப்பட்டது. ஹார்க்ரீவ்ஸ் 1764-லும், ஆர்க்ரைட் 1768-லும் க்ராம்படன் 1776-லும் நெசவு யந்திரங்களைக் கண்டு பிடித்ததனுல் நெசவுத்தொழிலில் சக்தியினுல் ஓடும் யந்திரங்களே உபயோகிக்கப்பட்டன. நீராவி யந்திரத்தின் சக்தி ஒருநாளும் குறைவுபடாதது என்று தெரிந்திராமல்போனுல் இந்த யந்திரங்களினுல் யாதொரு பயனும் விளைந்திராது. பிரான்சோடும், நெபோலியனோடும் இங்கிலாந்து யுத்தஞ்செய்ய நேரிட்ட போது, அது யந்திரங்களின் உதவியினுலேயே சணல் நூல் வியாபாரத்திலும் பருத்தி வியாபாரத்திலும் சிறந்து விளங்கியது. அவைகளின் பலத்தினு

லேயே இங்கிலாந்து உலகம் மதிக்கும்படி கைத்தொழி லில் முதன்மை பெற்றிருக்கிறது.

"யந்திரங்களைச் செய்ததும் புதிய சக்திகளைக் கண்டுபிடித்ததும் பதினெட்டாம் நூற்றாண்டில் ஏதோ தற்செயலாக நடந்திருக்கலாமென்று சிலர் கருதலாம். ஆர்க்ரைட்டும், வாட்டும் தம் யந்திரங்களைக்கண்டு பிடித்தபோது சமயம் பரிபக்குவமாயிருந்தது என்று சொல்வதனால் அவர்களுடைய புத்திநுட்பத்தை ஒரு வரும் குறைத்து மதித்ததாகக் கருதப்படக்கூடாது. வில்லியம் லீ டோடோ டட்லி என்பவர்கள் காலம் முதல் யுக்திசாலிகள் பலர் இருந்திருக்கின்றனர். அவர் களுடைய முயற்சிகள் கைகூடுவதற்குச் சந்தர்ப்பங்கள் அனுகூலமாயில்லை. பணச்செலவுள்ள கைத்தொழில் கருவிகளையாவது முறைகளையாவது உபயோகப்படுத்த வேண்டுமாயின் ஏராளமான கைம்முதல் இருத்தல் அவசியம். ஏராளமாய்க் கைம்முதலும் விற்கும் வசதி களும் இருந்தாலன்றி, ஒருவன் எவ்வளவு உழைப் பாளியாயிருப்பினும் இவ்வேலையில் தலையிடுதல் கூடாது. பதினெட்டாம் நூற்றாண்டில்தான் இவ்விஷ யம் நன்கறிந்து கொள்ளப்பட்டது. இங்கிலாந்து பாங்கியும் இதர பாங்கிகளும் ஏற்படுத்தப்பட்டதனால் கைம்முதல் கஷ்டமின்றிக் கிடைக்க ஆரம்பித்தது. எனவே, சாமர்த்தியமுள்ளவர்கள் விலையுயர்ந்த யந் திரங்களையும் கருவிகளையும் கைத்தொழில்களுக்கு உபயோகித்தல் எளிதாயிற்று," என்று மிஸ்டர் கன் னிங்காம் தம்முடைய "ஆங்கிலேய கைத்தொழி லும் வியாபாரமும்" என்னும் நூலில் எழுதி இருக் கிறார்.

1694-லில் இங்கிலாந்து பாங்கி ஏற்படுத்தப்பட்டது. கடன் கொடுப்பவர்கள் கேட்கும்போது கொடுத்து வருவதாய் வாக்களித்து இராஜாங்கத்தார் ஜனங்களி

டம் கடன் வாங்குவதற்காகவே இந்தப் பாங்கி ஸ்தாபிக்கப்பட்டது.

"பாங்கு ஏற்படுத்தப்பட்ட அறுபது வருஷங்களுக்குப் பிறகும் இருபது பவுன் நோட்டையே மிகச் சிறிய நோட்டாக அப்பாங்கு வெளியிட்டு வந்தது. ஆதலால் அது தாராளமாய் மாறக்கூடியதாயில்லை. 1750-ல் இங்கிலாந்துக்குத் தான் வந்தபோது மாகாணங்களில் பன்னிரண்டு பாங்கிகள் கூட இல்லையென்றும், 1790-ல் கடையுள்ள ஒவ்வோரிடத்திலும் பாங்கிகள் இருக்கிறதாகவும் மிஸ்டர் பர்க் என்பவர் சொல்லுகிறார். வங்காளத்திலிருந்து வந்த வெள்ளி பணத் தொகையை அதிகரித்ததோடு அதை ஜாஸ்தியாய்மாறி வரும்படியும் செய்தது. 1759-ல் சில்லரை நோட்டுகள் பத்துப் பவுனுக்கும், பதினைந்து பவுனுக்கும் போடப்பட்டன. நாட்டில் சுயேச்சையாய் நடத்தப்பட்ட வர்த்தகக் கூட்டங்களால் நோட்டுகள் ஏராளமாய்ச் செலவழிக்கப்பட்டு வந்தன," என்று மிஸ்டர் ப்ரூக்ஸ் ஆடம்ஸ், தம் "நாகரிகத்தின் தோற்றத்திற்கும் அழிவுக்கும் விதி" என்னும் கிரந்தத்தில் எழுதியிருப்பதை மிஸ்டர் டிக்பி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

"1756-ல் கிளைவ் இந்தியாவுக்குச் சென்றபோது இங்கிலாந்துக்கு இருந்த கடன் 74,575,000 பவுன். அதற்காக அவர்கள் கொடுத்துவந்த வருஷவாரி வட்டி 2,753,000 பவுன்; 1815-ல் உண்டாயிருந்த கடன் 861,000,000 பவுன் இதற்காகக் கொடுக்கப்பட்ட வருஷவாரி வட்டி 32,645,000 பவுன். இந்தியப் பணம் போய்ச்சேர்ந்த பொழுது, அந்நாட்டின் பணத் தொகை, அதிகரித்து விருத்திக்கு அதிக சௌகரியமாயிருந்தது. பிளாஸிச்சண்டைக்குப் பிறகு, வங்காளத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் லண்டனுக்கு வந்து சேர்ந்ததனுல் பத்தொன்பதாவது நூற்

ருண்டை அதற்கு முன்னுள்ள காலத்தை விட்டுப் பிரித்த "கைத்தொழில்களில் மாறுதல்" உண்டாயிற்று. இது 1760-ல் ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது. 1760-க்கு முன் லாங்காஷைரில் பருத்தி நூல் நூற்க உபயோகப்படுத்தப்பட்ட யந்திரங்கள் இந்தியாவில் உபயோகிக்கப்பட்டவைகளைப் போலவே சாதாரணமானவைகளாகத் தான் இருந்தனவென்று பெயின்ஸ் என்பவர் சொல்லுகிறார். விறகு கொடுத்து வந்த காடுகள் அழிக்கப்பட்டபடியால், 1750-ல் ஆங்கிலேய இரும்புக்கைத்தொழில் க்ஷீணித்துவிட்டது. அக்காலத்தில் உபயோகப்படுத்தப்பட்ட இரும்பில் ஐந்தில் நான்கு பங்கு ஸ்வீடனிலிருந்து கொண்டு வரப்பட்டது."

1757-ம் வருஷத்தில் பிளாஸி சண்டை நடந்தது. அதற்கு பின் உண்டான மாறுதல்கள் அதிவேகமாய் நடந்துவந்தன. 1760-ல் "flying shuttle" என்னும் யந்திரம் உண்டாயிற்று. அப்பொழுது விறகுக்குப் பதிலாக இரும்பு உருக்குவதற்கு நிலக்கரி உபயோகிக்கப்பட்டது. 1764-ல் ஹார்க்ரீவ்ஸ் என்பவர் ("spinning jenny") என்னும் யந்திரத்தைக் கண்டு பிடித்தார். 1779-ல் கிராம்ப்டன் என்பவர் "mule" என்னும் யந்திரத்தையும், 1785-ல் கார்ட்ரைட் என்பவர் நெசவுத் தொழில் யந்திரத்தையும் கண்டுபிடித்தனர். இவைகள் எல்லாவற்றிலும் வாட் என்பவர் 1768-ல் நீராவி யந்திரத்தின் சக்தியை உறுதிப் படுத்தினதே முக்கியமானது. இக்கருவிகளெல்லாம் வேலைகளைச் சீக்கிரமாய்ச் செய்துமுடிக்க அனுகூலமாயிருந்தபோதிலும், அவைகளை ஓட்டும் சக்தி வேறொன்றினால் முடிக்க வேண்டியிருந்தது. சேர்த்து

மறைத்துவைக்கப்படாமல் வெளியே வந்து மாறிக் கொண்டிருக்கும் பணமே இச்சக்தியைக் கொடுப்பதாயிருந்தது," என்று ப்ரூக்ஸ் ஆடம்ஸ் என்பவர் "நாகரிகத்தின் தோற்றத்திற்கும் அதன் அழிவுக்கும் விதி" என்பதில் எழுதியிருக்கிறார்.

பணம் இந்தியாவிலிருந்து வந்தது. மிஸ்டர் டிக்பி "வளமுள்ள பிரிட்டிஷ் இந்தியா" என்னும் தமது நூலில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"வங்காளத்திலிருந்தும் கர்நாடகத்திலிருந்தும் வந்த செல்வம் இங்கிலாந்தின் கைத்தொழில்களின் மேன்மைக்குக் காரணம். பிளாஸி சண்டை நடந்து வெற்றி உண்டாகு முன்னும், அவ்விடத்திய செல்வம் இங்கிலாந்துக்குப் போகுமுன்னும், அந்நாட்டின் கைத்தொழில்கள் நல்ல நிலைமையில் இல்லாமலிருந்தன. லங்காஷைரில் நூல் நூற்பதற்கும், நெசவுக்கும் உபயோகப்படுத்தப்பட்ட யந்திரங்கள் இந்தியாவில் உபயோகிக்கப்பட்ட யந்திரங்களைப் போலவே இருந்தன. ஆனால் இந்தியர்களுக்கு நெசவுத்தொழிலில் இருந்த வேலைத்திறம் மேனாட்டாரிடமில்லை. இத்திறமை பருத்தி விஷயத்தில் இருந்தது போலவே இரும்பிலும் இருந்தது."

நெசவு யந்திரம் 1784-ல் செய்யப்பட்ட போதிலும் 1803-ல் உடுப்புகள் செய்யும் யந்திரம் கண்டு பிடிக்கப்படும் வரையில் அதனால் பயன் விளையவில்லை. 1801-ம் வருஷம் வரையில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட பருத்திவஸ்திரங்களின் மதிப்பு 21,000 பவுன். 1813-ல் அது 108,824 பவுன் ஆயிற்று. அந்த வருஷத்தில் கிழக்கு இந்திய வர்த்தகக்கூட்டத்தாரின் வர்த்தக

அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டபோது அக்கூட்டத்தவர் மாத்திரம் இந்தியாவில் வியாபாரஞ்செய்யலாம் என்னும் நிபந்தனை நீக்கப்பட்டது. அதனால் பிரிட்டிஷ் வியாபாரிகள் தாராளமாய் இந்தியாவிற்குப்போய் வியாபாரஞ்செய்து வந்தனர். அதற்கப்பால் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கிலேயப் பருத்தி வஸ்திரங்களின் அளவு வருஷத்துக்கு வருஷம் விருத்தியடைந்து வந்ததைச் சொல்லவேண்டியதில்லை. அந்த நூற்றுண்டின் கடைசியில், ஆங்கிலேயப் பருத்தி வஸ்திரங்களுக்கு இந்தியாவே பெரிய வியாபார ஸ்தலமாய் விட்டது. ஏறக்குறைய 20,000,000 பவுன் பொறுமானமுள்ள சாக்குகள் அனுப்பப்பட்டன. யுத்தத்திற்கு முந்தின வருஷத்தில் 44,581,000 பவுன் மதிப்புள்ள சரக்குகள் இறக்குமதி செய்யப்பட்டன.

## வேலைப்பாடமையாத கைத்தொழில் பொருள்களை ஏற்றுமதி செய்ததினுல் விளைந்த பயன்.

இந்தியாதேசம் விவசாயத்தையே முக்கியமான கைத்தொழிலாகக் கொண்டதற்குப் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் இந்தியாவில் கிடைக்கும் கைத்தொழில் விளைபொருள்களை ஏற்றுமதி செய்ய உற்சாகப்படுத்திவந்ததே இன்னொரு காரணமாகும். இந்தக் கைத்தொழில் விசாரணை சங்கத்தின் அறிக்கையின் ஐந்தாவது பத்தியில் மேற்கண்ட ஏற்றுமதிகளினுலும், இருப்புப்பாதையும் புகைக்கப்பலும் உண்டானதினுலும் விளைந்த பயன்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை நாம் உள்ளபடி அறிந்துகொள்ளவேண்டுமாணுல், இவ்

விஷயத்தை நன்றாய் ஆராய்ச்சிசெய்து பார்த்தல் அவசியமாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில், இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகள், தாய் நாட்டிற்கு வேண்டிய விளைபொருள்களை விளைவிக்கக்கூடிய விளைபொருள் நாடுகளாகவே மதிக்கப்பட்டன. இங்கிலாந்துக்கு அனுப்பப்படும் கைத்தொழில் விளைபொருள்கள் வேலைப்பாடமைந்த பொருள்களாகச் செய்யப்பட்டு, திரும்பவும் குடியேற்ற நாடுகளுக்கும் உலகத்தின் மற்றப் பாகங்களுக்கும் அனுப்பப்பட்டு வந்தன. அமெரிக்கா தங்கள் சுவாதீனத்திற்காகச்செய்த யுத்தத்தின் பிறகு, புதிய குடியேற்ற நாடுகள் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ள இடம் பெற்றன. அதனால் அவை பிரிட்டிஷ் கைத்தொழிலாளிகளுக்கு விரோதமாகவும் தங்களுடைய கைத்தொழில்களைப் பெருக்கிக் கொண்டன.

அது முதல், மிஸ்டர் ரானடே (Ranade) சொல்லுகிறபடி,

"பழைய குடியேற்ற நாடுகளுக்குப் பதிலாக ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட பெரிய இந்தியநாடே இங்கிலாந்திற்கு வேண்டிய பொருள்களைக் கொடுக்க ஆரம்பித்தது. இப்பொருள்கள் பிரிட்டிஷ் ஏஜண்டுகளால் பிரிட்டிஷ் கப்பல்களில் கொண்டுபோகப்பட்டு, பிரிட்டிஷ் கைம்முதலையும் வேலையாட்களையும் கொண்டு சரக்குகளாகச் செய்விக்கப்பட்டு, மறுபடியும் இந்தியாவிலும் இதர இடங்களிலுமுள்ள பிரிட்டிஷ் வர்த்தகக் கூட்டத்தாருக்குப் பிரிட்டிஷ் வர்த்தகர்களால் வியாபாரத்துக்காக அனுப்பப்பட்டன."

இது பருத்தி விஷயத்தில் நன்றாக நிரூபிக்கப்பட்

டிருக்கிறது. ஈஸ்டு இந்தியா கம்பெனியாரின் கோர்ட் ஆப் டைரக்டர்கள் 1788-ம் வருஷத்திலேயே இந்தியாவில் பருத்தி பயிர் செய்யும் விஷயத்தில் அதிக சிரத்தையெடுத்துக்கொண்டு அதற்காக ஏராளமான பணமும் செலவழித்தார்கள். 1858-ம் வருஷம் முதல், பிரிட்டிஷ் கைத்தொழிலாளிகளுக்கு அனுகூலமாக இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவில் பயிர்செய்யப் படும் பருத்தியின் குணத்தையும் அளவையும் விருத்திசெய்ய பலமுறை ஏற்பாடு செய்துவந்திருக்கிறார்கள். சென்ற வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்தியப் பருத்திக் கமிட்டியே இதற்கு கடைசியான அத்தாட்சி. இப்படிச் செய்யப்பட்டதற்காக நான் குறைகூறவில்லை. ஆனால், இவ்விஷயமாய்ப் போதுமான பிரயத்தனம் செய்யப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். இந்தியாவில் தனக்காகவும் இங்கிலாந்துக்காகவும் வேண்டிய ஏராளமான நல்ல பருத்தி விளையுமாறு ஏற்பாடு செய்யப்படவேண்டும். அரசாங்கத்தார் இதுவரையில் அனுசரித்து வந்த முறை பண்படுத்தாத விளைபொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு உற்சாகப்படுத்தும் அளவாகவே யிருந்ததென்பது என்னுடைய அபிப்பிராயம். பருத்தியைக் கைத்தொழிற் சரக்காகச் செய்வதில் அவர்கள் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. வியாபாரம் கட்டுப்படுத்தப் படாமலிருக்கவேண்டுமென்ற கொள்கையும், ஆங்கிலேயரின் நன்மையில் அளவு கடந்த நாட்டமும், ஆங்கிலேய வியாபாரத்தில் தலையிடக்கூடாதென்ற பயமும் இந்த நிலைமைக்குக் காரணமாயிருக்கின்றன.

## இருப்புப்பாதைகளும் வியாபாரமும்.

இந்தியாவில் இருப்புப்பாதைகள் போடவேண்டு மென்கிற ஏற்பாடு முதல் ஹார்டிஞ்ஜ் பிரபுவினுல் செய்யப்பட்டது. 1848-ல் அவர் தம் அபிப்பிராயத் தைக் குறித்து வைத்திருந்தார். அவருடைய ஸ்தானத் திற்கு அவருக்குப் பின் வந்த டல்ஹௌஸி பிரபு இவ் விஷயத்தைப்பற்றி ஆலோசிக்க ஆரம்பித்தார். 1853-ல் அந்தப் பிரபு தம்முடைய பேர்பெற்ற இருப்புப்பாதை அபிப்பிராயக் குறிப்பை விளக்கமாக எழுதினர். இருப்புப்பாதை போடத்தூண்டுகோலாயிருந்தவரும் அவரே. இருப்புப்பாதையையும் தந்தியையும் ஏற் படுத்தக் காரணராயிருந்ததற்காக இந்தியா அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

"இருப்புப்பாதை அமைக்கப்படுவதனல் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட நாடுகளை ஒன்று சேர்ப்பதும் இராஜ்ஜி யத்தின் ஒவ்வொரு பாகத்திலும் சைன்னியங்களின் வல்லமையை விருத்தி செய்யவும் மாத்திரமன்றி, பிரிட்டிஷ் முதலாளிகள் தங்கள் கைம்முதலை ஏராள மாய் உபயோகிக்க முன்வருமாறு ஆசை காட்டவும் கூடுமென்பதும் அவருடைய அபிப்பிராயம். அதற்கு முன் எந்தக் கவர்னர்ஜெனரலுக்கும் இவ்வாலோசனை தோன்றவில்லை"

"இந்த ஏற்பாடுகளிலெல்லாம், இருப்புப்பாதை மார்க்கங்கள் வர்த்தக விஷயத்திற்கும் அனுகூலமா யிருக்கவேண்டுமென்பது ஆரம்ப முதற்கொண்டு டல் ஹௌஸி பிரபுவின் முக்கிய நோக்கம். 'வர்த்தக சம்பந்த மாயும் ஜனனுகூல விஷயமாயும் இந்த ஏற்பாடுகளால் இந்தியாவுக்கு உண்டாகும் நன்மைகள் அளவிட முடி யாது. பல பெரிய பிரதேசங்களில் விற்பனைக்கு வழி

யில்லாததினால் அவ்விடத்திய விளைபொருள்கள் அவ்விடத்திலேயே அடைபட்டிருக்கின்றன. வேண்டிய இடங்களுக்கு அவைகளைக் கொண்டுபோகக் கூடுமானால், இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கிக் கொண்டுபோகிறவர்கள் ஏராளமாய் வாங்கிக்கொண்டு போகமுடியும். இந்தியாவில் விளையும் பருத்திக்கு இங்கிலாந்தில் அதிகமான கிராக்கியிருக்கிறது. அது விளையும் தூரதேசங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் துறைமுகங்களுக்குக்கொண்டுபோகச் சாதனங்கள் இருப்பின், குணத்திலும் அளவிலும் அதிகரித்துத் திருக்கும் பருத்தியை இந்தியர்கள் பயிரிடுவார்கள். ஐரோப்பிய சாமான்களுக்கு இந்தியாவில் வெகு தூரத்திலுள்ள இடங்களில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகக் கிராக்கியிருக்கிறதோ அதற்கு அனுகுணமாக வர்த்தகத்திற்கு அனுகூலமாயிருக்கும் ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. வருஷா வருஷம் விருத்தியாகிக்கொண்டிருக்கும் நம்முடைய ராஜ்ஜியத்திற்கு அப்பாலிருக்கும் ஜனங்களோடு நாம் செய்யக் கூடிய வியாபாரத்தின் அளவாவது மதிப்பாவது இப்போது நம்மால் அறியமுடியாது. உள்நாட்டில் அகப்படக்கூடிய சரக்குகளுக்காக உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் கப்பல்கள் ஏராளமாக நம்முடைய இந்திய துறைமுகங்களுக்கு வருகின்றன. ஆனால் அகப்படுகிற சரக்குகளைச் சுலபமாய்த் துறைமுகபட்டணங்களுக்குக் கொண்டு வரக்கூடிய சாதனங்கள் நம்மிடமில்லை. உலகத்தின் இப்பாகத்தில் நமக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வியாபாரத்தின் விஸ்தாரத்தையாவது அதன் மதிப்பையாவது நம்மில் சிறந்த புத்திமானாலும் இப்போது அளவிட முடியாது" என்று டல்ஹௌஸி பிரபு தம்முடைய பேர்பெற்ற இருப்புப் பாதைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்.

"இந்திய வர்த்தக விஷயமாய் முன்னிருந்த நிர்

பந்தங்களை டல்ஹௌஸி பிரபு நீக்கிவிட்டதனால் புகைவண்டி மார்க்கமாய் வர்த்தகம் செய்யச் சௌகரியங்கள் ஏற்பட்டன." "இந்தியாவில் எல்லாத் துறைமுகங்களிலும் தடைகள் நீக்கப்பட்டன" என்று ஸர் எட்வின் ஆர்னால்ட் இவ்விஷயத்தைச் சுருங்கச்சொல்லி இருக்கிறார்.

"இந்திய வியாபாரம் முன்னேற்றமடையும் விஷயத்தில் டல்ஹௌஸி பிரபு எவ்வளவு நன்மைகள் செய்தார் என்பதை அடியில்கண்ட கணக்கினால் தெரிந்து கொள்ளலாம். அவருடைய எட்டு வருஷத்திய துரைத்தனத்தில் பக்குவப்படுத்தாத பருத்தி ஏற்றுமதியின் மதிப்பு 15 லட்சம் பவுனிலிருந்து $33\frac{1}{3}$ லட்சம் பவுனாயிற்று. தானியங்களின் ஏற்றுமதி 1848-ல் 890,000 பவுனிலிருந்து 1856-ல் 2,900,000, பவுன் ஆயிற்று. ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளின் மொத்த தொகை 1848-ல் $1\frac{1}{3}$ கோடியிலிருந்து 1856-ல் $2\frac{1}{3}$ கோடி பவுனாயிற்று."

"இவ்விதமாய் விளைபொருள்களில் உண்டான அபிவிருத்தி, அபரிமிதமான ஆங்கிலேயக் கைத்தொழிற் சரக்குகளை இந்தியர்கள் வாங்குவதற்குக் காரணமாயிருந்தது. 1848-ல் 30 லட்சத்திற்கு இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட வஸ்திரங்களும் பருத்தி நூலும் 1856-ல் $60\frac{1}{3}$ லட்சத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டன. அந்த எட்டு வருஷகாலத்தில் மொத்த இறக்குமதி வியாபாரம் ஒரு கோடி ஐந்து லக்ஷத்திலிருந்து இரண்டு கோடி ஐம்பத்திரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் பவுனாக விர்த்தியாயிற்று" என்று ஸர் W. W. ஹண்டர் சொல்லுகிறார்.

இந்தியாவுக்கு இருப்புப்பாதைகளினால் உண்டாயிருக்கிற நன்மைகள் பல என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இந்திய கைத்தொழில்கள் இருப்புப்பாதை

களினால் அடைந்த நிலைமையை ஸர் வில்லியம் ஹண்டரின் புத்தகத்திலிருந்து எடுத்துக் காட்டியிருக்கிறேன். இந்தியாவோடு ஆங்கிலேயரின் வர்த்தகத்தை விருத்தி செய்வதும் இருப்புப்பாதை போடுவதின் நோக்கங்களில் ஒன்று என்று டல்ஹௌஸி பிரபு தம் குறிப்பில் காட்டியிருக்கிறார். அரசாங்கத்தார் நடத்தை அக்காலத்தில் அவ்விதமாயிருந்தது. அவர்கள் இந்தியக் கைத்தொழில்களை விருத்தி செய்ய முயற்சி செய்யாததற்காக நான் வருந்துகிறேன். ஏனென்றால், அப்படிச் செய்திருந்தால் இங்கிலாந்து விருத்தி யடைந்ததுபோலவே இந்தியாவும் விருத்தி யடைந்திருக்கும். இந்தியாவில் இருப்புப் பாதை போட ஏற்பாடு செய்தபொழுது, இரும்பு, எஃகு முதலிய கைத்தொழில்களையும் சேர்த்து விருத்திசெய்ய வழிதேடாததற்காக நான் மிகவும் விசனிக்கிறேன். அங்ஙனம் செய்திருப்பின் இருப்புப்பாதைகள் இன்னும் அதிகமாயும் சீக்கிரமாகவும் ஏற்பட்டிருக்கும். ஏனெனில், அவைகளுக்காக இந்தியாவுக்கு உண்டான பணச் செலவு குறைந்துபோயிருக்கும். கப்பல் கட்டணம், இறக்குமதி வரி முதலியவைகள் நிமித்தம் இரும்பின் விலை நூற்றிற்கு ஐம்பது வீதம் அதிகப்படுத்தப்பட்டதாக உத்தியோகஸ்தர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவைகளால் தேசத்திற்குண்டான பயனும் அதிகரித்திருக்கும், இந்தியர்களும் ஆங்கிலேயரும் வெகுநாட்களுக்கு முன்னரே இவ்வித ஏற்பாடு செய்தல் நலமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். 1893-ம் வருஷம் பூனாவில் நடந்த கைத்தொழில் மகாநாட்டில் தாம் படித்த உபந்

நியாசத்தில் மிஸ்டர் ரானடே சொல்லியிருப்பதாவது:

"அனேக வருஷங்களுக்குமுன் பீரங்கிப்படை இலக்காவில் இருந்த காப்டன் டௌன்ஸென்ட் என்பவர் இந்தியாவில் அகப்படும் உலோகங்களைப்பற்றி ஒரு புத்தக மெழுதியிருக்கிறார். அதில், இந்தியப் பொருளாதார நிலைமையைப்பற்றிப் படிக்கும் அன்னியன் எவனும் இயற்கை ஏராளமாக உதவியிருந்தும் இந்தியர்கள் இரும்புக் கைத்தொழிலில் விருத்தியடையாமல் இருப்பதைப் பார்த்து வியப்படையாமலிரான். உலகத்திலுள்ள மற்ற எந்தத் தேசத்தையும்விட இங்கு இரும்பு அதிகமாயிருந்தபோதிலும் வியாபாரவழியில் இந்தியாவில் இரும்புக் கைத்தொழிலே கிடையாது."

"ஜியாலாஜிகல் ஸர்வே இலாகாவில் டெபுடி சூபரின்டெண்டெண்டாயிருந்த மிஸ்டர் பால் என்பவர் உலோகக் கனிகளைப்பற்றி எழுதியிருக்கும் புத்தகத்தில் "இருப்புப்பாதைகளை முதல் முதல் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியபொழுது இரும்புக் கைத்தொழிலையும் விருத்திசெய்திருந்தால் அவர்களுக்குப் பெருத்த நன்மை விளைந்திருக்கும். இருப்புப்பாதைகள் போடும் விஷயத்தில் ராஜாங்கத்தாருக்கு உரிமை இருந்திருக்கும்பக்ஷத்தில், உப்பு அல்லது அபினி செய்வதுபோல இரும்புக் கைத்தொழில் செய்வதிலும் அவர்கள் முயற்சி யெடுத்துக்கொண்டிருந்தால் எவ்விதபொருத்தமின்மையும் நேர்ந்திராது. இரும்புக்கைத்தொழில்சாலைகள் ஏற்படுத்தியிருந்தால் துரைத்தனத்தார் பணத்தில் ஏராளமான பாகத்தை இந்தியாவிலேயே நடமாடும்படிசெய்து, விவசாயத்தொழிலையே தங்கள் ஜீவனாதாரமாகக்கொண்டிருக்கும் அநேகருக்கு அந்தக் கைத்தொழில் வேலைகொடுத்திருக்கும்" என்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார். அந்த நல்ல தருணம் கை நழுவவிடப்பட்டது. ஆங்கிலேய அரசாட்சியின் நூற்றைம்பது வருஷங்களுக்குப் பிறகும், இந்தியாவின் இரும்புக்

1561

கைத்தொழில் வேலைகள் விருத்தியடையாமலிருக்கின்றன. இரும்புக்காக வருஷ வாரியில் பத்துகோடி* ரூபாய் செலவாகிறது. மேலும் கருமார்கள் வேலையில்லாமல் திரிகிறார்கள்."

மேற்சொன்ன காரியங்கள் இந்தியாவில் நடக்கக் கூடியவை யென்பது டாடா தொழிற்சாலையாரின் வேலைத்திறத்தினால் நன்கு விளங்குகின்றது. அரசாங்கத்தார் இவ்விஷயமாய்ச் செய்திருக்கிற உதவிக்காக இந்தியர் மிகவும் நன்றியுள்ளவராயிருக்கின்றனர். மேற்சொன்ன கம்பெனியார் இந்தப் பெரிய யுத்தகாலத்தில் மெஸபொடேமியாவிலும் ஈஜிப்டிலும் உபயோகிக்கத் தண்டவாளங்களும், குண்டுகள் செய்ய எஃகும் வேண்டியபோதெல்லாம் தடையின்றித் தயார் செய்துகொடுத்ததற்காகத் துரைத்தனத்தாரும் இந்திய நாட்டாரும் மிகத் திருப்தியடைந்திருக்கின்றனர். இருப்புப்பாதைகள் போட ஏற்பாடுகள் செய்தபொழுதே, அரசாங்கத்தார் இரும்பு, எஃகு இக்கைத்தொழில்களைப்பற்றியும் யோசித்திருந்தால், இதற்கு வெகுகாலத்திற்கு முன்னரேயே இந்நாட்டில் அக்கைத்தொழில்கள் வேரூன்றி விருத்தியடைந்திருக்கும். அப்படி நடைபெறாதது இந்தியாவின் துரதிர்ஷ்டத்தினாலேதான்.

இந்தியாவோடு இங்கிலாந்து சம்பந்தம் வைத்துக்கொண்டதனால், அது தன் கைத்தொழில்களில் விருத்தியடைய ஹேதுவுண்டாயிற்றென்பதை அறிவித்தற்பொருட்டே இவ்விஷயத்தைப்பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்யலானேன். இவ்விஷயத்தைப்பற்றியும் கடந்த

* இது 1913-14-ல் 25 கோடியாயிருந்தது.

காலத்தில் அனுசரிக்கப்பட்டுவந்த காரியங்களால் இந்தியாவுக்கு எவ்வளவு கெடுதிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றியும் நான்னுடைய ஆங்கிலேய சகோதரர்களுக்கு ஞாபகப்படுத்தப்பட வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். இனிமேலாவது அது விருத்திக்கு வரத்தக்க முயற்சிகளை அவர்கள் செய்யவேண்டுமென்பதே என்னுடைய நோக்கம். மேலும், இந்தியாவின் கைத்தொழில்கள் சீர்குலைந்ததற்கு இந்தியர்களே பாத்தியம் என்றும், தற்காலத்திய நவீன ஏற்பாடுகளின்படி கைத்தொழில்களைச்செய்ய இந்தியர்களுக்குப் போதுமான சக்தியும் யுக்தியும் இல்லையென்றும், சுபாவத்திலேயே ஆசிய நாட்டார் கைத்தொழில்களில் விருத்தியடைய ஐரோப்பியர்களைப்போல் தகுதியுள்ளவர்கள் அல்லரென்றும் கொள்ளப்பட்டிருக்கும் தப்பெண்ணத்தை அழிப்பதற்கே இவ்வித ஆராய்ச்சி செய்யலானேன். பதினெட்டாம் நூற்றாண்டினிடைவரையில் இங்கிலாந்து தேசம் பயிரிடும் தேசமாயிருந்தது என்றும், அநேக ஆயிரம் வருஷங்கள் தொட்டு சென்ற நூற்றாண்டு ஆரம்பம் வரையில் இந்தியநாடு கைத்தொழில்களிலும் விவசாயத்திலும் தேர்ந்திருந்ததென்றும், இந்த நூற்றாண்டில் அது விசேஷமாய் விவசாய தேசமாக மாறியதற்கு ஜனங்களுடைய திறமையின்மையும் முயற்சிக் குறைவும் காரணமல்ல என்றும் அவர்கள் அனுபவிக்கும்படி செய்யப்பட்ட கஷ்டங்களே அதற்குக் காரணமென்றும் குறிப்பிட்டிருக்கிறேன்.

## இதன் பயன்—அடுத்தடுத்து உண்டான பஞ்சங்கள்.

இந்தியக் கைத்தொழில்களின் அழிவினாலும், ஆங்

சிலேயப் பொருள்களின் இறக்குமதியினாலும், இந்திய விளைபொருள்களின் ஏற்றுமதியினாலும், தேசத்தின் எல்லாப் பாகங்களிலுமிருந்த கைத்தொழிலாளிகள் வரவர ஏழ்மையடைந்து வந்தார்கள். குடிஜனங்களில் பெரும்பான்மையோர் விவசாயத்தொழிலையே கைக்கொள்ளும்படியாயிற்று. 1878-79 ஏற்றுமதியின் மதிப்பான 5,87,50,000 பவுனில் வேலைப்பாடமைந்த கைத்தொழில் சாமான்களின் விலை 100-க்கு $6\frac{1}{2}$ வீதம் தான் இருந்தது. மற்ற $93\frac{1}{2}$ வீதம் விளை பொருள்களின் விலை. 1880-ல் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள் விலை 51,397, 561 பவுன். இந்த இரண்டு காரணங்களால் தேசத்தின் செல்வ நிலை தாழ்வடைந்து, பஞ்சங்கள் அடிக்கடி உண்டாக இடமுண்டாயிற்று. ஸர் ஹொரேஸ் ப்ளங்கெட் நம்மோடு இல்லாததற்காக நான் மிகவும் விசனப்படுகிறேன். அவர் 1896-ம் வருஷத்திய ரீஸஸ் கம்மிட்டியின் சம்பந்தமாய் எழுதியிருக்கும் குறிப்பில் இத்தகைய சம்பவங்கள் அயர்லாந்திலும் மேற்சொன்ன காரணங்கள் நிமித்தமே சம்பவித்தன என்று சொல்லியிருக்கிறார். ஐரிஷ் கைத்தொழில்கள், விவசாயம் இவைகளின் சம்பந்தமான சட்டங்களைப்பற்றிப் பேசும்போது, அவர்,

"அது ஜனங்களை முற்றிலும் பயிர்வேலை செய்து ஜீவிக்கவும், அடுத்தடுத்து உண்டாகும் பஞ்சங்களுக்குத் தேசத்தை இரையாக்கவும் காரணமாயிருந்தது" என்கிறார்.

1800-ம் வருஷத்திற்கும் 1825-ம் வருஷத்திற்கும் இடையில் இந்தியாவில் ஐந்து பஞ்சங்கள் உண்டாயின. 1825-ம் வருஷத்திற்கும் 1850-ம் வருஷத்திற்

கும் மத்தியில் இரண்டு பஞ்சங்கள் நேரிட்டன. 1851-ம் வருஷத்திற்கும் 1875-ம் வருஷத்திற்கும் இடையில் ஆறு பஞ்சங்களும் 1876-க்கும் 1900-க்கும் இடையில் பதினெட்டுப் பஞ்சங்களும் தோன்றின. மிஸ்டர் டிக்பி சொல்லுகிறபடி, 1854-க்கும் 1901-க்கும் இடையில் உண்டான மரணத் தொகை 28,825,000. 1901ருஷத்தில் எழுதியபோது பின் வருமாறு அவர் குறிப்பிட்டிருக்கிறார் :—

"சராசரியாகப்பார்க்கும்போது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி முப்பது வருஷங்களில் நேரிட்ட பஞ்சங்களும் அகவிலைகளும், அதற்கு முந்திய நூறு வருஷங்களுக்கு முன் இருந்ததை விட நான்கு மடங்கு அதிகமாயும் நான்கு மடங்கு விஸ்தீரணத்தில் பெருகியுமிருந்தன."

'இருப்புப்பாதைகளினால் இந்தியாவுக்கு உண்டான நன்மைகள் பல. அவைகளில் முக்கியமானது, பஞ்ச காலங்களில் உண்டாகும் கஷ்டங்களைக் குறைக்க அது மிகவும் உபயோகமாயிருப்பது,' என்று என் உடன் அங்கத்தினர் சொல்லும் விஷயத்தை நானும் அங்கீகரிக்கிறேன். பஞ்சத்தினால் வருந்தும் பாகங்களுக்கு முற் காலத்தைவிடத் தற்காலம் அதிக சீக்கிரமாய்த் தானியங்களைக் கொண்டுபோகக்கூடும். அதனால் ஆகாரம் அகப்படாததினால் ஜனங்கள் மடிந்து போவதைத் தடுக்கக்கூடும். 1900-ல் இரண்டாம் பஞ்ச விசாரணைச்சங்கம் கூடிற்று. ஸர் அந்தோனி (இப்பொழுது பிரபுவாயிருக்கும்) மெக்டானெல் என்பவர் அதற்கு அக்கிராசனாதிபதியாய் இருந்தார். பஞ்ச சகாய விஷயமாயும் அதின் பரிபாலன சம்பந்

மாயும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அவைகளின் விஷயமாய்த் தகுந்த சட்டதிட்டங்களும் செய்யப் பட்டிருக்கின்றன. "பஞ்ச சாந்திக்காக அநேக வழிகள் ஏற்படுத்தப்பட்டனவே ஒழிய அவைகள் உண்டா காமல் தடுக்கத் தகுந்த பிரயத்தனங்கள் கையாளப்பட வில்லை." இப்பொழுது நாங்கள் சிபார்சு செய்யும் அநேக பரிகாரங்கள் நாற்பது வருஷங்களுக்கு முன்ன ரே தெரிவிக்கப்பட்டிருந்தும் அவை இதுவரையில் கவ னிக்கப்படாததைப்பற்றி நான் வருந்துகிறேன்.

1877-78-ம் வருஷத்தில் நேரிட்ட பயங்கரமான பஞ்சத்திற்குப்பிறகு, இந்தியப் பஞ்ச விசாரணைச் சங் கம் ஒன்றை அரசாங்கத்தார் ஏற்படுத்தினர். பஞ்சங் களின் கடூரத்தை குறைக்கவும் அவைகளை ஜனங்கள் தாங்குமாறு என்ன செளகரியங்கள் ராஜாங்கத்தாரால் செய்யப்படலாமென்றும் ஆலோசிக்கவே அந்தச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அந்தச்சங்கத்தார் தங்கள் அறிக் கையில் சொல்லியிருக்கிறதாவது :—

"ஜனங்களில் பெரும்பான்மையோர் பயிரிடும் குடி களாயிருக்கிறார்கள் என்பதும், பஞ்ச காலங்களில் வெகு ஜனங்கள் தங்கள் ஜீவனோபாயத்திற்காக வே றெந்த கைத்தொழிலையும் கைக்கொள்ள இடமில்லை என்பதும், இந்தியாவில் உண்டாகும் பஞ்சங்கள் அதிக கடூரமாயிருக்கின்றன வென்பதற்கும், அவைகளின் சாந்திக்காகச்செய்யப்படும் ஏற்பாடுகளில் அநேகம் கஷ் டங்கள் ஏற்படுவதற்கும் முக்கிய காரணம். மழை பெய் யாவிடில் பொதுவாக உழைப்பாளிகள் தங்கள் சொற்ப வருமானத்தைக்கொண்டு ஆகாரம் வாங்க முடியாமற் போவதுடன் அவர்களுடைய ஜீவனோபாயமாகவுள்ள விவசாயத்தொழிலும் பாழ்பட்டுப்போகின்றது. இத்

தகைய நிலைமையை நீக்கவேண்டுமாயின் பருவத்தின் மாறுதல்களை எதிர்பாராத கைத்தொழில்களை அபி விருத்தி செய்தல் அவசியமாகும்."

"வெவ்வேறுன கைத்தொழில்களின் அபிவிருத்தியின்" சம்பந்தமாய் அந்த விசாரணைச் சங்கம் செய்த முக்கிய சிபார்சுகள் மிகவும் உபயோகமாயும் நாங்கள் செய்யும் சிபார்சுகளுக்கு அதிகமாய் ஒத்துமிருப்பதினுல், அவைகளை அடியில் வரைந்திருக்கிறேன் :—

"இந்திய ஜனங்களுடைய வறுமைக்கும், பஞ்சங்களினுல் உண்டாகும் அபாயங்களுக்கும் மூல காரணமாயிருப்பது, ஜனத்தொகையில் பெரும்பாலோருக்கு பயிர்த்தொழிலே ஜீவனேபாயமாக விருப்பதென்பதே. தற்காலத்திய கஷ்டங்களை நீக்கவேண்டுமாயின் ஜனங்கள் அநேக விதமான கைத்தொழில்களில் பயிற்சி பெற்று அதனுல் தங்கள் ஜீவனேபாயத்துக்கு வழி தேடிக்கொள்ளச்செய்யப்படவேண்டும்."

அக்காலத்தில் ஆங்கிலேயர்கள் தங்கள் கைம்முதலை இந்தியாவில் உபயோகப்படுத்துவதில் ஏற்பட்ட தடைகளைப்பற்றியும், துரைத்தனத்தாரே இவ்விஷயத்தில் தாங்களே உதவி செய்யக்கூடாமற்போனதற்குக் காரணங்களைப்பற்றியும் சொன்ன பிறகு, அவர்கள் சொன்னதாவது :—

"6. புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கத் துரைத்தனத்தார் உதவி செய்யக்கூடிய வழிகள் உண்டென்பதற்குச்சந்தேகமில்லை. தேயிலை பயிரிட்டு அதைப் பக்குவப்படுத்தும் கைத்தொழில் துரைத்தனத்தார் காட்டிய வழிகளில் ஒன்று. இதுபோலவே நாம் வேறு வழிகளிலும் அதே மாதிரியாகச் செய்யக்காரணமாயிருக்கவேண்டும். இவ்விஷயத்தில், துரைத்தனத்தார் தேயிலைத்தோட்டங்களை ஏற்படுத்தி, சீனதேசத்து

வேலைக்காரர்களைக்கொண்டு வந்து, அதற்கு வேண்டிய விதைகளையும் வழங்கினார்கள். அந்தக் கைத்தொழில் மிகவும் லாபமுள்ள வியாபாரத்தொழிலாகச் செய்யப்பட்டது. பிறகு அதில் தங்களுக்கிருந்த உரிமையை நீக்கிக்கொண்டார்கள். அந்தத்தோட்டங்கள் சொந்தத்தில் கைம்முதல் வைத்துப் பயிரிடக்கூடியவர்களுக்கு விற்கப்பட்டன. சொந்தமாய் ஸின்கோனா (கொயனா மருந்து செய்யப்படும் செடிகள்) தோட்டங்கள் வைத்துப் பயிர்செய்ய அரசாங்கத்தார் ஜனங்களுக்கு சர்வசுதந்தரமும் கொடாமலிருந்தபோதிலும், அவர்கள் ஏற்படுத்தி விருத்தி செய்த கைத்தொழில்களில் இதுவும் ஒன்று.

"7. விவசாய விருத்தியைப்பற்றி யோசிக்கும்போது, அதற்குச் சில மார்க்கங்களைக்காட்டியிருக்கிறோம். அத்தொழில் ஐரோப்பாவில் சாஸ்திரவிதிகளின்படி செய்யப்பட்டு வருகிறது. அம்முறைகளில் தேறினவர்களை இந்தியாவுக்கு வரவழைத்து, இந்தியப் பயிர்த்தொழிலை எப்படி விருத்தியாக்கலாமென்று அவர்களுடைய ஆலோசனையைக்கேட்டு, புதிய விவசாயமுறைகளைக் கைக்கொள்ளவேண்டும். விவசாயப் பொருள்களைப் பக்குவப்படுத்தி விற்குமிடங்களுக்குக் கொண்டுபோகும் விஷயத்திலும் நவீன முறைகள் கையாளப்படவேண்டும். தற்காலம் கொஞ்சமாயும் நாசூக்கற்றதாயும் இந்தியாவில் செய்யப்பட்டுவரும் கைத்தொழிற்பொருள்களையும் இம்முறைகளினால் சீர்மைப்படுத்திச் செய்துகொள்ளலாம். அங்ஙனஞ் செய்வதினால் அப்பொருள்கள் அதிகமாய் விற்பனையாகும் அன்னிய நாடுகளிலிருந்து இந்நாட்டிற்குக்கொண்டுவரப்படும் சரக்குகளுக்குப் பதிலாக நாம் அவைகளை உபயோகப்படுத்தலாம்.

"8 இங்ஙனம் செய்யக்கூடிய பொருள்களில் அடியிற் கண்டவைகள் சில :—சர்க்கரை காய்ச்சுதலும், சுத்தி

செய்தலும்; தோல் பதனிடுதல்; பருத்தி, கம்பளி மயிர், பட்டு முதலிய நெசவுத்தொழில்; மற்றவிதமான நார்களிலிருந்து நூல்செய்தல்; புகையிலை பதன்படுத்துதல்; காகிதம், மண் பாண்டங்கள், கண்ணாடி, சோப்புகள், எண்ணெய்கள், மெழுகுவர்த்திகள் முதலியவை செய்தல்.

"9. மேற்குறிப்பிட்ட தொழில்களில் சிலவற்றைத் துரைத்தனத்தார் தாங்களே நடத்திவருகிறார்கள். கான்பூரில் தோல் பதனிடப்பட்டுவருகிறது. அந்தத்தொழிற்சாலையிலிருந்து ஏராளமாய்ச் சேனைகளுக்குச் சேணங்கள் அனுப்பப்படுகின்றன. பெரிய சிறைச்சாலைகளில் கம்பளங்களும் வேறு சில சாமான்களும் செய்யப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட தொழிலிடங்கள் காலக்கிரமத்தில் அவைபோன்ற தொழிற்சாலைகள் அங்கங்கே ஏற்படுத்தப்படுவதற்கு மூலாதாரமாயிருக்கின்றன. அவைகள் இங்கே அத்தொழில்கள் நடத்தப்படக்கூடியவைகள் என்று நிரூபித்துக் காட்டுகின்றன. அவை நவீன முறையில் தேச ஜனங்களைப் பழக்கக்கூடிய பள்ளிக்கூடங்களாயு மிருக்கின்றன. அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் துரைத்தனத்தாருக்கு வேறெந்த வழியிலும் கிடைக்கக்கூடாத சாமான்களைத் தயார் செய்துகொடுக்கிறதாலோ அல்லது அத்தொழில்களை நவீனமுறைகளில் நடத்திச் சொந்தமாய் வர்த்தகம் செய்பவர்களுக்கு அவை மாதிரித்தொழிற்சாலைகளாகவிருக்கிறதாலோ மிகவும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றன. இங்ஙனமே துரைத்தனத்தாருடைய தொழிற்சாலைகளும், இருப்புப்பாதைக் கூட்டங்களும் நன்மை விளைக்கின்றன. ஏனென்றால் அவைகளின் உதவியினால் காலக்கிரமத்தில் நன்றாய்த் தேர்ந்த தொழிலாளிகள் பல இடங்களில் பரவ ஏதுவாகும்.

"10. மேலும் தங்கள் சொந்தச் செலவில் ஒரு புதிய கைத்தொழிலை ஆரம்பிக்கவோ அல்லது ஏற்

கனவேயிருக்கும் கைத்தொழில் ஒன்றை விருத்தி செய்யவோ விரும்புகிறவர்களுக்கு ராஜாங்கத்தார் பலவிதத்தில் உதவி செய்யலாம். அன்னிய நாடுகளில் அதே கைத்தொழில் செய்து வரும் விதத்தைத்தெரிந்து சொல்லலாம். அல்லது அங்கிருந்து வேலைத்திறனடைந்த வேலைக்காரர்களை வரவழைத்து அவர்களை இத்தொழில்களை மேல் விசாரணை செய்யச் சொல்லலாம். இவ்விதமான உதவிகளெல்லாம் முதல் முதலில் சர்க்கார் செலவிலேயே செய்யப்படவேண்டும். ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கைத்தொழில் சாமான்களுக்குப் பதிலாக, உள்நாட்டுச் சரக்குகளையே துரைத்தனத்தார் அதிக செலவில்லாமல் உபயோகிக்கக்கூடும். பொதுவாகக் கூடுமானவரையில் தங்களுக்குவேண்டிய சாமான்கள் உள்நாட்டில் கிடைக்குமாயின் அங்கேயே வாங்கப்படவேண்டும். இத்தகைய ஏற்பாடுகள் கடந்த சில வருஷங்களாக நடந்தேறி வருகின்றனவென்று எங்களுக்குத் தெரியும். இதன் சம்பந்தமாய் இன்னும் ஜாஸ்தியான ஏற்பாடுகள் செய்வதோடு அதைப்பற்றி அதிகமான கவலையும் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

"11. மேற்சொன்ன நோக்கங்களைக்கொண்டன்றி வேறெக்காரணங்கொண்டும் அரசாங்கத்தாரே எந்தக் கைத்தொழிலையும் பரீக்ஷைக்காக ஆரம்பிப்பது நல்லதென்று எங்களுக்குத் தோன்றவில்லை. இவ்விதமான காரியங்கள் உண்மையில் பயன்பெறவேண்டுமானால், அவைகள் வியாபாரத் தோரணையில் செய்யப்படவேண்டும். துரைத்தனத்தார் தலையிட்டுச்செய்யும் கைத்தொழில் வியாபாரசம்பந்தமாயிராது. பரீக்ஷார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட எக்காரியத்திலும் அனுவசியமான அதிகச் செலவு செய்கிறோமோ என்ற பயமிருந்தால் அவைகள் பயன்படா. பரீக்ஷார்த்தமாய் செய்யப்பட்டதுதானே பயன்படாமல் போய்விட்டது என்று

சொல்லவும் கூடாது. ஏனென்றால் அப்படிச்சொல்லு வதால் உண்டாகும் கெடுதிகள் பல.

"12. துரைத்தனத்தார் கைத்தொழில்களைச் சாஸ்திர முறைப்படி கற்பிக்க ஏற்பாடுகள் செய்யலாம். அவைகளில் தேர்ச்சி அடைகிறவர்களுக்கு வெகுமானங்கள் கொடுக்கலாம். வசதியான இடங்களில் பொருட்காட்சிச்சாலைகளை ஏற்படுத்திப் பொதுஜனங்களுக்கு அவைகளில் ஓர் ஆவலையும் ஆசையையும் உண்டாக்குவதோடு அவை மூலமாய் அவைகளைப் பற்றிய அறிவையும் புகட்டலாம். இவ்வழிகளிலெல்லாம் துரைத்தனத்தார் உதவி செய்யக்கூடும் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இப்படிப்பட்ட ஏற்பாடுகள் சமீபகாலத்தில் ஐரோப்பாவில் கைத்தொழில்களின் முதிர்ச்சிக்கு அதிக அநுகூலமாயிருந்திருக்கின்றன. சாஸ்திர தோரணையாய்க் கைத்தொழிற் பயிற்சி கற்பிக்கவேண்டியது துரைத்தனத்தாருடைய கடமையென்று இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் அறிந்து வருகிறார்கள். இனிவருங் காலங்களிலும் இவ்விஷயம் கவனிக்கப்படுமென்பது நிச்சயம். ஐரோப்பாவில் துரைத்தனத்தாரால் செய்யப்படும் உதவிகள் இந்தியாவிலும் அரசாங்கத்தாரால் செய்யத்தக்கனவாகும். கைத்தொழிற் கல்வி எப்படி ஜனங்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி இங்கிலாந்திலேயே இன்னும் போதுமான அநுபவ முண்டாகவில்லை. ஆகையால் தற்காலம் இந்தியாவில் வேலையாட்களுக்கு இயந்திரங்களைச் சாதாரணமாய்க் கையாடத்தான் கற்றுக்கொடுக்க முடியும்.

"13. கைத்தொழில்களின் விருத்திக்கு அரசாங்கத்தார் எந்தெந்த வழியில் எவ்வளவு தூரம் உதவி செய்யக்கூடுமோ அதைச்செய்யவேண்டும். அப்படிச் செய்வதில் சுயமாய் வர்த்தகம் செய்யும் ஒருவருக்கும் யாதொரு இடையூறும் உண்டாக்கக்கூடாது. விவ

சாய விஷயத்தில் பயனில்லாமல் இப்போது வேலை செய்துகொண்டிருக்கும் அநேக வேலைக்காரர்கள் புதிதாய் ஏற்படுத்தப்படும் கைத்தொழில்களில் போய் சேருவார்களென்பது கவனிக்கத்தக்கது. இப்போது ஏற்படும் பஞ்சங்களை யடுத்துவரும் வேலையாட்களின் கஷ்டங்களைக் குறைக்க மேற்சொன்னபடி செய்வது பெரிய உதவியாயிருக்கும்."

## சாஸ்திரமுறையை யனுசரித்த கைத்தொழில், தேச கைத்தொழில் இவைகளினுடைய அபிவிருத்திக்காக இந்தியர்கள் செய்துகொண்ட வேண்டுகோள்.

இவ்வரிய அறிக்கை 1880-ல் பிரசுரிக்கப்பட்டது. அதில் செய்யப்பட்ட முக்கியமான சிபார்சுகள் கவனிக்கப்படவேயில்லை. கைத்தொழில் பயிற்சியும் விருத்தியடையவில்லை. சுதேச கைத்தொழில் சாமான்கள் செய்யவும் உற்சாகப்படுத்தப்படவில்லை. இதற்கிடையில், இந்தியப்பொதுஜன அபிப்பிராயங்களைச் சேகரிக்கவும், அவர்களுடைய குறைகளையும் விருப்பங்களையும் துரைத்தனத்தாருக்குத் தெரிவிக்கவும் இந்திய சுதேச காங்கிரஸ் என்னும் கூட்டமொன்று 1885-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

1887-ம் வருஷத்தில் நடந்தேறிய காங்கிரஸின் மூன்றாவது ஸெஷனில் அடியிற் கண்ட தீர்மானம் செய்யப்பட்டது :—

" ஜனங்கள் ஏழைகளாயிருக்கிறார்கள். தேசத்தின் நிலைமைக்குத் தக்கப்படி கைத்தொழில் பயிற்சி அபிவிருத்தி செய்யப்படவேண்டும். சுதேச கைத்தொழில் சாமான்கள், இதற்கு முன்னமே செய்யப்பட்ட உத்தரவுகளின்படி துரைத்தனத்தாரால் இராஜாங்க விஷயத்

திற்கு உபயோகப்படுத்தப்படுவதினால் அக்கைத்தொழில்கள் பெருக இடமுண்டாகும். இப்பொழுது இருப்பதைவிட, சுதேச ஜனங்களுடைய புத்தியும் யுக்தியும் அதிகமாகப் பெருகுமாறு செய்யப்படவேண்டும்.''

1888-ல் கூடிய அடுத்த காங்கிரஸ் கூட்டத்தில் கைத்தொழில் கல்வி கற்பிக்கும் விஷயத்தை விசாரிக்க ஒரு கலப்பு விசாரணைச் சங்கம் ஏற்படுத்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 1891, 1892, 1893-ம் வருஷங்களிலும் இதே வேண்டுகோள் வற்புறுத்தப்பட்டது. 1894-ல் கல்வி அபிவிருத்திக்காகவும் சாஸ்திரதோரணையாய்க் கைத்தொழில்கள் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் ஏற்படுத்துவதற்காகவும் துரைத்தனத்தார் தங்கள் செலவை அதிகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. 1895-லும் இவ்வேண்டுகோள் விஞ்ஞாபிக்கப்பட்டது. 1896-ல் இந்தியா முழுவதிலும் ஒரு பெரிய பஞ்சம் உண்டாயிற்று. அவ்வருஷத்தில் நடந்த காங்கிரஸ் மஹா சபையில், அடுத்தடுத்து உண்டாகும் பஞ்சங்களை நிறுத்தச் சிக்கனச் செலவு செய்தல், துரைத்தனத்தாருடைய வருமான வழிகளை ஒழுங்குபடுத்துதல், இப்போது முற்றிலும் அழிந்து கிடக்கும் தேசத்துக்கும் நாட்டுக்கும் உரியதான கைத்தொழில்களை விருத்திசெய்தல்; புதிய மாதிரியான சித்திரவேலைகளையும் கைத்தொழில்களையும் ஸ்தாபித்தல் முதலானவைகளே மிகவும் சிறந்த உபாயங்கள் என்று எடுத்துக்காட்டப்பட்டது. 1898-ல் நடந்த காங்கிரஸில் ஜனங்களின் வறுமையையும் இந்தியக்

கைத்தொழில்களின் சோர்வையும் கவனித்து, கவர்ன்மெண்டார் கைத்தொழில் கல்வி கற்பிக்கவும் அதைச் சரியானபடி நடத்த வேண்டிய ஏராளமான பணத்தைச் செலவழிக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. 1904-ம் வருஷத்தில் நடந்தேறின கூட்டத்தில் பலவிதமான கைத்தொழில்களையும். கற்பிக்கக் கூடிய ஒரே ஒரு மத்திய வித்தியாசாலையையேனும் பொதுவான ஓர் இடத்தில் நியமித்துப் பல மாகாணங்களில் அதற்கு அனுசரணையாகக் கைத்தொழில் பள்ளிக் கூடங்களையும் கலாசாலைகளையும் ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. 1905—ல் இதே விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டது. 1906-ல் கீழ்த்தரக் கல்வி பிள்ளைகளுக்கு இனமாய்க் கற்பிக்கப்படவேண்டுமென்றும், காலக்கிரமத்தில் தேசத்தில் உள்ள பிள்ளைகள் எல்லோரும் படிக்கக் கட்டாயப்படுத்தப்படவேண்டுமென்றும், பல மாகாணங்களிலும் அவ்வவ்விடங்களுக்கு அனுகுணமாகக் கைத்தொழில்கல்வி புகட்டத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டன. அங்ஙனமே 1908, 1909, 1910, 1911, 1913. இவ்வருஷங்களில் கூடின காங்கிரஸ்களிலும் கேட்டுக்கொள்ளப்பட்டது. 1914-ல் யுத்தம் ஆரம்பித்த பிறகு, இந்தியக் கைத்தொழில்களை விருத்தி செய்யத் தக்க ஏற்பாடுகள் உடனே செய்யப்படவேண்டுமென்று அவ்வருஷத்தில் காங்கிரஸார் அரசாங்கத்தாரை மன்றாடிக்கேட்டனர். வருஷங்கள் செல்லச் செல்ல, கைத்தொழில்கள் அபிவிருத்தியின் அவசியத்தை இந்தியர்கள் அதிகமாகத் தெரிந்துகொண்டார்கள். 1905-ம் வருஷம் முதல், நாஷனல் காங்கிர

ஸோடு கூட இந்தியக் கைத்தொழில் சங்கம் ஒன்றும் வருஷா வருஷம் நடந்தேறி வருகிறது. வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளைக் கற்பிக்குமாறு அரசாங்கத்தார் சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தியக் கைத்தொழில் மகா நாட்டார் வற்புறுத்திக்காட்டியிருக்கின்றனர். சுதேச கைத்தொழில் சாமான்களை விருத்திசெய்யவும் அவர்கள் பல வழிகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியப் பஞ்ச விசாரணை சங்கத்தாரும், இந்திய நாஷனல் காங்கிரஸாரும், இந்தியக்கைத்தொழிற் கூட்டத்தாரும் செய்துகொண்ட விண்ணப்பங்களினால் உண்டான பயன் மிகவும் சொற்பமே. துரைத்தனத்தாரால் நடத்தப்பட்ட 1907-ம் வருஷத்திய இந்தியக்கைத்தொழில் மகா நாட்டில் அப்பொழுது ஐக்கிய மாகாணங்களுக்கு லெப்டினெண்ட் கவர்னராயிருந்த ஸர் ஜான் ஹீவெட்பின் வருமாறு பேசியிருக்கிறார் :—

"கடந்த இருபது வருஷங்களாகக் கைத்தொழில் வித்தியாப்பியாச விஷயத்தைப்பற்றித் துரைத்தனத்தாரும் ஜனங்களும் யோசித்துக்கொண்டு வருகிறார்கள். வேறெந்தக் காரியத்தைக்குறித்தும் அவர்கள் அதைப்போல் அவ்வளவு அதிகமாய்ப் பேசவாவது எழுதவாவது இல்லை. அப்படியிருந்தும் அவ்வாலோசனைகள் மிகச் சிறிதளவாகவே நடவடிக்கைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன."

எங்களுடைய அறிக்கைப் பத்திரத்தின் பத்தாம் அதிகாரத்தின் முதலில் கைத்தொழில் பயிற்சி விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையில் அவ்விஷயமாய் எவ்வளவு கொஞ்சமாகச் செய்யப்பட்டிருக்கிற

தென்பது அதிலிருந்து தெரியவரும். சில வருஷங்களுக்கு முன் இந்தியா கவர்ன்மெண்டார் பத்து மாணுக்கர்களுக்கு உதவிச் சம்பளங்கள் கொடுப்பதென்று ஏற்பாடு செய்தார்கள். ஒவ்வொன்றும் வருஷவாரியில் நூற்றைம்பது பவுன் பெறுமான முள்ளது. இந்தியர்கள் ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் போய் மேன்மையான கைத்தொழில் கல்விப் பயிற்சி அடைவதற்காகவே உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்த ஏற்பாட்டின்படி இது வரையில் நூறு மாணுக்கர்கள் அத்தகைய பயிற்சிக்குப் போயிருக்கிறுர்கள். சாஸ்திர சம்பந்தமானதும், கைத்தொழில் சம்பந்தமானதுமான பயிற்சிக்குச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு எவ்வளவு குறைவாயிருக்கிறது என்பதைக் கவனித்து 1904-ல் சில இந்தியரும் ஐரோப்பியரும் சேர்ந்து கல்கத்தாவில் ஒரு சங்கம் ஏற்படுத்தினுர்கள். "இந்திய சர்வகலாசாலைகளில் பட்டம் பெற்றவர்கள் சாஸ்திரங்களில் மேலான பயிற்சி பெற ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய அந்நிய தேசங்களுக்குப்போக உதவி செய்வது" அச்சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றுயிருந்தது. 1910-ம் வருஷம் முதல் வங்காள கவர்ன்மெண்டார் வருஷவாரியில் ஐயாயிரம் ரூபாய் இச்சங்கத்திற்கு உதவி செய்துவந்தார்கள். யுத்தம் ஆரம்பித்தது முதல் அது 2,500 ரூபாயாகக் குறைக்கப்பட்டது. இச்சங்கத்தின் உதவியினுல் 300 மாணவர்கள் அயல் நாடுகளுக்குப் போனுர்கள்; அவர்களில் 140 பேர் தேர்ச்சியடைந்து திரும்பிவந்திருக்கிறுர்கள்; இவர்களில் 130 பேர் உத்தியோகத்திலிருக்கிறுர்கள் என்று அச்சங்கத்தின் காரியதரிசியாகிய

ராய் ஜோகேந்திர சந்திர கோஸ் பகதூர் எங்களிடம் சொன்னார். அவருடைய மாணாக்கர்கள் புதிதான இருபது தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்களென்றும், நாற்பது லட்சம் ரூபாய்க்கு அதிகமான முதலையுடைய வேறு அநேகந் தொழிற்சாலைகளை அவர்கள் நடத்தி வருவதாகவும் அவர் சொன்னார். இந்தியர்கள் கைத்தொழில் பயிற்சியில் தேற எவ்வளவு விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்களென்பதும் தங்கள் நாட்டின் கைத்தொழில்களை உயிர்ப்பிக்கத் தங்கள் உடல் பொருள் ஊக்கம் எல்லாவற்றையும் ஒப்படைக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பதும் இதனால் நன்கு விளங்குகின்றன. இந்தியா கவர்ன்மெண்டார் கைத்தொழிற் பயிற்சிக்காக உதவிச் சம்பளங்கள் பெறக்கூடியவர்களின் தொகையை முப்பதாக்கியிருக்கிறார்கள். உதவிச் சம்பளங்கள் கொடுக்கும் விதிகளிலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அம்மாறுதல்கள் சில விஷயங்களில் பழைய விதிகளைவிட மேலாக விருக்கின்றன. இந்த உதவிச் சம்பளங்கள் பெறக்கூடியவர்களின் தொகை தற்கால நிலைமையை யோசிக்குமிடத்து, மிகவும் சொற்பமாகக் காணப்படுகிறது. கைத்தொழில்களின் அபிவிருத்தியின் சம்பந்தமாய் இந்திய வாலிபர்கள் 1 நம் நாட்டிலும் அந்நிய நாடுகளிலும் தேர்ச்சி அடையத்தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

## அந்நிய நாட்டாரின் கைத்தொழில் வளர்ச்சியும் அதினால் இந்தியாவுக்கு உண்டான பயனும்.

எங்களுடைய அறிக்கையின் இரண்டு, ஆறு, ஏழு முதலிய அதிகாரங்களில் சென்ற சில வருஷங்களாக

இந்தியாவில் சில கைத்தொழில்கள் இந்தியக் கைம்முதலைக்கொண்டும் இந்தியரின் மேற்பார்வையின் கீழும் விருத்தியடைந்திருக்கிறதைக் குறிப்பிட்டிருக்கிறோம். அவைகளில் முக்கியமானவை பஞ்சு இயந்திரக் கைத்தொழில், டாடாவின் இரும்பு எஃகு வேலைகள், டாடாவின் மின்சார இயந்திரவேலைகள் ஆகிய இவைகள் மிகவும் திருப்திகரமாய் நடத்தப்பட்டுவருகின்றன. ஆனால் வளர்ச்சியோ மிகவும் சொற்பம். இதற்கிடையில் 1870-க்குப் பிறகு அந்நிய தேசத்தார் கைத்தொழில் சாமான்கள் செய்வதில் ஏராளமாய் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். இந்தச் சம்பந்தத்தில் ஜெர்மனி, ஆஸ்திரியா, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், ஜப்பான் ஆகிய இத்தேசங்களில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை நான் தனித்து சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால், இவைகளின் வளர்ச்சி இந்தியாவுக்கு மிகுந்த இடையூறுகளை விளைத்திருக்கிறது. அந்நாட்டினர் பொதுக் கல்விக்காகவும் கைத்தொழில் கல்விக்காகவும் தக்க ஏற்பாட்டைச் செய்துகொண்டு அதைச் சரிவர நடத்தி வருகிறார்கள். கைத்தொழில் சம்பந்தமாய் அரசாங்கத்தார் உதவியும் அவர்களுக்கு இருந்திருக்கிறது. அதனால் தான் அவர்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். இச்சாதியாரும் இன்னும் இவர்களைத் தவிர அநேகரும் தங்கள் தங்கள் துரைத்தனத்தாருடைய உதவியினாலும் ஆதரவினாலும் தங்களுடைய கைத்தொழில்களை விருத்திசெய்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் இறக்குமதி வரிகள் இல்லாத சௌகரியத்தைக்கொண்டு இச்சாதியார் தங்கள் சாக்

றுகளை ஏராளமாய் இந்தியாவுக்கு அனுப்பியும் இங்கிருந்து பண்படுத்தப்படாத இந்திய விளைபொருள்களைத் தங்கள் நாடுகளுக்கு எளிதில் ஏற்றுமதி செய்துகொண்டும் போகிறார்கள். இதனால் இந்தியா அந்நிய நாட்டுச் சரக்குகளுக்குப் பெரிய வியாபார ஸ்தலமாய் விட்டது. அந்நியநாட்டு வியாபாரத்தைத் தடுக்க இந்தியாவுக்கு யாதொரு விதமான அதிகாரமுமில்லை. இடைவிடாத அந்நிய நாடுகளின் வியாபாரம் இந்தியாவின் விவசாயத்தையும் கைத்தொழில்களையும் க்ஷீணிக்கச் செய்துவிட்டது. ஜெர்மனி இந்தியாவின் நீலிக் கைத்தொழிலை அநேகமாய் நிர்மூலமாக்கிவிட்டது. 1897-ல் டாக்டர் பெயர் என்பவர் இரசாயன முறையில் நீலிசெய்யும் வித்தைக் கண்டுபிடித்தார். அதற்கு முன் தாவர நீலியை வருஷவாரியில் பத்து லக்ஷம் பவுனுக்கு அதிகமாகவே இந்தியா ஜெர்மனிக்கு அனுப்பிக்கொண்டிருந்தது. சில வருஷங்களுக்குப் பிறகு வருஷா வருஷம் முப்பது லக்ஷம் பவுன் பெறுமான நீலி ஜெர்மனியால் வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது. இந்தியாவில் பூர்வீக சர்க்கரைக் கைத்தொழில் ஜெர்மெனி தேசத்திலிருந்து வந்த பீட் என்னும் கிழங்கிலிருந்து செய்யப்பட்ட சர்க்கரையினால் மலிவடைந்தது. இன்னும் அந்நிய நாட்டிலிருந்து வரும் சர்க்கரை நம்முடைய தேசத்தின் சர்க்கரைக் கைத்தொழிலைத் தலையெடுக்கவொட்டாமற் செய்துகொண்டிருக்கிறது. 1913-14-ல் ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் 24,220,000 பவுன் பெறுமான பதனிடாத விளைபொருள்களை வாங்கின, அதாவது, விளைந்த கைத்தொழிலுக்குரிய பொ

ருள்களில் ஆறில் ஒரு பங்கை அத்தேசங்கள் வாங்கிக் கொண்டன. அத்தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட சரக்குகளின் மதிப்பு, 11,304,141 பவுன். இந்தியாவிலிருந்து அதே வருஷத்தில் ஆங்கிலேய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் களின் விலை 38,236,780 பவுன். அங்கிருந்து இந் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் மதிப்பு 78,388,149 பவுன்.

நாற்பது அல்லது ஐம்பது வருஷங்களுக்கு முன் ஜப்பான் விவசாயத்திலும் கைத்தொழில்களிலும் இந்தியாவை விட எவ்வளவோ தாழ்ந்த நிலைமையிலிருந்தது. ஆனால் அந்நாட்டுத் துரைத்தனத்தாரும், ஜனங்களும் ஒன்று கூடி உலகத்தில் கைத்தொழில் களில் முன்னேற்றமடைந்திருக்கும் நாடுகளில் தானும் ஒன்றாக உதவியாயிருக்கும்படி எல்லா விதமான சௌகரியங்களும் அடங்கிய கைத்தொழிற் கல்வி புகட்டக்கூடிய ஏற்பாடுகளைச் செய்து அவர்கள் அந் நாட்டின் கைத்தொழில்களை ஆச்சரியப்படுமளவாக விருத்தி செய்துவிட்டார்கள், நம் நாட்டில் விளையும் பருத்தியில் பெரும்பாகத்தை ஜப்பான் தேசத்தார் வாங்கிக்கொண்டு, ஏராளமான பருத்திச் சரக்குகளை யும் இன்னும் இதர சாமான்களையும் நம்முடைய தேசத்திற்கு அனுப்புகிறார்கள். யுத்தம் ஆரம்பிக்கு முன் 1909-10 முதல் 1913-14 வரையில் உள்ள ஐந்து வருஷங்களில் அவர்கள் நம் நாட்டிற்கு அனுப்பிய சரக்குகளின் சராசரித் தொகை, நம் நாட்டில் இறக்கு மதி செய்யப்பட்ட பொருள்களின் தொகையில் நூற் றுக்கு இரண்டரை வீதம் இருந்தது. 1917-ம் வரு

மார்ச்சு மீ 31தோடு முடிந்த வருஷத்தில் இறக்குமதி செய்யப்பட்ட தொகை மொத்தத் தொகையில் நூற்றுக்குச் சற்றேறக்குறைய 9 வீதமாக இருந்தது. 1914ஹு மார்ச்சுமீ 31உடயோடு முடிந்த வருஷத்தில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட சாமான்களின் தொகை 127,538,638 பவுன். (இதிலிருந்து 28,959,766 பவுன் கழித்து, கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்ட சாமான்களின் தொகையைக் கூட்டிக்கொள்ளவேண்டும். யுத்த ஆரம்பத்திற்கு முன் 1909-10 முதல் 1913-14 வருஷம் வரையில் உள்ள ஐந்து வருஷங்களில், இறக்குமதிச் சரக்குகளின் மதிப்புத்தொகையில் அடியிற்கண்ட தேசங்களின் சராசரி விகிதங்களாவன :— ஆங்கிலேய ஐக்கிய இராஜ்ஜியம் நூற்றுக்கு 62·8 ; பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின் இதர பாகங்கள் நூற்றுக்கு 7 ; ஜப்பான் நீங்கலாகவுள்ள நேச நாடுகள் நூற்றுக்கு 4·6 ; அமெரிக்கா ஐக்கிய நாடுகள் நூற்றுக்கு 3·1 ; ஜப்பான் நூற்றுக்கு $2\frac{1}{2}$ ; ஜாவா நூற்றுக்கு 6·4 ; இதர அந்நிய தேசங்கள் (முக்கியமாய் ஜெர்மனியும் ஆஸ்திரியா ஹங்கேரியும்) 13·6. 1917ஹு மார்ச்சுமீ 31உடயோடு முடிந்த வருஷத்தில் செய்யப்பட்ட இறக்குமதிகளில் முக்கியமான தேசங்களின் விகிதங்களாவன :— ஆங்கிலேய ஐக்கிய இராஜ்ஜியம் நூற்றுக்கு 58·7 ; பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின் இதர பாகங்கள் நூற்றுக்கு 7 ; ஜப்பான் நீங்கிய நேசக் கக்ஷியார் நூற்றுக்கு 3·3 ; ஜப்பான் நூற்றுக்கு 8·9 ; அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் நூற்றுக்கு 7·3 ; ஜாவா, நூற்றுக்கு 8·9 ; இதர அந்நிய தேசங்கள் நூற்றுக்கு 5·9.

தற்கால நாகரிகத்திற்கு ஏற்றபடி தினசரி ஜீவியத்திற்கு வேண்டிய விளைபொருள்களுக்காகவும் கைத்தொழிற் சாமான்களுக்காகவும் இந்தியர்கள் எவ்வளவு தூரம் இதரதேசங்களின் கையைப் பார்த்தவர்களாய் இருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கப் பரிதாபமாயிருக்கிறது. 1914ஙு மார்ச்சு மாதத்தோடு முடிந்த வருஷத்தில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட சரக்குகளின் கீழ்க் கண்ட அட்டவணை இந்தியாவின் பராதீன நிலைமையை நன்கு விளக்குகிறது :

| | | (பவுன்) |
|---|---|---|
| I. | ஆகாரம், பானம், புகையிலை ... | 16,441,330 |
| | (டப்பியில் அடைக்கப்பட்டதைத் தவிர்த்த) மீன் ... ... | 208,330 |
| | பழங்களும், காய்கறிகளும் ... | 753,583 |
| | தானியங்களும், பருப்பு தினுசுகளும், மாவுகளும் ... | 185,560 |
| | சாராய தினுசுகள் ... ... | 1,251,642 |
| | சாப்பாட்டுச் சாமான்களும், பல சரக்குச் சாமான்களும் ... | 1,649,087 |
| | வாசனைத் திரவியங்கள் .. | 1,154,875 |
| | சர்க்கரை... ... ... | 9,971,251 |
| | தேயிலை ... ... ... | 152,409 |
| | இதர ஆகாரங்களும் பானங்களும், அதாவது, காப்பிக்கொட்டை (வறுத்ததையும் பொடிசெய்ததையும் தவிர்த்து) ஹாப்ஸ் என்னும் பூண்டு முதலியவைகள் ... | 511,623 |
| | புகையிலை ... ... | 501,923 |

| | |
|---|---|
| II. பக்குவமாகாத சரக்குகளும், விளை பொருள்களும், (முக்கியமாய் இயந்திரங்களால் பக்குவப்படுத்தப்படாத பொருள்களும்) ... ... | (பவுன்) 7,038,380 |
| நிலக்கரி, சுட்ட நிலக்கரி, அதிகாரவுரிமைப் பத்திரம் பெற்ற விறகு ... ... ... | 710,920 |
| பிசின்கள், குங்கிலியம், பனிக்கட்டி. | 175,764 |
| பதனிடப்படாத தோல்கள் ... | 101,066 |
| களிம்பு கலந்த உலோகங்கள், கைத்தொழிலுக்காக இரும்பு அல்லது எஃகுத் துண்டுகள்... | 41,977 |
| எண்ணெய்கள் ... ... | 2,934,611 |
| விதைகள், (எண்ணெய் விதைகளும் சேர்ந்தது) ... ... | 53,431 |
| கொழுப்பு, மெழுகு ... ... | 150,638 |
| நெசவுக்குரிய சாமான்கள் ... | 1,204,510 |
| மரமும், வெட்டுமரமும் ... | 515,590 |
| சில்லரைப் பொருள்கள், அதாவது, கிளிஞ்சல், பலகாரை, சோழி, மீன் உரம், காகிதம் செய்யக் கந்தைத் துணிகள் மரசத்து முதலியவைகள் ... ... | 1,149,873 |
| III. முற்றிலும் அல்லது பெரும்பாலும் வேலைப்பாடமைந்த பொருள்கள். | 96,769,443 |
| துணிமணிகள் ... ... | 1,669,389 |
| யுத்தாயுதங்கள், குண்டு, மருந்து முதலிய யுத்த உபகரணங்கள், யுத்த சாமான்கள் ... | 236,713 |

| | |
|---|---|
| | (பவுன்) |
| வண்டிகளும், பைஸிகல்களும், மோட்டார்கார்களும் ... | 1,422,667 |
| இரசாயனப் பொருள்கள், மூலிகைகள், மருந்துகள் ... | 1,605,609 |
| கத்திமுள்ளுகள், இரும்பு சாமான்கள், கருவிகள் (இயந்திரக் கருவிகள் தவிர) ... ... | 4,291,140 |
| சாயங்களும், வர்ணங்களும் ... | 1,510,933 |
| தட்டுமுட்டுகள், மரச்சாமான்கள். | 224,323 |
| கண்ணாடி சாமான்களும், மண் சாமான்களும் ... ... | 1,728,667 |
| பதனிடப்பட்ட தோல்கள் .. | 266,683 |
| எல்லாவிதமான இயந்திரங்கள் (இயந்திரங்களை ஓட்ட உபயோகமான தோல் பட்டைகள் உள்பட) ... ... | 5,508,397 |
| இரும்பும், எஃகும், (அவைகளால் செய்யப்பட்ட சாமான்களும்). | 10,633,249 |
| இரும்பும், எஃகும் தவிர்த்த இதர உலோகங்களும், அவைகளால் செய்யப்பட்ட பொருள்களும் ... ... .. | 41,610,801 |
| காகிதம், அட்டைகள், பேனா, மசி, முதலியன ... ... | 1,524,982 |
| இருப்புப்பாதைகளுக்கு வேண்டிய சாமான்களும், வண்டிகளும்... | 6,689,794 |
| நெசவுக்குரிய பின்னப்பட்ட நூல் புரிகள் ... ... | 50,360,643 |

| | | (பவுன்) |
|---|---|---|
| | அச்சுகள், செதுக்கு வேலைகள், படங்கள், ரப்பர் வேலைகள், சுருட்டு பிடிக்கிறவர்களுக்கு வேண்டிய பொருள்கள், ஸோப்புகள், வாசனைகள், தடிகள், ஜாட்டிகள், கற்கள், சலவைக் கற்கள், ஸ்நான அறைக்குரிய சாமான்கள், பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள், குடைகள், குடைக் கம்பிகள் முதலியன ... ... | 5,055,963 |
| IV. | ஜீவஜந்துக்கள், ஜந்துக்களுக்கு வேண்டிய ஆகாரங்கள், தவிடு முதலியன ... ... | 1,916,135 |
| V. | துரைத்தனத்தாருக்கு வேண்டிய சாமான்கள் .. ... | 5,373,350 |
| | இறக்குமதிகளின் மொத்தமதிப்பு (ரொக்கம் தவிர) ... | 127,538,638 |

எங்களுடைய அறிக்கையின் நான்காம் அதிகாரத்தில் இந்தியக் கைத்தொழில்களின் குறைவுகளை வரையறுத்துத் தொகுத்துக் காட்டியிருக்கிறோம். நம்முடைய தேசத்தில் இப்போது இறக்குமதி செய்யப்படும் கைத்தொழில் சாமான்களும் சரக்குகளும் சமாதான காலங்களிலும் யுத்த காலங்களிலும் நமக்கு அவசியமானவைகள். நாம் செய்துவரும் கைத்தொழில்களின் பட்டியைப் பார்த்தால் அவைகளின் குறையு எவ்வளவு என்பது தெரியவரும். அவைகள் தகுதியான விதமாய் விருத்திசெய்யப்பட்டாலொழிய இந்

தியாவில் கைம்முதல் உள்ளவர்கள் சமாதான காலத்தில் முன்பணம் போட்டு லாபகரமான தொழில்களைச் செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பமிராது. யுத்த காலங்களில் கடல் வழியாய்ச் சாமான்களைக் கொண்டுவருவது கூடாத காரியமென்பது அனுபவத்தில் இப்போது நமக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் இந்தியாவின் தற்காலத்திய முக்கியமான கைத்தொழில்களை நிறுத்தவேண்டிவரும். அதனால் சாமான்களை வாங்குகிறவர்களுக்குப் பெருத்த கஷ்டமேற்படும். சேனைகளுக்கு அதிக அபாயமுண்டாகும். விளைபொருள்களும் உலோகங்களும் நம் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவைகளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டுபோக அநேக சாதனங்களும் இருக்கின்றன. நாம் செய்யக்கூடிய சாமான்கள் செலவாவதற்கு ஏராளமான வசதிகளும் உண்டு. இத்தகைய சௌகரியங்களிருப்பதால், துரைத்தனத்தார்மட்டும் வேண்டிய கல்விவசதியையும் பணவசதியையும் ஜனங்களுக்கு உண்டாக்கிக்கொடுத்து, தாங்களும் அவைகளை ஆதரிக்கும்பக்ஷத்தில், கைத்தொழில்கள் ஏராளமாய் அபிவிருத்தியடைய ஒரு கஷ்டமுமிராது. துரைத்தனத்தார் இவ்வுதவிகளை எவ்விதமாய்ச் செய்யக்கூடும் என்பதை நாம் யோசிக்கவேண்டும்.

## அரசாங்கத்தார் சிறிதுகாலமாய் அனுசரித்துவரும் கைத்தொழில் முறை.

அறிக்கையின் எட்டாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிற துரைத்தனத்தாரின் கைத்தொழில் ஒழுங்

தின் சரித்திர சம்பந்தமாய் நான் அதிகமாய் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. இந்தியக் கைத்தொழில் களின் அபிவிருத்திக்காகத் துரைத்தனத்தார் எடுத்துக்கொண்ட முயற்சியால் ஏற்பட்ட பயன் எவ்வளவு சிறியதென்பது அங்கே காட்டப்பட்டிருக்கிறது. “திட்டமும் சர்வசம்மதமுமான ஒழுங்கைக் கையாடாததினுலும், கைத்தொழில்களில் தேர்ச்சியடைந்தவர்களுடைய ஒற்றுமை இல்லாததினுலும் இவ்விதமாயிற்றென்பது என்னுடைய உடன் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயம். அந்த அபிப்பிராயத்தை நான் அங்கீகரிக்கவில்லை. சில கைத்தொழில்கள் வியாபாரத்துறையில் இலாபகரமாய் இருக்கும்படி எப்படி அபிவிருத்தி செய்யப்படலாமென்றுகாட்ட அரசாங்கத்தாரே முன்நிற்கவேண்டுமென்று 1910-ல் சென்னைக் கவர்ன்மெண்டார் செய்த சிபார்சை அப்போது இந்தியா மந்திரியாயிருந்த மார்லி பிரபு அங்கீகரிக்காததற்காக என் உடன் அங்கத்தினரைப் போலவே நானும் வருந்தப்படுகிறேன். இந்தச் சங்கத்தாரின் அறிக்கையின்மேல் தம் உத்தரவு வரும் வரையில் இந்தியா கவர்ன்மெண்டாரின் சம்மதத்தை முன்னிட்டு அவரவர்கள் வரவு செலவுக்குத்தக்கபடி, எந்தெந்தக் கைத்தொழில்களுக்கு உதவி செய்ய மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு விருப்பமுண்டோ அவைகளுக்கு உதவிசெய்யலாம் என்றும், தமக்கு முன்னிருந்த மந்திரி செய்த சட்டங்கள் இதற்கு இடையூருக இராவென்றும் 1916-ம் வருஷம் பிப்ரவரிமீ 12௳ க்ரூ பிரபு இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தந்தி மூலமாய் அனுப்பிய உத்தரவு எனக்கு

வெகு திருப்திகரமாயிருக்கிறது. "1910-ல் மார்லி பிரபு செய்த உத்தரவு பிறகு கவர்ன்மெண்டார் கைத் தொழில்களின் அபிவிருத்திக்காகச் செய்த பிரதம பிரயத்தனங்களுக்கு மிகவும் இடையூறாகவிருந்தது" என்று எங்கள் அறிக்கையின் முன்னுரையின் 4-வது பக்கத்தில் சொல்லியிருப்பதை நான் ஒத்துக்கொள்ள வில்லை. என்னுடைய உடன் அங்கத்தினர்கள் மேலே சொல்லப்பட்ட சென்னைக் கவர்ன்மெண்டாருடைய சிபார்சை மார்லி பிரபு அங்கீகாரம் செய்யாததினால் விளைந்த பயனை அநாவசியமாய்ப் பெருக்கிப் பேசியிருக் கிறார்களென்று நான் நினைக்கிறேன். மார்லி பிரபுவின் நிமித்தமாயும் அவர் கைத்தொழில் கல்வியைப்பற்றிச் செய்திருக்கும் உத்தரவைச் சரியானபடி அறிவதன் நிமித்தமாயும், அவர் 1910-ம் வரு ஜூலை 29உ எழு தியுள்ள உத்தரவிலிருந்து கீழ்க் கண்ட இரண்டு பாகங்களையும் எடுத்து வரைந்திருக்கிறேன் :—

"சென்னைக் கவர்ன்மெண்டார் தங்கள் மாகாணத்தில் புதிய கைத்தொழில்களை ஸ்தாபிக்கச்செய்திருக்கும் ஏற் பாடுகளை நான் படித்துப்பார்த்தேன். அதிலிருந்து இந்த ஏற்பாடுகள் அதிக பிரயாசையும் யுக்தியும் உப யோகித்துச் செய்யப்பட்டதாய்க் காணப்படுகிறது. ஆனால் அரசாங்கத்தார் செய்யும் உதவியானது கண்டிப் பாய்க் கைத்தொழில் கல்வி கற்பிக்கும் வரையில் இருப் பதோடு, அவ்விஷயம் கொஞ்சங்கூட வியாபார சம்பந் தப்படாமலிருந்தாலொழிய மேற்சொன்ன ஏற்பாடுகள் உதவியாயிருக்குமா என்ற சந்தேகம் எனக்குப் போக வில்லை. இந்த நிபந்தனையிருந்தால் சுயமுயற்சியினால் செய்யப்படும் கைத்தொழில்கள் தடைப்படா. அதே சமயத்தில் துரைத்தனத்தார் தங்களுடைய உதவியைக்

காட்டப்போதுமான வேறு வழிகள் உண்டு. இந்த நிபந்தனை யில்லாமற்போனால், துரைத்தனத்தார் ஆரம்பிக்கும் கைத்தொழில்கள் உபயோகமற்ற விளையாட்டுக் காரியங்களாய்ப்போகும்; அல்லது அவை பணச்செலவுள்ள அபாயகரமான விஷயங்களாகும். இந்த மாகாணத்தில் கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு அவர்கள் கொண்டிருக்கும் அவாவுக்குக்காகச் சென்னைக் கவர்ன்மெண்டாரோடும் மகா நாட்டினரோடும் நான் அனுதாப முடையவனாயிருக்கிறேன். அத்யாவசியமாயிருக்கும் வியாபாரப் படிப்பு, கைத்தொழில் படிப்பு முதலியவைகளின் அபிவிருத்திக்காகச் செலவிட வேண்டிய பணத்தை, அரசாங்கத்தாரால் நடத்தப்படும் கைத்தொழில்களுக்குச் செலவழிப்பதனால் கைத்தொழில்கள் குறைவு படுமே யல்லாது விருத்தியடையமாட்டா.

" தற்கால சாஸ்திரங்களின்படியும், ஐரோப்பாவில் அனுசரிக்கப்பட்டுவரும் முறைகளைப் பின்பற்றுவதினாலும் இந்தியக்கைத்தொழில்களை விருத்திசெய்யக்கூடுமானால், அப்படிப்பட்ட விஷயங்களில் ஜனங்களைப் பழக்குவதில் அரசாங்கத்தார் தங்கள் பணத்தைச் செலவழிப்பதற்கு நான் அனுமதி கொடுக்கிறேன். இதற்குமேல் துரைத்தனத்தார் இவ்விஷயத்தில் தலையிடக்கூடாது. இந்த ஏற்பாடுகளை அங்கீகரிப்பதால் வியாபாரதோரணையில் இலாபகரமாயிருக்குமென்று சுதேசிகள் தாங்களே கண்டுகொள்ளக்கூடும். மேற்குறிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டு, கைத்தொழில் பள்ளிக்கூடங்களும், வியாபாரப் பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிப்பதாலேயே கைத்தொழில் சங்கத்தார் அபிப்பிராயத்திலிருந்த எல்லா நோக்கங்களும் பூர்ணமாகும் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்தப் பள்ளிக்கூடங்களில்தான் நவீனமுறையில் செய்யக்கூடிய கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ளக்கூடும்.

புதிதான இயந்திரங்களையும் ஆயுதங்களையும் உபயோகிக்கும் விதத்தைத் தெரிந்துகொள்ளலாம். கைத்தொழிலாளிகளின் திறமையும் அதிசீக்கிரமாய் விருத்தியடையும். தோல் பதனிடும் விதத்தைக் கற்பிக்கும் பள்ளிக்கூடத்தில் தோல்களுக்கு வர்ணமேற்றிப் பதனிடும் விதத்தைக் கற்றுக்கொள்ளலாம். நெசவுத் தொழில் பள்ளிக்கூடத்தில் கைத்தறிகளை எப்படிப் புதுமாதிரியில் சிறப்பிக்கச் செய்யலாமென்றும், அவ்விதம் செய்வதால் உண்டாகும் நன்மைகள் எவை என்றும் காட்டலாம். பள்ளிக்கூடங்கள் சரியாய் நடத்தப்பட்டுவந்தால் அவைகளிலிருந்து சுயமாய்க் கைம்முதல் வைத்துத் தொழில் செய்கிறவர்களுக்குத் தேர்ந்த வேலைக்காரர்கள் கிடைப்பது சுலபமாயிருக்கும். வியாபாரத்திற்கு வேண்டிய சமாசாரங்களும் தெரியவரும். சாமான்கள் செய்யப்பட்டு இலாபத்திற்கு விற்கப்படலாமென்று காட்டுவதற்காக, மேற்சொன்ன தோலைப்பற்றிப் போதனை செய்யும் பள்ளிக்கூடத்தையாவது, நெசவுப் பள்ளிக்கூடத்தையாவது சர்க்கார் கைக்தொழில்சாலையாக மாற்றுவது உசிதமல்லவென்றும் இதர மாகாணங்களில் அவ்விதம் செய்ய அவசியம் ஏற்படவில்லையென்றும் எனக்குத் தோன்றுகிறது. கைத்தொழில்களின் சம்பந்தமாய் ஆலோசனை கொடுக்கத்தக்க ஒரு சங்கம் ஏற்படுத்துவதிலும் அதிலிருந்து புதிதான கைத்தொழில்களைப் பற்றியும், முறைகளைப்பற்றியும், கருவிகளைப்பற்றியும் அறிவைப் பரவச் செய்வதிலும் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் அப்படிப்பட்ட எந்தக் காரியமும் சுதேசிகளின் சுயமுயற்சிக்குத் தடையாயிருக்கக் கூடாது."

"என் ஸ்தானத்தில் எனக்கு முன்னிருந்தவர் 1910ஞு ஜூலை 29௳ அனுப்பிய கடிதத்தில் சொல்லியிருக்கிற சங்கதிகளைச் சென்னைக் கவர்ன்

மெண்டார் சரிவரத் தெரிந்துகொள்ளவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஜனங்களுக்குத் தற்கால சாஸ்திர முறைப்படியும் ஐரோப்பிய நாடுகளில் கையாளும் வழக்கத்தின்படியும் கைத்தொழில்களைச் செய்யப் பழக்குவதில் அரசாங்கத்தார் பணத்தைச் செலவழிக்கலாம் என்பதே அவர் செய்த உத்தரவு. கைத்தொழில்கள் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களில் மட்டும் தான் இவைகள் செய்யப்படவேண்டும் என்பது அதன் கருத்தல்ல. சில விஷயங்களில் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படுவது மாத்திரம் போதாது. கைத்தொழிற்சாலைகளுக்கு அப்படிப் படித்தவர்களை அனுப்பி அவர்கள் கற்றதை அனுபவ முறையில் கொண்டுவரக் கூடுமென்பதை விளக்கிக் காட்டவேண்டுவது அவசியமாயிருக்கும். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் நவீன முறையில் சாமான்களைச் செய்வதாலுண்டாகும் நன்மையை விளக்க வேண்டிய இயந்திரங்களை வாங்கவும், அவைகளினால் செய்யப்படும் சாமான்கள் எவ்வளவென்று கண்டுபிடிக்கவும் செலவாகும் தொகையை அரசாங்கத்தார் பணத்திலிருந்து செலவிடலாம்" என்று க்ரூ பிரபு தம்முடைய நெ. 24-ரெவியூ கடிதத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

மார்லி பிரபு அனுமதி கொடுத்திருப்பதைக் காட்டிலும் அதிகமாக அரசாங்கத்தார் செய்ய வேண்டுமென்பது இந்தியப் பொதுஜன அபிப்பிராயம். அவர் அனுமதி கொடுத்தவரையிலாவது, செய்யப்பட்டிருந்தாலும் ஜனங்கள் நன்றியுள்ளவர்களாயிருந்திருப்பார்கள். ஏனெனில், அனுமதி கிடைத்திருக்கிறவரையில் அநேக காரியங்களைச் செய்திருக்கலாம். துரைத்தனத்தார் தங்கள் நிர்வாகத்தில் ஸ்தாபிக்க

விருந்த கைத்தொழில்களுக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று வைத்திருந்த முதலைக் கைத்தொழில் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிப்பதில் செலவழித்திருக்கலாம். தற்கால சாஸ்திரமுறைகளிலும் ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழில் விருத்திக்காக அனுசரிக்கப் படும் வழிகளிலும் ஜனங்களைப் பழக்குவதிலும் செலவழித்திருக்கலாம். இப்படியெல்லாம் செய்யப் படவில்லை என்பதே அவர்களுடைய குறை. அறிக்கைப் பத்திரத்தின் 199-ம் பத்தியில், "மார்லி பிரபு செய்த உத்தரவை அமுலுக்குக்கொண்டு வரவேண்டிய ஒழுங்காவது திட்டமாவது இந்தியா கவர்ன்மெண்டாருக்கு இல்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒழுங்கும் திட்டமும் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பதே அதற்குப் பிரதியுத்தரமாகும்.

## விரும்பப்பட்ட மாறுதல்.

இந்தியா தேசம் தனக்கு வேண்டியவைகளுக்காக இதர நாடுகளின்மேல் எவ்வளவு சார்ந்திருக்கிறதென்பதை யுத்தமுண்டானபோது அறிந்துகொண்டோம். நமக்கு அவசியமான தினசரி சாமான்களில் எவ்வளவு ஜெர்மனியிலிருந்தும் ஆஸ்திரியாவிலிருந்தும் வந்துகொண்டிருந்த தென்பதையும் தெரிந்துகொண்டோம். யுத்தம் ஆரம்பித்த கொஞ்சகாலத்திற்குப் பிறகு, இந்தியாவின் தற்கால மாறுதலுக்குத் தக்கபடி கவர்ன்மெண்டார் கைத்தொழில்களின் சம்பந்தமாய் என்ன ஒழுங்கு செய்யமுடியுமென்பதை இந்தியா கவர்ன்மெண்டார் பரிசோதிக்கத் தீர்மானித்தார்கள். 1915௵ நவம்பர்மீ 26௳ ஹார்டிஞ்ஜ்

பிரபு இந்தியா மந்திரிக்கு அனுப்பிய கடிதத்தில் அப்படி மாறுதல் செய்யவேண்டியதின் அவசியத்தைப் பற்றித் தெளிவாயும் திட்டமாயும் எடுத்துக்காட்டியிருக்கிறார். அதாவது:

"யுத்தம் முடிந்த பிறகு இந்தியக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்யாமற்போனால், இந்தியா அந்நிய நாட்டுக் கைத்தொழிற் சரக்குகளுக்கு ஒரு பெரிய வியாபார ஸ்தலமாய்விடும். ஏனெனில், அந்தந்தத் தேச ஐசுவரிய நிலைக்குத் தக்கபடி அரசாங்க நிலையும் இனிமேலிருக்கும் என்பது இப்பொழுது வெளியாயிருக்கிறது. அதனால் அவரவர்கள் தங்கள் தங்கள் சாமான்களை விற்பதில் நோக்கமுள்ளவர்களாய் இருப்பார்களாகையால் அதிக போட்டியுண்டாகும். இந்த விஷயத்தில் எல்லா இந்தியர்களுடைய அபிப்பிராயமும் ஒத்திருக்கிறது. இதை நாம் கவனியாமல் விட்டுவிட முடியாது. கைத்தொழிலாளிகளும், இராஜாங்க முறையறிந்தவர்களும், படிப்பாளிகளும் இந்தியக் கைத்தொழில்களுக்கு உதவி செய்யத் தகுந்த ஒழுங்கைத் துரைத்தனத்தார் அனுசரிக்கவேண்டுமென்று வெகுகாலமாய்க் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இம்மாதிரி விஷயங்களில் தங்கள் அறிவினாலும் அந்தஸ்தினாலும் சிரத்தையெடுத்துக்கொள்ளக்கூடிய எல்லா இந்தியர்களும் இதற்காக அதிக அனுதாபம் காட்டுகிறார்கள். கைத்தொழில் பயிற்சிக்காகச் சாஸ்திரப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி, தற்காலம் உயர்தரப் படிப்புள்ளவர்கள் இப்பொழுது நாடுகிற வேலைகளுக்குப் பதிலாகக் கைத்தொழில்களைத் தெரிந்துகொள்ளுமாறு ஒழுங்கு செய்வது அவசியம்."

முடிவாக அவர் சொன்னதாவது:

"யுத்தத்திற்குப் பிறகு, கூடிய வரையில் கைத்

தொழில் செய்யும் தேசங்களில் இந்தியாவும் ஒன்ருவ தற்கு என்னென்ன செய்யப்படவேண்டுமோ அவை களில் எல்லாம் துரைத்தனத்தாருடைய உதவியைக் கேட்க அதற்கு உரிமையுண்டு."

இந்த ஏற்பாட்டை இந்தியா மந்திரி அங்கீகாரஞ் செய்தார். இவைகளைப்பற்றி யோசித்துத் தங்க ளுடைய அபிப்பிராயத்தை அறிவிக்க இவ்விசாரணைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. நன்றியறிவோடும் நம்பிக் கையோடும் இந்த ஏற்பாட்டை இந்தியர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இவை இருளடைந்ததும் பயங்கர மானதுமான இரவுக்குப் பிறகு சூரியன் உதயமானது போல் இருக்கின்றன. இந்தியாவில் இருபத்தோரு வருஷங்களாகப் பருத்தியின் மீது போடப்பட்ட வரி அதிகமென்று இந்தியர்கள் முறையிட்டுக் கொண்டிருக் கிருர்கள். இங்கிலாந்தில் துரைத்தனத்தார் இந்தியா வுக்கு அனுப்பப்படும் பருத்திச் சரக்குகளின் இறக்கு மதித் தீர்வையை அதிகப்படுத்தினபோது கைத்தொ ழில் கூட்டத்தார் ஐரிஷ் சுதேசியக் கட்சியினரோடும் லங்காஷையர் கட்சியினரோடும் சேர்ந்துகொண்டு கவர்ன்மெண்டார் அவ்விதம் செய்யக்கூடாதென்று மறுத்தார்கள். யுத்தமுடிவில் இராஜாங்க வருமானத் தைப்பற்றிய இதுவும் மற்ற விஷயங்களும் யோசிக்கப் படும். அதுவரையில்தான் இந்த உயர்த்தப்பட்ட இறக்கு மதித் தீர்வை அமுலில் இருக்கலாம் என்னும் நிபந்தனையோடு அரசாங்க ஏற்பாட்டை, பிரதம மந் திரியார் கனம்பொருந்திய மிஸ்டர் ஆஸ்க்வித் அங்கீ காரம் செய்துகொண்டார். இதை நினைக்கும்பொழுது அடிக்கடி சிறிது பயம் உண்டாகிறது. மேற்சொன்ன

இறக்குமதித் தீர்வை விஷயமாய் லங்காஷையர் வர்த்தகர்கள் ஒரு சிறு சங்கம் ஏற்படுத்தினார்கள். அச்சங்கத்தார் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ள அக்காலத்தில் இந்தியா மந்திரியாயிருந்த மிஸ்டர் ஆஸ்டின் சேம்பர்லினைப் போய்ப் பார்த்தார்கள். இவ்விதமாய் இறக்குமதித் தீர்வை உயர்த்தப்படா விட்டால், யுத்த விஷயமாய் இந்தியர்கள் கொடுக்கிறோம் என்று சொன்ன 10 கோடி பவுனைக் கொடுக்க முடியாது என்றும், ஆகையால் அத்தீர்வை உயர்த்தப் படவேண்டியது அவசியமென்றும் அவர் சொல்லி விட்டார். இந்தத்தீர்மானத்திற்காக நாம் அவருக்கு நன்றி பாராட்டுகிறோம்.

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் கைத்தொழில்களின் விஷயமாய் இருக்கிற சம்பந்தத்தையும், இதுவரையில் இந்தியா விஷயமாய் இங்கிலாந்து கையாண்டு வந்திருக்கும் கைத்தொழில் முறையையும் சுருக்கமாய் மேலே எடுத்துக்காட்டி யிருக்கிறேன். அரசாங்கத்தார் இந்தியக் கைத்தொழில்களை ஆதரித்து விருத்தி செய்தால் ஆங்கிலேய வர்த்தகர்களுடைய வியாபாரத்திற்கு இடையூறு உண்டாகுமென்று சில ஆங்கிலேயர்கள் தப்பாய் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அதனால் இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் ஒன்றும் செய்யக்கூடாதென்று அவர்கள் தடுத்துவருகிறார்கள். இந்தியா கடந்த நூற்றைம்பது வருஷகாலமாய் இங்கிலாந்தின் செழிப்புக்கு எவ்வளவு உதவியாயிருந்திருக்கிறது என்பதையும், இந்தியாவின் விஷயமாய்ச் செய்யப்பட்ட ஒழுங்குகள் அதற்கு எவ்வளவு கஷ்டத்தை உண்டாக்கின வென்பதையும் என் ஆங்கிலேய சகோ

தார்கள் அறியுமாறு மேற்சொன்ன விஷயங்களை நான் எடுத்துக்காட்டியிருக்கிறேன். இவ்விஷயங்களை அவர்கள் கவனிப்பார்களேயானால், இம்முறையை அனுஷ்டிக்கவந்ததால் இந்தியாவில் ஏராளமான விளைபொருள்களும், அவைகளுக்கேற்ற செலவும் இருந்தும், இந்தியா நூற்றைம்பது வருஷகாலமாய் ஆங்கிலேய அரசாட்சிக்குள்ளிருந்தும் அது உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களையும்விட மிக்க வறுமையுற்றிருக்கிறதென்பதும், தங்கள் கைத்தொழில்களைத் தங்கள் இஷ்டம்போல் விருத்திசெய்துகொள்ளச் சுவாதீனம் பெற்றிருக்கும் சுய ஆட்சி பெற்ற ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளின் வளத்தோடு ஒத்திட்டுப் பார்த்தால், இந்தியா தன்னுடைய பழைய வளத்தையும் ஐசுவரியத்தையும் திரும்ப அடையச் சுவாதீனம் பெறுவது எவ்வளவு நியாயம் என்பதும் அத்தியாவசியமென்பதும் அவர்களுக்கு நன்முய்த் தெரியவரும். இத்தகைய ஏற்பாடு இந்தியாவிற்கு மாத்திரம் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதாயிராது. அஃது இங்கிலாந்துக்கும் பிரயோஜனமாயிருக்கும். இந்தியா செல்வத்தில் வளரவளர, அதினுடைய ஜீவிய நிலைமையும் உயரும். தற்காலத்தில் இந்தியர்கள் மேல் நாட்டிலிருந்து வரவழைக்கும் சாமான்களை இன்னும் ஏராளமாய்த் தருவிக்கவேண்டியதாயிருக்கும். இங்ஙனம் இருதேசத்தாரும் க்ஷேமமடைவார்கள். இதே அபிப்பிராயத்தை மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி பலமுறை வற்புறுத்தியிருக்கிறுர். கடந்த சில வருஷங்களில் க்ஷேம நிலைமையை அடைந்திருக்கும் தேசங்களின் சரித்திரத்தைப் பார்த்தாலும் மேற்சொன்ன விஷயம்

நன்கு விளங்கும். இதற்கு உதாரணமாக அமெரிக்க ஐக்கிய மாகாணங்களைப் பார்ப்போம். அந்நாடுகள் செல்வத்தில் வளரவளர, அவைகளுக்கு அனுப்பப்பட்ட அந்நிய நாட்டுச் சரக்குகளும் (அதாவது இறக்குமதிகளும்) விருத்தியடைந்தன வென்பது அடியிற் கண்ட கணக்கைப் பரிசோதித்தால் வெளியாகும் :—

| வருஷம். | | | இறக்குமதிகளின் மதிப்பு (டாலர்கள்.) |
|---|---|---|---|
| 1860 | ... | ... | 3530 லட்சம். |
| 1870 | ... | ... | 4350 ,, |
| 1880 | ... | ... | 6670 ,, |
| 1890 | ... | ... | 7890 ,, |
| 1900 | ... | ... | 8490 ,, |

ஜப்பான் தேசத்து வியாபார சரித்திரத்தைப் பார்த்தாலும் இதே உண்மை வெளியாகும். அது தன்னுடைய கைத்தொழில்களை விருத்திசெய்து ஐசுவரியத்தில் வளர்ச்சியடைய அடைய பிறநாட்டுச் சரக்குகளும் சாமான்களும் ஏராளமாய் அவ்விடத்தில் வியாபாரம் செய்யப்படுகின்றன வென்பது அடியிற்கண்ட பட்டியிலிருந்து வெளியாகும் :—

கடந்த ஒவ்வோரு பத்து வருஷங்களில் ஜப்பானில் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் சராசரித்தொகை.
ஜப்பான் நாட்டில் வழங்கும் என் (Yen) என்னும் நாணயத்தில் லட்சக் கணக்கில்.

| பிரதி பத்து வருஷங்கள். | ஆங்கிலேய ஐக்ய இராஜ்ஜியத்திற்கு. | ஜெர்மனியிற்கு. | அமெரிக்க ஐக்கிய நாடுகளிற்கு. | இதர தேசங்களிற்கு. | எல்லாத் தேசங்களிற்கு. |
|---|---|---|---|---|---|
| 1881—1890 ... | 196 | 34 | 42 | 193 | 465 |
| 1891—1900 ... | 466 | 148 | 228 | 870 | 1712 |
| 1900—1909 ... | 843 | 361 | 658 | 1998 | 3860 |

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட கைத்தொழில் சாமான்களின் விதங்களையும் வளர்ச்சியையும் பற்றிச் சொல்லும்போது மிஸ்டர் கிளைவ் டே என்பவர் தாம் எழுதியிருக்கும் "வர்த்தக சரித்திரம்" என்னும் நூலின் 568-ம் பக்கத்தில் பின்வருமாறு சொல்லுகிறார் :—

"பலவிதமானதும் ஜாஸ்தியான மதிப்புள்ளதுமான அநேக கைத்தொழில் சாமான்கள் இதர தேசங்களிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளில் எப்போதும் இறக்குமதி செய்யப்படும் என்பது சகஜம். ஏனென்றால் நம்மால் சீக்கிரத்தில் செய்யமுடியாததும், தங்களுக்குத் தெய்வீகமாய்க் கிடைக்கும் சாமக்கிரியைகளாலும் தங்களுக்கு அவைகளிலுள்ள விருப்பத்தாலும்

சாதுரியத்தாலும் இதர தேசங்களில் செய்யப்படுவதுமான சாமான்களை நம் தேசத்தில் இறக்குமதி செய்வதை நாம் தடைசெய்யக்கூடாது."

நம் தேசத்துக் கைத்தொழில்களை விருத்திசெய்ய நமக்குச் சமயம் இனிமேல் கொடுக்கப்படும்பக்ஷத்தில், மேற்கண்ட வார்த்தைகளையேதான் நம் நாட்டுவிஷயத்திலும் சொல்லுவேன். இந்தச் சங்கதியை அதிகமாய் வளர்த்தவேண்டிய அவசியமில்லை. "யுத்த முடிவுக்குப் பிறகு வியாபாரத்திலும் கைத்தொழில்களிலும் செய்யவேண்டிய ஒழுங்குகளுக்காகக் காரிய விசாரணை சபை" ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பர்லே நகரத்து பால்போர் பிரபு அக்கிராசனாதிபதியாயிருந்தார். அவரும் மேற்சொன்ன அபிப்பிராயமே கொண்டிருக்கிறார் என்பதைப் பார்க்க எனக்குச் சந்தோஷமுண்டாகிறது. அவர்கள் தங்களுடைய முடிவான அறிக்கையின் 232, 233-ம் பத்திகளில் சொல்லுவதாவது :—

"ஐரோப்பா கண்டம் பெரும்பாலும் சர்வதேச சம்பந்த வியாபாரப் போட்டிகளுக்கு அனுகுணமாகப் பங்கு பங்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வவ்விடங்களில் அவ்வவ்விடத்திய தேசஸ்திதிகளும் அந்தந்தத் தேசங்களுக்கு வேண்டியவைகளைச் செய்ய உள்ள அனுகூலங்களும் அப்பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்ற விடங்களுக்குக் கொண்டுபோகச் செய்யப்பட்டிருக்கும் வசதிகளும் மேற்சொன்ன போட்டியைக் கங்குகரைக்குள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கின்றன. ஏற்றுமதி செய்யப்படும் நம்நாட்டுப் பொருட்களை அனுப்பக்கூடிய விஸ்தாரமான •இதர தேசங்கள் அநேகம் இருக்கின்றன. பூர்வீகமானதும்

கைத்தொழில்களில் நாகரிக மடைந்திருப்பதுமான சீனதேசம் நாற்பது கோடி ஜனங்களைக்கொண்டிருக்கிறது. அத்தேசத்தில் சில காலத்துக்குள்ளாக நம் தேசத்துச் சாமான்களுக்கு ஏராளமான கிராக்கி ஏற்படும். இந்தியாவும் அந்த நிலைமைக்கு வர நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ருஷியநாட்டிலுள்ள ஸைபீரியாவிலும் அதற்குக் கிழக்கேயுள்ள இதர சிறிய தேசங்களிலும் நம்முடைய நாட்டுச் சரக்குகள் அதிக லாபமாய் விற்கப்படலாம்.

“இந்த வர்த்தகப் போட்டி விஷயத்தில் ஜப்பானை நாம் மறந்துபோகக்கூடாது. அது நாளடைவில் விருத்தியடைந்து வருகிறது. கீழ்நாட்டு ஜனங்களின் ஜீவிய வழக்கங்கள் விருத்தி யடைந்து வளரவளர அவ்வளர்ச்சிக்குத் தக்கபடி அவர்களுக்குத் தேவையான சாமான்களின் நாகரிகமும் அளவும் விருத்தியடையும் என்பதில் சந்தேகமில்லை. இந்த விருத்தியும் முதிர்ச்சியும் ஆங்கிலேயக் கைத்தொழில்களுக்கு மிகவும் அனுகூலமாயிராமல் போகா. இவ்வொரு காரணத்திற்காகவாவது இந்தியாவின் செல்வ நிலையை அபிவிருத்தி செய்யக்கூடிய இருப்புப்பாதைகளைச் சீக்கிரத்தில் அதிகப்படுத்துவது எல்லா ஏற்பாடுகளிலும் அத்தியாவசியமானதென்று நாங்கள் வற்புறுத்துகிறோம்.”

இந்தியக் கைத்தொழில்கள் முதிர்ச்சியடைந்துவளரும் என்னும் நம்பிக்கையை உறுதிப்படுத்த இன்னொரு காரணமுமுண்டு. இதற்கு முன்னிருந்த இராஜப்பிரதிநிதிகளையும் இந்தியா மந்திரிகளையும்போலத் தற்கால இராஜப்பிரதிநிதியும் இந்தியா மந்திரியும், இந்தியக் கைத்தொழில்களின் அபிவிருத்தியின் சம்பந்தமாய்த் தகுந்த ஒழுங்குகள் செய்யப்படவேண்டியது அவசியம் என்று அறிந்திருக்கிறார்கள். அரசாட்சிக்கேற்ற

சீர்திருத்தங்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் அறிக்கையில் கண்டிருக்கும் அடியிற்கண்ட விஷயத்தைப் படித்து இந்தியர்கள் அதிக திருப்தி அடைந்திருக்கிறார்கள் :—

"எந்தக் காரணத்தை யோசித்தாலும் இந்தியக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் உதவியாயிருக்கும் ஓர் ஒழுங்கை அனுசரிப்பது இன்றியமையாததாயிருக்கிறது. அப்படிச் செய்வதினால், இந்தியாவின் செல்வ நிலைமையை விர்த்திசெய்வது மாத்திரமன்றி இத்தேசத்து ஜனங்கள் இதரதேச ஜனங்களைப்போலவே தாங்களும் நாகரிகத்தில் தேர்ச்சியடைந்தவர்களென்று காட்டிக்கொள்ளவேண்டுமென்று அவர்களுக்கு இருக்கும் ஆசையைப்பூர்த்தி செய்வதற்கும், இப்போது கல்வியில் தேர்ச்சியடைந்த வாலிபர்கள் அரசாங்க உத்தியோகத்திற்கும் ஏற்கனவே ஆள் நிறைந்திருக்கும் வேறு சில உத்தியோகங்களுக்கும் போவதை மாற்றி வேறு வழியில் போகுமாறு செய்வதற்கும், பிறயோஜனமற்றுக்கையிலிருக்கும் பணத்தை எப்படிப் பொதுஜன நன்மைக்காக உபயோகப்படுத்தக்கூடும் என்பதற்கும், படிப்பாளிகள் மனோராஜ்யத்திலும் புத்தகப்படிப்பிலும் தங்கள் நாட்களைச் செலவிடுவதற்குப்பதிலாகப் பிரயோஜனமான காரியங்களில் பிரவேசிக்கும்படி செய்வதற்கும், இராஜ்ய நிர்வாகத்தில் செய்யப்படவிருக்கும் சீர்திருத்தத்தினால் உண்டாகும் பொறுப்புகளைச் சரியான விதமாய் வகிக்க யோக்கியதை பெறுவதற்கும் மேற்சொன்ன முறை அனுஷ்டிக்கப்படுதல் அத்தியாவசியமாகும். இந்த நோக்கங்களோடு தான் லார்ட் ஹார்டிஞ்ஜ் அவர்கள் துரைத்தனத்தார் இப்பொழுது விசாரணை செய்துவரும் கைத்தொழில் விசாரணைச் சங்கம் நியமிக்கப்படவேண்டுமென்று சிபார்சு செய்தார்கள்.

"இத்தகைய அரசாட்சி சம்பந்தமான யோசனைகள் இந்தியாவிற்கு மாத்திரம் உரியதாயிருக்கின்றன. பொருளாதார நிமித்தமாகவும் இராணுவ நிமித்தமாகவும் துரைத்தனத்தார் இந்தியாவின் இயற்கைப்பொருள்களை இனிமேல் அதிகமாய் உபயோகப்படுத்தினால் பிரிட்டிஷ் இராஜ்ஜியத்துக்கே நன்மை உண்டாகும். கைத்தொழில் வளர்ச்சியினால் இந்தியா இராஜாங்கத்திற்கு எவ்வளவு மூலபலமாயிருக்கும் என்பதை இப்பொழுது அளவிடமுடியாது. யுத்த முடிவிற்குப் பிறகு அதனுடைய உபயோகம் வெளியாகும் என்று நம்புகிறோம்."

மேலே சொன்னதிலிருந்து உண்டாயிருக்கும் நம்பிக்கை எவ்வளவுதூரம் பயன்படும் என்பது, இராஜப்பிரதிநிதி சட்டசபையில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அதிகாரத்துக்குட்பட்டிருக்கும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு இந்தியக்கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமான எல்லா அதிகாரமும் பொறுப்பும் கொடுக்கப்படவேண்டுமா என்னும் முக்கியமான விஷயத்தில் செய்யப்படும் தீர்மானத்தைப் பொறுத்ததாயிருக்கும். நாங்கள் செய்திருக்கும் சிபார்சுகளெல்லாம் இந்த விஷயத்தைப்பொறுத்தனவாகவே இருக்கின்றன.

## கைத்தொழில்களும் பயிர்த்தொழிலும்.

கைத்தொழில்களைப்பற்றியும் விவசாயத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிற எங்கள் அறிக்கையின் ஐந்தாவது அதிகாரத்தில் என்னுடைய உடன் அங்கத்தினர்கள்,

"நம்முடைய தேசத்தின் பயிர்த்தொழிலை விருத்தியாக்கவும் மாசூலை அதிகப்படுத்தவும் என்னென்ன

செய்யப்படவேண்டுமோ அவைகளைச்செய்வது அத்தியாவசியம் என்றும் இக்காரியங்கள் முக்கியமானவை என்றும் நாங்கள் வற்புறுத்திச் சொல்லுகிறோம்;" என்றும்,

" இந்தியா கவர்ன்மெண்டாரும் மாகாண கவர்ன்மெண்டாரும் விவசாய இலாகாக்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். மேற்கண்ட விருத்தி விவசாயத்தில் உண்டாகவேண்டுமானால் இந்த இலாகாக்களால்தான் உண்டாகவேண்டும். இதுவரையில் இவைகளால் உண்டான பயன் செல்வவிருத்தியைக் காட்டாமலிருந்தபோதிலும், அவைகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இவைகள் காலக்கிரமத்தில் விவசாய சம்பந்தமாய்ப் பயிரிடுவோர்களின் சிரமத்தைக் குறைக்கச் சாதனமாய் இருக்கும் இயந்திரங்களும் அவைகளுக்கேற்ற கருவிகளும் செய்யப்படும் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கக் காரணமாயிருக்கும்" என்றும் சொல்லுகிறார்கள்.

விருத்தியடைந்த விவசாய முறைகள் கையாளுவதற்கு இருக்கும் சந்தர்ப்பங்களையும், கிணறுகள், கால்வாய்கள், குளங்கள், ஆறுகள், இவைகளிலிருந்து நீர்ப் பாய்ச்சலுக்கும் இன்னும் மற்றக் காரியங்களுக்கும் தண்ணீர் எடுக்கச் சக்தியால் ஓட்டப்பட்ட இயந்திரங்களை உபயோகிக்கவும், இயந்திரங்களினால் பள்ளத்தாக்கானவிடங்களிலிருக்கும் தண்ணீரை இறைத்தும், ஆழமாய் உழுதும் நிலத்தை விருத்திசெய்யவும் மிகுந்த இடமிருக்கிறதென்றும் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அறுவடைக்கும், போரடிக்கவும், தானியங்களைத் தூற்றவும் உயர்ந்ததும் தேர்ச்சியடைந்ததுமான கை இயந்திரங்கள் செய்யத்தக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் சிபார்சு செய்திருக்

கிறார்கள். இவ்விஷயமாய் அவர்கள் இன்னும் சொல்லு கிறதாவது :—

"இயந்திரங்களை விவசாய வேலைகளில் உபயோகிக்க இந்தியர்களுக்குப் பழக்கமில்லை. இப்படி அவர்களைப் பழக்குவிப்பது கைத்தொழில் விவசாய இலகாதாரரின் முக்கியமான கடமையாகும். இன்னும் வெகு காலம் வரையில், அந்த இலாகாதாரர் இவ்விஷயத்தில் எவ் வளவுக்கெவ்வளவு ஜனங்களை உற்சாகப்படுத்தி, அவர் களுக்கு உதவிசெய்கிறார்களோ அதற்குத் தக்கபடி தான் ஜனங்கள் இயந்திரங்களை உபயோகிக்கத் தலைப் படுவார்கள்."

இதன் சம்பந்தமாய் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு விவசாய விஷயங்களில் ஆலோசனை சொல்லுகிறவரா கிய மிஸ்டர் ஜேம்ஸ் மெக்கென்னு என்பவர் 1915-ல் பிரசுரம் செய்திருக்கும் "இந்திய விவசாயம்" என் னும் நூலில் அவர் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை எல்லாரும் தெரிந்துகொள்ளுமாறு கீழே வரைந்திருக் கிறேன் :—

"விவசாயத்தை விருத்தி செய்யவேண்டுமென்று ஆசையுள்ள ஒவ்வொருவரும் அதற்காக ஐரோப்பிய இயந்திரங்களையே பெரும்பாலும் உபயோகப்படுத்து வதை நாம் பார்த்திருக்கிறோம். தானியத்தூற்றுக் கூடை இயந்திரங்களையும் கரும்பு ஆலையாடும் இயந்திரங் களையும் ஏற்படுத்தினதினால் அதிக இலாபமுண்டா யிருக்கிறது. ஆனால், அறுவடைசெய்யும் இயந்திரங்களை யாவது, பாரமான ஆங்கிலேயக் கலப்பைகளையாவது உபயோகிப்பதில் அதிக எச்சரிக்கையாயிருக்கவேண் டும். பண்ணையாள்கள் அகப்படாத விடங்களில் அறுப்பு அறுக்கிற இயந்திரங்கள் ஏராளமான பூஸ்திதி யுள்ளவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். ஜன

நெருக்கமான பாகங்களில் அவைகளை உபயோகித்தால், வேலையாட்களுக்குத்தொழில் கிடைப்பது அரிதாய் விடும். அவர்களுக்கு அறுவடைவேலை இல்லாமல் போய்விடுவதோடு வாலாயமாய்க் கிடைக்கும் மாசூல்கள் நின்று விடும். பாரமான கலப்பைகள் உபயோகிக்கும் விஷயத்தில் ஆழமாய் உழுதல் அவசியமா வென்பதை முதலாவது பார்க்கவேண்டும். இவ்விரண்டு இனங்களிலும் இப்போது கிடைக்கும் உழவு மாடுகளின் சக்தியும், இயந்திரங்களின் உடைந்துபோன பாகங்களை இலேசாய்ப் பழுதுபார்ப்பதில் இருக்கும் கஷ்டமும் மேல் நாட்டு இயந்திரங்களை உபயோகப் படுத்துவதற்குப்பெரும் தடைகளாயிருக்கின்றன. இதைவிட, உள் நாட்டில் விவசாயிகளே சுலபமாய்ச்செய்து பழுதுபார்க்கக்கூடியவையும் தங்கள் உழவு மாடுகள் இழுக்கக்கூடியவையுமான உள்நாட்டு இயந்திரங்களையும் கருவிகளையும் விருத்திசெய்வதே மேன்மை என்று தோன்றுகிறது."

மேற்சொன்ன விஷயம் எனக்கு முற்றிலும் சம்மதமாயிருக்கிறது. மிஸ்டர் மெக்கென்ன சொல்லுகிற இடையூறுகள், இயந்திரசக்தியால் ஓட்டப்படும் கருவிகளை விவசாயத்தில் உபயோகிப்பதிலும் ஒவ்வும். என் உடன் அங்கத்தினர் சொல்லுவதுபோல, "ஐரோப்பாவிலும் ஜெர்மனியிலும் இருக்கிற விவசாய நிலைமைக்கும் இந்திய விவசாய ஸ்திதிக்கும் உள்ள வித்தியாசங்கள் பல. இயந்திரங்களை உபயோகித்து விவசாயம் நடத்தும் பழக்கம் இந்தியர்களுக்கு இன்னும் உண்டாகவில்லை. அதற்கு முக்கிய காரணம், பயிரிடும் நிலங்கள் ஒரே தாக்காய் இல்லாமல், சிதறியிருப்பதேயாகும். மேலும் பயிரிடும் குடிகளுக்குக் கைம்முதலும் இல்லை. செல்வ நிலை விஷயத்தைப் பார்த்தால், தென்னிந்தியாவில் இயந்

திரங்களை விவசாயத்தில் உபயோகிப்பதினால் உண்டாயிருக்கும் விருத்தி மிகக்கொஞ்சம்." விவசாயத்தொழில் அபிவிருத்திக்காக, இயந்திரசக்தியால் ஓட்டப்படும் கருவிகளை உபயோகிப்பது எனக்குச் சம்மதந்தான். அவைகளை ஆரம்பிக்கத் தேசத்தின் செல்வ நிலைமையும் சரியாய் இருக்கவேண்டும். ஆனால் " இவ்வியந்திரங்களை உபயோகப்படுத்தும்படி உற்சாகம் செய்வது துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கைத்தொழில் விவசாய இலாகாதாரர்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாயிருக்கவேண்டும் " என்கிற சிபார்சை நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால், கைத்தொழில் விசாரணை சங்கத்தார் செய்திருக்கும் மேற்சொன்ன சிபார்சை வைத்துக்கொண்டு தற்காலத்திய பொருளாதார நிலைமையைக் கவனியாமலே கருவிகள் சம்பந்தமான காரியங்களிலும் இயந்திரசாலைகளிலும் தங்களுக்கிருக்கும் ஆசையின் அதிகத்தினால் எப்படியாவது நீராவி இயந்திரங்களை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் வகைகள் இவ்விலாகாதார்களால் தேடப்படும் என்ற பயம் எனக்கிருக்கிறது. இக்காரணங்களைக் கொண்டு இயந்திர சக்தியினால் விவசாயவேலை துவக்க வெகுகாலம் பிடிக்குமாகையால், விவசாய அபிவிருத்திக்காக அனுசரிக்கப்படவேண்டிய வேறு உபாயங்களைக் காட்டிக்கொடுக்கவேண்டியது என் பொறுப்பாகிறது. இவ்வழிகளில் விவசாய சம்பந்தமான கல்வியைப் பரவச்செய்வதே முக்கியமாகும்.

ஆங்கிலேய அரசாட்சியில் நடத்தியிருக்கும் விவசாயத்தொழிலின் சரித்திரத்தை மிஸ்டர் மெக்கன்ன அவர்கள் மேற்சொன்ன நூலில் எழுதியிருக்கிறார்.

இந்தியாவில் எல்லாக் கைத்தொழில்களைக்காட்டிலும் வெகு ஜாஸ்தியாக செய்யப்பட்டு வருகிற தொழில் விவசாயமாகும். ஏறக்குறைய இருபது கோடி ஜனங்கள் அத்தொழிலையாவது அல்லது அதற்குச் சார்பாக இருக்கும் தொழில்களையாவது ஜீவனுதாரமாகக்கொண்டிருக்கிருர்கள். விவசாயத்தொழில் விருத்திக்கும், அவ்விஷயமாய் இருக்கும் குறைகளை விசாரிக்கவும், பஞ்ச சகாயம் செய்யவும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு டைரெக்டரையும் அவருக்குக்கீழ் உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கவேண்டுமென்று 1880-ல் பஞ்ச விசாரணை சங்கத்தார் செய்த சிபார்சுக்கேற்றபடி மேற்சொன்ன இலாகா ஏற்படுத்தப்பட்டது. விவசாய விசாரணைகள் முடியும்வரையில் விவசாய விருத்திக்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை நிறுத்தி வைக்கவேண்டுமென்று 1881-ல் இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு செய்தார்கள். 1889-ம் வருஷம் வரையில் இவ்விஷயமாய் ஒன்றும் செய்யப்படவில்லை. அவ்வருஷக்கடைசியில், இந்தியா மந்திரியார் அரசாங்க விவசாய சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் வோல்கர் என்பவரை இந்தியப்பயிர்த்தொழிலை விருத்திசெய்ய என்ன செய்யலாம் என்று விசாரணைசெய்து சிபார்சுகள் செய்ய நியமித்தார். இந்தியா முழுவதிலும் அவர் பிரயாணஞ் செய்து அநேகருடன் கலந்து பேசியானபிறகு, விவசாய சம்பந்தமான விசாரணைகள் ஒழுங்காய்ச்செய்யப்படவேண்டுமென்றும், அதற்கேற்ற கல்விப் பயிற்சி பரவச்செய்யப்படவேண்டுமென்றும் அவர் சிபார்சு செய்தார். பயிர்த்தொழில் அபிவிருத்திக்கு ஏற்ற அநேக முறைகளையும் விளக்கிக் காட்டியிருக்கிருர். விவசாய

இரசாயன சாஸ்திரி ஒருவரும் அவருக்கு உதவி உத்தியோகஸ்தர் ஒருவரும் 1892-ல் நியமிக்கப்பட்டார்கள். பயிர்த்தொழில் சம்பந்தமானதும் காட்டிலாக்கா சம்பந்தமானதுமான இரசாயன ஆராய்ச்சி செய்து தக்க ஏற்பாடுகள் செய்வது அவர்கள் வேலை. 1901-ல் விவசாய இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவர் நியமனஞ் செய்யப்பட்டார்.

"பயிர்த்தொழிலை விருத்திசெய்து அதன் மூலமாய் இத்தேசத்தின் வருமானத்தை விருத்திசெய்வதே மேற்சொன்ன ஏற்பாடுகளின் நோக்கம். ஆனால் அந்த விருத்திக்காக ஒன்றும் செய்யப்படவில்லை. நிலசாஸனங்களைப் பரிசோதிக்கும் உத்தியோகஸ்தர்களை அதிகரிப்பதும், நில சம்பந்தமான கணக்குகளைத் திரட்டிச்சேர்ப்பதுமே மாகாண இலாகாக்களின் வேலையாயிருந்தது," என்று மிஸ்டர் மெக்கென்ஞ சொல்லுகிறார்.

அமெரிக்காவிலிருக்கும் சிகாகோ பட்டணத்தாராகிய மிஸ்டர் ஹென்ரி பிப்ஸ் என்பவர் நம்முடைய இராஜப்பிரதிநிதிக்கு 30,000 பவுன் நன்கொடை கொடுத்தார். இதைக்கொண்டு பூசா நகரத்தில் 1905-ல் விவசாய ஆராய்ச்சிசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. 1905-06 முதல் இந்தியா கவர்ன்மெண்டாரால் விவசாய வளர்ச்சிக்காக வருஷா வருஷம் இருபது லக்ஷம் ரூபாய் கொடுக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தொகை பிறகு 24 லக்ஷமாக்கப்பட்டது. பயிர்த்தொழில் கல்வி கற்பிக்கும் கலாசாலைகள் பூனா, கான்பூர், சாபோர், நாகப்பூர், லியால்பூர், கோயமுத்தூர் முதலிய விடங்களில் ஏற்படுத்தப்பட்டன. இந்தக் கலாசாலைகள் நல்ல வேலை செய்துகொண்டு வருகின்றன

ஆனால் விவசாயக்கல்விப்பயிற்சி ஜனங்களுக்குள் அதிக மாய்ப் பரவவில்லை. துரைத்தனத்தாரால் செய்யப்பட்டிருக்கும் நீர்ப்பாய்ச்சலுக்கு ஏற்ற வசதிகளால் விவசாயத்தில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திக்காகவும் கோதுமை, பருத்தி இவைகளின் முன்னேற்றத்துக்காவும் இன்னும் மற்ற வழிகளில் செய்திருக்கும் உதவிக்காகவும் நான் துரைத்தனத்தாருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்துறைகளில் எல்லாம் ஏராளமான முன்னேற்றம் இருந்திருக்கிறது. அவைகளைவிட அதிகமான தேர்ச்சிக்கு இடம் உண்டென்றும் அப்படிப்பட்ட தேர்ச்சி அத்தியாவசியமென்றும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நீர்ப்பாய்ச்சலுக்கேற்ற உபகாரங்களை அதிகப்படுத்தவேண்டும். விருத்தி ஒழுங்காயும் சரிவரவும் நடைபெறும்படியான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியது அவசியம். இதில் விவசாயக்கல்வியே முதன்மையான விஷயம் என்று உணர்த்துவது அவசியம்.

## விவசாயக்கல்வி.

1915-ல் இவ்விஷயமாய் மிஸ்டர் மெக்கென்ன எழுதியபோது, அவர் சொன்னதாவது :—

"பயிர்த்தொழிற் கல்வியின் சம்பந்தமாய் எவ்வளவு எழுதப்பட்டிருக்கிறதோ அதைப்போல் விவசாய சம்பந்தமான வேறெந்த விஷயத்தைப்பற்றியும் அவ்வளவு எழுதப்படவில்லை. ஆனால் அதில் வெகு கொஞ்சமே நிறைவேறியிருக்கிறது. அனுபவத்துக்கு எட்டாத நோக்கத்தைப் பின் பற்றி விவசாயத்தில் முயற்சி எடுத்துக் கொள்ளுகிறவர்களுக்கு விவசாயப்படிப்பே அதிகக் கவலையைக்கொடுக்கிறது. இதைப்பற்றி அநேக கூட்டங்

களில் பேசப்பட்டிருக்கின்றது. அநேகர் எழுதியுமிருக்கிறார்கள். அதினால் விளைந்த பயன் வெகுவாய் ஒன்றுமேயில்லை." பயிரிடும் குடிகள் விவசாயத்தின் அபிவிருத்தியிலும் சீர்திருத்தத்திலும் சிரத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய படிப்பு அவர்களுக்குப் புகட்டப்பட்டாலொழிய விவசாய சம்பந்தமாய் யாதொரு விதமான முன்னேற்றமும் ஏற்படாது" என்று 1880-லேயே பஞ்ச விசாரணைச் சங்கத்தார் சொல்லியிருக்கிறார்கள். இதே நோக்கங்கள் 1888-ல் நடந்த விவசாய விசாரணைக் கூட்டத்தில் ஸ்திரப்படுத்தப்பட்டன. பயிர்க் குடிகளுக்குப் பிரதம வித்தியாப்பியாசம் செய்து வைப்பது மிகவும் அவசியம் என்று அச்சங்கத்தார் சொன்னது அவர்கள் செய்திருக்கும் தீர்மானங்கள் எல்லாவற்றிலும் முக்கியமானதும் சிறிதும் பிழையில்லாததுமாகும். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு வேறு சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவை மொத்தத்தில் மிகவும் உபயோகமானவைகளாயிருந்தபோதிலும், பிற்காலத்தில் அதிக குழப்பத்துக்குக் காரணமாயிருந்தன. எப்படியாவது கிராமப் பள்ளிக்கூடங்களில் பயிர்த்தொழில் கற்பிக்கப்படவேண்டுமென்பது சிறிது காலம் முக்கிய நோக்கமாயிருந்தது. அதிர்ஷ்டவசத்தால், அந்த ஏற்பாடு இப்பொழுது ஒழிந்தது. பள்ளிக்கூடங்களில் பயிர்த்தொழிற் கல்வி சொல்லிக்கொடுப்பது முடியாது என்று இப்பொழுது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கிராமப் பள்ளிக்கூடங்களில் படிப்புப் பொதுவாயிருக்கவேண்டுமென்றும், விவசாயக் கல்வி சாஸ்திர சம்பந்தமுடையதாயிருக்கவேண்டும் என்றும் பொதுப்படிப்பில் பயிர்த்தொழிலுக்கேற்ற பாடங்களும் கலந்திருக்கவேண்டும் என்று ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் மாணாக்கர்கள் அக்கம்பக்கங்களின் இயற்கையமைப்பைக் கற்றறியவும், பொருட்களை உற்றுநோக்கி அறியும் சக்தியை விருத்தி செய்யவும் கற்பிக்கப்படவேண்டு

மென்றும் இப்பொழுது கருதப்படுகின்றது. இந்த நோக்கத்துடன் பள்ளிக்கூடப்பாடப்புஸ்தகங்களில் பழக்கமான பொருள்களைப்பற்றிய பொருட்பாடங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பிரகிருதி சாஸ்திரம் கற்பிக்கப்படுகிறது. பள்ளிக்கூடத்தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளைக்கற்பிக்கக்கூடிய உபாத்தியாயர்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. நான் முன்னே சொல்லியுள்ளபடி, விசேஷித்த விதமான விவேகத்தைத் தூண்டுவதினால் இத்தகைய பயிற்சிக்கு இடமுண்டு. பயிற்சியினாலல்லாமல் பொதுவான படிப்பைப் பரவச்செய்வதனால் பிள்ளைகளுடைய இயற்கையான பிரதம வித்தியா பாடசாலைகளில் பொதுக் கல்வி ஸ்திரமான அஸ்திவாரத்தின்மேல் ஸ்தாபிக்கப்படவேண்டியது அத்தியாவசியம். அப்படிச்செய்வதினால் மாணவர்களுக்குப் பொருள்களை உற்றுநோக்கும் சக்தியும், அதிலிருந்து அறிவும் வளர்ச்சியடையும். இவைகள் செய்யப்பட்டால் தங்களைச் சுற்றிலுமுள்ள பொருள்களில் இயல்பாக அவர்களுக்குச் சிரத்தையுண்டாகும்."

"ஆராய்ச்சிக்கேற்ற பொருள்கள் கிடைக்குமுன் பயிர்த்தொழிலைக்கற்பிக்க முயலுதல் தவறாகும். இந்தத் தவறு அத்தொழிலின் விருத்திக்குத் தடையாயிருந்திருக்கிறது. அது பிரதம கல்விக்கு மாத்திரமல்லாமல் கலாசாலைப்படிப்புக்கும் பெருத்த இடையூறாயிருந்திருக்கிறது."

முப்பத்தைந்து வருஷகாலமாய் விசாரணை செய்ததற்கும், விவாதம் செய்ததற்கும், பரீட்சை செய்ததற்கும் நமக்கு உண்டாயிருக்கும் பயன் இது தான்!

இதர நாகரிக நாடுகள் விவசாயக்கல்வி கற்பிக்கும் முறையை மிக்க சொற்ப காலத்திற்குள்ளேயே தீர்

மானித்துக்கொண்டன. அவைகள் அத்தீர்மானத்தின் படி க்ஷேமமடைந்திருக்கின்றன. 1896-ம் வருஷத்திய ரீஸெஸ் கமிட்டியின் ரிபோர்ட்டில் ஸர் ஹொரேஸ் ப்ளங்கெட் ஐரோப்பாவின் வெவ்வேறு தேசங்களில் மேற்சொன்ன வருஷத்திற்கு முன் அந்தந்தத்தேசத்துத் துரைத்தனத்தார் பயிர்த்தொழில், கைத்தொழில் இவைகளின் சம்பந்தமாய் உதவிசெய்துவந்த ஒழுங்குகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். பயிர்த்தொழில் கல்வியிலும் விருத்தியிலும் அப்பொழுது முதல் அந்தத் தேசங்களும், அமெரிக்காவும், ஜப்பானும் அதிக தேர்ச்சியடைந்திருந்தபோதிலும், அந்த அறிக்கை இப்பொழுதும் நமக்குப் பிரயோஜனமுள்ளது. அதைப் படிப்பதினால் அதிக நன்மையும் உண்டு. அவர்கள் அறிக்கையின் 54, 55 பக்கங்களில் ஸர் ஹொரேஸ் ப்ளங்கெட்டும் அவருடைய உடன் அங்கத்தவர்களும் சொல்லுகிற ஒரு விஷயத்தை நான் எடுத்துக் கீழே வரைந்திருக்கிறேன் :—

"பயிர்த்தொழிலுக்கு உதவி செய்யப் பொதுக்கல்வியின் விஷயமாய்த்தான் இராஜாங்கத்தார் முதல் முதல் சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டும். தொழிற் சாஸ்திர அறிவும் பொதுக்கல்வியும் பயிர்த்தொழில் செய்பவர்களின் விருத்திக்கு முக்கிய ஆதாரமென்று எங்கும் சர்வ சம்மதமாய் ஒத்துக்கொள்ளப்படுகிறது. விவசாய சம்பந்தமாயும் இன்னும் இதர கைத்தொழில்களின் சம்பந்தமாயும் உள்ள தொழிற்சாஸ்திரப்படிப்பை ஆதரிக்க வெவ்வேறு தேசங்கள் செலவழித்திருக்கும் ஏராளமான பணம் இதை நிரூபித்துக்காட்டுகிறது. "பயிர்த் தொழிற் கல்வியின் விருத்திக்காகச் செலவழிக்கப் படும் ஒவ்வொரு கில்டரும் (கில்டர் என்பது ஒரு

டச்சு நாணயம்) நூறு மடங்காய் இலாபத்தைக்கொடுக்கிறது" என்று டச்சுக்காரருடைய கைத்தொழில் வியாபார இலாகாத் தலைவரும் பயிர்த்தொழில் சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியுமாகிய எம். மாரே ஆயின்ஸ் என்பவர் சொல்லுகிறார். "பயிர்த்தொழிற் கல்விக்காகச்செலவழிக்கப்படும் ஒவ்வொரு பிராங்கும் ஏராளமான இலாபத்தைக்கொடுக்கும்" என்று பெல்ஜிய தேசத்தின் விவசாய மந்திரி அத்தேசத்து மஹாநாட்டிற்குச் சென்ற வருஷத்தில் அனுப்பிய வருஷ சமாசாரத்தில் சொல்லியிருக்கிறார். "1870-க்குப் பிறகு பிரெஞ்சுக்காரருடைய பயிர்த்தொழிலில் உண்டான விருத்திக்குக் காரணம் அவர்களுடைய பள்ளிக்கூடங்களும், பண்டிதர்களும், சாஸ்திர ஆராய்ச்சி இடங்களும், விவசாயத்தொழில் விஷயங்களைப்படித்துத் தங்கள் நாட்களையெல்லாம் அதற்காகச் செலவழிக்கத்துணைத்தனத்தார் ஆதரவு பெற்ற பெருத்த சாஸ்திரிகளுமேதான்" என்று மிஸ்டர் டிஸ்ஸிரண்ட் சொல்லுகிறார். "டென்மார்க்கில் பயிர்த்தொழில் கல்வியினால் உண்டான பயன்கள் ஏராளமானவை. உலகத்தில் டென்மார்க்கில் உண்டாகும் வெண்ணெய் பேர்பெற்றது. கோபனேகனிலிருந்த பிரிட்டிஷ் உதவி கான்ஸல் 1885-ல் அந்த வெண்ணெயை "மிகவும் கேவலமான" தென்றார். பயிர்த்தொழில் கல்வி அத்தேசத்தில் விருத்தியடைய அடைய அந்நாட்டு வெண்ணெயிலும் அதற்கப்புறம் விர்த்தியுண்டாயிற்று" என்று மிஸ்டர் M. H. ஜெங்கின்ஸ் தொழிற்சாஸ்திரக்கல்வி சம்பந்தமாய் டென்மார்க்கு இராஜாங்க விசாரணை சங்கத்தாருக்குத்தான் எழுதிக்கொடுத்திருக்கும் ரிபோர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்."

அமெரிக்காவில் பயிர்த்தொழிற் கல்வியும் பயிர்த்தொழில் விருத்தியும் முன்னேறிச்சென்ற விதத்தைப்

பற்றியாவது, அவைகளினால் அமெரிக்காவுக்கு உண்டான ஐசுவரியத்தையும் க்ஷேமத்தையும் குறித்தாவது அதிகமாய் இங்கே எடுத்துக்காட்டுவது அநாவசியம். ஆனால் ஜப்பானைப்பற்றி இவ்விடத்தில் சொல்லுகிறேன். ஜப்பானின் பயிர்த்தொழில் விருத்தி நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயம். அநேக வருஷங்களுக்குமுன்னரே, அத்தேசத்தார் மிகவும் உயர்தரமான பயிர்த்தொழிற் கல்வியை ஒழுங்கு செய்துகொண்டார்கள். ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் என்பவர் "ஜப்பானின் பயிர்த்தொழிலைப்பற்றிய குறிப்பு" என்று ஒரு அருமையான நூல் எழுதியிருக்கிறார். அவர் தாம் எழுதிக்கொடுத்த சாக்ஷியப்பத்திரத்துடன் அதையும் இவ்விசாரணைச் சங்கத்திற்கு அனுப்பினார். அதில் 1907-ம் வருஷத்தில் ஜப்பானில் நடந்து வந்ததும் தாம் கண்டதுமான பயிர்த்தொழில் கல்வி முறையை விஸ்தரித்துச்சொல்லியிருக்கிறார். அவ்வொழுங்கை இங்கே எடுத்துரைப்பது அநாவசியம். பயிர்த்தொழிலும், பயிர்த்தொழிலாளிகளும் விருத்தியாகப் பயிரிடுங் குடிகளுக்குச் சாதாரணப்படிப்பும் பயிர்த்தொழில் சாஸ்திரப்படிப்பும் புகட்டச் சீக்கிரத்தில் தக்க ஒழுங்கு செய்யும் அவசியத்தை எடுத்துரைப்பதே என்னுடைய நோக்கம்.

விறகுக்காகவும் மேய்ச்சலுக்காகவும் கூடிய விடங்களில் காடுகளைப் பிரத்தியேகப்படுத்தி வைக்கவேண்டும் என்றும் இன்னும் இதர விஷயங்களைப்பற்றியும் டாக்டர் வால்கர் சிபார்சுகள் செய்திருக்கிறார். அவ்விஷயங்களைப்பற்றி நடவடிக்கைகள் ஒன்றும் இதுவரை

யில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. பயிர்த்தொழில் இலாகாதார் இக்காரியங்களைக்கவனிக்கவேண்டுமென்று நான் சிபார்சு செய்கிறேன். பொது ஜனங்களுக்கும், விசேஷமாகப்பயிரிடுங்குடிகளுக்கும், விறகு, கால் நடைகளின் தீனி முதலியவைகளின் அதிக விலைகளினால் பெருத்த கஷ்டமும் நஷ்டமும் உண்டாகின்றன என்பதும் எங்களுக்கு விசேஷமாய் எடுத்துக்காட்டப்பட்டது. சென்ற வருஷத்தில் அம்மாகாணத்தின் உபயோகத்திற்காகப் பஞ்சாப் மாகாணத்துக் காட்டிலாகாதார் 40,000 ஏகர் நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சிச் செடிகளை நட்டிருப்பதாக எங்களுக்குத் தெரியவந்தது.

ஆகாரப்பொருள்களின் விலைகள் அதிகமாய் உயர்ந்திருக்கின்றன. அதனால் ஜனங்களில் பெரும்பாலோருக்குப் பாடுகள் அதிகம். ஆகையால் நம்முடைய ஆகாரத்துக்குவேண்டிய தானியங்களை அதிகமாய் விளைவிக்கும் விஷயம் மிகவும் முக்கியமாயிருக்கிறது. ராய் கங்காராம் பகதூர் விசாரணைச் சங்கத்திற்கு இந்தியாவின் பயிர்த்தொழில் விஷயங்களைப்பற்றி ஒரு சிறு புத்தகம் எழுதியனுப்பியிருக்கிறார். அதில் "சாதாரண வருஷத்தில் நம்முடைய ஆகாரத்துக்கு வேண்டிய அளவு தானியங்கள் விளைவிக்கப்படுகின்றன. அடுத்த வருஷத்தில் மழையில்லாததினால் கஷ்டம் நேரிட்டால் அதைத் தடுக்க மிகுதியான தானியம் இல்லை" என்று அவர் சொல்லுகிறார். இந்தியாவில் ஏகர் ஒன்றுக்கு விளையும் தானியம் இதரதேசங்களில் விளையும் தானியத்தின் அளவைவிட மிகவும் குறைவாயிருக்கிறதென்பதும் நமக்குத் தெரிந்திருக்கிறது. ராய் கங்காராம் பகதூர்

தம்முடைய புத்தகத்தின் 12-வது பக்கத்தில் எட்டாவது அட்டவணையில் இவ்விஷயமாய்க்கொடுத்திருக்கிற கணக்கு நமக்கு வெகு உபயோகமாயிருக்கிறது. பம்பாயிலும் ஐக்கிய மாகாணங்களிலும் ஒவ்வொரு ஏகரிலும் விளைந்த கோதுமையின் சராசரி எடை 1250 ராத்தல்; ஐக்கிய ஆங்கிலேய இராஜ்ஜியத்தில் விளைந்தது 1973 ராத்தல் ; பெல்ஜியத்தில், 2174 ராத்தல்; டென்மார்க்கில் 2526 ராத்தல்; ஸ்விட்ஸர்லண்டில் 1858 ராத்தல்; ஐக்கிய மாகாணங்களில் விளைந்த பார்லி அரிசியின் சராசரி எடை 1300 ராத்தல் ; ஆங்கிலேய ஐக்கிய இராஜ்ஜியத்தில் 2105 ராத்தல்; பெல்ஜியத்தில், 2953 ராத்தல் ; டென்மார்க்கில், 2456 ராத்தல்; ஸ்விட்ஸர்லண்டில், 1940 ராத்தல்; இந்தியாவின் வடமேற்கு பாகத்தில் ஒரு ஏகரில் விளையும் சோளத்தின் சராசரி எடை 1356 ராத்தல் ; கனடாவில் 3487 ராத்தல்; நீயூஜீலண்டில், 3191 ராத்தல் ; ஸ்விட்ஸர்லண்டில் 2198 ராத்தல். இந்தியாவில் ஒவ்வொரு ஏகரிலும் சராசரியில் விளையும் நெல் ஜப்பானில் விளையும் நெல்லில் பாதிதான். நாம் விருத்திசெய்யக்கூடிய துறைகள் அதிகமாயிருக்கின்றன. அப்படி விருத்தியடைய உபயோகமாயுள்ள முறைகள் அநுஷ்டிக்கப்படவேண்டும் என்னும் வேண்டுகோள் அவசரமாயும் இடைவிடாமலுமிருக்கிறது. இது இந்தியாவையும் பிரிட்டிஷ் இராஜாங்கத்தையும் சார்ந்ததாயிருக்கிறது. ஆகையால் இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டார் ஆகிய இருவருடைய அதிகாரத்திலுமிருக்கும் பயிர்த்தொழில் இலாகாதார்கள் இவ்விஷயங்களைப்பற்றி உடனே

தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியம் என்று நான் திடமாய்ச் சிபார்சு செய்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில், பயிர்த்தொழில் அபிவிருத்திக்காக அதிகமான பண உதவி செய்யவேண்டியது அவசிய மென்பதை எடுத்துக்காட்ட எனக்கு விருப்பம். 1882-லேயே, இதற்காகப் பயிர்த்தொழில் சம்பந்தமாய்ப் பாங்குகள் ஏற்படுத்துவது நலம் என்று நன்கு மதிக்கப்பட்ட இந்தியாவின் சிநேகிதரான ஸர் வில்லியம் வெட்டர்பரன் என்பவர் சிபார்சு செய்தார். இந்தியன் நாஷனல் காங்கிரஸாரும் இவ்விஷயத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். ஆனால் இவ்விஷயமாய் இதுவரையில் ஒன்றும் செய்யப்படவில்லை. இந்தியாவில் பயிர்த்தொழிலுக்கு உதவி செய்யும் ஒழுங்கைச் சீர்திருத்துவதின் விஷயமாய் மிஸ்டர் ரானடே 1891-ல் பூனாவில் நடந்த முதல் கைத்தொழில் மகாநாட்டில் ஒரு வியாசம் எழுதிப் படித்தார். (இது "ரானடேயின் வியாசங்கள்" என்னும் நூலின் 41 முதல் 64 வரையிலுள்ள பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றது.) அதில் குறிக்கப்பட்டிருக்கும் அருமையான விஷயங்களைக் கவனிப்பது நலமாயிருக்கும். இதில் விவசாய பாங்குகள் ஏற்படுத்துவதற்கான தகுந்த காரணங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. அவர் சொல்லியிருக்கும் ஊர்கள் மாத்திரமல்ல; ஜப்பான் தேசமும் அவ்விதமான வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறதென்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"(ஜப்பானில்) விவசாயத்திற்குப் பண உதவிசெய்

வதற்காகப் பொறுத்துக் கொடுக்கப்படக்கூடிய கடன்கள், சீக்கிரத்தில் கொடுக்கப்படவேண்டிய கடன்கள் என்ற இரண்டு விதமான வகைகள் உண்டு. பயிரிடும் நிலங்களை வாங்கவும், அவைகளை விருத்திசெய்யவும், இன்னும் இதர ஸ்திரமான வளர்ச்சிக்காகவும் கொடுக்கப்படும் கடன்கள் ஐம்பது வருஷங்களிலேயாவது அல்லது அதற்குள்ளேயாவது திரும்பக்கொடுக்கப்படலாம். இவைதான் பொறுத்துக் கொடுக்கப்படக்கூடிய கடன்கள். நிலங்களைச் செழிப்பிக்க எரு வாங்கவாவது, உழவிற்குரிய கருவிகளை வாங்கவாவது, கால் நடைகளின் தீனிக்கு ஏற்பாடு செய்யவாவது வாங்கப்படும் கடன் சீக்கிரத்தில் அடைக்கவேண்டிய கடன். சாதாரணமாய் ஐந்து வருஷங்களிலேனும் அதற்குள்ளாகவேனும் இந்தக் கடன்களை அடைக்கப் பாங்குகள் ஒத்துக்கொள்ளுகின்றன. இவ்விதமான பாங்குகளுடன் இதர பண உதவி செய்யும் சங்கங்களும் இருக்கின்றன" என்று 1917-ம் வருஷத்திய ஜப்பான் வருஷப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

## கைத்தொழில் சாஸ்திரக் கல்வி.

1851-ல் பேர்போன சர்வதேசப் பொருட்காட்சி லண்டனில் வைக்கப்பட்டது. அது முதல்தான் சாஸ்திர சம்பந்தமான கல்வி கற்பிக்கத் தற்கால ஒழுங்கு செய்யப்பட்டது. பொதுவாய், ஆங்கிலேயருக்குச் சாஸ்திர சம்பந்தமான கல்வியில் நம்பிக்கையில்லை. அவர்களுக்கு அதில் நம்பிக்கை உண்டாக்க வெகு பிரயாசைப்படவேண்டியிருந்தது. "ஒழுங்காய் ஆங்கிலேயருக்குச் சாஸ்திரக் கல்வி கற்பிக்கு முறை" என்று மிஸ்டர் J. ஸ்காட் ரஸ்ஸல் என்பவர் 1869-ல் ஒரு நூ[illegible] பிரசுரித்தார். அவரால்தான் இவ்விஷயத்தில்

முயற்சி செய்யப்பட்டது. இதில் மாணவர்களுக்குப் புகட்டப்படும் கல்வி பொதுவாயும் விசேஷித்துமிருக்க வேண்டுமென்பதை நிரூபித்து, அவர் பின்வருமாறு கூறுகிறார்:—

"ஒரு தேசத்தார் தங்கள் ஜனங்களுக்குப் பொதுக் கல்வி கற்பிக்கச் சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும் அங்ஙனம் செய்து ஜனங்களின் அறிவை அதிகப்படுத்தவேண்டும். அதற்குப் பிறகு அவரவர் தொழிலுக்கேற்ற உயர்தர சாஸ்திரத் தொழிற் பயிற்சியும் செய்விக்கவேண்டும். இங்ஙனம் இவைகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரித்திருக்கின்றனவோ அதற்கு அனுகுணமாகத்தான் அவர்களின் சாமான்கள் இதர தேசங்களில் விருப்பத்துடன் வாங்கப்படும். அதாவது, அதன் தேசத்து ஜனங்களுக்குப் புகட்டப்படும் கைத்தொழில் படிப்பு எப்படி மேன்மை பெற்றிருக்கிறதோ அதைப்போலத்தான் இத்தேசத்து வேலைகளும் மேன்மை பெற்றிருக்கும். நான் சொல்வதெல்லாம் மறுக்கப்படாத ஒரு நியாயமாய்த் தோன்றலாம். எனக்கும் அது அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் நான் அந்த விஷயத்தைப்பற்றி முற்றிலும் வேறு விதமாய்ப் பரிசீலனை செய்யவேண்டியிருப்பதால் படிப்பவர்கள் என்மேல் ஆயாசங் கொள்ளக்கூடாது. ஆங்கிலேயருக்குச் சாஸ்திரார்த்தமான கல்வியில் நம்பிக்கை கிடையாது. ஒரு தேசத்தாருக்கு அந்தகைய கல்வி கற்பிக்கும் தேச ஒழுங்கின் பிரயோஜனத்தைபற்றியாவது துரைத்தனத்தாருக்கும் சட்டநிர்வாக சபைகளுக்கும் ஜனங்களில் படிப்பாளிகளுக்கும் ஜனசமூகத்திற்கு அறிவைப் புகட்டவேண்டிய கடமையைப் பற்றியாவது உள்ள நம்பிக்கை இன்னும் குறைவு. இவ்விஷயங்கள் இப்படியிருப்பதால் ஒரு பண்டிதனோ, காரியங்களை உற்றுநோக்கி அறியும் சக்தி

யுள்ள பிரயாணியோ, தர்க்கமில்லாமல் நியாயமென்று ஒத்துக்கொள்ளக்கூடியதை உண்மையென்று ரூபிக்க வேண்டியதாயிருக்கிறது. சாஸ்திரப் படிப்பு ஒரு தேசத்தாருக்குத் தேச சம்பந்தமாயும் வியாபார சம்பந்தமாயும் நன்மையை விளைவித்திருக்கிறதென்றும், அப்படிப்பட்ட படிப்பில்லாத தேசங்களில் அதனால் அந்நாட்டினருக்குச் செல்வ நஷ்டமும், அதை நீடித்த விதமாய் அசட்டை செய்வதனால் ஜன ஐக்கியத்திற்கு அபாயமும் உண்டாகின்றன என்று காட்டுவதும் இவ்வதிகாரத்தின் கருத்து.

"சில வருஷங்களாக அநேக பகிரங்க சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன. இவைகள் பிரிட்டிஷ் ஜாதியாரை விழித்துக்கொள்ளச் செய்யக் காரணமாயிருந்தன. தற்காலத் கைத்தொழில்களின் ஒழுங்கிற்கு ஆதாரமான வழிவகைகள் சில கற்பனாசக்தியுள்ள புத்திமான்களால் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளைக் கொண்டு அவர்கள் ஐம்பது வருஷகாலமாய் அநேக நன்மைகளைப் பெற்றுவந்திருக்கிறார்கள். வெகுகாலமாய் வெட்டியெடுக்கப்படாமல் பூமிக்குள்ளேயே இருந்த ஏராளமான நிலக்கரியும் இரும்பும் இப்போது தெய்வவசத்தால் வெளிக்கிளப்பப்பட்டன. கைத்தொழில்கள் முன்னேற்ற மடைந்திருக்கும் இந்த நூற்றாண்டில் அவைகளை உபயோகப்படுத்துகிறவர்களுக்குப் பிரயோஜனமாயும், உபயோகப்படுத்தாதவர்களுக்குப் பிரயோஜன மில்லாமலுமிருந்தன. மனிதன் தன்னுடைய புத்தியினாலும் தேக சிரமத்தினாலும் செய்ய வேண்டிய கைத்தொழில்களை நிலக்கரியையும் இரும்பையும் கொண்டு செய்துகொள்ளலாமென்று சில மேதாவிகளால் கண்டுபிடிக்கப்பட்டதனால், இரும்பு, நிலக்கரி, இவைகளை உபயோகிக்கவேண்டிய முறைகளை அறிந்த இஞ்சினீயர்கள் இல்லாத மற்றத் தேசத்தாரைவிடத் தாங்கள் புத்தியிலும் நாகரிகத்திலும் தேர்ந்தவர்க

ளென்று தங்களை ஆங்கிலேயர்கள் நினைக்க ஆரம்பித்தார்கள். ஆங்கிலேயரை இந்தச் சொப்பனத்திலிருந்து எழுப்ப ஐம்பது வருஷமாய் ஒன்றும் சம்பவிக்கவில்லை. இந்த ஐம்பது வருஷங்களிலும் ஆங்கிலேய இஞ்சினீயர்களுடைய வேலைத்திறமும் ஆங்கிலேய இரும்பும் நிலக்கரியும் மிகுந்த புகழ்பெற்றிருந்தன. அவைகளுக்காக உலகத்தார் ஏராளமான பணமும் கொடுத்து வந்தார்கள்.

"பதினெட்டு வருஷங்களுக்கு முன் புத்தியிலும் யுக்தியிலும் உலகத்தில் நாகரிகமடைந்த தேசத்தாருக்குள் போட்டிப் பரீட்சை ஏற்பட்டது. அது 1851-ல் லண்டனில் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே எல்லாத் தேசத்தாருடைய கைத்தொழில்களும் விளைபொருள்களுமடங்கிய பேர்போன சர்வதேசப் பொருட்காட்சி. இந்தப் பெரிய பள்ளிக்கூடத்தில் தான் ஐரோப்பாவில் நாகரிகமடைந்த ஜாதியாருக்குச் சாஸ்திர சம்பந்தமான கல்வியைப்பற்றிய முதல்பாடம் கற்பிக்கப்பட்டது. ஆங்கிலேயருக்குப் பாரம்பரியமான மேன்மை எந்தெந்த விஷயங்களில் இருந்தனவென்று இதர தேசத்தார் கண்டுகொண்டார்கள்; ஆங்கிலேயரும், மற்றத் தேசத்தாரைவிடத் தங்களிடம் குறைவாயிருந்த விஷயங்களை அதில் கண்டுகொண்டார்கள்."

1851-ம் வருஷம் வரையிலும் அதற்கு அநேக வருஷங்களுக்குப் பின்னும் இங்கிலாந்து சரக்குகள் செய்வதிலும் கட்டிடத் திறமையிலும் முதன்மையான ஸ்தானம் வகித்துவந்தது. ஆனால் இதர சாஸ்திர வேலைகளில் அது அவ்வளவு தேறியிருக்கவில்லை. உதாரணமாக:—

"இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் சீனதேசத்தில் செய்யப்பட்ட நீலவர்ணப் பீங்கான் தட்டுகளும்

கோப்பைகளும், சிறிய தட்டுகளும், கூஜாக்களென்று சொல்லப்பட்ட விகாரமான ஸ்வரூபங்களுடன் வார்ப் படம் செய்யப்பட்ட கண்ணாடி சாமான்களுமே ஆங்கி லேயர்களால் 1851-ம் வருஷத்தில் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அவைகளைப்பார்க்க எல்லா ஆங்கிலேயர்களும் அருவருப்படைந்தார்கள். இதர தேசத்தார் உபயோகமில்லாத களிமண்ணினாலும், சக்கி முக்கிக் கல்லினாலும் செய்துகொண்டுவந்திருந்த அழகு வாய்ந்த சாமான்களைப் பார்த்து அவர்கள் அதி சயித்தார்கள். 1851-ல் நடந்த முதல் பொருள்காட் சிக்கும் 1855-ல் நடந்த இரண்டாவது பொருட்காட் சிக்கும் இடையிலுள்ள நான்கு வருஷகாலத்தை ஆங்கி லேயர்கள் தங்கள் தேசத்தின் கைத்தொழிலாளிகளுக்கு இதரநாட்டாரில் முதன்மையான வேலைக்காரர்களால் செய்யப்பட்ட மாதிரிச்சாமான்களைவாங்கிக்கொடுப்பதி லும், கண்ணாடி சாமான்களும் மண்சாமான்களும்செய் யும் இயந்திரசாலைகளில் மாதிரி உருவங்கள் செய்யப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிப்பதிலும், சித்திரவேலை செய் யக் கற்றுக்கொடுக்க உபாத்தியாயர்களைப் பழக்குவதி லும் உபயோகித்துவந்தார்கள். புதிதாய் ஏற்படுத்தப் பட்ட இப்பள்ளிக்கூடங்கள் 1855-ல் நல்ல பயனைக் கொடுத்தன. அந்தவருஷத்தில் பாரிஸில் இரண்டா வது பொருட்காட்சி வைக்கப்பட்டது. அக்காலத்தில் மண்பாத்திர சாமான்களிலும் கண்ணாடியிலும் இங்கி லாந்து மற்றெந்ததேசத்தைவிடவும் தாழ்ந்திருக்க வில்லை" என்று மிஸ்டர் J. ஸ்காட் ரஸ்ஸல் சொல்லு கிறார்.

ஆனால், 1851-ம் வருஷத்திய பொருட்காட்சியில் இரும்பினாலும் எஃகினாலும் செய்யப்பட்ட ஆங்கிலேய வஸ்துக்கள், இயந்திரங்கள், போக்குவரவுக்குரிய சாத னங்கள் முதலிய இவைகளைவிடத் தங்களால் செய்

யப்பட்ட அதே சாமான்கள் எவ்வளவு தாழ்ந்தவை யென்று ஜெர்மானியரும் பிரஞ்சுக்காரரும் கண்டு கொண்டார்கள். 1855-ம் வருஷத்தில் காட்சி நடந்த போது இரும்பினாலும் எஃகினாலும் இன்னும் இதர உலோகங்களினாலும் செய்யப்பட்ட சாமான்களில் ஆங்கிலேயர்களுக்கு மிக்க தேர்ச்சி உண்டாயிருந்த தாகத் தெரியவந்தது. அவர்கள் ஒவ்வொரு தலை நகரிலும், பெரிய பட்டணத்திலும், கைத்தொழில்களுக்கு முதன்மை யான இடங்களிலும், உபாத்தியாயர்களையும் அந்தந்தத் தொழிலுக்குரியவரையும் படிப்பிக்கவும், மேஸ்திரிகளை யும் திறமையுள்ள வேலைக்காரர்களையும் பழக்கவும், சிற்றாள்களுக்குத் தொழில் கற்பிக்கவும் பள்ளிக்கூடங்களை ஏற்கெனவே ஸ்தாபித்திருந்தார்கள்."

1867-ல் நாலாவது பொருட்காட்சி பாரிஸில் நடந் தது. அது எல்லா நாட்டாருக்கும், விசேஷமாய் இங் கிலாந்துக்கும், முடிவான பாடம் கற்றுக்கொடுத்தது.

"அந்தக்காட்சி நம்மைத் திடீரென்று தட்டி யெழுப் பிக் கலக்கியது. சில விஷயத்தில் மாத்திரமன்று; எந்தெந்த விஷயங்களில் நாம் மேலானவர்களென்று பெருமை பாராட்டிக்கொண்டிருந்தோமோ அவ்விஷ யங்களிலெல்லாம், ஒரு தேசத்தார் இல்லாமல்போனால் மற்றொரு தேசத்தார் நமக்குச் சமமாயிருந்தார்கள் என்பது மாத்திரமல்லாமல் நம்மைவிட அதிகமா யிருந்தார்கள் என்றும் நமக்குத் தெரியவந்தது. இங்கி லாந்து தான் ஆலசியமா யிருந்துவிட்டதாக அறிந்து கொண்டது. இவர்கள் இப்படியிருக்க, 1851-க்கும் 1867-க்கும் மத்தியில் இதர நாடுகளில் விழிப்பும் தேர்ச்சியுமுள்ள தொழிலாளர்க் கூட்டம் ஏற்பட்டு விட்டது" என்று மிஸ்டர் ஸ்காட் ரஸ்ஸல் சொல்லு கிறார்.

பாரிஸ் பொருட்காட்சிக்காக நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்களும், கவர்ன்மெண்டு ரிபோர்ட்டர்களும் தங்களுடைய அறிக்கையை அனுப்பினார்கள். இந்த ரிபோர்ட்டு வந்தபோது, ஆங்கிலேயக்கல்விப் பயிற்சியின் ஒழுங்கு குறைவுள்ளதாவென்று விசாரிக்கவும், கைத்தொழில் திறமையில் ஆங்கிலேயர் மற்ற ஜாதியாருக்குத் தாழ்ந்திருப்பது உண்மையா அல்லது வீண் தோற்றமா என்று அறிந்துகொள்ளவும் விசாரணைகர்த்தா ஒருவர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டார். பார்லிமெண்டு அங்கத்தினரான மிஸ்டர் ஸாமியுல்ஸன் என்பவர் பிரான்சிலும், பெல்ஜியத்திலும், ஜெர்மனியிலும், இங்கிலாந்துக்குப் போட்டியாயிருந்த பேர்போன கைத்தொழில்சாலைகளுக்குப் போய்ப் பரிசோதனை செய்து வந்தார். "இந்தத் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் எல்லா அந்தஸ்துள்ளவர்களும் நம்மவர்களை விட அதிகமாய்த் தேர்ந்திருப்பதைக் கண்டார். தொழிலாளிகள் படிப்பில் அதிகமாய்த்தேர்ந்திருந்தார்கள். மேஸ்திரிகளும் மானேஜர்களும் உயர்தரப் படிப்புள்ளவர்களாயிருந்தார்கள். சொந்தக்காரர்கள் தேர்ச்சியடைந்தவர்களாயும் விஷயங்கள் தெரிந்தவர்களாயும் சாஸ்திரக் கல்வியுள்ளவர்களாயுமிருந்தார்கள் என்பதையும் அவர் அறிந்துகொண்டார்" என்று மிஸ்டர் ரஸ்ஸல் எழுதியிருக்கிறார். அவர் பரிசோதனையில் கண்ட விஷயங்களை அடியிற்கண்டவாறு மிஸ்டர் ரஸ்ஸல் சுருக்கிச்சொல்லுகிறார் :—

"ஐரோப்பா கண்டத்தின் கல்வி அக்கண்டத்தின் கைத்தொழில்களின் விஷயத்தில் எவ்வளவு உபயோகமாயிருந்ததென்பதைச் சரியான விதமாய் நிதானிக்கக்

கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை. அநேக வியாபாரங்களில் அதிதீவரமான அபிவிர்த்திக்கு அவைகளை நடத்துவோர்களுடைய முதிர்ந்த சாஸ்திர அறிவும், கைத்தொழில்கள் சிலவற்றில் தொழிலாளிகளுக்குக் கிடைத்திருந்த விருத்தியடைந்த பிரதமக்கல்வியும் மிகுந்த உதவியாயிருந்திருக்கின்றன வென்பதை மறுக்கமுடியாது. நம்முடைய கைத்தொழிலாளிகளுடைய கல்வி அறிவு மிகச்சொற்பம். நம்முடைய பயிரிடுங்குடிகளுக்கு எழுதப்படிக்கத்தெரியாது. இப்படியிருப்பதினால் நம்முடைய ஜனங்களுக்கு இயற்கையாய் இருக்கும் விசேஷித்த திறமைகளைத்தொழிலாளிகளாவது பயிரிடுங்குடிகளாவது வெளிக்குக்கொண்டுவர முடியவில்லை. கீழ்த்தரமான கைத்தொழிலாளர் வகுப்பாரிலிருந்து தெரிந்தெடுக்கப்படும் மேஸ்திரிகள் தங்களுடைய இளம்பிராயத்துக் கல்வி அறிவின் குறைவுகளைத் திருத்திக்கொள்ளப் போதுமான சமயங்கள் கிடைப்பதில்லை. புதிதாய்த் துவக்கிச்செய்யப்படும் எந்தவேலையிலும் அவைகளை மேல்விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்குச் சரியான சாஸ்திரப்பயிற்சி இல்லாததினால் அவர்கள் அவ்வேலையைச்செய்யவேண்டிய முறைகளைப் பல தடவைகளில் தவறிப்போனபிறகு அனுபவத்தில் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. பெரிய கைத்தொழில்களை நடத்துபவர்களுடைய பிள்ளைகள் தங்களுடைய தகப்பன்மார்கள் செய்துவரும் கைத்தொழில்கள் செல்வமும் படிப்பும் நிறைந்த தங்களைப்போன்றவர்கள் அந்தஸ்துக்குத் தகுதியற்றவைகளென்று அவைகளை அலட்சியஞ்செய்கிறார்கள். அல்லது மனிதர்களுடைய குறைகளை நீக்க இயற்கை விதிகளை எப்படி உபயோகிக்கலாம் என்று காட்டக் கைத்தொழில்கள் பிரயோஜனமாயிருக்கின்றன என்பதை மறந்து, தங்களுக்கு ஏற்கெனவே இருக்கும் ஏராளமான தனத்தை எப்படி அதிகப்படுத்தலாமென்ற

நோக்கத்தோடாவது அல்லது வேறொரு விதமான அலுவ்லும் இல்லாமலிருப்பதினாலாவது அத்தொழில்களில் அவர்கள் வந்துசேருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையினால் உண்டாகும் தீமைகளை நம்முடைய இராஜாங்க மந்திரிகள் மாத்திரமன்றி ஜனங்களும் சீக்கிரமாய்த்தெரிந்துகொண்டுவருகிறார்கள். வியாதி இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளப்பட்டால் அதற்குத்தகுந்த பரிகாரம் சீக்கிரத்திலேயே ஏற்பட்டுவிடும்."

அவ்விசாரணை கர்த்தா கலந்து பேசிய மத்தியஸ்தர்களில் ஒருவராகிய மிஸ்டர் மண்டெல்லாவின் கீழ்க் குறிக்கப்பட்ட பதில், விசாரணை செய்யப்பட்ட எல்லாருடைய அபிப்பிராயத்தையும் வெளியிடுகிறது :—

"அந்நிய நாட்டுத் துரைத்தனத்தார் தங்கள் தொழிலாளிகளின் திறமையை அதிகரிக்க வெகு ஜாக்கிரதையாய்ச் செய்துவரும் ஏற்பாடுகளின் காரணமாக ஆங்கிலேயத்தொழிலாளிகள் படிப்படியாய் க்ஷீணித்து வருகிறார்கள்.......... ஜெர்மனியில் அந்நாட்டாரே கல்விப்பயிற்சிக்காக ஓர் ஒழுங்கு செய்திருக்கிறார்கள். அதன்படி ஒவ்வொரு குடியானவனும் தன் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டியது அவசியம். பிறகு எந்தெந்தக் கைத்தொழில் வம்சத்தில் அப்பிள்ளைகள் பிறந்தனவோ அந்தந்தத் தொழிலுக்கேற்ற சாஸ்திரக்கைத்தொழில் பயிற்சி அடைய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கைத்தொழில்களின் போட்டியில் நம்முடைய திறமையைக் காத்துக்கொள்ள வேண்டுமானால், மேற்சொன்ன ஏற்பாட்டைப்போல் நமக்கும் ஓர் ஒழுங்கு இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் இப்போது அனுஷ்டிக்கப்பட்டுவரும் சுயேச்சாப்படிப்பு ஒழுங்கையே கையாண்டுவந்தால் நாம் தோல்வி அடைவது நிச்சயம் பல தலைமுறைகள் கழிந்தும் அறியாமையும், சோம்பலும் வறுமையும் குற்றங்

களூம் நிறைந்த ஜனங்களோடு நாம் மன்றாடவேண்டியி ருக்கும். ஆனால் கட்டாயமாய் எல்லாரும் படிப்பிக்கப் படவேண்டும் என்கிற ஒழுங்கை உண்டாக்கி அதோடு கைத்தொழில்களிலும் சித்திரவேலைகளிலும் பழக்கக் கல்வி இருக்குமானால், இருபது வருஷத்திற்குள்ளாக, இங் கிலாந்தில் உலகத்திலுள்ள எல்லாத்தேசத்தாரைக் காட்டி லும் மிகவும் தேர்ந்த புத்திக்கூர்மையும் கற்பனாசக்தி யும் நிறைந்துள்ள தொழிலாளிகள் ஏற்பட்டு விடுவார்கள்.''

(மேற்சொன்னவைகளிலெல்லாம் தடித்த எழுத்தில் போட்டிருப்பவை நான் கேட்டுக்கொண்டதன்படி.)

ஆங்கிலேயர்களும், ஆங்கிலேயப் பார்லிமெண்டாரும் மேற்சொன்ன அபிப்பிராயம் எவ்வளவு உசிதமான தென்று அறிந்துகொண்டார்கள். 1870-ல் பிரதம வித்தியா சட்டம் நிர்மாணம் செய்யப்பட்டது. அநேக கோடி பவுன்கள் ஒவ்வொரு வருஷமும் அதற்காகச் செலவழிக்கப்படவேண்டுமென்று ஒத்துக்கொள்ளப்பட் டது. பிரதம வித்தியாப்பியாசம் கட்டாயமாக்கப் பட்டது. இதற்கு உதவியாகக் கைத்தொழிற் கல்வி யும் சாஸ்திரக்கல்வியும் கற்பிக்கவேண்டிய ஒழுங்கு மட்டும் தாமதித்துத்தான் அநுசரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு கைத்தொழிற் கல்வியும் சாஸ்திரக் கல்வியும் தங்களுடைய பள்ளிக்கூடங்களிலும், கலா சாலைகளிலும், சர்வகலாசாலைகளிலும், கற்பிக்க ஆங் கிலேயர் ஏராளமான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். 1860-ம் வருஷம் முதல் இத்தகைய சர்வகலாசாலை கள் ஒன்பதிலிருந்து பதினெட்டாயின. இந்த விஷ யந்தான் இங்கிலாந்தின் மேன்மையான நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ளவும், கைத்தொழில்களில் உன்

னத ஸ்திதியை அடையவும் காரணமாயிருந்தது. இந்த யுத்தத்தில் இங்கிலாந்து நன்றாய்ப் போர்செய்வதற்கு உதவியாயிருந்ததும் மேற்சொன்ன விஷயந்தான். சுவாதீனத்தை விரும்பும் ஒவ்வொருவரும் சுயாதீனத்தை நிலைநிறுத்த அமெரிக்க ஐக்கிய மாகாணத்தார் பேருதவிசெய்துவருவதற்காகச் சந்தோஷிக்க வேண்டும். அப்படியிருந்தபோதிலும், யுத்தத்திற்கு மூன் இங்கிலாந்து ஆயத்தமாயில்லாமலிருந்தாலும், பிரிட்டிஷ் பிரெஞ்சு தேசத்தாருடைய சாதுர்யமும் கைத்தொழில் திறமையும் தைரியமும் ஜெர்மானியரை ஏமாந்து போகும்படி செய்யவும், முடிவாக, நேசக்கக்ஷியார் பூரண ஜயத்தைப் பெறச்செய்யவும் காரணமென்பது நியாயமான வார்த்தை. யுத்தத்திற்குப் பிறகு அனுசரிக்கவேண்டிய வியாபாரக் கைத்தொழில் ஒழுங்குக்காக ஏற்பட்டிருக்கும் கமிட்டியைச் சார்ந்த இலாகா உட் கமிட்டிகளின் அறிக்கைகளிலிருந்து யுத்தத்துக்குப் பிறகும் இங்கிலாந்து கைத்தொழிலில் தலைமை பெற்றிருக்கவேண்டுமானால் பிரதமக் கல்வியிலும் மத்தியதரக் கல்வியிலும் கைத்தொழில் கற்றுக்கொள்ள விரும்புகிற விஷயத்திலும் பெரிய மாறுதல்கள் உடனே உண்டாகவேண்டும் என்று அவ்வூர் புத்திமான்களும் அனுபவமுள்ளவர்களும் சொல்லுவதாகத் தெரியவருகிறது.

இங்கிலாந்தில் பொதுக் கல்வியின் விஷயமாயும் கைத்தொழில் சாஸ்திரக் கல்வியின் விஷயமாயும் உண்டான அபிவிருத்தியின் சரித்திரத்தை விளக்கமாய் எடுத்துக்காட்டியிருக்கிறேன். அது நமக்கு ஒரு பெரிய பாடத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கத்

தக்கதாயிருக்கிறது. அநேக விஷயங்களில் நம்முடைய நாட்டுக் கல்வி 1869-ல் இங்கிலாந்திலிருந்த கல்வியைப்போல் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறது. அக்காலத்தில் அதை விருத்திசெய்ய மிஸ்டர் மண்டெல்லாவும், மிஸ்டர் ஸாமியுல்ஸனும் காட்டிய வழிதான் நமக்கும் சரியான வழி யென்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தியாவின் க்ஷேமத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நம்முடைய ஆங்கிலேய சகோதரர்கள், பிரதமகல்வி அவசியமென்று கண்டபோது, தங்கள் தேசத்தில் அதைப் பரவச் செய்ததைப் போலவே, நம்முடைய நாட்டிலும் பரவச்செய்யாமல் விட்டுவிட்டது இந்தியாவின் துர் அதிர்ஷ்டந்தான். அப்படிச் செய்யப்பட்டிருந்தால், இப்போதிருப்பது போல் இந்தியர் மற்றத் தேசத்தாரைவிடத் தாழ்ந்த நிலைமையில் இருக்கமாட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் சரியான ஒழுங்குகள் செய்வதினால் கடந்த காலத்தில் செய்யத்தவறிப் போனதை இப்போது சரிப்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்கு இடையில் ஏற்பட்டிருக்கும் பெரிய மாறுதல்களினால் அப்படிப்பட்ட ஒழுங்குகளின் ஆவசியகம் அதிகரித்திருக்கிறது. வெகு காலமாய் நடந்துகொண்டுவரும் வியாபாரச் சண்டை யுத்தத்திற்குப் பிறகு இன்னும் பிரபலமாயிருக்கும். அதனால் கைத்தொழில்களை விசாலமான சாஸ்திரக் கல்வியினால் விருத்தி செய்திருக்கிற இதர தேசத்தாருடைய போட்டியால் இந்தியாவுக்கு அதிக இடையூறு ஏற்படும். இந்த ஜாபிதாவில், ஐரோப்பா, அமெரிக்கா தேசத்தார் மாத்திரமன்றி, ஜப்பான் நாட்டாரையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஜப்பான் நாட்டா

ருடைய அபிவிருத்திக்காக அந்தக் கவர்ன்மெண்டார் எந்தவிதமாய் உதவி செய்தார்களென்று நாம் அறிய இந்தியா கவர்ன்மெண்டார் ஓர் உத்தியோகஸ்தரை ஜப்பானுக்கு அனுப்பியதினால், அந்நாட்டின் கல்வி அபிவிருத்தியைப்பற்றிக் கவனிக்கவேண்டுவது அவசியமாகும்.

"உலகத்தில் கைத்தொழில்களில் முன்னேற்றமடைந்திருக்கும் நாடுகளில் தானும் ஒன்முக உதவியாயிருக்கும்படி எல்லாவிதமான சௌகரியங்களும் அடங்கிய கைத்தொழில் கல்வி புகட்டக்கூடிய ஏற்பாடுகளை" அனுசரித்துத் தங்கள் கைத்தொழில்களை விருத்திசெய்திருக்கிறார்கள் என்பது தெளிவாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களும் கைத்தொழில்களில் விருத்தியடைந்து, தற்போதிருக்கும் போட்டியில் அவர்களுக்கும் பங்கு இருக்கவேண்டுமானால், ஜப்பானில் அனுசரிக்கப்பட்டுவரும் கல்வி ஒழுங்கைப் போன்ற ஒழுங்காவது இந்தியாவில் ஆரம்பிக்கப்படவேண்டும். கைத்தொழிலாளிகளுக்கும் உழைப்பாளிகளுக்கும் ஆரம்பக் கல்வி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று என் உடன் அங்கத்தினர் சொல்லுவது உசிதம் என்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். அந்த அஸ்திவாரமில்லாமல் கைத்தொழிலேயும் சாஸ்திரக் கல்வி ஒழுங்கையும் ஏற்படுத்துவது அசாத்தியம். கைத்தொழிலாளிகளும் உழைப்பாளிகளும் மற்ற வகுப்பாரினின்றும் வேறானவர்களல்லர். ஆகையால் கைத்தொழில் திறமையும் செல்வ நிலை வளர்ச்சியும் ஸ்தாபிக்கப்படவேண்டுமானால் ஆரம்பக் கல்வி எல்லாருக்கும் பொதுவாக்கப்படவேண்டுவது அவசியம். கூடிய சீக்கிரத்தில் ஆரம்பக் கல்விப்பாடசாலைகளில் சித்திரம் வரைதலும் கைத்தொழில் பழக்கமும் ஏற்பாடு செய்யப்படவேண்டு மென்பதையும்

நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆரம்பக் கல்வி கட்டாயமாய் இல்லாமற்போனாலும், எல்லோருக்கும் பொதுவாக்கப்படும்வரையிலும், சித்திரம் வரைதல் ஆரம்பக் கல்விச்சாலைகளில் கட்டாயமான பாடம் ஆக்கப்படும்வரையிலும், கைத்தொழில் கல்வியும் சாஸ்திரக் கல்வியும் கொடுக்கும்படியாய்ச் செய்யும்படியான ஒழுங்கின் அஸ்திபாரம் ஸ்திரமாயிராது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் இதற்கெல்லாம் போதுமான காலம் வேண்டும். அந்தக் காரணத்தினாலேதான் கூடிய சீக்கிரத்தில் அநாவசியமாய்க் காலதாமதமின்றி இவ்விஷயத்தில் முயற்சி செய்யப்பட வேண்டியது அவசியம் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஜப்பான் சம்பந்தமாய் ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் தம்முடைய குறிப்பில் பின்வருமாறு சொல்லுகிறார்:—

"கட்டாயப் படிப்பு ஏற்பாடானபொழுது, அச்சாதியாருக்குப் படிப்பின் விருத்தி ஏராளமாயிருந்தது. ஆரம்பக் கல்வி ஒழுங்கு 1872-ல் ஏற்பாடாயிற்று. 1873-ல் பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடிய பிள்ளைகளில் நூற்றுக்கு 28 பேரும், 1883-ல் நூற்றுக்கு 51 பேரும், 1893-ல் நூற்றுக்கு 59 பேரும், 1904-ல் நூற்றுக்கு 93 பேரும் வாசித்துவந்தார்கள்."

மேற்சொன்ன விஷயம் ஏறக்குறைய எவ்வளவு காலம் பிடிக்குமென்பதைக் காட்டுவதோடு முன்னேறிச்செல்லவும் நம்மைத் தூண்டுகிறது. இந்த அஸ்திவாரத்தின்மேல் தான் ஜப்பான் தேசத்துக் கைத்தொழிலும் சாஸ்திரப்பயிற்சியுமான கல்விகள் நிலைநின்று இணை பிரியாமல் வளர்ந்தேறி வந்திருக்கின்றன. அங்ஙனமே அவைகள் இங்கும் வளர்ந்

தேறவேண்டும். இதை உத்தேசித்தே என்னுடைய உடன் அங்கத்தினர்கள் பிரரேபித்திருக்கிற கைத்தொழில் சாஸ்திரக்கல்விகளின் ஒழுங்கை, ஏற்கெனவே இந்நாட்டில் வழங்கிவரும் ஒழுங்கோடு சம்பந்தப்படுத்த எனக்கு இஷ்டம். கூடியவரையில் இப்பொழுதுள்ள பள்ளிக்கூடங்களிலேயே படிப்படியாய் விருத்தியடைந்துகொண்டு வரும் சித்திரவேலையும், இரசாயன சாஸ்திரக் கல்வியும், தச்சுவேலையும் கருமார்வேலையும் கற்பிக்கப்படவேண்டும். ஒவ்வொரு மாகாணத்துக் கல்வி இலாகா டைரெக்டரும் கைத்தொழில் இலாகா டைரெக்டரோடு கலந்து யோசித்து ஆரம்பக்கல்வியும் உயர்தரக்கல்வியும் கற்பிக்க இப்போது உபயோகத்திலிருக்கும் பாடங்களில் மாறுதல்கள் செய்யச் சிபார்சு செய்யவேண்டும். இந்த மாறுதல்கள் சாஸ்திரக்கல்விபோதனையைத் தழுவியதாயிருப்பதோடு வித்தியார்த்திகளின் ஜீவியத்திற்கு உபயோகமாயும் இருத்தல் வேண்டும். மிஸ்டர் லாமுயல்ஸன் கைத்தொழில் சாஸ்திரப்படிப்பைப்பற்றிக் கடைசியாகச்சொல்லும் விஷயங்களில் நமக்கு வேண்டிய சில மாறுதல்களைச்செய்து அவைகளைக் கீழே எடுத்து வரைந்து என் குறிப்பின் இப்பாகத்தை முடித்து விடுகிறேன் :—

"இந்தியர்கள் தங்கள் துரைத்தனத்தார் ஒழுங்கான சாஸ்திரக் கல்வியின் ஏற்பாட்டையும், மாதிரியையும் செய்து கொடுக்கவேண்டுமென்று எதிர்பார்த்துக் கேட்கிறார்கள் என்பது என்னுடைய ஆராய்ச்சியின் முடிவு. துரைத்தனத்தார் இவ்விஷயத்தில் துரிதப்படுத்தப்படவேண்டியது அவசியம். ஏனெனில், இதர தேசத்

தார் இவ்விஷயத்தில் நம்மைவிட அறுபது வருஷத்திய அதிக அனுபோக முடையவர்களாயிருக்கிறார்கள். மேலும் அத்தேசங்களில் கல்வியில் தேர்ந்த வேலைக்காரர்களின் அநேக தலைமுறைகளும் உண்டாயிருக்கின்றன. சரியான பிரதம கல்வி பெற்ற பன்னிரண்டு வயதுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கைத்தொழில் சாஸ்திரப்படிப்பு கற்பிக்க நாம் நாளைக்கு ஆரம்பித்தாலும், அவர்கள் தங்கள் வேலைகளில் போய்ச் சேர ஏழு வருஷம் பிடிக்கும். மேலும், எழுதப்படிக்கத் தெரியாதிருக்கும் பெரிய ஜனத்தொகையில் அவர்கள் அற்பத்தொகையாய்த் தானிருப்பார்கள். இது வரையில் படிப்பு வாசனையே யறியாத பிள்ளைகள் பிரதம கல்வி பெறவும் கைத்தொழிலில் தேர்ந்த ஒரு தலைமுறையாகவும் அவர்கள் ஏழாவதுவயது முதல் இருபத்தோராவது வயது அளவுள்ள பதினைந்து வருஷகாலம் பிடிக்கும். அப்பொழுதும் அவர்களுக்குத்தெரிந்தவர்களுள் பாதிப்பேரும் படித்திரார். இங்ஙனம் அந்நிய ஜாதியாருடைய முன்னேற்றத்தில் நாம் இழந்துபோன அறுபது வருஷங்களைத் திரும்பப்பெறுதல் கஷ்டமாயிருக்கும். நாம் இவ்வளவு காலம் அசட்டை செய்திருந்த இந்த வேலையை நம்முடைய முழு ஊக்கத்தோடும் நாளைக்கே ஆரம்பிப்போமாக. அதற்கு இரண்டு விதமான அவசியங்களுண்டு. அவையாவன :— நம்முடைய வாலிபர்களில் வெகு கொஞ்சம் பேருக்குப் பிரதம கல்வி கிடைத்திருக்கிறது. அவர்களுக்குச் சாஸ்திரக் கைத்தொழிற்பயிற்சியில்லை. அப்படிப்பட்டவருக்காக ஒவ்வொரு சிறிய பட்டணத்திலும் கைத்தொழில் சாஸ்திரப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டும்; சாஸ்திரக்கைத்தொழில் கலாசாலைகளை ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும் ஸ்தாபிக்கவேண்டும்; தலை நகரில் சாஸ்திரக் கைத்தொழில்களின் சர்வ கலாசாலை ஏற்படுத்தப்படவேண்டும். வந்துகொண்டிருக்

கும் தலைமுறையில் மிகுதியான பேருக்குப் படிப்பின் வாசனையேயில்லை. அப்படிப்பட்டவர்களுக்குப் பிரதம கல்வியும், கூடுமானால் கட்டாயப்படிப்பும், ஒழுங்கு செய்யப்படவேண்டும்."

## இயந்திரவேலை செய்யக்கூடிய எஞ்சினீயர்களைப் பழக்குவித்தல்.

கைவேலைக்காரர்களுக்கும் மேஸ்திரிகளுக்கும் இயந்திரங்களை உபயோகிக்கும் வகை தெரிந்த எஞ்சினீயர்களுக்கும் பயிற்சி செய்விக்கும்படியான தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் அவசியத்தைப்பற்றி என்னுடைய உடன் அங்கத்தினர்கள் சொல்லியிருக்கும் சிபார்சை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், அவர்கள் செய்யும் சிபார்சினால் இனிமேல் மெகானிகல் இஞ்சினீயர்களாக விரும்புவோர்க்காவது போதுமான உயர்தரப் படிப்பு கற்பிக்கப்படுமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. இருப்புப்பாதைத் தொழிற்சாலைகளில் போதுமான இந்திய மாணாக்கர்களைப் பழக்குவதற்கு இடமிருக்காதென்று எனக்குத்தோன்றுகிறது. இந்தத் தேசத்தின் அபிவிருத்திக்குத்தக்கபடி, மாணாக்கர்களுடைய தொகையும் அதிகரிக்கும் என்று என்னுடைய உடன் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால், தற்காலத்திலிருக்கும் எஞ்சினீயர் கலாசாலைகளில் இயந்திரங்களை உபயோகிக்கும் எஞ்சினீயர்களையும் மின்சாரவேலை செய்யும் எஞ்சினீயர்களையும் உயர்தரச் சாஸ்திரக் கல்வியில் பயிற்சி செய்விக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று அவர்கள் செய்திருக்கும் சிபார்சுகளை நானும் ஆமோதிக்கிறேன். இத்தகைய அபிவிருத்திக்கு

வேண்டிய நல்ல பண உதவி இக்கலாசாலைகளுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றும், அங்ஙனம் பழக்கப் படும் மெகானிகல் எஞ்சினீயர்களுடைய யோக்கியதை லண்டன் சர்வகலாசாலையார் எஞ்சினீயர் வேலைக்குக் கொடுக்கும் பி. எஸ்ஸி. (B. Sc.) பட்டத்தின் யோக்கி யதைக்குக் குறைவாய் இருக்கக்கூடாதென்றும், நான் அபிப்பிராயப்படுகிறேன். இதற்கு முன்னமேயே இல் லாத இடங்களில் இந்தக் கலாசாலைகளைச் சர்வகலா சாலைகளோடு சம்பந்தப்படுத்துவதினால் மேற்சொன்ன காரியம் நிறைவேறும்.

தற்காலத்தில் இந்தியாவில் இரண்டே இரண்டு போதனு சர்வகலாசாலைகள் இருக்கின்றன. சீக்கிரத்தில் கல்கத்தா சர்வகலாசாலை போதனுதொழில்களை அதிக மாய்அபிவிருத்திசெய்யுமென்று நம்புகிறேன். ஒவ்வொரு போதனு சர்வகலாசாலையும் தன்னுடைய சொந்தச்செல வில் இயந்திர வேலைகளிலும் மின்சார வேலைகளிலும் எஞ்சினீயர்களைப் பழக்குவிக்கவும் அதற்குத் தக்க படிப்பைக்கொடுக்கவும் ஏற்பாடு செய்ய உற்சாகப் படுத்தப்படவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிரா யம். இச்சர்வகலாசாலைகளிருக்கும் பட்டணங்களிலா வது அல்லது அவைகளுக்கு அருகாமையிலாவது இருக்கும் இருப்புப்பாதைத் தொழிற்சாலைகளிலும் இன்னும் இதர தொழிற்சாலைகளிலும் ஒழுங்கு செய்து கொள்வதினால் வேண்டிய தொழிற்சாலைப் பழக்கத் திற்கு வழி செய்யலாம். இத்தகைய ஏற்பாடுகளுக்கு இடமில்லாமலிருந்தால், அவர்களுடைய எஞ்சினீயர் இலாகாக்களுக்குச் சம்பந்தப்பட்டதாக வியாபார தோரணையாய்ப் போதுமான பெரிய தொழிற்சாலைகளை

ஸ்தாபிக்க அவர்கள் தைரியப்படுத்தப்படவேண்டும். இவ்விதமான ஏற்பாட்டினால் மாணாக்கர்கள் காலை வேளைகளில் தொழிற்சாலைகளில் பழகி, சர்வகலா சாலை ஏற்படுத்தும் வகுப்புகளில் பகலில் தங்கள் பாடங்களைக் கற்றுக்கொள்வார்கள். கல்வி யறிவுள்ளவர்கள் மத்தியில் அவர்கள் வசிப்பார்கள். இருப்புப் பாதைத் தொழிற்சாலைகளின் சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களில் அவர்களுக்குக் கிடைப்பதைவிட மேலான உயர்தர நோக்கங்களிலும் எண்ணங்களிலும் அவர்கள் விருத்திக்கு வர ஏது வுண்டு. இயந்திரங்களைக் கையாண்டுவரும் நம்முடைய எஞ்சினீயர்கள் நம்தேசத்தின் அபிவிருத்தியின் சம்பந்தமாய் அதிக வேலைசெய்யவேண்டியிருப்பதால், அவர்கள் வித்தையிலும், குணத்திலும், தங்கள் தொழிலுக்கேற்ற அறிவிலும், சாஸ்திரத்திறமையிலும் தேறினவர்களாயிருத்தல் மிகவும் அவசியம். இவைகள் அவர்களுக்கு இருக்கவேண்டுமானால், அவர்கள் சர்வகலா சாலையின் மேலான போதனை முறையில் பழக்கப்பட்டு அக்கலாசாலையார் அளிக்கும் பட்டங்களையும் பெற்றவர்களாயிருக்கவேண்டும்.

இயந்திரவேலை எஞ்சினீயர்களுடன் மின்சார வேலையில் பழகும் எஞ்சினீயர்களும் தங்கள் தொழிலில் பக்குவமடைய ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்று நான் சிபார்சு செய்கிறேன். அவ்விஷயத்தைக் காலவரையில்லாமல் வெகுகாலம் தள்ளிவைக்கக்கூடாது. வெகு சீக்கிரத்திலேயே மின்சார உபயோகத்தினால் செய்யப்படும் கைத்தொழில்கள் இந்தியாவில் ஆரம்பிக்கப்படுமென்று நான் நினைக்கிறேன். இந்தியாவிலிருக்கும்

கைத்தொழில்களின் குறைவுகளைப்பற்றிய அதிகாரத்தில் இவைகளின் ஆவசியகம் பூரணமாய்க்காட்டப்பட்டிருக்கிறது. மின்சாரசக்தியினால் வேலைசெய்யும் இயந்திரங்களின் பிரயோஜனம் நிச்சயமாய் விருத்தியடைந்துவருகிறது. நாளடைவில் அவைகளின் உபயோகம் அதிகரித்துக்கொண்டே வரும். தற்காலத்தில் வேண்டிய அவசியங்களுக்கு, மின்சாரவேலை நடத்துபவர்களே தங்கள் வேலைக்காரர்களைப் பழக்கும்படி நாம் விட்டிருந்தாலும், மின்சார எஞ்சினீயர்கள் பலர் வெளி நாடுகளுக்குச் சென்றே பயிற்சி பெறவேண்டியிருக்கும்.

## உயர்தரத் தொழில் சாஸ்திரத்தில் பழக்கும் முறை.

உயர்தரத்தொழில் சாஸ்திரத்தில் பழக்குவதற்காகத் தகுந்த ஏற்பாடுகள் சீக்கிரத்தில் செய்யப்படவேண்டுவது அவசியம். இதனால் சர்வகலாசாலைகளோடு சம்பந்தப்பட்ட கலாசாலைகளில் படித்துத் தேறின சாஸ்திர மாணாக்கர்கள் தங்களுடைய சாஸ்திர அறிவைக் கைத்தொழில்களில் உபயோகிக்கவேண்டும். இதற்குச் சுலபமான வழி இயந்திரசக்தியினால் வேலைகளைச் செய்யக்கூடிய எஞ்சினீயர்களையும் மின்சாரசக்தியினால் வேலைகளைச் செய்யக்கூடிய எஞ்சினீயர்களையும் பழக்குவிக்க இப்போதைய எஞ்சினீயரிங் கலாசாலைகளில் புதிய வகுப்புகளைத் திறக்கவேண்டும். போதனை சர்வகலாசாலைகளுடன் சேர்க்கப்படாத எஞ்சினீயரிங் கலாசாலைகளில் வித்தியா விலக்கண இரசாயன சாஸ்திரம் கற்பிக்க வகுப்புகளைச் சேர்ப்பது சரியோ அல்லவோ என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

அங்ஙனமில்லாத எஞ்சினீயரிங் கலாசாலைகள் உயர்தரக் கலாசாலைகளாக உயர்த்தப்படவேண்டும். அவைகளில் ரெயில்வே இயந்திரவேலை, சுகாதார எஞ்சினீயரிங் முதலியவைகள் கற்பிக்கப்படவேண்டும்.

வித்தியா விலக்கண இரசாயன சாஸ்திரம் கற்பிக்கும் விஷயத்தில், போதனை சர்வகலாசாலைகளிலும் சர்வகலாசாலைகளோடு சேர்க்கப்பட்ட முதல்தரக் கலாசாலைகளிலும் ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்று நான் சிபார்சு செய்கிறேன். இவை ஒவ்வொன்றிலும் இரசாயனத் தொழிற்சாலை சற்றேறக்குறைய நன்றாய் அமைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தில் கல்வியிலாகாதார், சர்வகலாசாலைகளுக்கும் அவைகளைச் சார்ந்த கலாசாலைகளுக்கும் விசேஷித்த பணச்சகாயம் செய்வதுபோல், பணச்சகாயம் செய்து தேர்ந்த போதகாசிரியர்களை ஏற்படுத்தவும் இரசாயனத் தொழிற்சாலைகளை விருத்திசெய்யவும் வேண்டும். நம்முடைய கலாசாலைகளில் தற்காலம் நடந்துவரும் இரசாயன போதனை அனுபவத்தில் உபயோகமாயிருக்கக்கூடிய முறையைக் காட்டிக்கொடுக்கவேண்டும். நாம் எதிர்பார்க்கும் கைத்தொழில் விருத்தியின் சம்பந்தமாய் வித்தியா விலக்கண இரசாயன சாஸ்திரத்தில் பழக்குவிக்கப்பட்ட மாணவர்கள் அதிகமாய் வேண்டியிருக்கும். சர்வகலாசாலைகளிலாவது அல்லது அவைகளோடு சேர்க்கப்பட்டிருக்கும் கலாசாலைகளிலாவது இதைக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டால், மாணவர்கள் அங்கே அதிகமாய்க் கற்கப்போவார்கள். அதே ஏற்பாடு எஞ்சினீயரிங் கலாசாலைகளில் செய்யப்படும் பக்ஷத்தில் அத்தனைபேர்

அங்கே போகமாட்டார்கள். இந்த வித்தியாசாலைகள் ஒவ்வொன்றிலும் திறமையுள்ள மாணவர்கள் தங்கள் பாடங்களை ஊகித்துப் படிக்கப்போதுமான உபகாரச் சம்பளங்களையும் சர்வகலாசாலைக் கௌரவப் பதவி களையும் ஏற்படுத்தவேண்டும்.

## இராஜாங்க எஞ்சினீயரிங் கலாசாலைகள் அல்லது இராஜாங்க சர்வ கைத்தொழிற் போதனுசாலை.

சமீபத்திலில்லாமற்போனாலும், காலக்கிரமத்திலாவது, இன்னும் உயர்தரக்கல்வி கற்பிக்கக்கூடிய வித்தியாசாலைகள் இந்தியாவில் ஏற்படவேண்டியது அவசியமென்று என்னுடைய உடன் அங்கத்தினர்கள் நினைக்கிறார்கள். சிறிதுகாலத்திற்கு, மாணவர்களுக்கு அந்நிய நாடுகளுக்குப்போய் விசேஷித்த சாஸ்திரப் பயிற்சி அடைய உபகாரச் சம்பளம் கொடுப்பதால் அவர்கள் இவ்வித உயர்தரக் கல்வியைப் பெறுதல் கூடும். ஆனால் எங்களுடைய சிபார்சுகள் பரிபக்குவமடைந்தவுடனே, முதல்தரமான உயர்தர இராஜாங்கக் கலாசாலைகள் இரண்டு ஸ்தாபிக்கப்படுவது உசிதமாயிருக்கும். அவைகளில் ஒன்று இயந்திரவிதி சாஸ்திரத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பாகத்தையும் கற்பிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். மற்றொன்று உலோகங்களில் வேலை செய்யும் தொழிலையும் தாது வித்தியா விலக்கணத்தையும் கற்பிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். இவைகள் விசேஷித்த விதமாய் அபிவிருத்தியடைவது நிச்சயம். இவ்விஷயத்தை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில்வைத்திருக்கவேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

மேலே சொன்ன உயர்தரப் பயிற்சிக்காகச் சமீப காலத்தில் யாராவது வரும் பக்ஷத்தில் அவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுத்து அந்நிய தேசங்களுக்குப் போய்க் கற்றுக்கொண்டு வர ஏற்பாடு செய்யக் கூடும் என்று என் உடன் அங்கத்தினர்கள் சொல்லும் விஷயத்தை நான் ஆமோதிப்பதோடு நாங்கள் பிரரேபித்த உயர்தரக் கலாசாலைகளை ஸ்தாபித்த பிறகுகூட, நம்முடைய தேர்ச்சியடைந்த வித்வான்களைத் தங்களுடைய அறிவை விருத்திசெய்துகொள்வதற்காக அந்நிய தேசங்களுக்கு அனுப்பவேண்டுவது அவசியமாயிருக்கும் என்றும் நினைக்கிறேன். ஜப்பானியர் தங்கள் சொந்த நாட்டிலேயே உயர்தரக் கல்விக்காக அநேகம் ஏற்பாடுகள் செய்திருந்தபோதிலும், அவர்கள் தம் நாட்டு மாணவர்களில் அநேகரை வெளிநாடுகளுக்குப் போய்க் கற்றுக்கொண்டுவருமாறு அனுப்பிவருகிறார்கள். 1917-ம் வருஷத்திய ஜப்பான் வருஷ புஸ்தகத்தில், 1915-ல் 2,213 ஜப்பானிய மாணவர்கள் அயல் நாடுகளுக்குக் கல்விப் பயிற்சிக்காகப் போனதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களில் பெரும்பான்மையோர் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் இருந்தார்கள். ஜப்பான்தேசம் அந்நிய நாடுகளோடு வியாபாரசம்பந்தம் செய்ய ஆரம்பித்தது முதல், தங்கள் சொந்தச் செலவிலும் உதவிச் சம்பளம் பெற்றும் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்ற இருபாலாரும் சேர்ந்த ஜப்பானிய மாணவர்களின் தொகை அதிகமாயிருக்குமென்று மேற்சொன்ன வருஷ புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் கூரிய அறிவும் கைத்தொழில் திறமையும் வாய்ந்த வித்வான்கள் அதிக அவசிய

மாயிருக்கும் காலம்வரும் போதுமான திறமையுள்ளவர்கள் கிடைக்கவேண்டுமாயின், உபகாரச் சம்பளங்கள் அதிகப்படுத்தப்படவேண்டும். ஜப்பான் தேசத்தில் செய்யப்பட்டு வருவதுபோல், தங்கள் கலாசாலைப் படிப்பை முடித்தபிறகு சில வருஷங்கள் போதனை தொழிலில் இருந்தவர்களிலிருந்து மாணவர்களைத் தெரிந்தெடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்புதல் சிறந்ததாகும்.

இவ்விஷயத்தில் எவ்வளவு செய்யப்பட்டபோதிலும், ருஷியா விஸ்தீரணம் நீங்கலாகவுள்ள ஐரோப்பாவின் விஸ்தீரணத்திற்குச் சமமான நம்முடைய இந்திய நாட்டின் வாலிபர்களுடைய படிப்பை இவ்வழியில் விருத்திசெய்யமுடியாது. அந்த அவசியங்களையும், நமக்கு முன் இருக்கும் அபிவிருத்திக்குள்ள சௌகரியங்களையும் உபயோகப்படுத்தவேண்டுமானால், தாமதஞ் செய்யாமல் இந்தியாவில் முதல்தர அரசாங்கக் கைத்தொழில்கள் சாஸ்திரக் கலாசாலை அல்லது சர்வசாஸ்திரக் கலாசாலை ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டும். இந்த தேசத்தில் மேற்சொன்ன கலாசாலையை ஏற்படுத்துவதைப்பற்றி இந்திய பொதுஜன அபிப்பிராயம் வெகுகாலமாய் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்தியன் நாஷனல் காங்கிரஸாரும், இந்தியக் கைத்தொழில் கான்பரென்ஸாரும், மாகாண காங்கிரஸாரும், கான்பரென்ஸாரும் தங்களுடைய கூட்டங்களில் இதற்குச் சார்பாகத் தீர்மானங்களைச் செய்துவந்திருக்கின்றனர். ஜப்பான் மறுபடியும் இவ்விஷயத்திலும் ஓர் உதாரணமாயிருக்கிறது. தற்காலத்திய ஒழுங்குகளைத் தாம் ஏற்படுத்த ஆரம்

பித்தபொழுது, மேற்சொன்ன கலாசாலையின் அவசியத்தையும் உபயோகத்தையும் ஜப்பானியர் அறிந்திருந்தார்கள்.

"1872-ல் இவாகுராவும் அவரைப்போன்ற இதர ஜப்பானிய பிரதிநிதிகளும் லண்டனில் இருந்தபோது, ஜப்பானில் ஆரம்பிப்பதாயிருந்த இருப்புப்பாதைகளுக்கும், தந்திகளுக்கும், கைத்தொழில்களுக்கும் வேண்டிய ஆட்களைப் பழக்குவிக்க டோகியோவில் எஞ்சினீயர் கலாசாலை ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசியத்தைப்பற்றி மிஸ்டர் (இப்பொழுது மார்க்குவிஸ்) ஈடோவுக்கு அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக க்ளாஸ்கோ போதகாசிரியர் ஒருவர் மூலமாக, மேற்சொன்ன கலாசாலை ஏற்படுத்த ஒழுங்குகள் செய்ய மிஸ்டர் ஹென்றி டையர் என்பவரை ஏற்படுத்தினார்கள். நாளடைவில் டோகியோ சர்வ கலாசாலையோடு மேற்கண்ட கலாசாலை சேர்க்கப்பட்டது." (மிஸ்டர் W. H. ஷார்ப் என்பவரால் எழுதப்பட்ட "ஜப்பான் தேசத்துக் கல்வியைப் பற்றிய ஒழுங்கு" என்னும் நூலின் 206-ம் பக்கம்.)

ஜப்பானின் அபிவிருத்தியின் சம்பந்தமாய் இருந்த முக்கிய அம்சங்களில்மேற்சொன்ன கலாசாலை ஏற்படுத்தப்பட்டதும் ஒன்றாக இருந்ததென்று அது முதல் மார்க்குவிஸ் ஈடோ அடிக்கடி சொல்லிவருகிறார். ஏனெனில், அந்தத் தேசத்தின் விளைபொருள்களையும் கைத்தொழில்களையும் பக்குவப்படுத்துகிற எஞ்சினீயர்களில் பெரும்பான்மையோர் மேற்சொன்ன கலாசாலையில் தேர்ந்தவர்கள். ("ஜப்பானியராலுண்டான ஜப்பான்" என்னும் புஸ்தகத்தின் 65-ம் பக்கம் பார்க்க). அந்நிய நாட்டுப் பண்டிதர்களில் அநேகர் மிஸ்டர் டையருக்கு உதவிசெய்ய ஏற்படுத்தப்பட்டார்கள். அவர்களுக்கு

உதவியாக ஜப்பானியரும் கூடிய சீக்கிரத்தில் சேர்க்கப்பட்டார்கள். அக்கலாசாலையில் படிப்பதற்காக மாணவர்கள் ஆறு வருஷம் செலவழிக்கவேண்டியிருந்தது. அந்த ஆறு வருஷங்களில் கடைசி இரண்டு வருஷமும் கற்றதைச் சாதகத்திற்குக்கொண்டுவருவதில் கழிக்கப்பட்டது. அந்தக் கலாசாலை பொதுவேலைகள் இலாகாவின் அதிகாரத்தில் இருந்ததினால், அதின் அதிகாரத்திற்குட்பட்ட எல்லாத் தொழிற்சாலைகளிலும் வேலைகளிலும் மேற்சொன்ன கலாசாலை மாணவர்கள் பழக்கப்பட்டார்கள். அதிகமாய்க் கற்க அந்நிய தேசங்களுக்கு அனுப்பப்பட்ட இம்மாணவர்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள் கீர்த்தியுடன் திரும்பிவந்தார்கள்.

கைத்தொழில் படிப்பையும் கைத்தொழில் வித்தியாவிலக்கணப் படிப்பையும் தரத்தக்க கலாசாலைகள் நம்முடைய நாட்டில் போதிய அளவில் திருப்திகரமாக இல்லாததினால் இந்தியா எவ்வளவு நஷ்டமடைந்துள்ளதென்பது எங்களுடைய அறிக்கையிலிருந்து தெரியவரும். இவ்வறிக்கையைக்கண்ட பிறகேனும் அரசாங்கத்தார் சர்வ சாஸ்திரக் கலாசாலை ஒன்றையேனும் தாமதமின்றி ஸ்தாபிப்பார்களென்று நான் உறுதியாய் நம்புகிறேன். தேசத்தின் நன்மைக்கும் நாங்கள் செய்திருக்கும் கைத்தொழில்களின் பெரிய அபிவிருத்திக்கும் இஃது முற்றிலும் இன்றியமையாததாயிருக்கிறது.

இரண்டு அரசாங்க கல்விசாலைகளாவது ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று என்னுடைய உடன் அங்கத்தினர் சிபார்சு செய்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்று எஞ்சினீயர் தொழில்களில் ஒவ்வொரு பாகத்தையும்

கற்றுக்கொடுக்கத் தக்கதாயிருக்கவேண்டும். மற்றொன்று உலோக வர்க்கங்களையும் தாது வர்க்கங்களையும் பற்றிக் கற்பிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். இவ்விரண்டு பிரிவுகளுக்காக ஒரே சர்வ சாஸ்திரக் கலாசாலையையும் இரசாயன சாஸ்திரப் பிரிவுகளுக்காக மற்றொரு வகுப்பையும் ஏற்படுத்தவேண்டும் என்பது என் அபிப்பிராயம். என்னுடைய உடன் அங்கத்தினர்கள் இரசாயனத்திற்காகப் பிரத்தியேகமான இலாகா ஏற்படுத்தவேண்டுமென்று தெளிவாய்ச் சிபார்சு செய்திருப்பதனால் அவர்கள் அரசாங்க இரசாயன கலாசாலை ஏற்படுத்தச் சிபார்சு செய்யவில்லைபோலும். இரசாயனத்திற்காகப் பிரத்தியேக இலாகா ஏற்படுத்துவதாக வைத்துக்கொண்டாலும், இந்தியாவின் பிரதான துரைத்தன சர்வசாஸ்திரக் கைத்தொழில்சாலையிலேயே இதையும் சேர்த்துவைப்பதுதான் மிகச் சிலாக்கியம்.

நானாவித வித்தியாப் பிரசேபணைகளின் தலைப்பின் கீழ் மாலுமி சாஸ்திரத்திலும் கடல் எஞ்சினீயர் தொழிலிலும் பயிற்சி செய்விக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டிய விஷயத்தை என் உடன் அங்கத்தினர்கள் குறித்திருக்கிறார்கள், இது சீக்கிரமாய்ச் செய்யப்படுமென்று நம்புகிறேன். இன்னும் சிலகாலம்வரையில் கப்பல் செய்யும் கைத்தொழில் இந்தியாவில் சித்தி பெறாது என்று என் உடன் அங்கத்தினர்கொண்டுள்ள சந்தேகங்கள் எனக்கு இல்லை. இந்தியாவில் ஏராளமான ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நடக்கிறது. கப்பல் செய்வதற்குச் சாமான்களும் நம் நாட்டிலேயே ஏராளமாய்க் கிடைக்கின்றன. இப்பொழுது இருப்பவை

களோடு, கூடிய சீக்கிரத்தில் அவைகளை அபிவிருத்தி செய்ய வசதிகள் உண்டு. இக்காரணங்களினிமித்தம், சிறிதுகாலத்திற்கு அந்நிய நாடுகளிலிருந்து கப்பல் தொழிலுக்குவேண்டிய இருப்புத் தகடுகளையும் துண்டுகளையும் தருவிக்கவேண்டியதாயிருந்தாலும், கப்பல்கள் செய்யும் தொழிலை விசேஷமாய்த் துரைத்தனத்தார் உற்சாகப்படுத்தவேண்டும். இதற்காக மாலுமி சாஸ்திரத்திலும் கடல் எஞ்சினீயர் தொழிலிலும் ஜனங்களைப் பயில்விக்கத்தக்க ஒரு பள்ளிக்கூடம் சீக்கிரமாய் ஏற்படுத்தப்படவேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

## வியாபாரக் கல்வி.

இதர பிரரேபணைகளில் என் உடன் அங்கத்தினர்கள் வியாபாரக் கல்வியின் அவசியத்தைப்பற்றி யோசிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சிடென்ஹாம் வியாபாரக் கலாசாலை செய்துவருகிற நல்ல வேலையைப் பாராட்டிப்பேசி, அவர்கள் சொல்வதாவது:

"இந்தியாவின் இதரபாகங்களிலும் அப்படிப்பட்ட கலாசாலைகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்கிற பலமான விருப்பம் ஜனங்களுக்கு இருக்கிறது. மற்றச் சர்வகலாசாலையாரும் இந்த விருப்பத்தைத் திருப்தி செய்ய வழி தேடுவார்களென்று நாங்கள் நினைக்கிறோம். வியாபாரமும் தொழில்களும் அதிசீக்கிரமாய் அபிவிருத்தி அடைவது நிச்சயம். நன்றாய்த் தேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்குச் சொந்தக்காரர் அதிக சம்பளங்கள் சந்தோஷமாய்க் கொடுப்பார்கள்."

இந்த அபிப்பிராயத்தை நான் முற்றிலும் அங்கீகரிக்கிறேன். ஆனால் வியாபாரக் கல்வி பெரிதும் வளர்ச்சியடைய நிமித்தம் சர்வகலாசாலைகள் வியாபாரக்-

கல்விச்சாலைகளை ஸ்தாபிக்கக் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்ய அவைகளுக்குப் போதுமான திரவிய சகாயம் செய்யவேண்டும். இவ்விஷயத்தைப்பற்றி 1911-ல் நான் எழுதியதை மறுபடியும் எடுத்துச் சொல்லுகிறேன். அதாவது:—

"வியாபாரக்கல்வியின், அதாவது வியாபாரத்தொழிலைத் தங்கள் ஜீவனுதாரமாகச்செய்துகொள்ளவிரும்பும் வாலிபர்களுக்கு விசேஷித்த அப்பியாசத்தின் அவசியம் தேச சம்பந்தமானதும் சர்வதேச சம்பந்தமானதுமான விருத்திக்கு ஓர் அம்சமென்பதை மேல் நாடுகளில் நாகரிகம் அடைந்துள்ள ஜாதியார் முற்றிலும் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். உலகவியாபாரத்தில் முதன்மையானமேல் நாட்டு ஜாதியார் வியாபாரக்கல்வி விஷயமாய் அதிக கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். இத்தகைய கல்வியின் அவசியத்தையும் பிரயோஜனத்தையும் முதல் முதல் அறிந்து கொண்டவர்கள் ஜெர்மானியர். அமெரிக்காவும் அவர்களைப் பின்பற்றியது. கடந்த பதினைந்து வருஷங்களுக்குள் வியாபாரக் கல்விச்சாலைகளை ஏற்படுத்துவதில் இருந்த குறைவை இங்கிலாந்து நிவர்த்திசெய்துகொண்டிருக்கிறது. பர்மிங்காம், மாஞ்செஸ்டர் சர்வகலாசாலைகளில் வியாபாரக் கல்வியில் தேறின வித்தியார்த்திகளுக்கு 'வியாபாரத்தில் தேறின பண்டிதர்' என்னும் பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்ஙனமே லீட்ஸ் சர்வகலாசாலையாரும் செய்திருக்கிறார்கள். இரண்டு வருஷங்களுக்கு முன்பாகக் கவர்ன்மெண்டாரின் வேண்டுகோளின் மேல் இந்தியாவுக்கு வந்திருந்த பண்டிதர் லீஸ் ஸ்மித் என்பவர் சென்னையில் நடந்த இந்தியக் கைத்தொழில் கூட்டத்தில் ஓர் உபந்நியாசஞ்செய்தார். அப்பொழுது அவர் பின் வருமாறு சொன்னார்:— "வியாபாரத்தையும் கைத்தொழிலையும் முன்னின்று நடத்துபவர்கள்,

ஒரு வைத்தியனாவது பாரிஸ்டராவது அல்லது வேறு தொழிலாளியாவது சாஸ்திர சம்பந்தமாய்ப்பழக்கப் படுவதுபோல், சாஸ்திரக்கல்விப்பயிற்சி மூலமாய்ப் பழக்கப்படவேண்டும். மிகவும் தேர்ந்த நிர்வாகசக்தி ஒவ்வொரு தொழிலுக்கும் அவசியமென்று தற்காலத் திய அனுபோகத்தால் நமக்குத் தெரிகிறது. அதற்கு வேண்டியது கைத்தொழில் சாஸ்திரக் கல்வி மாத்திர மல்ல; புதிய சந்தர்ப்பங்களுக்குத்தக்கபடி செய்யும் திறமையும் தக்க சமயத்தில் ஒரு காரியத்தைச் செய் யும் வல்லமையும், வேலையாட்களை ஆளும் சக்தியும் அவசியம். இத்தகைய குணங்களை ஒருவரிடம் உண்டாக்கி விருத்தி செய்வதே தங்கள் விசேஷித்த வேலையென்று சர்வகலாசாலைகள் எப்பொழுதும் சுதந் தரங்கொண்டாடுகின்றன. உங்களுடைய அக்கிராசனு திபதி நேற்று உங்களுக்குச் சொன்ன விஷயங்களில் எதையாவது நிறைவேற்றவேண்டுமென்றாலும், இத் தேசத்து வியாபாரத்தின் நிர்வாகம் உங்கள் பொறுப் பில் இருக்கவேண்டுமென்றாலும், சர்வகலாசாலையில் வியாபார சம்பந்தமாய்ப் பழக்கப்பட்ட பண்டிதர்களைப் போன்ற விசால அறிவுள்ளவர்களும் ஒரு தொழிலைத் தைரியமாய் ஆரம்பிக்கக்கூடியவர்களும் உண்டாக வேண்டும். மனிதர்களுக்கு ஒருகாரியத்தைச் சீர்தூக்கி அறியும் புத்தியை உண்டாக்குவதும் அவர்களுடைய மனதைப்பக்குவப்படுத்துவதுமே சர்வகலாசாலையைச் சார்ந்த வியாபாரக்கல்விக் கூட்டத்தாரின் நோக்கம். உயர்தரப் பொதுக்கல்வி கற்பிப்பது சர்வகலாசாலையின் முதல் நோக்கமாயிருந்தபோதிலும், ஒரு தொழிலின் விஷயமாய் அக்கல்வி சாதனைக்குக்கொண்டுவரக்கூடிய வாறு கற்பிக்கப்படவேண்டுமென்று எதிர்பார்க்கிறார் கள். அப்படிப் பழக்கப்பட்ட ஒருவன் வியாபார உல கத்தில் மிக்க அபிவிருத்தியடைய இடமுண்டு. இனி வருங்காலத்தில் வரும் கைத்தொழில்களின் விருத்

தியில் மேற்சொன்னவாறு பயிற்சி பெற்றவனே நமக்குத் தகுந்தவன்."

ஒவ்வொரு வருஷமும் இந்தியாவில் ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளின் மதிப்புத்தொகை முப்பது கோடி பவுனுகிறதென்பதை நாம் நினைத்துப்பார்த்தால் நம்முடைய வாலிபர்களுக்கு அந்தந்தத் தொழிலுக்கு வேண்டிய கல்வியும் பழக்கமும் கொடுக்கத் திருப்திகரமான ஏற்பாடு செய்யப்படுமானால், பலவிதமான வியாபாரத்துறைகளில் அவர்களுக்கு எத்தனை வேலைகள் கிடைக்குமென்று நாம் சுலபமாய் நிதானிக்கக் கூடும். இவ்விஷயத்திற்கூட ஜப்பானின் அனுபோகமும் பழக்கமும் நமக்கு உதாரணத்தையும் ஆலோசனையையும் கொடுக்கின்றன. கடந்த இருபதுவருஷங்களாக ஜப்பானில் உயர்தர வியாபாரக்கல்வி அதிக விருத்தியடைந்திருக்கிறது. சென்ற நூற்றாண்டின் இறுதிக்கு முன், பள்ளிக்கூடத்தில் அநேக மாணவர்கள் படிக்கக் கூடிய வசதி செய்யப்பட்டிராவிடினும், டோகியோ உயர்தர வியாபாரக்கல்விச்சாலையில் உயர்தர வியாபாரக்கல்வி கற்க வந்த மாணவர்கள் வருஷத்திற்கு ஆயிரத்திற்கு அதிகமாயிருந்தார்கள். 1901-ம் வருஷத்துக்குப்பிறகு ஒசாகா, கோப், நாகஸாகி, யாமாகூசியிலும், வாஸாடா சர்வகலாசாலையிலும் உயர்தர வியாபாரக்கல்விச்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பாங்குகளிலும் இதர ஷாப்புகளிலும், வியாபாரப் பள்ளிக்கூடங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் ஒவ்வொரு வருஷமும் அதிகமாய் உத்தியோகம் பெற்றுவருகிறார்கள். முன் காலத்தில் வர்த்தகனுக்கு உயர்தரப் படிப்பு அவசியமில்லை யென்று நினைக்கப்

பட்டது ! ஆனால் இன்றைக்கோ எத்தகைய விசால மான வியாபார முயற்சியிலும் நன்றாய்ப் படித்துத் தேர்ந்தவர்களின் நிர்வாகம் வேண்டுமென்பது மறுக்க முடியாத அனுபவமாக இருக்கிறது. கொஞ்ச காலத் துக்கு முன் புத்திசாலிகளான வாலிபர்கள் அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்திருந்தபோதிலும் வியாபார மும் கைத்தொழிலும் விருத்தியடைய ஆரம்பித்த போது, இராஜாங்க விஷயத்திலும் சட்டத்திலும் விசேஷித்த அறிவிருந்தவர்கள்கூட அடிக்கடி வியா பாரத் துறைகளில் தங்களுக்கு உத்தியோகங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள் என்று ஜப்பானில் உண் டாயிருக்கும் அனுபவத்தினால் தெரியவருகிறது. நம் முடைய பிரபுகள் குறிப்பிடும் கைத்தொழில் அபி விருத்தியை முன்னிட்டு, இந்தியாவின் ஒவ்வொரு பெரிய மாகாணத்திலும் வியாபாரக் கலாசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டால் வக்கீல் துறையில் அதிகமாய் நிரம்பியிருக்கும் வாலிபர்களுள் பலர் வியாபாரக்கல்வி கற்க முன்வருவார்கள். அப்படிப்பட்டவர்கள் இத் தேசத்தின் கைத்தொழில் வியாபாரம் முதலியவை களின் வளர்ச்சியைப்பெருக்கக்காரணமாயிருப்பார்கள்.

## கைத்தொழில்களின் சம்பந்தமாய் நிலம் சம்பாதித்தல்.

கவர்ன்மெண்டாரின் அனுமதியின்றி, 6-வது முதல் 37-வது செக்ஷன் வரையில் சொல்லியிருக்கும் நிபந் தனைகளை ஒரு கம்பெனிக்கு நிலம் சம்பாதித்துக் கொடுக்க அமுலுக்குக்கொண்டுவரக்கூடாது - என்று நிலம் சம்பாதிக்கும் சட்டத்தின் 39-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. "( நிலம் சம்பாதிப்பது

(a) ஏதாவது கட்டிடம் கட்டவேனும் (b) பொது ஜனங்களுக்குப் பயனுள்ளவேலைக்காயினும் உபயோகிக்கப்படுமென்பது பிரதேச கவர்மெண்டாருக்குத் திருப்தி கொடுத்தாலன்றி அவர்கள் தங்கள் அனுமதி கொடுக்கக்கூடாதென்று" மேற்சொன்ன விஷயம் சட்டத்தின் 40-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரயோஜனத்திற்கு அனுகூலமாயிருக்கும் என்னும் காரணத்தினால் நிலம் பெறப் பிரதேச கவர்ன்மெண்டார் கொடுக்கும் அதிகார சம்மதத்தின் மேல் அப்பீல் இல்லை. பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுக்கு அந்தச் சட்டத்தினால் கிடைத்திருக்கும் அதிகாரத்தைத் துர்விநியோகப்படுத்தியிருக்கிறார்களென்று குறைசொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் வாலிபக் கிறிஸ்தவ சங்கத்தார் களிப்புக்காகவும் விளையாட்டுக்காகவும் நிலம் சம்பாதிப்பதற்காக இவ்வதிகாரம் உபயோகிக்கப்பட்ட சந்தர்ப்பம எனக்குத் தெரியும். இவ்விஷயமாகத் தாங்கள் இருந்த வீடுகளை விட்டு அப்புறப்படுத்தப்பட்ட துரதிர்ஷ்டமுள்ள ஜனங்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இப்பொழுது இருக்கும் சட்டப் பிரிவைப்பற்றி வெவ்வேறு விதமான அர்த்தம் சொல்லிக்கொள்ளலாமென்பதைப் பற்றி யாதொரு சந்தேகமுமில்லை. "பொது ஜனப் பிரயோஜனத்திற்கு அனுகூலமாயிருக்கக்கூடியது" என்பதற்கு ஏதாவது மாறுதல் சட்டம் சேர்ப்பதினால் மேற் சொன்ன சட்டத்தின் பிரிவு இனிமேலாவது அதிகமாய்த் தப்பான அர்த்தம் கொடாதவாறு பரிகாரம் செய்யமுடியும். அஃது எப்படி இருந்தபோதிலும், ஒரு கைத்தொழில் கூட்டத்தின் விஷயமாய் அந்தச்

சட்டத்தைப் பிரதேச கவர்ன்மெண்டார் உபயோகப் படுத்துவது சரியா என்னும் விஷயத்தில் எனக்குச் சந்தேகமேயில்லை. அப்படி உபயோகப்படுத்துவது சரியல்லவென்பது என்னுடைய அபிப்பிராயம்.

தாங்கள் செய்திருக்கிற நிபந்தனைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தக்கபடி பிரதேச கவர்ன்மெண்டார் ஒரு கைத்தொழில் கூட்டத்தாருக்காக நில சொந்தக்காரரிடமிருந்து கட்டாயமாய் நிலம் வாங்கிக்கொடுக்கலாமென்று என்னுடைய உடன் அங்கத்தினர் செய்திருக்கும் சிபார்சையும் நான் அங்கீகரிக்கவில்லை. பொதுக்காரியங்களுக்காக நிலத்தைக் கட்டாயத்தின்மேல் சொந்தக்காரர்களைக் கொடுக்கச் சொல்லுகிற விஷயமாய் இருக்கும் ஆங்கிலேய சட்டங்களைப்போலவே இந்தியச்சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் "பொது ஜனங்களுக்கு ஒரு வேளை பிரயோஜனமாயிருக்குமோ" என்னும் வார்த்தைகள் எப்படி அர்த்தம் செய்யப்படுகின்றனவோ அதே மாதிரி இங்கேயும் செய்யப்பட்டால் அதன் அர்த்தத்தைப் பற்றிய சந்தேகம் அதிகமாயிராது. இங்கிலாந்துசட்ட வித்தியா மண்டலம், வாலும் VIII, 3 முதல் 6 வது பக்கங்களில் சொல்லியிருப்பதாவது :—

"நிலச்சட்டங்களில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா நிபந்தனைகளும் பொதுவாகவும் அல்லது அந்தந்த இடத்துக்குரியதாகவும் நிலங்களை வாங்க அதிகாரம் கொடுக்கிற எல்லாச் சட்டங்களுக்கும் உரியன. அப்படிப்பட்ட சட்டங்கள் மூன்று பிரிவுகளாயிருக்கின்றன :—

1. தேசத்தைக் காத்தலுக்கோ அல்லது பொது

துரைத்தன விஷயங்களுக்கோ நிலங்களைச் சம்பாதித்தல்.

2. பிரதேச அல்லது நகர விசாரணைக்குரிய பொதுக்காரியங்களுக்காக நிலங்களைச் சம்பாதித்தல்.

3. பொதுப் பிரயோஜனமாயிருக்கக்கூடிய வியாபார விஷயங்களுக்காக ஒரு சங்கத்தாரால் அல்லது சொந்தக்காரர்களால் நிலங்களைச் சம்பாதித்தல்."

"பொதுப் பிரயோஜனமாயிருக்கும் வியாபார விஷயங்களுக்காக" என்னும் மூன்றுவது பிரிவைப்பற்றிச் சொல்லும்போது, அது சொல்லுகிறதாவது :—

"நிலச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் விசேஷித்த சட்டம், பிரதேச சட்டம், சுயப்பிரயோஜன சட்டம் இவைபோன்ற சட்டங்களின் பெரும் பாகம் இந்தப் பிரிவுக்குள் அடங்கியிருக்கின்றது. அவைகளில் அடியில்கண்ட வகுப்புகள் முக்கியமானவைகள் :—

1. கல்லறைகள்.
2. சட்டத்தின்படி உத்தரவு பெற்ற மின்சார விளக்கு.
3. வாயு வேலைகள்.
4. துறைமுகங்கள்.
5. மார்க்கெட்டுகளும், சந்தைகளும்.
6. தண்ணீர் வேலைகள்.
7. சாதாரண இருப்புப்பாதைகளும் இலேசான இருப்புப்பாதைகளும்.
8. டிராம்பாதைகள்.

சாதாரண இருப்புப்பாதைகள் நீங்கலாக மற்ற விஷயங்களெல்லாம் பொதுச்சட்டங்களின்படி நகர விசாரணைக்கூட்டத்தாரிடம் ஒப்புவிக்கப்படலாம்."

நிலம் சம்பாதித்துக்கொடுக்கப்படவேண்டிய மேலே சொன்ன ஒவ்வொரு வியாபாரத்துறையும் பொதுப்பிரயோஜனத்திற்காக என்பது மேற்சொன்ன பட்டியைப் பார்ப்பதினால் வெளியாகிறது. அதாவது, பொது ஜன சமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் அவைகளின் சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரிப்பதனால் தாரதம்மியமின்றி மற்றவர்களைப்போலவே தாங்களும் அதனால் உண்டாகும் பிரயோஜனத்தை அனுபவிக்க உரிமை பெற்றிருக்கிறார்கள். "சாதாரண இருப்புப்பாதைகள் நீங்கலாக மற்ற விஷயங்களெல்லாம் பொது சட்டங்களின்படி நகர விசாரணைசங்கத்தாரிடம் ஒப்புவிக்கப்படலாம்" என்னும் கடைசி வாக்கியமே அதற்குச் சோதனையாயுள்ளது. ஒருவன் இஷ்டத்திற்கு விரோதமாய் அவன் நிலத்தைக் கவர்ந்து கொள்வது சரியென்று சாதிக்கவேண்டுமானால் அப்படிச்செய்வது ஒரு மனிதனையாவது ஒரு கூட்டத்தாரையாவது உத்தேசித்து இருக்கக்கூடாது. எந்த வேலையை உத்தேசித்து அந்நிலம் எடுத்துக்கொள்ளப்படுகிறதோ அது பொது ஜனப்பிரயோஜனமுள்ளதாய் இருத்தல் வேண்டும். ஜன சமூகத்திலுள்ள மற்றவர்களைப்போலத் தானும் அதனால் ஏற்படும் பிரயோஜனத்தில் பங்கு பெறுபவனாயிருத்தல்வேண்டும். மேற்சொன்ன விதமாய் ஒரு தொழிலானது "பொது ஜனப்பிரயோஜனமாயில்லாமலிருக்கும்பொழுது" சட்டத்தின் விதிகளாலாவது அல்லது துரைத்தன அதிகாரத்தாலாவது அந்த வேலைக்காகக் கட்டாயமாய் ஒருவனுடைய சொத்தை அவனுடைய வசத்திலிருந்து வாங்குவது சரியல்லவென்பது என்னுடைய அபிப்பிராயம்.

தங்கள் தொழிலினால் கிடைக்கும் பிரயோஜனத்தைத் தங்கள் சங்கத்தைச் சாராத மற்றவர் எவரும் பங்கு பெறக்கூடாமல் ஏற்பாடு செய்துகொள்ளக்கூடிய ஒரு கைத்தொழில் அங்கத்தினர்கள் ஒரு நிலத்தைப்பெற விரும்பும்போது அவர்கள் அதற்குப்பதிலாக வேறு நிலத்தைக்கொடுத்தாவது, கொள்வனை விற்பனை மூலமாயாவது அல்லது சொந்தப் பிரியத்தினாலாவது கொடுக்கப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

## கைத்தொழிலுக்குப் பண உதவி.

கைத்தொழில் துறையில் உழைப்பவர்களுக்குஅரசாங்கத்தார் தாங்களாகவோ பிறர் உதவியைக்கொண்டோ எவ்வழியில் பணவுதவி செய்யக்கூடு மென்பதை விசாரித்துத் தெரிவிக்குமாறு அவர்கள் எங்களைக் கேட்டுக்கொண்டார்கள். கைத்தொழில்கள் அபிவிருத்தியடையாமலிருப்பதற்குப் பணக்கஷ்டமும் ஒருமுக்கியகாரணமென்பது எங்களுடைய அபிப்பிராயம். தற்போதிருப்பதைக்காட்டிலும் அதிகமான பணவசதிகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். நாங்கள் சிபார்சு செய்யும் மற்றச் சௌகரியங்களுடன் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் பாங்குகளும் ஏற்படுத்தப்படவேண்டும். கைத்தொழில் பாங்குகளே இப்பொழுதுள்ள கஷ்டங்களைக் களைந்து, கைத்தொழிலாளிகளுக்கு உதவிசெய்தல்கூடும். இக்கஷ்டங்கள் இந்நாட்டினரை மிகவும் பாதிக்கிறபடியால் அரசாங்கத்தார் அவர்களுக்கு உதவிசெய்தல் அவசியமாகும். சமீபத்தில் டாடா கைத்தொழில் பாங்கு ஏற்

படுத்தப்பட்டதனால் நமக்கு மிக்க திருப்தியுண்டாயிருக்கிறது. ஆயினும் அத்தகைய பாங்குகள் இன்னும் பல ஏற்படுத்தப்படவேண்டும். கைத்தொழில் பாங்குகள் ஏற்படுத்தப்படுவதற்கு வேண்டிய வசதிகள் யாவையென்பதை நாங்கள் அறிந்துகொள்ளாமலிருக்கிறபடியால், அவ்விஷயத்தைப்பற்றி அபிப்பிராயங்கூறுமாறு, திறமைவாய்ந்த அங்கத்தினரைக்கொண்டுள்ள கமிட்டியொன்று விரைவில் ஏற்படுத்தப்படவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறோம். அக்கமிட்டியார் "கைத்தொழில்களின் அபிவிருத்தியைப் பெருக்குவதற்காகப் பாங்குகள் எவ்வழியில் ஏற்படுத்தப்படவேண்டுமென்பதையும், இப்பாங்குகள் தேசம் முழுவதும் பரவிச் செழித்தோங்குமாறு அரசாங்கத்தார் எத்தகைய உதவி செய்யவேண்டுமென்பதையும், எவ்விதமாய் அவைகள் நிர்வகிக்கப்படவேண்டுமென்பதையும், விஷயங்கள் மாகாண அளவாகவோ இராஜ்ஜிய அளவாகவோ இருக்கவேண்டும் என்பதையும், சேர்த்து நடத்தப்பட்டுவரும் பாங்குகளின் கூட்டத்தில் இவ்விரண்டு முறைகளும் கலந்து இருக்கக்கூடாதா என்பதையும்" ஆலோசித்துச் சொல்லவேண்டும்.

போதுமானவரையில் கைத்தொழில் பாங்குகளைப் பரவச் செய்வதற்குச் சிறிது காலம் செல்லுமாதலின், நடுத்தரக் கைத்தொழிலாளிகளின் கஷ்டங்களை விலக்குமாறு நாங்கள் ஓர் ஏற்பாட்டைத் தெரிவித்திருக்கிறோம். இவ்வேற்பாட்டினால் கைத்தொழில்களுக்குப் போதிய பலமுண்டாகாதாதலின் எனக்கு அது பிடித்தமாகவில்லை. ஆயினும் அது நிலையான ஏற்பாடாயிராமல் சிறிதுகாலம்வரையிலேயே இருக்கப்போகிறபடியால்

நான் அதைப்பற்றி ஆக்ஷேபிக்கவில்லை. இதை ஏற்றுக் கொள்வதனால் கைத்தொழில் பாங்குகளை ஏற்படுத்தக் கால தாமதம் செய்யப்படாதென்று நான் நம்புகிறேன். இந்த நிலையற்ற ஏற்பாட்டை வெகுகாலம் நடவடிக்கையிலிருக்கச் செய்தல் அநாவசியமாகும்.

எங்கள் அறிக்கையில் ஆலோசிக்கப்பட்டுள்ளபடி கைத்தொழில்கள் அதிகமாக அபிவிருத்தியடைய வேண்டுமானால், பணவசதிகள் ஏராளமாயும் கூடிய சீக்கிரத்திலும் பெருக்கப்படவேண்டும். அங்ஙனஞ் செய்வதற்காகச் சில தப்பபிப்பிராயங்களைக் களைதல் அவசியமாகும். 1913, 1914-ம் வருஷங்களில் சில இந்திய பாங்குகள் அழிவுற்றபடியால், இந்தியர்கள் பங்காளிகள் சேர்ந்துள்ள பாங்குகளை நடத்த யோக்கியதையற்றவர்களென்று சிலர் எண்ணியிருக்கின்றனர். அந்தப் பாங்குகள் தவறிப்போனபோது, சில வெளிநாட்டுப் பத்திரிகைகள் அவைகளைப் பற்றி இழிவாக எழுதியிருந்தன. இந்தப் பாங்குகளில் சிலவற்றில் நிர்வாகமும் ஒழுங்கும் சீர்கேடாக விருந்தனவென்பது உண்மையே. ஆனால் இக்குறைகளை ஒன்றுக்குப் பத்தாக எடுத்துக்காட்டுதல் கூடாது. இவைகளை ஆதாரமாய் வைத்துக்கொண்டு பங்காளிகள் சேர்ந்துள்ள பாங்குகளை நிர்வாகஞ் செய்வதில் இந்தியர்கள் யோக்கியதை யற்றவர்களென்றும், ஐரோப்பியரே இத்தகைய வேலைகளுக்கு உரியவரென்றும் சொல்லுதல் தவறாகும். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுங்கூடச் சில பங்குப் பாங்குகள் தவறிப்போயிருக்கின்றன. இங்கிலாந்து பாங்கே உலகத்திலுள்ள பொருட் களஞ்சியத்தில் சிறந்ததென்று ஆங்கிலேயர் பெருமை

பாராட்டிக்கொள்கின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த பாங்கும் பல கஷ்டங்களுக்கு உள்ளாயிருக்கின்றது. "1819-ம் வருஷம் முதல் 1870-ம் வருஷம் வரை இங்கிலாந்து பாங்கு பத்து வருஷத்திற்கொருதரம் கடன்களைத் தாங்க மாட்டாமல் அழிந்து போகுந்தறுவாயிலிருந்தது." (டாக்டர் ஆண்ட்ரியடெவின் "இங்கிலாந்து பாங்கின் சரித்திரம்," பக்கம் 404). இங்கிலாந்தில் அழிந்துபோன பாங்குகளோ எண்ணிறந்தன. 1791-ம் வருஷம் முதல் 1818-ம் வருஷம் வரை இங்கிலாந்தில் ஏறக்குறைய ஆயிரம் பாங்குகள் தங்கள் வேலையை நிறுத்திவிட்டன. 1839-ம் வருஷத்தில் பணக்கஷ்டமுண்டானபோது, 29 பாங்குகள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோயின. அவைகளுள் 17 பாங்குகள் பணங் கட்டியவர்களுக்கு ஒரு காசும் பங்கிட்டுக்கொடுத்த பாவத்திற்குப் போகவில்லை. 1862-ம் ஆண்டில் "கட்டுப்படுத்தப்பட்ட கடன் சட்டம்" செய்யப்பட்டது. மூன்று வருஷங்களுக்குள் 50,40,00,000 பவுன் முதலுடன் முந்நூறு பாங்குகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளுள் 270 பாங்குகள் தோன்றிய சீக்கிரத்திலேயே அழிந்து போயின. அதற்குப் பிறகு இங்கிலாந்தில் பணக்கஷ்டமுண்டாயிற்று. அப்பொழுது பல பாங்குகள் பாழாய்ப்போயின. அவைகளுள் முக்கியமானது ஓவரெண்ட் கர்னி என்று வழங்கப்பட்டது. அது 18,729,917 பவுன் கடனுடன் இங்கிலாந்தின் பாங்கு சரித்திரத்தில் பேர்போன 'பிளாக் ப்ரைடே' என்று சொல்லப்படும் வெள்ளிக்கிழமை காலையில் தன் கதவை மூடிவிட்டது. இன்னும் பல பாங்கு

களும் அழிந்துபோயின. அழிந்துபோன பாங்குகளின் கடன் தொகை 5 கோடி பவுனென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளால் ஏற்பட்ட நஷ்டங்களும் மிகவும் அதிகம். 1839-ம் வருஷத்தில் இங்கிலாந்து பாங்குக்கு உதவி செய்துவந்த பேரிங் சகோதரர்களின் பாங்கு 1890-ம் ஆண்டில் அழிந்துபோய் விட்டது. இவ்வளவு பாங்குகளும் அழிந்துபோனதைக் காரணமாகக்கொண்டு, ஆங்கிலேயர் பாங்குகளை நிர்வாகஞ்செய்ய யோக்கியதையற்றவரென்று யாரேனும் சொல்லுகின்றனரா? அப்படியிருக்கையில், இந்தியர்களால் ஏற்படுத்தப்பட்ட இரண்டொரு பாங்குகள் முழுகிப்போனதன்காரணமாக இந்தியர்கள் பாங்கு நிர்வாகஞ்செய்ய யோக்கியதையற்றவர்களென்று எங்ஙனம் சொல்லக்கூடும்?

இந்தியாவில் பாங்கின் நிலைமையை ஈண்டுக் கவனிப்போம். முதல் முதல் அலெக்ஸாண்டர் அண்ட் கம்பெனியார் 1770-ம் ஆண்டில் கூட்டுப்பாங் கொன்றை ஏற்படுத்தினர். அது ஹிந்துஸ்தான் பாங்க் என்று வழங்கப்பெற்றது. அது நோட்டுகளையும் வெளியிட்டுவந்தது. இந்த நோட்டுகள் அரசாங்கத்தாரால் அங்கிகரிக்கப்படாவிடினும், கஷ்டமின்றி மாறி வந்தன. 40 அல்லது 50 லக்ஷம் ரூபாய்க்கு இந்தப் பாங்கு நோட்டுகளை வெளியிட்டிருந்தது. அவைகள் அநேக வருஷகாலம்வரையில் கல்கத்தாவிலுள்ள உத்தியோக சாலைகளிலும் வாங்கப்பட்டுவந்தன. இந்த பாங்கு 1832-ம் வருஷத்தில் அழிவுற்றது. 1806-ம் வருஷத்தில் வங்காள பாங்கு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அது 1809-ம் வருஷத்தில்தான் அரசாங்கத்தாரின்

அங்கீகாரம்பெற்றது. ஈஸ்ட் இந்திய வர்த்தகக் கூட்டத்தார் இதன் மூலதனத்தில் ஐந்தில் ஒருபங்கு கொடுத்து டைரெக்டர்களுள் மூவரையும் நியமித்தனர். பொதுவாக 1809-ம் ஆண்டிலிருந்தும், முக்கியமாக 1813-ம் ஆண்டிலும்,ஐரோப்பியர் இந்தியாவில் குடியேறும் விஷயமாக ஏற்பட்டிருந்த சில தடைகள் நீக்கப்படுமாறு சட்டமேற்பட்டதிலிருந்து, இந்தியாவில் பாங்கு விஷயம் முன்னேற்றமடைந்து வந்தது. அதன்பிறகு பல பாங்குகள் ஏற்படுத்தப்பட்டன. 1829-ம் வருஷத்திற்கும் 1833-ம் வருஷத்திற்கு மிடையில் அவைகளிற் பல அழிவுற்றன. 1838-ம் ஆண்டில் யூனியன் பாங்கு என்ற கூட்டுப்பாங்கு ஏற்படுத்தப்பட்டது. வங்காள பாங்கு செய்யக்கூடாமலிருந்த சில பண சம்பந்தமான வேலைகளைச் செய்வதற்காகவே இஃது ஏற்படுத்தப்பட்டது. அது பல வருஷங்களாகக் கடன் பட்டிருந்து 1848-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் முழுகிப்போய்விட்டது. "அதிக ஆடம்பரத்துடன் பங்கிட்டுக்கொடுக்கப்பட்ட தொகைகள் மூலதனத்திலிருந்து எடுக்கப்படவில்லை ; ஏனென்றால் அது முன்னாலேயே போய் விட்டது. ஜனங்கள் நம்பிக் கட்டிய சேர்ப்புநிதியிலிருந்தே எடுக்கப்பட்டன." "அந்தப் பாங்கு முன் பின் யோசனையில்லாமல் நீலி வியாபாரத்தில் பணத்தைக் கொட்டியது ; டைரெக்டர்களும் தங்களால் கூடியவரையில் பாங்குப் பணத்தைச் சேகரஞ் செய்துகொண்டார்கள்." ஓர் ஆங்கிலேயக் கம்பெனி இந்தப்பாங்கின் மூலதனத்தில் கால்பங்காகிய 24 லக்ஷம் ரூபாய் அதனிடம் கடன் வாங்கியிருந்தது. இன்னொரு கம்பெனி 16 லக்ஷம் ரூபாய் வாங்கியிருந்தது.

1849-ம் ஆண்டில் முதல் பெஞரிஸ் பாங்கு அழிந்து போனதைப்பற்றிப் பலர் இழிவாகப்பேசிக் கொண்டனர். 1829-1832-ம் ஆண்டுகளில் நேர்ந்த கஷ்டங்களிஞல் வங்காள பாங்கே தன் வாக்குறுதிக்கு விரோதமாக நடக்கநேர்ந்தது. முதல் பம்பாய் பாங்கு 1840-ம் வருஷத்திலும், மதராஸ் பாங்கு 1843-ம் வருஷத்திலும் ஏற்படுத்தப்பட்டன. வங்காள பாங்கில் ஈஸ்ட் இந்திய வர்த்தகக் கூட்டத்தார் ஐந்திலொரு பங்கு எடுத்துக் கொண்டிருந்ததுபோலவே இந்தப் பாங்குகளிலும் எடுத்துக்கொண்டிருந்தனர். 1868-ம் வருஷத்தில் பம்பாய் பாங்கு முழுகிப்போய்விட்டது. அது முழுகிப்போனதன் காரணத்தை விசாரிக்குமாறு ஒரு விசாரணைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. 1869-ம் வருஷத்தில் வெளியிடப்பட்ட அச்சங்கத்தின் அறிக்கையில் பின்வரும் விஷயங்கள் காரணமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன :—

"(1) சார்ட்டர் ஆக்ட் என்னும் சட்டம் முன்னர் ஏற்படுத்தப்பட்டிருந்த சட்டத்திலிருந்த நிபந்தனைகள் சிலவற்றை நீக்கிவிட்டபடியால், பாங்குகள் பத்திரமல்லாத வழிகளிலும் கொடுக்கல் வாங்கல் செய்ய இடமுண்டாயிற்று.

"(2) சட்டப்படி அதிகாரம் பெற்ற நாணயமும் மனேகிடனுமில்லாத காரியதரிசிகள் தங்கள் அதிகாரத்தைக்கெட்ட வழிகளில் உபயோகித்தல்.

"(3) டைரெக்டர்களின் கவலைக்குறைவும் தகுதியின்மையும்.

"(4) அக்காலத்திய சந்தர்ப்பங்களின் விசேஷப் போக்கு."

இவ்விசாரணைச் சங்கத்தின் அக்ராசனாதிபதியான ஸர் சி. ஜாக்ஸன் தம் அபிப்பிராயத்தைப் பின் வருமாறு சுருங்கக்கூறியிருக்கின்றார் :—

"இந்தப் பாங்கு முழுகிப்போனதினால் தெரிந்து கொள்ளக்கூடிய பாடம் யாதெனில், ஒருவரேனும் பலர் ஒன்று சேர்ந்தேனும் எழுதிக்கொடுக்கும் கடன் பத்திரங்களின்மேல் பாங்குகள் கடன் கொடுத்தலாகாது. ஒருவரும் ஜாமீனாக இராமல் பலர் ஒன்று சேர்ந்து கடன் வாங்குபவராகவேயிருப்பின் கடன் கொடுத்தல் தகுதியன்று." ("ராஜதானி பாங்குகளின் சரித்திரம்," 31-ம் பக்கம்.)

எங்கள் அறிக்கையின் 284-வது பக்கத்தில் "கடன் ஆறு மாதத்திற்குமேல் நீடித்திருக்கக்கூடாதென்றும், குறைந்தது இருவரேனும் ஜாமீனாக இருக்கவேண்டுமென்றும் நிபந்தனைகளைக் கொண்டுள்ள ராஜதானி பாங்குகள் சட்டம் சிறிது தளர்த்தப்படவேண்டுமென்று சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறபடியால் நான் மேற்கூறிய விஷயத்தை இங்கு எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

அதே பெயருடனும், அதே உரிமைகளுடனும் இன்னொரு பாங்கு மறுபடியும் பம்பாயில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அரசாங்கத்தார் அதில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. 1874-ம் வருஷம் வங்காளத்தில் பஞ்சமுண்டானவரையில் அந்தப்பாங்கு நன்றாக நடைபெற்றுவந்தது. அதில் அரசாங்கத்தாரின் பணம் ஒரு கோடி ரூபாய் இருந்தது. அதில் 30 லக்ஷம் ரூபாய் வாங்கி, பர்மாவிலிருந்து அரிசி வரவழைத்து, வங்காளவாசிகளுக்கு உதவவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்

டது. பாங்கு அந்தப் பணத்தைக் கொடுக்கச் சக்தியற்ற தாயிருந்தது. அது அரசாங்கத்தாருக்குப் பணம் கொடுக்கவேண்டியிருந்ததினாலேயே தன் கதவை அடைத்து விடவில்லை. இக்காரணங்கொண்டே கை யிருப்புப் பொக்கிஷ முறை 1876-ம் வருஷம் முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவ்வருஷமே அநேக நிபந்தனைகளைக் கொண்டுள்ள ராஜதானி பாங்குச் சட்டம் செய்யப்பட்டது.

1863-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்த ஏழு ஐரோப்பிய பாங்குகளில் ஒன்று நீங்கலாக மற்றெல் லாம் முழுகிப்போய்விட்டன. அந்த ஒன்று தான் அலகாபாத் பாங்கு. 1875-ம் வருஷத்தில் ஐந்து புதிய பாங்குகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளுள் பஞ்சாப் பாங்கிங் கம்பெனியையும் தன்னுடன் சேர்த்துக்கொண் டுள்ள சிம்லா அலையன்ஸ் பாங்கு ஒன்றே இப்பொழுது நிலைத்திருக்கிறது. முழுகிப்போனவைகளுள் ஹிமாலயா பாங்கும் ஒன்ருகும். அது 1891-ம் ஆண்டில் பணங்கொடுப்பதை நிறுத்திவிட்டது. இந்தக்கூட்டுப் பாங்குகளைத் தவிர ஸர் ஜார்ஜ் அர்பத்நட்டின் பெரிய பாங்கும் 1907-ம் வருஷத்தில் முழுகிப்போய்விட்டது. 1904-ம் ஆண்டில் தோன்றின பர்மா பாங்கு 1911-ம் ஆண்டில் அழிந்து போயிற்று. அது முழுகிப்போன பொழுது அதன் மூலதனத்தில் ஒரு கோடி பத்தொன் பது லக்ஷம் ரூபாய் கொடுக்கல் வாங்கல் இருந்தது. டைரெக்டர்களுக்குச் சம்பந்தமுள்ள ஒரு வர்த்தகக் கூட்டத்தாருக்கு அப்பாங்கின் மூலதனத்தில் மூன்றில் ஒரு பங்கு கடன் கொடுக்கப்பட்டிருந்ததென்று தெரிய வந்தது. எல்லாவற்றிற்கும் கடைசியில் வட இந்தியா

பாங்கு முழுகிப்போய்விட்டது. இந்தப் பாங்குகளின் ஒன்றின் நிர்வாகத்திற்கேனும் இந்தியர் பொறுப்பாளிகளல்லர். அவைகளெல்லாம் ஐரோப்பியராலேயே நடத்தப்பட்டுவந்தன.

இந்தியர்கள் பொறுப்பு வைத்துக்கொண்டிருந்த பாங்குகளின் சரித்திரம் பெரிது மன்று, முக்கியமானது மன்று. அவைகளின் சரித்திரம் 1881-ம் வருஷம் முதற்கொண்டே தொடங்குகின்றது. அவ்வாண்டில் அயோத்தி வியாபார பாங்கு ஏற்படுத்தப்பட்டது. அதற்குப்பிறகு வேறு சில சிறிய பாங்குகள் தோன்றின. பஞ்சாப் நாஷனல் பாங்கு 1894-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. இவ்விரண்டு பாங்குகளும் தட்டுத்தடையில்லாமல் தங்கள் வேலைகளை நடத்திக்கொண்டு வந்திருக்கின்றன. இந்திய ஜனங்கள் பாங்கு 1901-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அது 1913-ம் வருஷத்தில் தன் கதவை அடைத்த பொழுது இந்தியாவின் பல பாகங்களிலும், முக்கியமாக வட இந்தியாவிலும், அதைச்சார்ந்த சற்றேறக்குறைய 100 கிளை பாங்குகள் இருந்தன. அம்ருத்ஸார் பாங்கு என்னும் இன்னொரு துரதிர்ஷ்டமுள்ள பாங்கு 1904-ம் வருஷத்தில் தொடங்கப்பெற்றது. அது 1913-ம் ஆண்டில் அழிந்துப்போய் விட்டது. வங்காளம் பிரிக்கப்பட்ட வருஷமாகிற 1905-ம் வருஷம் முதல் இந்தியாவில் சுதேசக் கிளர்ச்சிகள் பல தோன்றலாயின. 1906-ம் முதல் நாட்டின் பல விடங்களிலும் சிறிதும் பெரிதுமான பல பாங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 1910-ம் வருஷத்தில் அவைகளின் மொத்தத் தொகை 476. அவைகளுள் 1906-ல் ஸ்தாபிக்கப்

பட்ட இந்தியா பாங்கும், இந்தியா நாணய பாங்கும், 1907-ல் ஏற்படுத்தப்பட்ட வங்காள நாஷனல் பாங்கும் மதராஸ் இந்தியன் பாங்கும், 1909-ல் ஏற்பட்ட பம்பாய் வியாபாரிகள் பாங்கும், இந்தியா கடன் பாங்கும், 1910-ல் ஏற்படுத்தப்பட்ட கத்தியவார் அகமதாபாத் பாங்கிங் கார்ப்பொரேஷனும், 1911-ல் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய மத்திய பாங்கும் முக்கியமானவை. 1901-ம் வருஷத்துக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட 11 முக்கியமான பாங்குகளில் 1913-14-ம் வருஷங்களில் 6 பாங்குகள் அழிந்துபோயின. சிறியவையும் பெரியவையுமாய் மொத்தத்தில் சுமார் இருபத்து நான்கு இந்திய பாங்குகள் அழிந்துபோயிருக்கின்றன. ஒரு பாங்கு முழுகிப்போனாலும் வருத்தப்படவேண்டியது நியாயமே; எனினும், 476 பாங்குகளில் 24 பாங்குகள் முழுகிப்போனது அதிகமாகப் பாராட்டக்கூடியதன்று.

முழுகிப்போன சில பாங்குகளில் தப்புக்கணக்குகள் வைக்கப்பட்டிருந்ததும், மற்றும் சில பாங்குகளின் பணம் டைரெக்டர்களில் சிலர் சம்பந்தப்பட்டிருந்த சில வியாபாரத் துறைகளுக்கு ஏராளமாய் கடன் கொடுக்கப்பட்டிருந்ததும் உண்மையே. நீடித்துக் கொடுபடாமலிருக்கும் வியாபாரங்களுக்குச் சிறிது காலத்தில் திரும்பக்கொடுத்துவிடவேண்டிய முதலைக் கொடுத்தல், அல்லது இப்பேர்ப்பட்ட முதலின் பெரும் பாகத்தை ஒரே தொழிலில் போட்டுவைத்தல்போன்ற பணம் கடன் கொடுக்கும் விஷயத்தில் அனுசரிக்கப்பட்ட முறையிலும் தவறுதல் இருந்திருக்கிறது. பாங்குகள் முழுகிப்போனதற்கு இத்தகைய காரணங்

களே முக்கியமென்பதற்கும் தப்புக்கணக்கு முதலி யவை அதிகமாகக் காணப்படவில்லை யென்பதற்கும் அத்தாட்சி, முழுகிப்போன பாங்குகளின் கணக்குக ளின் சம்பந்தமாய்த் தாவாக்கள் அநேகமாய் ஒன்றுமே கொண்டுவரப்படாமையே.

பஞ்சாப்பில் பாங்குகள் முழுகிப்போனதன் சம்பந்த மாக, லாகூர் கணக்குப் பரிசோதகரான பண்டித பாலக் ராம் பாண்டியா எங்களுக்கு எழுதியனுப்பியிருக்கும் சாட்சியத்தில் பின்வருமாறு கூறுகிறார்:—

"சமீபத்தில் பஞ்சாப்பில் பாங்குகளும் கைத்தொ ழில்களும் அழிவுற்றதைப் பிறதேச சம்பவங்களோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது, நம்நாட்டில் யோக்கிய தைக் குறைவினாலோ சுயநலத்தினாலோ பாங்குகள் அழிந்தது மிகவும் அரிதாயிருத்தல் நமக்கு ஆச்சரி யத்தை விளைவிக்கிறது. நாம் நம்முடைய அனுபவமின் மைக்காக அடைந்த நஷ்டமோ அதிகம். ஆயினும் அது நமக்கு முன் பிறதேசத்தினர் அடைந்துள்ள நஷ் டத்தைப்போல் அவ்வளவு அதிகமாக இருக்கவில்லை. சென்ற நான்கு வருஷங்களில் நேர்ந்துள்ள கஷ்டங் கள் கற்பித்துள்ள பாடத்தை நாம் செவ்வெனே கற்றுக் கொள்வோமாயின் இனி நம்பிக்கையின்றி யிருக்கக் காரணமில்லை."

இந்தியக் கைத்தொழில் விசாரணை சங்கத்தார் விசாரிக்கவேண்டிய விஷயங்களோடு குறிப்பிடப்பட் டிருந்த சிபார்சுக் கிணங்க, பஞ்சாப்பில் சமீபத்தில் பாங்குகளும் கைத்தொழில்களும் அழிவுற்றதன் காரணங்களை விசாரித்தறியுமாறு, பஞ்சாப் மாகா ணக் கைத்தொழில் கமிட்டியாரால் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அக்கமிட்டியாரின் அறிக்கை

இவ்விஷயத்தை நமக்கு நன்ருக அறிவுறுத்துகின்றது. அவர்கள் சொல்லியதாவது :—

"எங்களுக்குக் கிடைத்த சாட்சியத்தைக்கொண்டு ஆலோசிக்குமிடத்து, கம்பெனிகளை ஸ்தாபிப்பவர்களுக்கும், மானேஜர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அவைகளை நடத்தவேண்டிய வேலைத்திறமையும் அனுபவமும் குறைந்திருந்ததே அவைகளின் அழிவிற்குக் காரணமென்று நன்கு விளங்கியது. அதனுல் அநேக தவறுதல்கள் உண்டாயின. அயோக்கியத்தனம் என்று சொல்லப்பட்டதெல்லாம் அறியாமை என்றே ஏற்பட்டிருக்கிறது. நஷ்டங்களை மறைத்துவைக்கக் கவலைப்பட்டதனுலேயே இவ்விதம் நேரிட இடமுண்டாயிற்று."

பாங்குகளின் குறைபாடுகளையும் தவறுதல்களையும் விளக்கிக் காட்டியபிறகு, அக்கமிட்டியார் பின்வருமாறு சொல்லியிருக்கின்றனர் :—

"சுதேசி பாங்குகளின் நிர்வாக நிலைமையும் கைத்தொழில் நிர்வாக நிலைமையும் மிகவும் கேவலமாய் இருந்தனவென்று எவரும் நினையாமலிருக்குமாறு இரண்டு நல்ல விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறேம் : (a) பஞ்சாப் நாஷனல் பாங்கு இன்னும் நிலைத்திருக்கிறதைக்கொண்டு, இந்திய டைரெக்டர்களாலும் இந்திய உத்தியோகஸ்தர்களாலுமே நிர்வாகம் செய்யப்பட்டுவரும் பாங்குகளும் எத்தகைய கஷ்டங்களுக்கும் உள்ளடங்காமல் பிழைத்திருத்தல் சாத்தியமாகுமென்பதை அறிந்துகொள்ளவேண்டும். (b) பொதுவாகப் பல பாங்குகள் தாங்கள் கொடுக்கவேண்டிய பணத்தை முழுவதும் கொடுத்திருக்கிறபடியாலும் இன்னும் மற்றச் சில பாங்குகள் கொடுத்துவிட ஏதுவிருக்கிறபடியாலும் எல்லாப் பாங்குகளும் பத்

திரமற்றனவென்று சொல்லுதல் தவறென்பது இதனால் நன்கு விளங்கும்."

(அந்தப் பாங்குகள் 1917-ம் வருஷம் ஜூன் மாதத்திற்குப் பிறகு இன்னும் எவ்வளவோ அதிகத் தொகை கொடுத்துவிட்டபடியால் நான் அவர்களுடைய பட்டியை ஈண்டுக் குறிப்பிடாமல் விடுக்கிறேன்.)

அக்கமிட்டியார் தங்கள் விசாரணையின் முடிவைக் கீழ்க்கண்டவாறு சுருங்கக் கூறியிருக்கின்றனர் :—

"பொதுவாகப் பேசுமிடத்து, கைத்தொழிலும் பாங்குகளும் அழிந்துபோனதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டென்று அபிப்பிராயப்படுகிறோம் :—

(1) புதிதாக ஏற்படுத்தப்படும் எந்த வேலையிலும் சாதாரணமாய்க் காணப்படும் அனுபவமின்மையும், கருவிகளின் குறைபாடுகளும்.

(2) அரசாங்கத்தாரும், அரசாங்கத்தாரைப்போன்றவரும் பரிகார முறைகளைத் தேடாதிருத்தல். அதாவது, அரசாங்க ஆதரவுபெற்ற மாகாண பாங்கு பரிகார முறைகளைக் கையாண்டு உதவி வருதல்கூடும்."

## இந்தியருக்கு அரசாங்க ஆதரவும் பாங்கு விஷயமான பயிற்சியும் வேண்டும்.

நான் மேற்கூறியுள்ள விஷயங்களைக் கவனிக்குமிடத்து, இந்தியர்கள் கூட்டுப் பாங்குகள் வைக்கும் விஷயத்தில் அதைரியங்கொள்ளுதல் அநாவசியமென்பது நன்கு விளங்கும். (1)ஐரோப்பியருக்கு இராஜதானி பாங்குகளின் மூலமாக அரசாங்கத்தாரின் ஆதரவு கிடைத்திருப்பதுபோலவே தங்களுக்கும் அரசாங்கத்தாரின் ஆதரவும் அனுதாபமும் கிடைத்து, (2) தற்கால பாங்கு நிர்வாக முறைகளைத் தாங்களும் நன்குகக்

கற்றுக்கொள்வார்களாயின், இந்தியர்களும் மற்ற நாட்டினரைப்போலவே ஒரு நாட்டினருக்கு மிகவும் முக்கியமாகவுள்ள பாங்கு நிர்வாகத்தில் மிக்கதிறமையுடன் விளங்குவார்களென்பது இதனால் தெரியக் கிடக்கின்றது. அரசாங்கத்தாரின் உதவி இந்தியர்களுக்குக் கிடைக்கவேண்டுமாயின், பல விடங்களில் கிளைப் பாங்குகளுள்ள மத்திய அரசாங்க பாங்கு ஏற்படுத்தப் படும் விஷயம் உடனே எடுத்துக்கொள்ளப்படவேண்டும். இந்தியாவுடன் வியாபாரஞ் செய்யும் விஷயத்தில் இராஜதானி பாங்குகள் ஐரோப்பியருக்கு அளவற்ற நன்மைகளைச் செய்திருக்கின்றன. அவைகள் தங்களுக்கு இப்பொழுது கிடைத்துள்ள உரிமைப் பத்திரங்களின்படி, கைத்தொழில்களுக்கு உதவி செய்யச் சக்தியற்றவைகளாயிருக்கின்றன. மேலும், அவைகள் கடன் கொடுக்கக்கூடிய வழிகளிலும் ஐரோப்பியரிடம் விசுவாசங்கொண்டிருக்கின்றனவே யன்றி இந்தியருக்குச் சரியாகக் கடன் கொடுப்பதில்லையென்று சொல்லப்படுகிறது. லாகூரில் இந்தக் குறை விசேஷமாய் எடுத்துக்காட்டப்பட்டது. முன்னரே குறிப்பிடப்பட்டுள்ள லாகூர் உத்தியோகக் கமிட்டி தங்கள் அறிக்கையில் சொல்லியதாவது :—

" கஷ்டம் நேரிட்டபோது, இந்திய பாங்குகளுக்குள்ளேனும், இந்திய பாங்குகளுக்கும் ஆங்கிலேய பாங்குகளுக்குமேனும், அல்லது புதிய இந்திய பாங்குகளுக்கும் பழைய இந்திய பாங்குகளுக்குமேனும் கூட்டுறவு இல்லவேயில்லை. வங்காள பாங்கின் நிலைமையைப்பற்றிச் சாட்சிகள் தெரிவித்துள்ள விஷயங்களை நாங்கள் விசேஷித்துக் கவனிக்கவேண்டியிருக்கிறது. கஷ்டத்திற்குத் தப்பிய பிறகு பஞ்சாப்

நாஷனல் பாங்கு பாராட்டப்பட்டது என்பதிலிருந்து இப்பொழுது ஒற்றுமை யிருக்கிறதென்பதையும், இனி அவ்வொற்றுமை அதிகரிக்குமென்பதையும் தெரிந்து கொள்ளலாம். ஆயினும் மாகாண பாங்கு ஒன்று இல்லாதிருந்ததே காப்பாற்றப்படக்கூடிய பல பாங்குகள் அழிந்து போனதற்குக் காரணமாகும். வங்காள பாங்கு மிகவும் பெரியது. அதோடு அது மாகாண விஷயத்தைப்பற்றிச் சிறிதேனும் கவலை கொள்வதேயில்லை. மாகாண கவர்ன்மெண்டார் தயவையும் எதிர்பார்க்கிறதில்லை. லாகூரிலுள்ள கிளைப்பாங்கு உதவிசெய்யச் சம்மதித்து, கல்கத்தாவுக்குச் சிபார்சும் செய்தது. ஆனால் வங்காள பாங்கு அவ்வேண்டுகோளையும் சிபார்சையும் மறுத்துச் சும்மா இருந்துவிட்டது. அரசாங்கக் கடன் பத்திரத்தைப் பொறுப்பாக வாங்கிக்கொண்டு கூடப் பஞ்சாப் நாஷனல் பாங்குக்குக் கடன் கொடுக்க முடியாதென்று வங்காள பாங்கு மறுத்துவிட்டது.''

அரசாங்கத்தார் 1860-ம் வருஷத்தில் இராஜதானி பாங்குகளுக்கிருந்த நோட்டுகளை வெளியிடும் சுதந்தரத்தைப் பிடுங்கிக்கொண்டபொழுது அரசாங்கத்தார் பணத்தை அவைகள் உபயோகித்துக்கொள்ள உத்தரவளித்து உதவுவதாக வாக்களித்திருந்தனர். மேற்கண்ட சுதந்தரத்தைப் பிடுங்கியதற்குப் பதிலாக அரசாங்கத்தார் பாங்குகளுக்கு எவ்வளவு உதவி செய்ய ஒத்துக்கொண்டார்களென்பது பண இலாகாதார் வங்காள பாங்குக்கு 1860-ம் வருஷம் டிசம்பர் மீ 20உ விடுத்துள்ள அறிக்கையொன்றினால் நன்கு விளங்குகின்றது. மிஸ்டர் ப்ரன்யேட் என்பவர் தமது "இராஜதானி பாங்குகளின் வரலாறு" என்னும் புத்தகத்தின் 81-ம் பக்கத்தில் அக்கடிதத்திலிருந்து பின் வருமாறு எடுத்தாண்டிருக்கிறார் :—

"வங்காள பாங்கு தன்னுடைய உரிமையை இழந்ததற்குப் பதிலாக வேறு உரிமை பெறுதல் சுதந்தரமென்று கருதுதல் கூடாதெனினும், அது அரசாங்கத்தாரின் ஆதரவைப்பெறவேண்டிய நிலைமையில் இருக்கிறபடியால், நியாயமுள்ள எத்தகைய உதவியையும் அது அரசாங்கத்தாரிடமிருந்து எதிர்பார்க்கலாம்."

அரசாங்கத்தார் தங்களிடம் கைம்மிகுதியாகவுள்ள பணத்தில் இராஜதானி பாங்குகளில் வங்காள பாங்குக்கு 70 லக்ஷம் ரூபாய் வரையிலும், பம்பாய், மதராஸ் பாங்குகளுக்கு 50 லக்ஷம் ரூபாய் வரையிலும் வட்டியின்றிக்கொடுத்து உதவ ஒத்துக்கொண்டார்கள். அது முதல் அந்தப் பாங்குகள் அரசாங்கத்தாரின் பணத்தை மேற்கண்ட வரம்புக்கு அதிகமாகவே கையாண்டு வந்திருக்கின்றன. ஆனால் மிஸ்டர் ப்ரன்யேட் தம் புத்தகத்தின் 99-ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி "1876-ம் வருஷத்திற்கு முன்னரே, பாங்குகள் நோட்டுகள் வெளியிடாததனால் அடைந்த நஷ்டத்திற்காகப்போதுமான உதவி முன்னரே செய்யப்பட்டதென்று இந்தியா மந்திரியார் கருதியிருந்தனர்."

ஆதலின் அரசாங்கத்தார் இனிக் காலதாமதஞ்செய்யாமல் தங்களிடம் கைம்மிகுதியாகவுள்ள பணத்தை இராஜதானி பாங்குகளில் போட்டுவைப்பதை நிறுத்தி அரசாங்க பாங்கிலேயே வைக்கமுயலவேண்டும். இப்படிச் செய்வதனால் ஜனங்களுக்கு இப்போதைவிட அதிக நன்மையுண்டாகும்.

மூன்று இராஜதானி பாங்குகளின் வேலையைச் செய்வதற்காக "இந்தியா பாங்கு" என்னும் ஒரே பாங்கை ஏற்படுத்தும் விஷயம் 1860-ம் வருஷம் முதல் 1876-ம் வருஷம் வரையில் அரசாங்கத்தாரால் யோசிக்கப்பட்டு

வந்தது. ஆனால் அவ்விஷயமாக யாதொரு முடிவும் செய்யப்படவில்லை. இந்தியப் பண இலாகாவைப்பற்றியும் காகித நாணய இலாகாவைப்பற்றியும் விசாரணை செய்ய அரசாங்க விசாரணை சங்கத்தார் அவ்விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கலாயினர். அவர்கள் அதைப் பற்றி முடிவாக ஓர் அபிப்பிராயமும் சொல்லவில்லையெனினும், அவ்விஷயம் கூடிய சீக்கிரத்தில் கவனிக்கப்படவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அறிக்கையின் 222-வது பத்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள் :—

"கடைசியாக, இதைப்பற்றி எத்தகைய அபிப்பிராயம் வெளியிடப்படினும், இவ்விஷயம் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானதென்று நாங்கள் கருதுகிறோம்; இந்தியா மந்திரியாரும் இந்தியா கவர்ன்மெண்டாரும் இதைச் சீக்கிரத்திலேயும் மிக்க அக்கறையுடனும் கவனித்தல் அவசியமாகும். ஆதலின் அவர்கள் வெகு சீக்கிரத்தில் இதைப்பற்றி விசாரிக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். விசாரணை சங்கத்திற்குத் தெரிந்தெடுக்கப்படும் அங்கத்தினர் இத்துறையில் மிக்க அனுபவமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அச்சங்கத்தினர் பாங்குகளில் அக்கறை யுள்ளவர்களை நன்கு விசாரித்து ஆய்ந்தோய்ந்து பார்த்து, இந்தியாவில் அரசாங்க பாங்கோ, மத்திய பாங்கோ ஏற்படுத்துவது உசிதமல்லவென்றாவது தெரியப்படுத்தவேண்டும். அல்லது ஏற்படுத்தலாம் என்றால், உடனே அமுலுக்குக்கொண்டு வரக்கூடிய அப்பாங்கு சம்பந்தமான எல்லா விஷயங்களும் அடங்கிய விஸ்தாரமான ரிபோர்ட்டையாவது அனுப்பவேண்டும்."

இந்தச் சிபார்சு 1914-ம் வருஷத்தில் செய்யப்பட்டது. யுத்த காரணத்தினால் இவ்விஷயம் ஆலோ

சனைக்கு எடுத்துக்கொள்ளப்படாமலிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அரசாங்கத்தார் அதை ஆலோசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நாட்டின் நன்மையை உத்தேசித்து இத்தகைய மத்திய பாங்கு ஏற்படுத்தப் படுதல் சாலச் சிறந்ததாகும். அரசாங்கத்தாரின் கைம்மிகுதியாகவுள்ள பணமெல்லாம் இந்தப் பாங்கிலேயே வைக்கப்பட்டிருக்கவேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்கான கடன்களைக் கொடுத்துதவும் பொறுப்பையும் இந்தப் பாங்கே வகிக்கவேண்டும்.

அரசாங்க பாங்கு ஏற்படுத்தப்படுவதனால் விளையக்கூடிய நன்மைகள் பல. அவற்றுள் முக்கியமானது இந்தியர்கள் பாங்கு நிர்வாகத்தைக் கற்றுக்கொள்வதாகும். அத்தகைய பயிற்சி இருக்கவேண்டுவது இன்றியமையாததாகும். அறிக்கையின் 282-வது பத்தியில் என் உடன் அங்கத்தினர்கள் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள் :—

"பண்டைக்காலத்தில் இந்தியர்கள் வியாபாரக் கல்வியிலும் பாங்கு நிர்வாகத்திலும் பயிற்சி பெற வசதிகள் இல்லாதிருந்தமையால், இந்தியாவில் இப்பொழுது பயிற்சிபெற்ற இந்திய பாங்கு உத்தியோகஸ்தர்கள் கிடைத்தல் அருமையாயிருக்கிறது. கிராமாந்தரங்களிலுள்ள ஜனங்களோ பாங்குகளினால் உண்டாகும் நன்மைகளை இன்னும் அறிந்துகொள்ளாமலிருக்கிறார்கள். இக்காரணங்களினாலேயே வெளிப்பிரதேசங்களில் பாங்குகள் பரவுதல் தாமதித்திருக்கின்றது. பஞ்சாப் போன்ற விடங்களில் முன்னேற்றம் அதிவேகமாயிருந்தபடியால் பல நஷ்டங்களும் கஷ்டங்களும் உண்டாயின. பாங்குகளின் முக்கியகாரியஸ்தலங்களின் நிர்வாகம் சரியாக நடத்தப்படவில்லை.

இவைப் பாங்குகளில் பல சேம நிதிக்குப்பணம் வாங்கு வதைத் தவிர வேறொரு வேலையும் செய்யவில்லை."

மேற்குறிப்பிட்ட லாகூர் கமிட்டியின் அபிப்பிராய மும் பாங்கு நிர்வாகப் பயிற்சியை அபிவிருத்திசெய்ய வேண்டு மென்பதையே வற்புறுத்துகின்றது. இச் சந்தர்ப்பத்திலும், நாம் ஜப்பானில் பாங்கு நிர்வாக விஷயம் எத்தகைய முன்னேற்ற மடைந்திருக்கிற தென்பதைக் கவனித்தல் அவசியமாகும் 1868-ம் ஆண்டில் ஜப்பான் ஒருவகையான பண நிர்வாகத்தைக் கையாண்டு வந்தது எனினும் "அந்நிய நாட்டுப் பண நிர்வாக முறையையாவது, பாங்கு நிர்வாக முறையை யாவது, கூட்டுக் கம்பெனி ஏற்படுத்தும் முறையை யாவது பலர் அறியாதிருந்தனர்." "தேசியப் பண நிர் வாகமும் பொருளாதார நிலைமையும் அபாயகரமான நிலைமையிலிருந்தன". "ஜப்பானியர் முதலை ஒன்று சேர்ப்பதிலாவது ஐக்கியச் சங்கங்கள் ஏற்படுத்துவதி லாவது அனுபவமில்லாதவராயிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு முயற்சியையும் பிரத்தியேகமாகவேசெய்து வந்தார்கள். அப்பொழுது நடத்தப்பட்டுவந்த பண உதவி செய்யக்கூடிய சங்கங்கள் செழித்தோங்க வில்லை.' 1870-ம் வருஷத்திலேயே பண நிர்வாக இலாகாவைச்சேர்ந்த மிஸ்டர் ஹிராபமி இடோ (பிறகு பிரின்ஸ் இடோ என்று வழங்கப் பெற்றவர்) பண நிர் வாகமும் பொருளாதார விஷயமும் ஒழுங்குபடுத்தப் படுவதனாலேயே அரசாங்க காரியங்கள் குறைவின்றி நடக்குமென்றும், அத்தகைய சீர்திருத்தம் செய்யப் படாவிடில் ஆட்சிமுறை நன்மை விளைப்பதாயிராதென் றும் அரசாங்கத்தாருக்கு விண்ணப்பம் செய்து கொண்டார். அவருடைய ஆலோசனையை அங்கீ

கரித்து, அரசாங்கத்தார் பண நிர்வாக முறையையும் அது எங்ஙனம் அனுஷ்டிக்கப்படுகிறதென்பதையும் கற்று வருமாறு அவரை அமெரிக்காவுக்கு அனுப்பினர். அவர் அங்கு சென்று பயிற்சிபெற்றுத் திரும்பிய பிறகு அரசாங்கத்தாருக்குக் கீழ்க்கண்ட மூன்று விஷயங்களைத் தெரிவித்தார் :—

" முதலாவது, நாணயங்களில் முக்கியமானது தங்க நாணயமாக இருக்கவேண்டும். இரண்டாவது, நோட்டுகளை மாற்றுவதற்காகக் கடன் பத்திரங்களை வெளியிடவேண்டும். மூன்றாவது, காகித நாணயத்தை வெளியிடுவதற்காகக் கம்பெனிகள் ஏற்படுத்தப்படவேண்டும்."

இவைகளையும் இன்னும் வேறு சில சிபார்சுகளையும் பற்றி ஆலோசனை செய்து, 1871-ம் வருஷம் நாஷனல் பாங்குகள் ஏற்படுத்துவதற்காக ராஜா உத்தரவு பெற்று அரசாங்கத்தார் சில சட்டங்களை ஏற்படுத்தினர். முதல் நாஷனல் பாங்கு 1873-ம் வருஷம் டோகியோவில் ஏற்படுத்தப்பட்டது. அஃது ஏற்படுத்தப்பட்ட பத்து மாதங்களுக்குள் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது. ஜப்பானில் இப்பொழுது ஐந்து வகையான பாங்குகள் இருக்கின்றனவென்பதைச் சொல்வதைத் தவிர, ஜப்பானில் பாங்கு விருத்தியடைந்த வரலாற்றை அதிகமாகச்சொல்லவேண்டுவது அநாவசியம். இப்பாங்குகள் அவைகள் செய்யும் வேலைக்கிணங்க (1) உள்நாட்டு வியாபாரம், (2) வெளிநாட்டு வியாபாரம், (3) கைத்தொழில், (4) விவசாயம், (5) குடியேற்றம் முதலிய விஷயங்களைக் கவனிப்பதற்காகப் பிரத்தியேகமான பாங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 1913-ம் வருஷத்தில் இந்தப் பாங்குகளின் மொத்தத்

தொகை 2,152. அவ்வருஷத்திய முதல் ஆறுமாத முடிவில் அவைகளுள் 2,100 சாதாரண பாங்குகளாக வும், சேம நிதியைக்கொண்டுள்ள பாங்குகளாகவும் இருந்தன. வருஷக்கடைசியில் 52 விசேஷித்த பாங்கு கள் இருந்தன. இந்தப் பாங்குகளின் பங்கு கொடுக் கப்பட்ட மூலதனம் 1913-ம் வருஷத்தில் 436, 188,27 என்; பிரத்தியேகநிதி 139,109,917 என்; அவை களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த மொத்தத் தொகை 10,811,884,300 என். (என் என்பது ஒன்றரை ரூபாய்.)

கௌண்ட் அகூமா என்பவர் எழுதியுள்ள "புதிய ஜப்பானின் ஐம்பது வருஷம்" என்னும் நூலின் முதற் பாகத்தின் 532-ம் பக்கத்தில், முதல் நாஷனல் பாங் கின் தலைவரான பாரன் ஷிபுஸாவா, ஜப்பானின் பாங்கு நிர்வாக வளர்ச்சியைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :—

"இவ் வியாசத்தை முடிக்கு முன் இதனை எழுது பவர் ஜப்பானின் பாங்கு நிர்வாக வளர்ச்சிக்காகத் தாம் கொண்டுள்ள மகிழ்ச்சியைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. ரெஸ்டொரேஷன் காலத்தில் ஒரு சிறு கால்வாயைப் போலிருந்த ஜப்பானிய பாங்கு நிர்வாக விஷயம் படிப்படியாகப் பெருக்கெடுத்தோடி அகன்று கப்பல் செல்லக்கூடிய பெரிய ஆறாக இப்போது மாறி யிருக்கிறது. ஐரோப்பிய, அமெரிக்க நாட்டினரின் உதா ரணத்தைப் பின்பற்றியதே இவ்வளர்ச்சிக்குக்காரணம். அதற்காக ஜப்பானியர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். தற்போது லண்டனி லுள்ள பாரிஸ் பாங்கின் டைரெக்டராயுள்ள அலெக் ஸாண்டர் ஆலன் ஷாண்ட் என்பவருக்கும் ஜப்பானியர் என்நாளும் கடமைப்பட்டிருக்கின்றனர். பண நிர்வாக

இலாகாதாரின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர் 1872-ம் வருஷத்தில் ஜப்பானுக்கு வந்து அவ்விலாகாதாருக்குப் பண நிர்வாக விஷயமாய் ஆலோசனை சொல்லியும், பாங்கு நிர்வாக விஷயத்தைப்பற்றி அரிய புத்தகங்களை எழுதி வெளியிட்டும், ஜப்பானியச் சிறுவர் பலரை அத்துறையில் பயிற்சியும் செய்வித்தார். இவ்விதங்களால் பாங்கு நிர்வாக விஷயம் வளர்ச்சி யடைவதற்கு அவரும் காரணமாயிருந்தனர்."

1872-ம் ஆண்டில் இந்தியா ஜப்பானைக்காட்டிலும் எவ்வளவோ மேலான நிலைமையிலிருந்தது. இப்பொழுது நம் நாடு ஜப்பானைக்காட்டிலும் எவ்வளவோ தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றது. பாங்கு நிர்வாக முறை, ஜப்பானில் 1872-ம் வருஷத்தில் இருந்ததைவிட இப்பொழுது இந்தியாவில் சிறிதுமேலான நிலைமையிலேயே இருக்கிறது. ஆயினும் அது வளர்ச்சியடைய வேண்டுமாயின், இந்தியா கவர்ன்மெண்டாரும் வெகு காலத்திற்குமுன் ஜப்பானியர் கையாண்ட முறையைக் கைக்கொள்ளவேண்டும். பாங்கு நிர்வாக விஷயத்தில் புலமை வாய்ந்த ஆசிரியரைக்கொண்டு அரசாங்கத்தார் இந்தியச் சிறுவருக்குப் பாங்கு நிர்வாக முறையைக் கற்பிக்கவேண்டும். அரசாங்க பாங்கு ஏற்படுத்தக் காலதாமதமானாலும், தற்போழ்து அரசாங்கத்தாரின் உதவிபெற்றுவரும் இராஜதானி பாங்குகளிலும் இதர பாங்குகளிலும், வியாபாரக் கலாசாலைகளில் படித்துத் தேறியஇந்தியரை பாங்கு நிர்வாகத்தில் பயிற்சி செய்வித்தற்காகத் தங்களிடம் வைத்துக் கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும்.

## மாகாணக் கைத்தொழில் இலாகாக்கள்.

கீழ்க்குறித்த நிபந்தனைகளுக்குட்பட்டு மாகாணக் கைத்தொழில் இலாகாக்களை உண்டாக்கவோ விருத்தி செய்யவோ என் உடன் அங்கத்தினர்கள் கொடுத்துள்ள அபிப்பிராயத்தை நானும் அங்கீகரிக்கிறேன்:—

(1) எங்கள் அறிக்கையின் 306-ம் பத்தி (c) :— வியாபாரக் கைத்தொழில் கல்வி விஷயம் இந்த இலாகாதாரின் பொறுப்பிலேயே விடப்படலாகாதென்று நினைக்கிறேன் அஃது கல்வி இலாகாதாரிடமாவது கல்வி இலாகாதாரும், கைத்தொழில் இலாகாதாரும் சேர்ந்து நியமிக்கும் கமிட்டியாரிடமாவது ஒப்புவிக்கப்பட வேண்டும். இத்தகைய ஏற்பாட்டினுல் கைத்தொழில், வியாபாரக் கல்வியறிவும் அவைகளில் பயிற்சியும் சரியானபடி கவனிக்கப்பட இடமுண்டாகும்.

கைத்தொழில் இலாகா டைரெக்டர் பல வேலைகளைக் கவனிக்கவேண்டியிருக்கின்றமையின், அவர் கைத்தொழிற் கல்வியைச் செவ்வனே கவனித்தல் முடியாது. டெபுடி டைரெக்டர் கைத்தொழிற் பாடசாலைகளைப் பரிசோதித்து வரவேண்டுமென்று (எங்களுடைய அறிக்கையின் 331-வது பத்தியில்) கூறப்பட்டிருக்கிறது. தம்மால் செய்யமுடியாத வேலைகளின் பொறுப்பை டைரெக்டரிடம் ஒப்புவிப்பதனுல் கைத்தொழிற் பயிற்சி திறம்படவிராது.

(2) எங்கள் அறிக்கையின் 307-ம் பத்தி :—விவசாய எஞ்சினீயரின் வேலை விவசாய இலாகா டைரெக்டரின் பொறுப்பில் இருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன். "பயிர் வேலைக்காகச் சக்தியால் ஓடும்

இயந்திரங்களை ஸ்தாபிப்பதோடுமட்டும்" விவசாய எஞ்சினீயரின் முடிந்துவிடாது. தண்ணீர் பாய்ச்சும் வசதிகளும் தண்ணீர் வடியவேண்டிய வசதிகளும் அதில் அடங்கும். சக்தியால் ஓடும் இயந்திரங்களை ஸ்தாபிக்க வேண்டிய சாதாரண வேலையைவிட இவ்விஷயங்கள் எவ்வளவோ முக்கியமானவை. இயந்திரங்களை ஸ்தாபிக்கும் வேலை எஞ்சினீயர்கள் கைத்தொழில் இலாகா டைரெக்டருக்குக் கீழிருந்தாலும் விவசாய இலாகா டைரெக்டருக்குக் கீழிருந்தாலும் செவ்வனே செய்யப்பட்டுவரும்.

(3) அறிக்கையின் 312-ம் பத்தி:—கைத்தொழில் இலாகா டைரெக்டரே வியாபாரக் கைத்தொழில் விஷயங்களில் அரசாங்கத்தாருக்குக் காரியதரிசியாயிருக்கக்கூடாதென்று நான் நினைக்கிறேன். அவர் அங்ஙனம் நியமிக்கப்படுவாராயின், அவருடைய ஆலோசனைகளை அந்த இலாகா அங்கத்தினரின் ஆராய்ச்சிக்கு அனுப்புவதன் நோக்கமே நடவடிக்கையில் கெட்டுப்போம். டைரெக்டர் பெரிய விஷயங்களைப்பற்றிக் கவனிப்பாராதலின், இவ்வாராய்ச்சி உண்மையானதாக இருத்தல் வேண்டும்.

(4) அறிக்கையின் 313-ம் பத்தி:—டைரெக்டருக்கும் உதவி டைரெக்டர்களுக்கும் கொடுக்கப்படவேண்டிய சம்பளத்தைப்பற்றிக் கூறும்போது, அவ்வுத்தியோகஸ்தர்கள் ஐரோப்பியர்களாகவே இருப்பார்களென்று கருதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தியர்களே இவ்வுத்தியோகங்களில் இருப்பார்களென்று எண்ணிக்கொண்டு சம்பளவிகிதம் ஏற்படுத்தப்படவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த

உத்தியோகங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து ஐரோப்பியர் வரவழைக்கப்படின் அவர்களுக்குச் சாதாரண சம்பளத்திற்குமேல் காற்பங்கு உயர்த்திக்கொடுக்க வேண்டும். டைரெக்டரின் சம்பளம் 1000 ரூபாயில் தொடங்கி 2000 ரூபாய் வரையில் உயர்வதாக இருக்க வேண்டுமென்று நான் கூறுவேன்.

(5) அறிக்கையின் 314-ம் பத்தி :—டெபுடி டைரெக்டரின் சம்பளம் 500 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரையில் உயர்வதாக இருக்கவேண்டும்.

(6) அறிக்கையின் 317-ம் பத்தி :—சர்க்கில் உத்தியோகஸ்தர்களின் சம்பளம் 200 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையில் இருக்கவேண்டும்.

(7) டைரெக்டரும் கைத்தொழிற்சங்கமும் ஏற்பட்டு, தாங்கள் செய்யவிருக்கும் வேலை முறையைத் தெரிந்துகொண்டு மற்ற உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தவேண்டும்.

## இம்பீரியல் கைத்தொழில் இலாகா.

அறிக்கையின் 321-ம் பத்தி :—இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக சபையில் கைத்தொழில் இலாகாவுக்குப் பிரத்தியேகப் பிரதிநிதி ஒருவர் இருக்கவேண்டுமென்று என் உடன் அங்கத்தினர் தெரிவித்திருப்பதை நான் அங்கீகரிக்கிறேன்.

அறிக்கையின் 322-ம் பத்தி :—ஆனால் இந்தியக் கைத்தொழிற்சங்கம் என்ற ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட வேண்டுவது அவசியமா என்று நான் சந்தேகங் கொள்ளுகிறேன். என் உடன் அங்கத்தினர்கள் அந்தச் சங்கம் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்வதற்காக

ஏற்படுத்தப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்படு கிறார்கள்.

(1) "இம்பீரியல் கைத்தொழில் இலாகா தன் சம்பந்தமாகவுள்ள சட்டங்களின் நிர்வாகத்தையும் கட்டுப்படுத்தும்."—கைத்தொழில் இலாகா அங்கத்தி னர் தம் உதவி உத்தியோகஸ்தர்களுடன் வேலைசெய்ய இச்சங்கம் ஏற்படுத்தப்படவேண்டிய அவசியமில்லை.

(2) "கைத்தொழில், வியாபாரக் கல்வி உள்பட எல்லாக் கைத்தொழில் முறைகளையும் சரிவர நடத்து வது இச்சங்கத்தின் பொறுப்பாகும்."—இவ்வதிகாரம் மாகாண கவர்ன்மெண்டாரிடம் ஒப்புவிக்கப்படாவிடி னும், கைத்தொழில் இலாகா அங்கத்தினர் இவ்வேலை யைச் செய்யவும் சங்கத்தின் அங்கத்தினரின் உதவி தேவையாயிராது. கல்வி இலாகா அங்கத்தினர் இங் ஙனமே அவ்விலாகா வேலையைப் பார்த்துவருகிறார். அறிக்கையின் 352-ம் பத்தியில் என் உடன் அங்கத் தினர்கள் இவ்விஷயமாய் யாது எதிர்பார்க்கப்படுகிற தென்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் :—

"கைத்தொழில்களில் ஊக்கமுண்டாக்குதல், பிர தேச அரசாங்கத்தாருக்கு ஆலோசனை சொல்லுதல், கைத்தொழில் வியாபாரக் கல்வி என்ற 9, 10 வது தலைப்புக்களின் கீழ்க் கைத்தொழிற் சங்கத்தாரின் அங்கத்தினரின்கீழ் வேலைசெய்யும் கைத்தொழில் நிபு ணருக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்திற்காகவே இம்பீரியல் கவர்ன்மெண்டார் பணச்செலவு செய்ய வேண்டியிருக்கும். அவர்களால் செய்யப்படவேண்டிய வேலை அவர்களுள் ஒருவராலேயே பகிர்ந்து கொடுக் கப்படவேண்டும். அவர் சீனியர் விசிட்டர் என்று வழங்கப் பெறலாம். இன்ஸ்பெக்டர்கள் கைத்தொழில்

பள்ளிக்கூடங்களைப் பரீக்ஷிப்பதையே தங்கள் வேலையாகக்கொள்ளவேண்டும். இம்பீரியல் கவர்ன்மெண்டாருக்காகப் பெரிய கைத்தொழில் கலாசாலைகளைப் பரீக்ஷிக்கும் வேலை கைத்தொழில் சங்கத்தின் அங்கத்தினரிடமும் உயர்ந்த கைத்தொழில் உத்தியோகஸ்தர்களிடமும் ஒப்புவிக்கப்படவேண்டும்."

"இம்பீரியல் விசிட்டிங் நிபுணர்களை" ஏற்படுத்துவதற்கு யாதொரு காரணமுமில்லையென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அவர்கள் கோச்சு வண்டிக்கு ஐந்தாவது சக்கரம்போலிருப்பார்கள். அஃது எங்ஙனமாயினும், கைத்தொழில் சங்கத்தின் அங்கத்தினர்கள் செய்யவேண்டிய வேலையெல்லாம் "உயர்தரக் கைத்தொழிற் பள்ளிக்கூடங்களைப் பரீக்ஷிக்க" வேண்டியதே. இப்பள்ளிக்கூடங்கள் மாகாண கவர்ன்மெண்டாருக்கு உட்பட்டிருக்கும். இப்படிப்பட்ட உயர்ந்த மேற்பார்வையில்லாததால் அவைகள் எவ்விதத்திலும் குறைபாடுள்ளவைகளாயிரா. கைத்தொழில் இலாகா அங்கத்தினர் சுற்றுப் பிரயாணஞ் செய்யும்பொழுது அவைகளில் சில்வற்றிற்குச் சென்று அவைகளைக் கடைத்தேற்றலாம்.

(3) "தேவையானபோது மாதிரித் தொழிற்சாலைகளையும், ஆராய்ச்சிசாலைகளையும் ஏற்படுத்திக் கைத்தொழில் அபிவிருத்தியைப் பெருக்குவதே இவ்விலாகாவின் மற்ற வேலைகள்." 356-வது பத்தியில் என் உடன் அங்கத்தினர் பின்வருமாறு சொல்லுகின்றனர்:

"இம்பீரியல் இலாகாதார் மாதிரிக் கைத்தொழில்களாக ஏற்படுத்தக்கூடியவைகளாவன; இவ்வேலைக்கு வெவ்வேறு சாஸ்திரங்களில் தேறியிருக்கும் நிபுணர்கள் வேண்டியிருப்பதால் (1) கண்ணாடி வேலைகள்;

(3) மரவெண்ணெய் வடித்தல்; (இம்முறை பலவித மான மரங்களுக்கும் அனுசரிக்கப்படவேண்டும்.) இவை ஒவ்வொன்றுக்கும் வேண்டிய தொழிற்சாலை ஏற்படுத்தப்பட வசதியான இடத்தைத் தேர்ந்தெடுத் தலும் பரிசோதனையின் நோக்கம் எதுவென்று நிதா னித்தலும் கைத்தொழில் சங்கத்தாரின் வேலை யாகும். இப்பரிசோதனைகள் நிபுணர்களிடம் ஒப்பு விக்கப்படவேண்டும்."

இத்தகைய தொழிற்சாலைகள் வேண்டிய வசதிக ளிருக்கு மிடங்களில் ஏன் மாகாண கவர்ன்மெண்டா ரால் ஏற்படுத்தப்படலாகாதென்பது எனக்கு விளங்க வில்லை. இம்பீரியல் இலாகாதாரே இவ்வேலையைச் செய்வதாக வைத்துக்கொண்டாலும், கைத்தொழில் இலாகா அங்கத்தினர் நிபுணர்களின் ஆலோசனையின் படியே நடப்பாராதலின், அவருக்குக் கைத்தொழில் சங்கத்தாரின் உதவி இருக்கவேண்டுவது அநாவசிய மாகும்.

(4) "முழுதும் அரசாங்கத்தாருக்குக் கட்டுப்பட்ட தொழிற்சாலைகளின் நிர்வாகம்."—அத்தகைய தொழிற் சாலைகள் ஒவ்வொன்றிற்கும் மானேஜரோ சூபரின் டெண்டெண்டோ நியமிக்கப்படுவர். அங்ஙனம் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டபிறகு, எல்லா வற்றிற்கும் ஒரு பொது மேல்விசாரணைக்காரரை (சூப ரின்டெண்டெண்டு) ஏற்படுத்தும் விஷயம் யோசிக்கப் படலாம். இவ்வேலையைச் செய்வதற்கு உயர்ந்த சம் பளம் வாங்கும் சங்க அங்கத்தினர் ஒருவர் வேண்டிய தில்லை.

(5) "இம்பீரியல் இலாகாதார் உதவிசெய்யவேண் டியிருக்கும் சொந்த முதலைக்கொண்டு விவசாய கைத்

தொழில்களை ஆரம்பிக்க விரும்புவோர்களுக்கு உதவியான ஏற்பாடுகளைச் செய்தல்."—அவசிய மேற்படும் போது கைத்தொழில் இலாகா அங்கத்தினரே இவ் வேலையைச் செய்யுமாறு விடப்படவேண்டும். திருப்திகரமாயிருந்தால் சொந்தக் கைம்முதலைக்கொண்டு ஸ்தாபிக்கப்படும் கைத்தொழிற்சாலைகளுக்கு உதவிசெய்யும் பொறுப்பு, பொதுவாய் மாகாண கவர்ன்மெண்டாரிடம் இருக்கவேண்டும். இம்பீரியல் இலாகாதாரின் உதவிவேண்டியிருக்கக்கூடிய ஒரு பிரத்தியேக கைத்தொழில் வகுப்பு உண்டாக்கப்படலாகாதென்பது என்னுடைய அபிப்பிராயம்.

(6) "சாமான்களை வழங்குதல்."—இதற்காக, ஒரு கண்ட்ரோலர் ஜெனரலும், நான்கு டெபுடி கண்ட்ரோலர்களும், ஏழு உதவி கண்ட்ரோலர்களும், ஆறு இன்ஸ்பெக்டர்களும், இருபது உதவி இன்ஸ்பெக்டர்களும், சாமான்கள் ஒப்பந்த மேல்விசாரணை உத்தியோகஸ்தர் ஒருவரும் சேர்ந்த அநாவசியமாய்ப் பெரியதான ஓர் ஆபீஸ் ஏற்படுத்தப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது, கைத்தொழில் சங்கத்தின் அங்கத்தினர் செய்யக்கூடிய வேலை ஒன்று மிராதென்று தோன்றுகிறது

(7) "வியாபாரக் கைத்தொழில் விஷயங்களைத் திரட்டி வெளியிடுதல்."—இதற்காகவும் உயர்ந்த சம்பளம் பெறும் பிரத்தியேக டைரெக்டர் ஒருவரும், அவருக்கு உதவியாகக் கல்கத்தாவுக்கும் பம்பாய்க்குமாக இரண்டு டெபுடி டைரெக்டர்களும் நியமிக்கப்படவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(8) "தன் அதிகாரத்தின் கீழ்வரும் சாஸ்திரசம்பந்தமான இலாகாக்களையும் உத்தியோகஸ்தர்களையும் நிர்வாகம் செய்தல்."—ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு இம்பீரியல் இலாகாவிற்கும் ஒவ்வொரு தலைவர் நியமிக்கப்படுவர். போதிய திறமை வாய்ந்த தலைவர் நியமிக்கப் பெறின் அந்த இலாகாவிற்கு வெளிப்புறத்து உதவி அநாவசியமாகும். வேண்டிய உதவியைக் கைத்தொழில் இலாகா அங்கத்தினரே செய்யக்கூடும்.

இக்காரணங்களைக்கொண்டே, நான் இம்பீரியல் கைத்தொழில் நிர்வாக சங்கமொன்று ஏற்படுத்தப்படுதல் அநாவசியமென்று நினைக்கிறேன். மாகாணங்களில் ஏற்படுத்துவதுபோலவே, இங்கும் ஓர் ஆலோசனை சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். அச்சங்கத்தின் அங்கத்தினர் பெரும்பாலும் சட்டசபையாரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும், சிறு பாகத்தவர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். இங்ஙனம் செய்வதனால் வருஷவாரியில் சம்பளத்தில் மாத்திரம் இரண்டு லக்ஷம் ரூபாய் மிகுதியாகும். இச்சங்கம் ஏற்படுத்தப்படாமலிருப்பின் இன்னொரு நன்மையும் உண்டாக இடமுண்டு. என் உடன் அங்கத்தினர் யோசனையின்படி கைத்தொழிற் சங்கம் ஏற்படுத்தப்பட்டால், இலாகா அங்கத்தினர் இந்த வேலையைத் தான் செய்வதென்னும் வரையறையில்லாமலிருக்க நேரிடும். அங்ஙனம் ஏற்படுத்தப்படாவிடின் அவர் தம் வேலையை நன்கறிந்து செய்வர். என் உடன் அங்கத்தினர் (அறிக்கையின் 328-ம் பத்தியில்) கைத்தொழிற் சங்கத்தை எங்கு ஏற்படுத்துவதென்று

சிபார்சு செய்வதில் ஏற்பட்ட சிரமமே அஃது ஏற்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தில் எனக்குள்ள சந்தேகத்தை அதிகப்படுத்துகிறது. அவர்கள் "கைத்தொழிற் சங்கத்தின் பிரதான காரியஸ்தலம் இந்தியா கவர்ன்மெண்டாருடனேயே இருக்கவேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் "சென்ற காலத்தில் தங்களுக்குள்ள அனுபவத்தைக்கொண்டு, கைத்தொழிற் சங்கத்தின் வேலைகள் நாட்டின் கைத்தொழில் வாழ்க்கையோடு பிணைப்புண்டிருக்கவேண்டுமென்று நன்கு உணர்ந்திருக்கிறார்கள்." ஆனால் "அதற்குக் கீழிருக்கும் இலாகாக்கள் பலவற்றிலும் வேலை செய்பவர்கள் பெரிய கைத்தொழில் ஸ்தானங்களில் வேலைசெய்து கொண்டிருப்பார்களாதலாலும், சங்கத்தின் அங்கத்தினர்கள் கைத்தொழிற் பயிற்சி யுடையவர்களாதலாலும், கிரமமாகச் சுற்றுப் பிரயாணஞ் செய்வார்களாதலாலும், இக்குறை நீங்க இட முண்டாகும்" என்று நினைக்கிறார்கள். "மற்றக் கைத்தொழில் இடங்களைப் பற்றி ஒரு விதமான அதிருப்தியையும் உண்டு பண்ணாமல் தாங்கள் இச்சங்கத்திற்கு ஒரு பிரதான காரியஸ்தலத்தை ஏற்படுத்துவது கஷ்டம்" என்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆதலின் இந்தியக் கைத்தொழிற் சங்கமும் வருடா வருடம் இந்தியா கவர்ன்மெண்டாருடன் ஸிம்லாவிலிருந்து டெல்லிக்குப்போய் வந்துகொண்டிருக்கவேண்டுமென்று என் உடன் அங்கத்தினர் தீர்மானித்திருக்கின்றனர். இஃது அங்கீகரிக்கத்தக்க ஏற்பாடென்று எனக்குத் தோன்றவில்லை.

## இரசாயன ஆராய்ச்சி நிர்வாகம்.

இரசாயன ஆராய்ச்சியின் பொது நிர்வாக விஷயம் இம்பீரியல் கைத்தொழில் இலாகாதாரிடம் ஒப்புவிக்கப்படவேண்டுமா வென்று நான் சந்தேகிக்கிறேன். (அறிக்கையின் 324-ம் பத்தி). நான் சிபார்சு செய்துள்ள "இம்பீரியல் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூட்" என்னும் சர்வ கைத்தொழில் கலாசாலையின் இரசாயன சாஸ்திர போதனை இலாகாதாரிடமே இப்பொறுப்பு ஒப்புவிக்கப்படவேண்டுமென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். யோசிக்கப்பட்டுள்ள இம்பீரியல் கைத்தொழில் இலாகாவைப்போன்ற ஒரு கவர்ன்மெண்ட் நிர்வாக இலாகாவிடம் ஆராய்ச்சி விஷயம் ஒப்புவிக்கப்படுதல் எவ்விதத்திலும் ஏற்றதன்று. இலாகாவில் நியமிக்கப்படும் "பேர்போன இரசாயன சாஸ்திரி" நாளாக நாளாகத் தம்மை ஒரு நிர்வாக உத்தியோகஸ்தராகக் கருதுவாரேயன்றி, தம்மிடமுள்ள கல்வித் திறமையைக் காப்பாற்றிக்கொண்டு வரமாட்டார். தற்போது, ஒரு பரிசோதனை செய்து முடித்த இரசாயன சாஸ்திரியே அதன் முடிவிற்குப் பொறுப்புள்ளவரா யிருக்கிறார். அவருக்குத் தம் பரிசோதனையின் முடிவை வெளிப்படுத்த உரிமையும் உண்டு. இப்பொழுது செய்யப்பட்டுள்ள யோசனையினால் அவர் இச்சுதந்தரத்தை இழந்துவிடுவார். ஓர் ஆராய்ச்சி முடிவைப் பிரசுரிக்கலாமா கூடாதா வென்பது பிரதான இரசாயன சாஸ்திரியின் அபிப்பிராயத்தை அனுசரித்தே இருக்கும்.

இக்காலம், விஷயங்களைப் பிரித்துக்கொண்டு அவைகளில் தேர்ச்சியடையும் காலமாக இருக்கிறது. ஒருவர்

சாஸ்திர ஞானியாகவேண்டுமாயின் சாஸ்திரக்கல்வியின் ஏதேனுமொரு பகுதியை அவர் தனித்தெடுத்துக்கொண்டு பயிற்சிபெறல் அவசியமாகும். இரசாயன சாஸ்திர நிபுணரொருவர் இரசாயன சாஸ்திரத்தின் ஒரு பகுதிக்குமேல் எடுத்துக்கொண்டு அவைகளில் பயிற்சி பெற்றிருத்தல் அசாத்தியம். பொதுவாகப் பேசுமிடத்து, பிரதான இரசாயன சாஸ்திரி தமக்கு அனுபவமுள்ள பிரிவைத் தவிர மற்றப் பிரிவுகளின் ஆராய்ச்சி சம்பந்தமாக முடிவான அபிப்பிராயங் கூற யோக்கியதையற்றவராவர். டாக்டர் போஸ் தான் டாக்டர் போஸின் குணகுணங்களை அறிந்து சொல்லக்கூடியவர். தம் பிரிவில் எவ்வளவு தான் தேர்ச்சிபெற்றிருப்பினும், ஓர் உத்தியோகஸ்தர் தம்முடைய வேலையை அங்கீகரிக்கவோ மறுக்கவோ அதிகாரம் பெற்றிருப்பின், டாக்டர் போஸ் போன்றவர்கள் வேலைசெய்ய வரமாட்டார்கள்.

டேராடூன் காட்டிலாகா ஆராய்ச்சிசாலையிலுள்ள மிஸ்டர் புரான் சிங் எங்களுக்கு அனுப்பிய குறிப்பில் ஆராய்ச்சி விஷயம் நிர்வாக உத்தியோகஸ்தரின் அதிகாரத்தின் கீழ் விடப்படலாகாதென்று மறுத்திருக்கின்றனர். அவர் கூறியிருக்கும் விஷயங்கள் முக்கியமானவையாதலால் அதைக்கீழே வரைந்திருக்கிறேன் :

"(1) சாஸ்திரக் கைத்தொழில் ஆராய்ச்சி, சர்வகலாசாலையாரால் செய்யப்பட்டால் ஜனங்களுக்கு எவ்வளவு திருப்தியை உண்டாக்குமோ அவ்வளவு அரசாங்கத்து இலாகாக்களால் செய்யப்பட்டால் உண்டாக்குவதில்லை.

“ (2) சர்வகலாசாலைப் போதகாசிரியரின் வேலை, அரசாங்க உத்தியோகஸ்தருடைய வேலையைப் போலன்றி, பொது ஜனங்களினுடைய அபிப்பிராயத்திற்கும் உலகத்திலிருக்கும் மற்றச் சர்வகலாசாலையார்களுடைய அபிப்பிராயத்திற்கும் மதிப்பிற்கும் ஏற்றதாகும். இக்காரணங்கொண்டே சர்வகலாசாலையின் வேலை அதிகமாகப் பாராட்டப்படுகிறது. போதகாசிரியர் தம் புகழுக்காக மாத்திரமன்றி, தம்முடைய சர்வகலாசாலையின் மேன்மையை நிலைநாட்டுவதற்காகவும் திறமையுடன் வேலை செய்கிறார். அரசாங்க உத்தியோகஸ்தரோ அங்ஙனமன்றித் தம்மைச் சூழ்ந்துள்ள சிலருக்கே திருப்தி விளைக்கவேண்டியவராயிருக்கிறார். அச்சிலரால் அவருக்கு ஒரு முறை புகழ் உண்டாகிவிட்டால் அது அவருடைய உத்தியோகத்தின் பலத்தினால் ஒரு விதத்திலும் பிறகு ஒரு நாளும் குறைவுபடுகிறதில்லை.

“ (3) இது வரையில் சாஸ்திர ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்துவரும் எந்த நாட்டிலும், மாணவராகவும் உதவி உபாத்தியாயராகவும் இருந்திராத ஒருவரையும் சர்வகலாசாலையின் போதகாசிரியராக நியமிப்பதில்லை. இந்நாட்டிலோ, சர்வகலாசாலையிற் படித்து வந்தவுடன் வயதிற் சிறியவர்களுக்குப் பொறுப்புள்ள ஆராய்ச்சி வேலைகளும் கல்விப் பயிற்சி வேலைகளும் கொடுக்கப்படுகின்றன. அதனால் அவர்களிடம் முயற்சியும் ஊக்கமும் குறைந்திருக்க இடமுண்டாகிறது.

“ (4) அரசாங்க இலாகாதாரால் செய்யப்படும் சாஸ்திர ஆராய்ச்சியைப் பொதுவாக உலகத்தின் சாஸ்திர சங்கங்கள் அதிகமாக மதிப்பதில்லை.

“ (5) ஆராய்ச்சி செய்பவர் குடியாட்சிப் பொது ஜன ஊழியர் போன்ற மனப்போக்கை யுடையவராயி

ருக்கவேண்டுமே யன்றி, அரசாங்க உத்தியோகஸ்த ராக விருக்கக்கூடாது. ஏனெனில் இவருக்கு அவ் வுத்தியோக தோரணையில் நாளடைவில் பதட்டம் ஏற் பட்டுவிடுகிறது.

"(6) இப்பொழுது இந்நாட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ள பொது ஆராய்ச்சிசாலைகளின் நிலைமையை உற்று நோக்குவோமாயின், ஜனங்கள் இதர தேசங் களின் சர்வகலாசாலைகளில் செய்யப்பட்டு வருவது போல் அரசாங்க உத்தியோகஸ்தரின் மேல்பார்வை குட்படாமலே அவ்வாராய்ச்சிகள் செய்யப்படவேண்டு மென்று கருதுகிறார்களென்பது நன்கு விளங்கும். இவ்வித ஆசையிருந்தாலுங்கூட அரசாங்கத்தாருக்கும் ஆராய்ச்சிசாலைகளுக்கும் மனவொற்றுமை ஏற்பட்டா லன்றி ஆராய்ச்சிகளினால் யாதொரு உண்மையான பய னும் விளையாது. இவ்வாராய்ச்சிசாலைகள் அரசாங்கத் தாருக்குக் கீழ்ப்பட்டிராவிட்டாலும் அவர்களுடைய அதிகார தோரணையும் பண உதவியும் இவைகளுக்கு இல்லாமல் போவதாலும் சர்வகலாசாலையாரின் சம்பந்த மின்மையாலும்நாளடைவில் இவை நிலைகுலைந்துபோம். டோகியோ, கியாடோ என்னும் இரண்டு ஜப்பானிய நகரங்களின் சர்வகலாசாலைகளும் அரசாங்கத்தாரா லும், அவர்களின் மூலமாய் ஜனங்களாலும், ஆதரிக்கப் பெற்று வருகின்றன.

"(7) விவசாய இலாகாவுக்கும் காட்டிலாகாவுக்கும் கீழ்ப்பட்டுள்ள கலாசாலைகளில் கற்பிக்கப்படும் கல்வி, சர்வகலாசாலையைச் சார்ந்த கலாசாலைகளில் போதிக் கப்படும் கல்வியைப்போல் அவ்வளவு திறம்பட்டதா யிராது. அவைகளிலுள்ள உபாத்தியாயர் மாணவர் களுக்கேனும் பொது ஜனங்களுக்கேனும் அரசாங் கத்தாருக்கேனும் நேரான பொறுப்புடையவரல்லர். அரசாங்கத்தார் போதகாசிரியரின் திறமையை அறிந்து கொள்ள வழி யற்றிருத்தலே இதற்குக்

காரணமாகும். ஆராய்ச்சி செய்வதற்கும், சாஸ்திர விஷயங்களைப் போதிப்பதற்கும் இது வரையில் அரசாங்கத்தார் செய்துவந்துள்ள ஏற்பாடுகள் பயனற்றுப் போகாமலிருப்பதற்குக் காரணம், தாங்கள் நியமிக்கும் ஆசிரியர்களுக்குத் தங்களுக்குத் தெரியாமலே அதிக அதிகாரத்தையும் பதவியையும் கொடுத்துவிடுகிறபடியால் சாதாரணமான தேர்ச்சியுடையவர்களும் மேதாவிகளாக விளங்குகிறார்கள்.

" (8) கடைசியாக, சாஸ்திரத்திலும் கைத்தொழிலிலும் ஆராய்ச்சி செய்வதற்கு இந்நாட்டில் அனுசரிக்கப்பட்டுள்ள முறை வேறெந்த நாட்டிலும் அனுசரிக்கப்படவில்லை. காடுகளுக்கும், பூமியிலும் ஆகாயத்திலுமுள்ள ஈரத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றி இந்தியா "கவர்ன்மெண்டார் விசாரித்து வெளியிட்ட அறிக்கையைப் பற்றி எழுதும் போது, மிஸ்டர் ஹியூ ராபர்ட் மில் " நேச்சர் " என்னும் பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதிலிருந்து இவ்விஷயம் நன்கு விளங்கும் : " இப்பொழுது அனுசரிக்கப்பட்டு வரும் முறையினால் அதிகமான பயன் விளையாதென்று எனக்குத் தோன்றுகிறது. இதுபோன்ற சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்யப்படும்போது, அவ்வாராய்ச்சி அரசாங்க செலவிலேயே நடத்தப்படவேண்டுமென்பதையும், அவ்விஷயமாக வேண்டிய உதவிகளெல்லாம் அரசாங்க இலாகாக்கள் பலவற்றினாலும் செய்யப்படவேண்டுமென்பதையும் தீர்மானிப்பதே அரசாங்கத்தார் வேலையாகும். பிறகு அவ்விஷயம் யோக்கியதையுள்ள சாஸ்திர பாண்டித்தியம் பெற்ற ஒருவரிடம் ஒப்புவிக்கப்படவேண்டும். அவருக்கு வேறுவேலை இருத்தல்கூடாது. அவருக்கு உதவியாகப் பலர் நியமிக்கப்படவேண்டும். அவருடைய அறிக்கை முடிந்ததும் அது நமக்கு மிகவும் உபயோகமுள்ளதாகும். இவ்வாராய்ச்சியில் விஷ

யங்களை ஆராய்ந்ததனால் அவருக்கு உயர்வேனும் தாழ்வேனும் ஏற்படும். இதனால் உண்டாகும் செலவும் அதிகமாயிராது. வேறுவேலைசெய்யத் திறமைபெற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பலரும் இவ்வேலையில் அமர இடமிராது.

"நான் எடுத்துக்கொண்ட விஷயத்தை இக்குறிப்பு நன்கு விளக்குகின்றது. அதாவது, சாஸ்திர ஆராய்ச்சி யோக்கியதையுடையவர்கள் பொறுப்பில் சுயேச்சையாய் விடப்படவேண்டும்."

ஆதலின் ஆராய்ச்சி விஷயம் இம்பீரியல் கைத்தொழில் இலாகாவின் பொறுப்பில் விடப்படாமல் இம்பீரியல் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூட்டிடமே ஒப்புவிக்கப்படவேண்டும். மேற்சொன்ன சர்வ கைத்தொழில் போதனாசாலை நான் சிபார்சு செய்துள்ளபடி ஏற்படுத்தப்படாவிடின், தேசத்தின் பற்பல சர்வ கலாசாலைகளிலும், கலாசாலைகளிலும், இதர சாஸ்திர ஆராய்ச்சிசாலைகளிலும் உள்ள சாஸ்திர விற்பன்னர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சாஸ்திரக் கல்வி சங்கத்தாரிடம் அஃது ஒப்புவிக்கப்படவேண்டும். மாகாணக் கைத்தொழில் இலாகாதாரும் இம்பீரியல் கைத்தொழில் இலாகாதாரும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டிய விஷயங்களை அப்போதைக்கப்போது போதனா சாலைக்கேனும் சாஸ்திரக் கல்வி சங்கத்தாருக்கேனும் தெரிவித்து, ஆராய்ச்சிசெய்து தெரிந்துகொள்ளும் விஷயங்களைக் கூடியவரையில் கைத்தொழில்களில் அனுசரிக்க முயலவேண்டும்.

## சாஸ்திர சம்பந்தமாயும் கைத்தொழில் சம்பந்தமாயுமுள்ள உத்தியோகங்களை ஒழுங்குபடுத்துதல்.

## இந்திய இரசாயன இலாகா.

## இம்பீரியல் கைத்தொழில் இலாகா.

மேற்கூறிய விஷயங்களைப்பற்றி என் உடன் அங்கத்தினர்கள் கூறியுள்ள அபிப்பிராயத்தை ஆராய்ச்சி செய்யும்போது, இவ்விசாரணைச் சங்கம் முக்கியமாகக் கீழ்க்கண்ட விஷயங்களின் சம்பந்தமாக "இந்தியாவில் கைத்தொழிலை எங்ஙனம் அபிவிருத்தி செய்வதென்பதை விசாரித்து அறிவிக்கவேண்டு" மென்னும் நோக்கத்துடனேயே ஏற்படுத்தப்பட்டதென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுதல் அவசியம். அவ்விஷயங்களாவன :

"(a) இந்தியர்கள் தங்கள் கைம்முதலை வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் இலாபகரமாய் உபயோகப்படுத்த நூதன வழிகள் காட்டமுடியுமா?

"(b) அப்படியிருக்கும்பக்ஷத்தில்,

"(1) சாஸ்திர சம்பந்தமான ஆலோசனை சுலபமாய்க் கிடைக்கச் செய்வதினாலா,

"(2) விசேஷித்த கைத்தொழில்கள் செய்வதற்கு அனுகூலமாயிருக்கவும் வியாபாரத் துறையில் இலாபகரமென்று காட்டவுங்கூடிய உபகாரங்களைச் செய்வதினாலா,

"(3) கைத்தொழில் ஆரம்பிக்கிறதற்குத் தாங்களேயாவது அல்லது வேறெந்த விதத்திலாவது பண உதவி செய்வதினாலா, அல்லது,

"(4) இந்தியா கவர்ன்மெண்டாருடைய தற்காலப் பணப் பொறுப்பின் ஒழுங்குக்கு இடையூறில்லாத

வேறெந்த விதத்திலுலா, கைத்தொழில்களின் அபி விருத்திக்காகக் கவர்ன்மெண்டார் தாங்களே உதவி செய்யக்கூடும்?"

எங்களை நியமிப்பதற்காகச் செய்துள்ள தீர்மானத் தின்முடிவில், இந்தியா கவர்ன்மெண்டார், "விசாரணைச் சங்கத்தார் இந்தியாவில் கூடிய பன்னிரண்டு மாதங் களுக்குள் தங்கள் அறிக்கையை இந்தியா கவர்ன் மெண்டாரிடம் கொடுப்பார்கள் என்று நம்புகிறோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விரைவில் நிறை வேற்றப்படக்கூடிய வியாபாரத்திலும் கைத்தொழிலி லும் இலாபமுண்டாகுமாறு இந்திய முதலை உபயோ கிக்கும் விஷயத்தில் நாங்கள் சிபார்சு செய்யவேண்டு மென்பதை இதுவும் இன்னும் மற்ற விஷயங்களும் வெளிப்படுத்துகின்றன.

எங்கள் அறிக்கையின் மூன்றும் அதிகாரத்தில் இந்தியாவில் கைத்தொழில் குறைபாடுகளைச் சுருக்கிச் சொல்லியிருக்கிறோம். அதிலிருந்து இந்திய முதலை உபயோகிக்கக்கூடிய வியாபாரத்துறைகள் எவ்வளவு ஜாஸ்தியாயிருக்கின்றனவென்பதும் அவை பலவிதப் பட்டவை என்பதும் தெரியவரும். அதில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

"நம்முடைய தேசத்தில் இப்போது இறக்குமதி செய்யப்படும் கைத்தொழில் சாமான்களும் சரக்கு களும் சமாதான காலங்களிலும் யுத்த காலங்களி லும் நமக்கு அவசியமானவைகள். நாம் செய்து வரும் கைத்தொழில்களின் பட்டியைப் பார்த்தால் அவைகளின் குறைவு எவ்வளவு என்பது தெரிய வரும். அவைகள் தகுதியான விதமாய் விருத்தி செய்யப்பட்டாலொழிய இந்தியாவில் கைம்முதல்

உள்ளவர்கள் சமாதானகாலத்தில் முன்பணம் போட்டு இலாபகாரமான தொழில்களைச் செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பமிராது. யுத்த காலங்களில் கடல் வழியாய்ச் சாமான்களைக் கொண்டுவருவது கூடாத காரியமென்பது அனுபவத்தில் இப்போது நமக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் இந்தியாவின் தற்காலத்திய முக்கியமான கைத்தொழில்களை நிறுத்தவேண்டிவரும். அதனால் சாமான்களை வங்குகிறவர்களுக்குப் பெருத்த கஷ்டமேற்படும். சேனைகளுக்கு அதிக அபாயமுண்டாகும்."

ஆனால் என் உடன் அங்கத்தினர் எங்கள் அறிக்கையின் நான்காம் பக்கத்தில் சொல்லுகிறபடி "வியாபாரக் கைத்தொழில் கல்விகளின் விஷயமான உபயோகமுள்ள சமாசாரங்கள் தேர்ச்சிபெற்றவர்களின் சாட்சியத்திலிருந்து கிடைத்திருக்கின்றனவெனினும், குறிப்பாக இரண்டொரு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் முறையை இங்குக் குறிப்பிடாமல் பொதுவாகக் கைத்தொழில்களைப் பெருக்குவதற்காக வேண்டிய ஏற்பாடுகளையே தெரிவிக்கப்போகிறோம். நாங்கள் சிபார்சு செய்யும் நிர்வாக இலாகா எல்லாக் கைத்தொழில்களுக்கும் வேண்டிய உதவியைச் செய்துவருமென்று நம்புகிறோம். ஆதலின் இவ்விஷயங்களில் நிபுணர்கள் செய்யக்கூடிய சிபார்சுகளை நாங்கள் இப்பொழுது விளக்கிக் கூறமுயலுதல் பயனற்றதாகும்."

என் உடன் அங்கத்தினரிடம் எனக்குள்ள கௌரவத்தைக் குறைக்காமலே, எங்கள் சிபார்சுகளில் மேற்சொன்ன இலாகா ஏற்படுத்துவதைப்பற்றியே வரைகடந்த அளவு சிரத்தை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லவேண்டியிருக்கிறது. இப்படியிருந்தபோதிலும் மாகாண, இம்பீரியல் கைத்தொழில் இலாகாக்களைத் தவிர மற்றவைகளெல்லாம்

தற்காலத்தில் வேண்டியிருக்கும் அளவாகச் சீக்கிரத்தில் கைத்தொழில்களைப் பெருக்க ஆதாரமாயிருக்கமாட்டாவென்று பயப்படுகிறேன். அவர்கள் பிரார்சு செய்துள்ள சாஸ்திர இலாகாவும் கைத்தொழிற்பயிற்சி இலாகாவும் சிறிது காலந் தாழ்த்தே ஒழுங்குக்கு வருதல்கூடும். அவர்கள் அபிவிருத்தி செய்ய விரும்பும் கைத்தொழில் ஆராய்ச்சி சிறிது காலஞ் சென்றபிறகே பயன் விளைப்பதாகும். தேசத்தின் குறைபாடுகளை யோசிக்குமிடத்து விரைவில் பயன் தரக்கூடிய கைத்தொழில் முறைகளே தாமதமின்றி அனுஷ்டிக்கப்படவேண்டுமென்பது என் அபிப்பிராயம்.

இத்தேசத்தில் அனுசரிக்கப்படக்கூடிய கைத்தொழில் முறைகள் இரண்டு வகைப்படும். கைத்தொழில் கருவிகளையும் நிபுணர்களையும் வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துக்கொண்டு தொடங்கப்பெறும் கைத்தொழில்கள் முதல் வகுப்பைச் சேர்ந்தன. இவ்வகுப்பே மிகப் பெரியதாகும். இத்தகைய கைத்தொழில்களில் நாம் பிறரைப் பார்த்து வேலைசெய்ய வேண்டுமேயன்றி நாமாக ஒன்றும் செய்யவேண்டியதில்லை. மாகாணக் கைத்தொழில் இலாகாக்கள் ஆலோசனைச் சங்கங்களுடன் ஏற்படுத்தப்பட்டவுடன், அவைகள் தேர்ச்சிபெற்ற நிபுணர்களின் ஆலோசனையைக் கேட்டு இவ்வகுப்பைச் சேர்ந்த எந்தக் கைத்தொழில்கள் வெவ்வேறு மாகாணங்களில் ஏற்படுத்தப்படலாமென்பதை ஆலோசிக்கவேண்டும். மேலும் அவர்கள் இத்தகைய கைத்தொழில்களை ஸ்தாபிக்க முன்வருமாறு இந்திய முதலாளிகளை வேண்டி ஆலோ

சனை கூறி நிபுணர்களின் உதவி அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். இத்தகைய முறையை அனுசரித்ததினாலேயே ஜெர்மனியும் ஜப்பானும் கைத்தொழில் துறையில் அதிவேகமாய் முன்னேற்றமடைந்தன. அம்முறையை நாமும் அனுசரிக்கவேண்டுமென்று ஸர் ப்ரெடரிக் நிகல்ஸன் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"மொத்தத்தில், இந்தியாவில் குறித்த சில கைத்தொழில்கள் ஏற்படுத்தப்படவேண்டுமாயின் அவைகளில் சிரத்தையுள்ள அரசாங்கத்தாரோ, சொந்த முதலாளிகளோ ஜெர்மானியரும் ஜப்பானியரும் அனுசரித்துவந்த முறையைப் பின்பற்றி, கிரேட் பிரிட்டனிலிருந்து கைத்தொழில் நிபுணர்களை வரவழைத்து முதல் மானேஜர்களாக நியமிக்கவேண்டும். பிறகு, முன்னரே கைத்தொழில் வியாபாரவிஷயங்களைக் கற்றுள்ள இந்திய வாலிபர்களை அவர்களிடம் ஒப்புவித்து, நவீன கைத்தொழில் வியாபார முறைகளைக் கற்குமாறு செய்யவேண்டும். இந்தியர்கள் தாங்களே கைத்தொழில்களை ஏற்படுத்தவோ அல்லது முதலாளிகளிடம் நம்பிக்கையுள்ள மானேஜர்களாக அமரவோ வேண்டிய போதுமான பயிற்சிபெறும் வரை அவர்கள் அங்கேயே இருத்தல்வேண்டும்."

மிஸ்டர் சாரல்ஸ் டவர் என்பவரும் பின்வருமாறு சொல்லியிருக்கிறார் :—

"எஃகு சாமான்களையும் இயந்திரங்களையும் செய்யும் தொழிலில் ஜெர்மனி பிறநாட்டினரின் கைத்தொழில் முறையைப் பின்பற்றுகிறதேயன்றித் தானாக ஒன்றும் செய்யவில்லை. ஜெர்மனி மற்ற விடங்களில் கையாளப்பட்ட நவீன முறைகளை அனுசரிப்பதனாலேயே கைத்தொழில் துறையில் வெற்றிபெற்றிருக்கிறது."

அமெரிக்கா கைக்கொண்ட முறையும் இதுவே. 1860-ம் வருஷம் வரையில் அமெரிக்கா எஃகுக் கைத்தொழிலில் மிக்க முன்னேற்றமடைந்திருக்கவில்லை. 1862-ம் வருஷத்தில் பார்க் சகோதரர் கம்பெனியார் எஃகுக் கைத்தொழிலில் உபயோகிக்கப்படும் மிகப் பெரிதான இயந்திரமொன்றையும் அக்கைத்தொழில் சித்திபெற வேண்டிய திறமையுள்ள ஆங்கிலேய கைத்தொழிலாளர் பலரையும் வரவழைத்தனர். அது முதல் எஃகுக் கைத்தொழில் அங்கே அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறது. 1860-ம் வருஷத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பிக் ஐரன் என்று சொல்லப்படும் ஒரு வகை இரும்பு 8 லக்ஷம் டன் அளவே உற்பத்தி செய்யப்பட்டது. அப்பொழுது எஃகு சிறிதளவேனும் செய்யப்படவில்லை. 1900-ம் வருஷத்திற்குள் அங்கே 137 லக்ஷம் டன் பிக் ஐரன் என்னும் இரும்பும் 101 லக்ஷம் டன் எஃகும் தயார் செய்யப்பட்டன. 1913-ம் வருஷத்தில் ப்ரிட்டிஷ் ஐக்கிய இராஜ்ஜியத்தில் 103 லக்ஷம் டன் பிக் ஐரன் உண்டாக்கப்பட்டபோது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 310 லக்ஷம் டன் செய்யப்பட்டது. இந்தியாவிலும் டாடா தொழிற்சாலையார் கைத்தொழிற் துறையில் அடைந்துள்ள வெற்றியே மேற்சொல்லிய முறையைக் கைக்கொள்ளுவதின் தகுதியை விளக்குகிறது. அத்தொழிற்சாலை வெளி நாட்டுக் கைத்தொழில் நிபுணர்களின் ஆலோசனைக்கிணங்கவே ஏற்படுத்தப்பட்டது. அதன் வேலைகள் கைத்தொழிலில் தேர்ச்சிபெற்றவர்களின் மேற்பார்வையிலேயே நடத்தப்பெற்று வருகின்றன. இக்காரணங்களினாலேயே டாடா தொழிற்சாலை பாராட்டத்தக்க

முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இந்தியாவில் கைத்தொழிற் குறைபாடுகளைப்பற்றி நாங்கள் இவ்வறிக்கையின் ஓரதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள இன்னும் பல கைத்தொழில்கள் விஷயத்திலும் இம்முறையே அனுசரிக்கப்படவேண்டும். கைத்தொழில்களுக்கு வேண்டிய விளைபொருள்களும், வேலையாட்களும் இந்தியாவில் ஏராளமாகக் கிடைக்கும். கைத்தொழிலுக்கு வேண்டிய முதலும் இருக்கின்றது. ஆனால் அஃது ஒழுங்குபடுத்தப்படவேண்டும். கைத்தொழில்பொருள்களுக்கு ஏராளமான கிராக்கியும் இருக்கிறது. கைத்தொழில் இயந்திரங்களும் நிபுணர்களும் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்படுதலும் கூடும். கைத்தொழில்கள் இங்ஙனம் ஒழுங்குபடுத்தப்படுவதனால் அரசாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் திரண்ட இலாபங் கிடைக்கும். செய்யப்படவேண்டியதெல்லாம் அரசாங்கத்தார் சும்மாவிருக்கும் கைம்முதலைக்கொண்டு கைத்தொழில்களை ஸ்தாபிக்க இந்தியர்களுக்கு முழுமனதோடு வழிகாட்டுவதும் உதவி செய்வதுமேயாகும்.

ஆனால் இங்ஙனம் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டுமாயின், டாடா ஹைட்ரோ எலெக்ட்ரிக் சப்ளை கம்பெனியின் மானேஜரான மிஸ்டர் எச். பி. கிப்ஸ் கூறியிருக்கும் விஷயம் நன்கு கவனிக்கப்படவேண்டும். அவர் எங்களுக்குத் தெரிவித்ததாவது:—

"தமக்கு அனுபவமுள்ள துறையில் ஒருவர் மிக்க தேர்ச்சி பெற்றவரென்று மதிக்கப்பெற்றிருந்தாலொழிய அவரை இந்தியாவுக்கு வரவழைத்தல் கூடாது. அப்படி வரவழைக்கப்படுபவரும் சிறிது

கால ஒப்பந்தத்தின்மேலேயே வேலைக்கு வைத்துக் கொள்ளப்படவேண்டும். அவர் தாம் கற்றுள்ள கைத்தொழில் முறையை இங்கே ஸ்தாபித்து அக்கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதுடன் அம்முறையை இங்குள்ளவர்க்குக் கற்பிப்பதற்காகவும் தமக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறதென்பதை உணரவேண்டும். கைத்தொழில் கல்வி கற்றிருந்தும் அனுபவ மில்லாம லிருப்பவர்களை இந்தியாவுக்கு வரவழைத்து அவர்கள் இங்கே பழகிக்கொள்ளுமாறு விடுதல்கூடாது."

மேற்கூறியவாறு ஏற்படுத்தப்படும் கைத்தொழிற் சாலைகளே சாஸ்திரக் கல்வியில் தேறிய நம் மாணவர்கள் பழகும் சிறந்த இடங்களாகும். அவர்கள் கைத்தொழிற்சாலைகளில் பயிற்சிபெற்றபிறகு இம்பீரியல் கைத்தொழில் இலாகாவில் உத்தியோகஸ்தர்களாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

## சாஸ்திர ஆராய்ச்சிக்கு வசதி.

ஆராய்ச்சி செய்யப்படவேண்டிய கைத்தொழில்களே இரண்டாவது வகுப்பைச் சார்ந்தவை. அத்தகைய ஆராய்ச்சி செய்யப்படவேண்டியதன் அவசியத்தையும் பிரயோஜனத்தையும் பற்றி என் உடன் அங்கத்தினர் கூறியுள்ள அபிப்பிராயத்தை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன். கைத்தொழில்களில் ஆராய்ச்சி பயன்பெறவேண்டுமானால், ப்ரிவி கௌன்ஸிலாரின் கமிட்டியார் சொல்லுகிறபடி "உத்தரவுக்குக் கீழ், புத்திசாலித்தனத்துடனும் ஒழுங்காகவும் வேலை செய்யும் வேலைக்காரர்கள் உதவி நமக்கு வேண்டு" மென்பதையும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆதலின் இந்திய இரசாயன இலாகாவும் இம்பீரியல் கைத்

தொழில் இலாகாவும் தக்க காலத்தில் ஏற்படுத்தப்படு வதை நான் ஆக்ஷேபிக்கவில்லை. ஆயினும் அவை எப்பொழுது ஏற்படுத்தப்படவேண்டுமென்பதையும், எத்தகைய நிலைமையில் ஏற்படுத்தப்படவேண்டுமன்பதையும்பற்றி என் உடன் அங்கத்தினர் கூறியுள்ள அபிப்பிராயத்தை நான் அங்கீகரிக்கவில்லை. என் அபிப்பிராயத்தில் இந்த இலாகாக்களுக்கு வேண்டிய ஆதாரங்கள் முதல் முதல் தேடப்படவேண்டும். நான் முன்னரே தெரிவித்திருப்பதுபோலவே, வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைக்கொண்டு கைத்தொழில்களை ஏற்படுத்தி அவைகளில் நம்முடைய கைத்தொழில் மாணவர்களைப் பழக்குவது இதைச் செய்யப் பெருத்த உதவியாயிருக்கும். என் அபிப்பிராயத்தில் இவ் விஷயமாகச் செய்யவேண்டிய வேறு ஏற்பாடுகளையும் கீழே குறித்திருக்கிறேன் :—

(1) சர்வகலாசாலைகளிலும் கலாசாலைகளிலும் சாஸ்திரப் பயிற்சியும் கைத்தொழில் கல்வியும் கற்பிக்கவேண்டிய சாதனங்களை அதிகப்படுத்தவேண்டும். இதற்காக, போதகாசிரியர்களையும் போதனை கருவிகளையும் அதிகரித்தல்வேண்டும். நம் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் சர்வகலாசாலைகளிலும் நம் மாணவர்கள் சாஸ்திரக் கல்வியையும் கைத்தொழில் கல்வியையும பெற ஊக்கமுண்டாகுமாறு அநேகம் பேர்களுக்கு உதவிச் சம்பளம் கொடுத்தல்வேண்டும்.

(2) சாஸ்திரக் கல்வியும் கைத்தொழில் கல்வியும் கற்பிப்பதற்காக இம்பீரியல் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூட் என்னும் பெயர்பூண்ட அரசாங்க சர்வ கைத்தொழிற் கலாசாலையொன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

அதில் பேர்போன இரசாயன சாஸ்திரிகளும் எஞ்சினீயர்களும் போதகாசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

(3) வெளிநாடுகளுக்குச் சென்று இத்துறையில் தேர்ச்சிபெற்ற கலாசாலைகளில் பயிற்சி பெற்றுவருமாறு நம்மாணவர்களில் கியாதிபெற்ற இன்னும் அநேகருக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

மேற்கூறிய என் அபிப்பிராயத்தை "உயர்தரக் கல்விக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதைப்பற்றி விசாரித்த சங்கத்தாரும்" தங்களுடைய அறிக்கையில் வெளியிட்டிருக்கின்றனர். அவ்விசாரணைச் சங்கத்தில் கனம் மிஸ்டர் எ. எச். டைக் ஆக்லண்ட் தலைமை வகித்தார். அச்சங்கம் யுத்தம் தொடங்குவதற்கு முன், 1913-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஏற்படுத்தப்பட்டது. நான் இப்பொழுது எடுத்துக் காட்டப்போகும் விஷயம் அடங்கிய அறிக்கையை அச்சங்கத்தார் 1916-ம் ஆண்டில் வெளியிட்டனர். இவ்வறிக்கையின் முன்னுரையில் ஸர் ஆம்ஹெர்ஸ்ட் ஸெல்பி-பிக் என்பவர் கல்வி இலாகா சங்கத்திற்காகப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"இச்சங்கத்தாரின் வேலையின் பெருமையை வெளிப்படுத்துவதற்காக, கல்வியிலாகாதார் அலங்காரமொழிகளை உபயோகிக்கவேண்டுவது அநாவசியம். ஆயினும் அறிக்கை பரந்த நோக்கத்துடன் வெளியிடப்பட்டிருக்கிறதென்பதையும், கொள்கைகள் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றனவென்பதையும், அறிக்கை தெள்ளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறதென்பதையும் கல்வி இலாகாதார் இப்பொழுது கூறாமலிருக்கமுடியவில்லை."

அச்சிபார்சுகள் மிகவும் முக்கியமானவைகளாகவும், நான் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு நேரான சம்பந்தமுள்ளவைகளாகவும் இருக்கிறபடியால், நான் அவைகளை அப்படியே இங்கு எடுத்தாளுகிறேன். அவை பின்வருமாறு :—

"இந்நாட்டினரின் வியாபாரத்தோடும் கைத்தொழில்களோடும் சம்பந்தப்பட்டுள்ள சாஸ்திரக்கல்வியிலும் கைத்தொழில் வியாபாரக்கல்வியிலும் அவையவைகளின் அவசியத்துக்குத் தகுந்தாற்போல் முன்னதாக அனுசரிக்கப்படவேண்டிய கிரமப்படியே நாங்கள் பட்டி தயார் செய்திருக்கிறோம். எனினும் இவைகளெல்லாம் கூடியவரையில் ஏக காலத்திலும் சேர்ந்தாற்போலும் அனுசரிக்கப்படவேண்டும்.

"(129) முதலாவது, கைத்தொழிலிலும், விவசாயத்திலும், வியாபாரத்திலும் சாஸ்திரப்பயிற்சி பெற்றவர்களை வேலைக்கு வைத்துக்கொள்வதினாலேயே மிக்க நன்மையுண்டாகுமென்பதை முதலாளிகள் அறிந்துகொள்ளவேண்டும். முக்கியமாய், ஆலோசனை கூறுபவர்களும் மேற்பார்வை செய்பவர்களுமேனும் சாஸ்திரப்பயிற்சி பெற்றவர்களாயிருக்கவேண்டும். இதற்கு முன்னரே இவ்விஷயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் பொதுஜன அபிப்பிராயமும் அதற்கு இணங்கியதாயிருக்கும்படி செய்யவேண்டும்.

"(130) இரண்டாவது, நமக்குள்ள வசதிகளை அதிகப்படுத்தாமலே முன்னேற்ற மடைவதற்கு இப்பொழுதுள்ள வித்தியாசாலைகளில் பட்டம்பெற்ற மாணவர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். யுத்தத்திற்கு முன் இத்துறையில் ஆராய்ச்சி செய்யக்கூடிய ஆடவரும் மகளிரும் அதிகமாக இருந்தனர். நாங்கள் சிபார்சு செய்திருக்கிறபடி யோக்கியதையுள்ளவர்கள் விஷயத்தில்

உபகாரச் சம்பளங்களை நீடித்திருக்கச் செய்வது இவ் விஷயத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் வசதிகளில் ஒன்று. மற்ற வசதிகள் ப்ரிவி கௌன்சில் கமிட்டியா ரால் செய்யப்படவேண்டியவை.

"(131) வருஷா வருஷம் குறிப்பிட்ட தொகை கிடைப்பதாயிருந்தால், தற்போதைய போதனுசாலை களைச் சாஸ்திரப் பயிற்சியும் கைத்தொழில் பயிற்சியும் கற்பிக்குமாறு தக்கபடி பலப்படுத்தவேண்டும். இப் படிச் செய்ய அவைகளின் கருவிகள் முதலிய வசதி களை அதிகப்படுத்தவும், போதகாசிரியர்களை அதி கரிக்கவும், மிக்க தேர்ச்சி பெற்றவர்களை உபாத்தி யாயர்களாக நியமிக்கவும், புது விஷயங்களைப்பற்றிய போதனு முறைகளை அனுஷ்டிக்கவும் உதவி செய்ய வேண்டும். தேவையான விடங்களில் உயர்தரக் கைத் தொழில் கல்வியும் சாஸ்திரப் பயிற்சியும் புகட்டக் கூடிய புதிய போதனுசாலைகளை ஏற்படுத்தவும் வேண் டும். இப்போதைய தேசீய வித்தியாசாலைகளைத் தற் காலத்திய அவசியங்களுக்குத் தக்கவாறு முன்னுக்குக் கொண்டுவர ஏராளமான மூலதனமும் வரும்படியும் வேண்டியிருக்கும். பணம் எவ்வளவாக இருந்தாலும், நல்ல முறையில் செலவழிக்கப்படின், மிக்க பயன் விளைப்பதாகும். இந்நாட்டின் தேவையையும் இராஜ்ஜி யத்தின் தேவையையும் உத்தேசித்து, என்ன கஷ்டமி ருந்தாலும் விரைவில் கைத்தொழில் அபிவிருத்திக்காக மிக்க பொருளுதவி கிடைக்குமென்று எண்ண இட மிருக்கிறது.

"(132) உயர்ந்த மத்தியதரப் படிப்பை ஒழுங்கு படுத்திப் பல விடங்களிலும் பரவச் செய்யவேண் டும். இதோடு சர்வகலாசாலைகளையும் கைத்தொழிற் பாடசாலைகளையும் பலப்படுத்துவதிலுைம் சாஸ்திரப் பயிற்சி பெற்றவர்களுக்கு இருக்கும் தேவையாலும் சாதாரண உயர்தரப் பாடசாலைகளிலும் சர்வகலா

சாலைகளிலும் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளம் அதிகரிக்கவேண்டியிருக்கும். இச்சீர்திருத்தம் மற்றச் சீர்திருத்தங்கள் முன்னேற்ற மடையுமளவாகவே முன்னேற்ற மடையும்படி செய்யப்படவேண்டும்.''

இவ்வபிப்பிராயத்தைச் சாஸ்திரக் கைத்தொழில் ஆராய்ச்சி விஷயமாக ஏற்படுத்தப்பட்ட பிரிவி கௌன்சிலின் விசாரணைச் சங்கத்தாரும் அங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய 1915-16-ம் வருஷத்திய அறிக்கையின் 40, 41-வது பக்கங்களில் இவ் விஷயத்தைப் பின் வருமாறு சுருங்கக் கூறியிருக்கிறார்கள் :—

"எங்கள் வேலை பயன் பெறுவதற்கு வேண்டியிருக்கும் வசதிகள் என்னவென்று எங்களைக்கேட்டால் நாங்கள் பின் வருமாறு பதிலுரைப்போம் : முதலாவது, யோக்கியதையுள்ள ஆராய்ச்சிக்காரர்கள் பலர் இருக்கவேண்டும். இரண்டாவது, சாஸ்திர நிபுணர்கள், வியாபாரிகள், தொழிலாளர், கைத்தொழில் சங்கங்கள், சாஸ்திர சங்கங்கள், சர்வகலாசாலைகள், கைத்தொழில் கலாசாலைகள், பிரதேச அதிகாரிகள், அரசாங்கத்து இலாகாக்கள் முதலிய எல்லா வகுப்பினருக்குள்ளும் ஒற்றுமையும் கூட்டுறவும் இருக்கவேண்டும். இவற்றுள் எது இல்லாவிடினும் பயனுண்டாகாது.

"யுத்தத்திற்கு முன் ஆராய்ச்சிசெய்யப் போதுமான மனிதர்கள் சர்வகலாசாலைகளிலிருந்து கிடைக்கவில்லை. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் கணிதம் உட்படச் சாஸ்திரத்திலும் கைத்தொழிலிலும் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புக் கௌரவப்பட்டங்களுடன் வருஷா வருஷம் தேறிய மாணவர்களின் தொகை 530. அவர்களுள் மிகச் சிலரே ஆராய்ச்சி விஷயத்தில் பயிற்சி பெற்றிருந்தார். கைத்தொழில் துறையில் முக்,

கியமான விஷயங்களில் சாஸ்திர ஞானமுள்ள ஆராய்ச்சி வேலைக்காரர்கள் மிகச் சிலரே என்று நாங்கள் விசாரித்து அறிந்துகொண்டிருக்கிறோம்.

" நாங்கள் எதிர்பார்க்கும் இப்பிரதான விஷயத்தைச் சரிவரக் கவனிக்கவேண்டிய பெரிய பொறுப்பு ஐக்கிய இராஜ்ஜியத்தின் கல்வி இலாகாக்களையே பொருத்ததாகும். ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதனாலும் மற்ற வழிகளிலும் மாணவர்கள் பயிற்சி பெறும் காலத்தை நாங்கள் அதிகரிக்கக் கூடும். ஆனால் அது மாத்திரம் போதாது. போதிய யோக்கியதையுள்ள மாணவர்கள் கிடையாவிடில் உபகாரச் சம்பளம் கொடுப்பதனால் யாதொரு பயனும் விளையாது. நன்றாய்ப் படித்த பிள்ளைகள் சர்வகலா சாலைகளில் சேர்ந்தாலொழிய இப்படிப்பட்ட மாணவர்கள் போதுமான அளவு கிடைப்பது அரிது. இவ் விஷயத்தையே கல்வி இலாகாதார் நன்கு கவனிக்க வேண்டும். நன்கு கவனிக்கப்படுவதினாலேயே நம்முடைய ஆலோசனை பயன் விளைப்பதாகும்."

சாஸ்திர இலாகா உத்தியோக நியமனங்கள்.

" இந்திய இரசாயன இலாகாவிலும் மற்ற இலாகாக்களிலும் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாய்க் கூடியவரையில் இந்திய சர்வகலாசாலைகளில் சாஸ்திரப் பிரிவில் தேறியவர்களே சிறு உத்தியோகங்களுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். ஆராய்ச்சியை ஏற்படுத்தவும் அதைச் சரிவர நடத்தவும்வேண்டிய அநுபவமுள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் இங்கே கிடையாவிடில் இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்படவேண்டும்" என்று என் உடன் அங்கத்தினர் சொல்லியிருக்கின்றனர். இங்கே கிடையாவிடில் என்பதின்

பொருளை நாம் நன்றாய் அறிந்து கொள்ளவேண்டும். "இந்தியாவில் தற்போது மிகச் சில்லரையே இவ்வுத்தியோகங்களுக்குத் தெரிந்தெடுக்கக் கூடும்" என்பது அவர்களுடைய அபிப்பிராயம். அவர்கள் சொல்வதாவது:—

"சர்வகலாசாலைகளில் சாஸ்திரப் பயிற்சி செய்வித்தலும் கைத்தொழில் கல்வி கற்பித்தலும் இந்தியாவில் அதிகரிக்க அதிகரிக்க, நிபுணர்களை மேனாடுகளிலிருந்து வரவழைக்கவேண்டிய அவசியம் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வரும். கடைசியாக இத்தேசத்தில் பயிற்சிபெற்றவர்களே எல்லா உத்தியோகங்களுக்கும் எடுத்துக்கொள்ளப்படலாம்."

ஆனால் "இவ்வுத்தியோகஸ்தர்களை இந்தியாவினின்றுமே பெறச் சில காலமாகு" மென்று அவர்கள் பின்னிச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆதலின் கைத்தொழில் நிபுணர்கள் இங்கிலாந்திலிருந்தே வரவழைக்கப்படவேண்டுமென்று அவர்கள் நம்பியிருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் "யுத்தத்திற்குப்பிறகு இங்கிலாந்திலும் பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின் பிற விடங்களிலும் இரசாயன சாஸ்திர நிபுணரும் பிறரும், மிகுதியாக வேண்டியிருப்பாராதலின், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு நிபுணர்களை வரவழைத்தல் கஷ்டசாத்தியமாகும். ஆகையால் போதுமான யோக்கியதையுடைய நிபுணர்கள் யுத்தத்திற்கு முன் கேட்ட சம்பளத்தைக்காட்டிலும் இப்பொழுது அதிகமாகக் கேட்பார்கள்" என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

யுத்தத்திற்கு முன் கொடுத்ததை விட இப்பொழுது அதிகச் சம்பளம் கொடுத்தாலும் ஆங்கிலேயக் கைத்தொழில் நிபுணர்கள் சில காலம் வரையில் நமக்குத் தேவையான அளவில் கிடைக்கமாட்டார்களென்பது என்னுடைய அபிப்பிராயம். ப்ரிவி கௌன்சில் கமிட்டியார் தங்கள் 1915-16-ம் வருஷத்திய அறிக்கையில் சொன்னதாவது :—

" பயிற்சிபெற்ற ஆராய்ச்சி நிபுணர்கள் யுத்தத்திற்குப்பிறகு வேண்டிய அளவில் கிடைக்கமாட்டார்களென்று நாங்கள் நிச்சயமாய் எண்ணியிருக்கிறோம். யுத்தத்தில் வேண்டியிருப்பது போலவே, கைத்தொழிலிலும் அநேகர் ஒன்று சேர்ந்து வேலைசெய்தால்தான் பயன் விளையுமென்பதை நாம் மறந்து போகக்கூடாது."

இவ்விஷயங்களை யோசித்து இந்தியாவில் ஆராய்ச்சி வேலையை ஏற்படுத்தவும் அதைச் சரிவர நடத்தவும் வேண்டிய அனுபவமுள்ள உயர்ந்த உத்தியோகங்களுக்கு இங்கிலீஷ் நிபுணரே கிடைப்பார்களென்று நாம் எண்ணியிருத்தல் கூடாது. என் உடன் அங்கத்தினர் " அனுபவமுள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர்கள்" இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்படவேண்டுமென்று கூறினரேயன்றி, அவர்கள் கூறியுள்ள ஆலோசனை உண்மையில் வேறானது. இவ்விலாகா உத்தியோகஸ்தர்களும், விசேஷமாக இரசாயன இலாகா உத்தியோகஸ்தர்களும், கூடிய வரையில் 25 வயதிற்கு மேற்படாதவர்களாக இருக்கவேண்டும்." என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் சந்தேகங்கொள்ள இடமேயில்லை. அவர்கள் சொல்வதாவது :—

" சர்வகலாசாலையில் தேறி இரண்டொரு வருஷம்

சாஸ்திரப் பயிற்சியோ சாதனைப் பயிற்சியோ பெற்றவர்களை நாம் பெற முயலவேண்டும். இவர்கள் முன்னரே விசேஷித்த பயிற்சி பெற்றிராவிடினும், வேலைக்கு வந்த மூன்று வருஷங்களுக்குப்பிறகு அவ்வருஷங்களில் அவரவருக்குப்பிடித்தமாயிருக்கும் துறைகளில் பயிற்சி பெறுமாறு அவர்களுக்கு வேண்டும்போது "பயிற்சி இரஜா" கொடுப்பதினாலேயே மேற் கண்ட விசேஷப் பயிற்சிக்கு இடமுண்டாகும் என்று நாங்கள் நினைக்கிறோம்."

இம்பீரியல் கைத்தொழில் இலாகா உத்தியோகஸ்தர்களும் பொதுவாய் 25 வயதிற்கு மேற்பட்டவர்களாயிருத்தல் கூடாதென்று என் உடன் அங்கத்தினர் கூறியிருக்கின்றனர். "நாங்கள் சிபார்சு செய்துள்ள சிறு வயதுள்ள எஞ்சினீயர்கள் நிபுணர்களாக வேண்டுமாயின் அவர்களுக்கும் மூன்று வருஷத்திற்குப்பிறகு 'பயிற்சி இரஜா' கொடுக்கப்படுவது நல்லது" என்று சொல்லுகிறார்கள். இதிலிருந்து என் உடன் அங்கத்தினர் ஆலோசனையில் கூறியுள்ளபடி இவ்வுயர்ந்த உத்தியோகங்களில் நியமிக்கப்படும் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து வேலையில் சேர்ந்த பிறகு விசேஷப் பயிற்சி பெறவேண்டிய, சர்வகலாசாலையில் அப்போதுதான் தேறிய பட்டதாரிகளாயிருப்பார்களேயன்றி "அனுபவமும் தேர்ச்சியுமுடையவர்களாயிருக்கமாட்டார்கள்." ஏதேனுமொரு விஷயத்தைப் பிரிவினை செய்துகொண்டு படித்தற்கு எப்பொழுதும் அதிக காலம் செல்லும். ஆதலின் இங்கிலீஷ் மாணவர்களை வரவழைத்து அவர்கள் உயர்தரப் பயிற்சிபெறும் வரையில் அவர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுத்துக் கொண்டிருப்பதைக்காட்டிலும், பட்டம் பெற்ற இந்திய

மாணவர்களையே உத்தியோகங்களுக்கு எடுத்துக் கொள்ளுதல் சிறந்ததாகும். ஏனெனில், இவர்களைப் பயிற்சிசெய்விக்க அவ்வளவு செலவு பிடிக்காது. தங்கள் உயிருள்ள வரையில் இத்தேசத்திலேயே உழைத்துவருவார்கள். ஆனால், இங்கிலீஷ் மாணவர்கள் வேறு எங்கேனும் இதைவிட அதிகச் சம்பளம் கிடைப்பதாயின் அங்கே போய்விடுவார்கள். அப்படி இல்லாவிட்டாலும் தங்களுக்கு பென்ஷன் கிடைக்கக் கூடியகாலம் வரை உழைத்துவிட்டு அவர்கள் இந்தியாவில் சம்பாதித்துக்கொண்ட தங்கள் திறமையைக் கடைசியாக வெளிநாடுகளுக்கே கொண்டு செல்வார்கள். இவைகளையெல்லாம் யோசிக்குமிடத்து, இவ்வுத்தியோகங்களுக்கு ஆங்கிலேயர்களை வரவழைத்தல் வேண்டும் என்னும் சிபார்சைத் தள்ளிவிடவேண்டும்; இந்திய சர்வகலாசாலைகளிலும், நான் சிபார்சு செய்துள்ள இம்பீரியல் சர்வகைத்தொழில் போதனு சாலையிலும் பட்டம்பெற்ற இந்தியர்களையே முழுமையும் இவ்வேலைகளுக்கு வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

மேலும், நான் செய்யும் சிபார்சு இந்தியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனர் சாஸ்திரக் கைத்தொழில் இலாக்காக்கள் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தலைப்பற்றிக் கூறியுள்ள சிபார்சை முற்றிலும் அனுசரித்ததாயிருக்கின்றது. *இந்திய அரசாங்க உத்தியோக நியமனமுறை விஷயமாய் இந்தியர்களுக்கு அதிக அதி

---

* "இராஜசேவையும் இந்தியரும்" என்னும் தமிழ் நூலைப் படிக்கவும். விலை ரூபாய் 2-0-0.

ருப்தி யிருக்கிறது. இவ்விலாகாக்களுக்கு வேண்டிய பெரிய அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆங்கிலேய நிபுணர்களை வரவழைப்பதனால் செலவு அதிகரித்திருப்பதுடன் இந்தியர்கள் அவைகளுக்குப் போகப் பயிற்சி பெறுதலுக்கும் தடையாயிருக்கிறது. டாக்டர் பி. சி. ராயைப்போன்ற பேர்போன இந்தியர் இந்தியக் கல்வி இலாகாவில் உத்தியோகம் பெறுததை நாம் ஒரு நாளும் மறத்தல் முடியாது. இந்தியன் ஜியலாஜிகல் சர்வே இலாகா ஏற்பட்டு 64 வருஷங்களாகியும், 1913-ம் வருஷம் வரையில் இவ்விலாகாவின் உயர்ந்த பதவிகளுக்கு மூன்று இந்தியரே நியமிக்கப்பெற்றிருக்கின்றனர் என்பதும் நமக்குத் தெரியும். இவ் விஷயமாக நான் ஜியலாஜிகல் சர்வே இலாகா டைரெக்டரான டாக்டர் எச். எச். ஹேடனைப் பின்வருமாறு கேள்வி கேட்டேன் :—

"இவ்விலாகாவின் உயர்ந்த உத்தியோகங்களுக்கு இந்தியர்களைப் பயிற்சி செய்விப்பதை இவ்விலாகா தன் நோக்கமாகக் கொண்டிருக்கிறதா ?"

அதற்கு அவர் எனக்குப் பின்வருமாறு பதில் சொன்னார் :—

"நாங்கள் அநேக வருஷங்களாக இந்தியர்களைச் சிறு உத்தியோகங்களில் பழக்கிவருகிறோம். ஆயினும் அவர்கள் உயர்தர உத்தியோகங்களுக்கு யோக்கியதையுள்ளவர்களாகப் பயிற்சி பெறுவதில்லை. அவர்கள் எப்பொழுதும் அப்பதவியிலுள்ள உத்தியோகங்களுக்குப்போக மனுச் செய்துகொள்ள யோக்கியதை யுடையவர்களா யிருக்கிறார்கள்."

என் உடன் அங்கத்தினருள் ஒருவரான கனம்

மிஸ்டர் லோ, டாக்டர் ஹேடனைப் பின்வருமாறு கேட்டார்:—

"ஆராய்ச்சி செய்வதற்காக உங்கள் இலாகாவில் பல மாணவர் இருக்கின்றனர். அவர்கள் கூடுமானால் இவ்விலாகாவில் உத்தியோகம் பெறுமாறு பயிற்சி பெறவேண்டுமென்பது இவ்விலாகாவின் நோக்கங்களில் ஒன்றல்லவா?"

அதற்கு அவர் கூறிய பதில் பின்வருமாறு:—

"கல்கத்தா பிரெஸிடென்சி காலேஜிலும், சர்வகலா சாலையிலும் இத்துறையில் நாங்கள் அவர்களைப் பழக்கும் நோக்கங்களில் அதுவும் ஒன்றாகும். ஜியலாஜிகல் சர்வே இலாகாதார்தான் கல்கத்தாவில் அவ்விலாகாவின் பயிற்சியைப் பரவச்செய்தனர் என்று நான் நினைக்கிறேன். இவ்விலாகாவின் சிறு உத்தியோகங்களில் வரவர அதிக இந்தியர்களை நியமித்துவருகிறோம்."

இவ்விலாகாவில் பெரிய உத்தியோகங்களை வகிப்பதில் இந்தியருக்குள்ள யோக்கியதையைப்பற்றி அரசாங்க விசாரணைச் சங்கத்தாரின் முன் அபிப்பிராயம் கொடுத்த இந்தியர்கள் ஜியலாஜிகல் சர்வே இலாகாவின் முதல் தலைவரான டாக்டர் ஓல்ட்ஹாமின் அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டினார்கள்: "சாஸ்திர ஞானம் பெறப் போதிய வசதிகள் கிடைக்குமாயின் இந்தியர்களும் ஐரோப்பிய உதவி உத்தியோகஸ்தர்களுக்குச் சமமான யோக்கியதை யுடையவர்களாவார்களென்பது அவருடைய திடமான அபிப்பிராயம்." ஆயினும் அரசாங்க விசாரணைச் சங்கத்தாரின்முன் கூறப்பட்ட சாட்சியத்தைக் கவனிக்குங்கால், இவ்விலாகாவில் இந்தியர்கள் பெரிய உத்தியோ

களைப் பெறவொட்டாமல் தடுக்கப்படுகிறார்களென்பதும், 1913-ம வருஷம் வரையில் மூன்று இந்தியரே பெரிய உத்தியோகங்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்களென்பதும் தெரியவருகின்றன.

இத்தேசத்தில் பயிற்சிபெற்றவர்களே உத்தியோகங்களுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்பதே தங்களுடைய கடைசி நோக்கமென்று என் உடன் அங்கத்தினர் சொல்லியிருக்கின்றனர். மற்ற அரசாங்க இலாகாக்கள் விஷயத்திலும் இதற்கு முன்னரும் இங்ஙனமே சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக விவசாய இலாகாவில் இந்தியர்களே மிகுதியாக எடுத்துக்கொள்ளப்படவேண்டுவது முதலிலிருந்து தங்கள் நோக்கமாக இருந்துவருகின்றதென்று இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கின்றனர்.

"விவசாய இலாகா உத்தியோகங்களில் இந்தியர்களே மிகுதியாக நியமிக்கப்படவேண்டுமென்றும், நிபுணர்களை இங்கிலாந்திலிருந்து வரவழைத்தல் குறைக்கப்படவேண்டுமென்றும் இந்தியர்கள் இத்துறையில் பழக்கப்படவேண்டுமென்றும் நாங்கள் கொண்டுள்ள கொள்கையையே எப்பொழுதும் கடைப்பிடிக்க எண்ணியிருக்கிறோம். அப்படிச்செய்வதனால் தங்கள் தேசத்திய விவசாய இலாகா உயர்தர உத்தியோகங்களுக்கு இந்தியர்களையே நியமிக்கக் காரணமாயிருக்கும்" என்று 1910-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரியாருக்கு எழுதியிருக்கின்றனர்.

இங்ஙனம் சொல்லப்பட்டிருந்தும் இவ்விலாகா இம்பீரியல் உத்தியோகங்கள் ஐரோப்பியருக்கே சுதந்தரமாகி விட்டன. இந்தியர்கள் மாகாண உத்தியோகங்களோடு நின்றுவிட நேரிடுகிறது. டாக்டர் ஹாரல்டு

மான் என்பவரும் மாகாண உத்தியோகஸ்தர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட சிலரும் அரசாங்க விசாரணைச் சங்கத்தாரிடம் தெரிவித்துள்ள சாட்சியத்திலிருந்து ஐரோப்பியப் பட்டங்களும் அனுபவமும் பெற்றுள்ள இந்தியர்கள் பலரும் இம்பீரியல் உத்தியோகங்களைப் பெறுதல் கஷ்டசாத்தியமாயிருக்கிறதென்றும், இம்பீரியல் உத்தியோகங்களில் ஐரோப்பியரே அதிகமாக நியமிக்கப்படுகின்றனர் என்றும் தெரியவருகின்றன. "இவ்வைரோப்பியர் கற்றுள்ள முறை இந்தியாவின் பெரும்பாகத்தில் அனுசரிக்கப்படுவதைவிட வேறுபட்டதாயிருப்பதாலும் அம்முறை இந்தியாவில் அனுசரிக்கப்பட வெகு காலம் பிடிக்குமாகையாலும், இவர்கள் வெகு கஷ்டப்படுகிறார்கள்" என்று டாக்டர் மான் சொல்லுகிறார்.

இம்பீரியல் காட்டிலாகா உத்தியோக நியமன முறையும் இங்ஙனமே இருக்கின்றது. காட்டிலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரல் அரசாங்க விசாரணைச் சங்கத்தாரின் முன் சொல்லிய அபிப்பிராயமாவது :—

"காட்டிலாகா ஏற்படுத்தப்பட்டபோதும், அதற்கு வெகு காலத்திற்குப் பிறகும், அந்த இலாகாவில் இந்தியரையே அதிகமாக நியமிக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியாரும் சொல்லியிருக்கின்றனர்."

ஆயினும் 1891-ம் வருஷம் முதல் 1906-ம் வருஷம் வரையில் மாகாண உத்தியோகங்களுக்கு நேராக நியமனஞ் செய்யும் விஷயத்தில் யாதொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. இம்பீரியல் காட்டிலாகாவில் உத்தியோகம் பெறுபவர்கள் "இங்கிலாந்திலேனும், வேல்ஸி

லேனும், அயர்லாந்திலேனும் உள்ள சர்வகலாசாலைகள் ஒன்றில் சாஸ்திரத்தில் கௌரவப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்; அல்லது ஸ்காட்லண்ட் சர்வகலாசாலைகள் ஒன்றில் பி. எஸ். ஸி. பட்டம் பெற்றிருக்கவேண்டும்" என்று 1912-ல் ஏற்பாடு செய்யப்பட்டது. அரசாங்க விசாரணைச் சங்கத்தார் விசாரித்தபொழுது விவசாய இலாகாவிலும், மிருக வைத்திய இலாகாவிலும், காட்டிலாகாவிலும், ஜியலாஜிகல் சர்வே இலாகாவிலும், நீராவி இயந்திர வண்டி இலாகாவிலுமுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களின் தொகை 407. அவர்களுள் அறுவரே சட்டப்படி இந்தியராவர்!

சாஸ்திர இலாகாவிலும் கைத்தொழில் இலாகாவிலும் இந்தியர்கள் விஷயமாய்ச் செய்யப்பட்ட அநியாயத்தை அரசாங்க விசாரணைச் சங்கத்தார் அறிந்திருந்தார்கள். உயர்ந்த உத்தியோகங்களில் ஐரோப்பியரை நியமிப்பதற்கு அரசியற் காரணம் யாதொன்றுமில்லையென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். போதிய கைத்தொழிற்பயிற்சி இந்நாட்டிலேயே கிடைக்குமாயின், ஐரோப்பாவிலிருந்து உத்தியோகஸ்தரை வரவழைத்தல் அநாவசியமாகுமென்றும், ஆதலின் கைத்தொழிற் பயிற்சியை அபிவிருத்தி செய்த உடனும் விடாமல் ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றும், அப்படிச் செய்வதனால் வெளி நாடுகளிலிருந்து உத்தியோகஸ்தர்களை நியமிப்பதை மாற்றி இந்நாட்டிலேயே அவர்கள் கிடைக்கும்படி செய்ய ஏதுவாயிருக்குமென்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவ்வேற்பாடு இன்னும் செய்யப்படவில்லை. இன்னும் இரண்டு இம்பீரியல் இலாகாக்கள் ஏற்படுத்தப்பட

வேண்டுமென்று என் உடன் அங்கத்தினர்கள் சிபார்சு செய்திருந்தும், மத்திய இரசாயன ஆராய்ச்சிசாலையும் இம்பீரியல் எஞ்சினீயரிங் காலேஜும் வெகு காலத்திற்குப்பிறகு ஏற்படுத்தப்படலாமென்று தெரிவித்திருக்கிறார்கள். இவ்விஷயங்களை இதற்கு முன் நமக்குள்ள அனுபவத்தோடு பிணைத்துப்பார்க்குமிடத்து, இப்புதிய இலாகாக்களிலுள்ள பெரிய உத்தியோகங்கள் ஐரோப்பியருக்கே சுதந்தரமாகக் கொடுக்கப்படுமென்றும் இந்தியர்கள் அவர்களுக்கு உரிமையான உயர்ந்த சம்பளம் பெறுதிருப்பதுடன் இவ்விலாகாக்கள் செய்து வரும் உயர்தர வேலைகளில் வேண்டிய பயிற்சியைப் பெறவும் சந்தர்ப்பமில்லாமலிருப்பார்களென்றும் எண்ண இடமுண்டாகிறது. அயல் நாடுகளிலிருந்து உத்தியோகஸ்தர்களை வரவழைக்காமல் நம்நாட்டிலேயே அவர்களைத் தெரிந்தெடுக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமாயின் தற்போதுள்ள வித்தியாசாலைகளைப் பலப்படுத்தியும் அல்லது புதிய வித்தியாசாலைகளை ஸ்தாபித்தும் அவைகளை ஐரோப்பியப் பள்ளிக்கூடங்களின் யோக்கியதைக்குக் குறையாமல் ஒழுங்குபடுத்தவும் வேண்டுமென்று அரசாங்க விசாரணைச் சங்கத்தார் சிபார்சு செய்திருக்கின்றனர். "அங்ஙனம் செய்ய ஆரம்பத்தில் பணச் செலவு அதிகமாக ஏற்படு"மென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் "அதனால் உண்டாகும் இலாபம் செலவைவிட எவ்வளவோ அதிகமாயிருக்கும். இந்தியர்கள் அவைகளில் போதுமான பயிற்சிபெற்றுப் பெரிய அரசாங்க உத்தியோகங்களுக்கு நேரே தேர்ந்தெடுக்கப்பட • யோக்கியதையுடையவர்களாவார்கள். தவிர, தேசத்தின்

கைத்தொழில் நிலைமை முன்னேற்றமடையவும் அவர்கள் உதவியாயிருப்பார்கள்" என்று அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தியாவில் கைத்தொழில் அபிவிருத்திசெய்யப்படவேண்டுமாயின் முதல் முதல் நான் முன்னரே சிபார்சு செய்துள்ளபடி, இம்பீரியல் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூட் என்னும் முதல்தர சர்வகைத்தொழில் கலாசாலை ஒன்று உடனே ஏற்படுத்தப்படவேண்டும். அக்கலாசாலையில் சாஸ்திரத்திலும் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் நிர்வாகத்திலும் உள்ள எல்லாப் பாகங்களிலும் சிரேஷ்டமான கல்வி கற்பிக்கப்படவேண்டும். இப்பெரிய நாட்டின் கைத்தொழிலைப் பெருக்குவதற்காக வேண்டிய ஏராளமான தேர்ச்சியடைந்த வேலைக்காரர்களைப் பயிற்சி செய்ய இஃதொன்றையே முதலில் கவனிக்கவேண்டும். இஃது ஏற்படுத்தப்படும் வரையில் சிபார்சு செய்யப்பட்டுள்ள இலாகாக்கள் ஏற்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்படவேண்டும். அது வரையில் கைத்தொழில் இலாகாவில் மிகவும் அவசியமாயிருக்கும்போதுதான் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படவேண்டும்.

## செலவின் மதிப்பு.

அறிக்கையில் நாங்கள் செய்துள்ள சிபார்சுகளிலிருந்து இத்தேசத்தின் கைத்தொழில் முன்னேற்றத்திற்காகவும் வியாபார முன்னேற்றத்திற்காகவும் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்களின் தொகை அதிகமாகவே இருக்கும் என்று தெரிய வரும். சில காலம் வரையில் அத்தொகை அதிகரித்

துக்கொண்டே தான் வரும்; யுத்தத்திற்குப் பிறகு பல வழிகளில் அரசாங்கச் செலவும் அதிகரிக்கும் என்பதும் நிச்சயம். இக்காரணங்களைக்கொண்டு எந்த இலாகாவி லும் மிகவும் அவசியமாயிருக்கும் அளவாகவே பணச் செலவு செய்யப்படவேண்டும். என் உடன் அங்கத்தினர் கள் இந்திய இரசாயன இலாகாவிலும் இம்பீரியல் கைத் தொழில் இலாகாவிலுமுள்ள பெரிய உத்தியோகஸ்தர் களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக் கும் சம்பள விகிதம் அவ்வேலைகளுக்கு ஆங்கிலேயர் வர ஆசை காட்டக்கூடிய அளவாகவே இருக்கிறது. நான் மேற்சொல்லிய காரணங்களை உத்தேசித்து இந்தி யர்களே (இதில் சட்டப்படி சுதேசிகளாகும் ஐரோப் பியரையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்) இவ்வுத்தி யோகங்களுக்கு நியமிக்கப்படவேண்டுமென்று தீர்மா னிக்கப்பட்டால் செலவு மிகவும் குறைந்துவிடும். இது சாதாரண விஷயமல்ல. ஆகலால் இதை அரசாங்கத் தார் கவனியாமல் விட்டுவிடக்கூடாது. இந்தியாவின் நிலைமையை நினைக்குமிடத்து, பலவருஷங்களுக்குமுன் ஸர் வில்லியம் ஹண்டர் சொல்லியது ஞாபகத்திற்கு வராமற் போகாது :—

“ இந்தியாவை நாம் தக்கபடி ஆட்சி செய்யவேண்டு மாயின், அநேக உத்தியோகங்களுக்கு இப்பொழுது கொடுப்பதைக்காட்டிலும் குறைந்த சம்பளமே கொடுக் கவேண்டும். பெரிய உத்தியோகங்களுக்கு இங்கிலாந்தி லிருந்து உத்தியோகஸ்தர்கள் வரவழைக்கப்படுவதால் அவர்களுடைய செலவிற்கு ஏற்றவாறு உயர்ந்த சம் பளம் கொடுக்கப்பட்டுவருகிறது. சுதேச உத்தியோக ஸ்தர்களைக்கொண்டு வேலை நடத்துவது எவ்வளவு நயமாயிருக்குமோ அவ்வளவு வெளி நாட்டார்களைக்

கொண்டு நடத்துவது அசாத்தியம். சுதேசிகளைக் கொண்டு வேலை நடத்துவது நியாயமாவதுமன்றிப் பண நிர்வாக விஷயமாய் அவசியமாகவுமிருக்கிறது. நாம் இந்தியர்களைக் கிரமமாகவும் குறைந்த செலவிலும் ஆளவேண்டுமாயின் இந்தியர்களையே அதிகமாக உத்தியோகங்களில் நியமித்து அப்படிப்பட்டவர்களுக்கு விலைவாசிக்குத் தகுந்தாற்போல் சம்பளம் கொடுக்க வேண்டும்.'

இவ்வபிப்பிராயம் ஏற்றுக்கொள்ளப்படின், இப்பொழுது ஆலோசிக்கப்பட்டுள்ள சம்பள விகிதம் நூற்றுக்கு முப்பது அல்லது நாற்பது வீதம் குறைந்து விடும்.

செலவைப்பற்றி நான் அதிகமாகப் பிரித்து வேறு சிபார்சு செய்யப்போகிறதில்லை. என் யோசனைகளில் எதையேனும் அரசாங்கத்தார் அங்கீகரிப்பாராயின் விவரம் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடியதாகும்.

பொதுவாகப் பேசுமிடத்து, உத்தியோகங்களின் எண்களைக் குறைப்பதினாலும் உத்தியோகங்களுக்கான சம்பள விகிதத்தை இந்தியப் பட்டதாரிகளுக்கும் படிப்பாளிகளுக்கும் போதுமானபடி ஏற்படுத்துவதினாலும் செலவை அதிகமாகக் குறைக்கலாமென்பது என் அபிப்பிராயம். கட்டிடச் செலவுகளும் அதிகமாகக் குறைக்கப்படலாம். இவ்விஷயத்திலும் நாம் ஜப்பானை உதாரணமாகக் கொள்ளலாம். அவர்கள் தங்கள் வித்தியாசாலைக் கட்டிடங்களுக்கு இந்தியாவில் செய்யப்படும் செலவைக்காட்டிலும் குறைவாகவே செய்துவருகிறார்கள். கைத்தொழிலில் பயிற்சியையும் சாஸ்திரப் பயிற்சியையும் அதிகரிப்பதற்காக உபகாரச் சம்பளம் கொடுக்

கப்படவேண்டிய முறை வித்தியா இலாகாதாரரால் நன்கு தயார்செய்யப்படக்கூடும்.

பொதுவாகச் சாஸ்திரமும், கைத்தொழிலும்— முக்கியமாக மெகானிகல் எஞ்சினீயரிங், மின்சார எஞ்சினீயரிங், இரசாயன சாஸ்திரம், வியாபாரம், விவசாயம் முதலியவைகளும்—கற்பிப்பதற்காக வருஷாவருஷம் ஒவ்வொரு சர்வகலாசாலையாருக்கும் ஒன்றரை லக்ஷம் ரூபாய் கொடுக்கப்படவேண்டும். கட்டிடங்களுக்காகவும் கருவிகளுக்காகவும் மொத்தத்தில் 15 லக்ஷம் ரூபாய் கொடுக்கப்படவேண்டும். கடைசியாக, இம்பீரியல் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூட் என்னும் சர்வகைத்தொழில்கலாசாலை ஏற்படுத்துவதற்காக முதலில் 30 லக்ஷம் ரூபாயும் பிறகு வருஷாவருஷம் 6 லக்ஷம் ரூபாயும் கொடுக்கவேண்டும் என்று நான் சிபார்சு செய்கிறேன்.

## முடிவுரை.

ஸர் பிரடரிக் நிகல்ஸன் கூறியுள்ள கீழ்க்கண்ட உதாரமும் புத்தியும் நிறைந்துள்ள வார்த்தைகளை ஆமோதித்து இக்குறிப்பை முடிக்கிறேன் :—

“ இந்தியக் கைத்தொழில்கள் விஷயத்தில் இந்தியாவின் நன்மை தீமைகளையே முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் கவனிக்கவேண்டும் என்பது என்னுடைய திடமான அபிப்பிராயம். இந்நாட்டில் விளையும் பொருள்கள் கைத்தொழில்களுக்கு உபயோகிக்கப்படுதல் முதலாவது ; கைத்தொழில்கள் ஏற்படுத்தப்படுதல் இரண்டாவது ; கைத்தொழிலினால் உண்டாகும் இலாபம் இத்தேசத்திலேயே இருக்கவேண்டுவது மூன்றாவது என்பது என் கருத்து.”

இந்நோக்கத்துடன் இந்தியக் கைத்தொழில்களை விருத்திசெய்ய முயற்சி எடுத்துக்கொண்டால் இந்தியா பலமுள்ளதாகவும் வளமுள்ளதாகவும் ஆகிவிடும். இங்கிலாந்தும் இப்பொழுதிருப்பதைக்காட்டிலும் பலத்திலும் செல்வத்திலும் அதிகரிக்கும்.

மதன் மோகன் மாளவியா.

*Printed by Srinivasa Varadachari & Co., Mount Road, Madras.*

யுத்தம் ! யுத்தம் !!

# ஆயுர்வேதத்துக்கும் நோய்களுக்கும் சண்டை

இம்மருந்துகளைக் கையிருப்பில் வைத்துக்கொள்ளுங்கள்.

வைத்தியரத்தின

## பண்டித டி. கோபாலசார்லுவின்

காலரா, பிளேக், இன்புளுயன்சா முதலியவைகளின் நிவாரிணிகளை வைத்துக்கொள்ளுங்கள்.

நல்லவைகள்; ஆனால் நயமானவைகள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| காலரா மருந்து ஒரு செட்டின் விலை | ... | 0 | 12 | 0 |
| பிளேக் ,, ,, பெரியது | ... | 1 | 12 | 0 |
| ,, ,, ,, சிறியது | ... | 1 | 2 | 0 |
| இன்புளுயன்சா ,, | ... | 1 | 8 | 0 |
| தன்வந்திரி லேகியம்; இன்புளுயன்சாவினாலுண்டாகும் பலயீனத்தை நீக்குவதில் இணையற்றது. டப்பி 1-க்கு | ... | 2 | 8 | 0 |

உலகப் பிரசித்திபெற்ற இன்னும் பல மருந்துகளும் இருக்கும். போஸ்டேஜும் பாக்கிங்கும் பிரத்தியேகம். காட்லாக்குகள் மனுவின்பேரில் அனுப்பப்படும்.

ஆயுர்வேதாச்ரமம்,
55, ஆசாரப்பன் தெரு, ஜி. டி., சென்னை.